ஓமமியற்றவுடையான்முடிசூட்டக்

* என்போலுவே என்றது-தனது நித்தியத்துவத்தை விளக்கின்றது.
† தேமன்-இந்திரன்.

கோமன்னவனுலகமூவுலகுங்கைக்கொண்டான்
நாமமறையோதாதோதினியுயர்த்தான். (கஎ)

ஈதாருமூன்னிகழ்த்தெதம்பெருமானென்மாற்றம்
யாதானுமாகினையாதிகழ்தியேல்
தீதாய்விளைதனனிதின்னமெனச்செப்பிலன்
மேதாவிகட்கெல்லாமேலாயமேன்மையான். (கஎக)

கூ-வது இராணியன்வதைப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கூoஅ.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளே சரணம்.

நான்காவது

வீபீடணனடைக்கலப்படலம்.

இராவணன் விபீடனன்மீது கோபங்கொள்ளுதல்.

கேட்டனனிருத்துமக்கேள்விதேர்கலாக்
கோட்டியசிந்தையனுதிகொண்டிலன்
மூட்டியதீயெனமூண்டுப்பொங்கிலன்
ஊட்டாரக்கூட்டியவனையவொண்கணான். (க)

இராணியனென்பனெம்மனோரினும்
மூராணியனவன்றனைமுருக்கிமுற்றிலன்
அராணியனெவன்றற்கன்புபூண்டனை
மராணமென்றொருபொருண்மாற்றம்வன்மையோய். (உ)

ஆயவன்வளர்த்ததன்றாதையாகத்தை
மாயவன்கல்லியமகிழ்த்தமைத்தனும்
ஏயநம்பகைஞனுக்கினியனன்புசெய்
நீயுமேநிகர்பிறர்நிகர்க்கநேர்வரோ. (ங)

* பாழிசாலிரணியன்புதல்வன்பண்பெனச்
சூழ்வினைமுற்றியானவர்க்குத்தோற்றபின்
ஏழைநீயென்பெருஞ்செல்வமெய்திப்பின்
வாழவோகருத்தறவாவற்றுமோ (ச)

முன்புறவினையர்பாணன்புமுற்றினை
† வன்பகைமனிசரின்வைத்தவன்பினை

* பாழிசால்-வன்மைமிக்க. † வன்பகை-கொடியபகையினையுடைய.

என்புறவுருகுதியழுதியேத்துதி
உன்புகலவர்பிறிதுரைக்கவேண்டுமோ. (நி)

கண்ணினமனிசரைநண்புபூண்டனை
எண்ணினைசெய்வினையென்னைவெல்லுமா
றுன்னினையரசின்மேலாசையூன்றினை
திண்ணிதுன்செயல்பிறர்செறுநர்வேண்டுமோ. (சு)

வே று.

அன்றுவானரம்வந்துநஞ்சோலையையழிப்பக்
கொன்றுதின்றிடுமின்னெனத்தானதைக்கோறல்
வென்றியன்றெனவிலக்கினைமேல்விளைவெண்ணித்
துன்றுதாவற்றுணையெனக்கோடலேதுணிந்தாய். (எ)

வே று.

அஞ்சினையாதலினமர்க்குமாளலை
தஞ்சனமனிசர்பால்வைத்தசார்பினை
வஞ்சனைமனத்தினை * பிறப்புமாற்றினை
நஞ்சினையுடன்கொடுவாழ்தனன்றரோ. (அ)

பழியினையுணர்ந்தியான்படுக்கிலேனுனை
ஒழிகிலைபுகலுதலொல்லைநீங்குதி
விழியெதிர்நிறுத்தியேல்விளிதியென்றனன்
அழிவினை † யெய்துவானறிவுநீங்கினன். (க)

என்றலுமிளவலுமெழுந்துவானிடைச்
சென்றனன்றுணைவருந்தானுஞ்சிந்தியா
நின்றனன்பின்னருநிசாசரன்றன
ஒன்றலபலபலவுறுதியோதினன். (கஅ)

வாழியாய்கேட்டியால்வாழ்வுகைம்மிக
ஊழிகாண்குறுகினதுயிரையோர்கிலாய்
கீழ்மையோர்சொற்கொடுகெடுதனேர்திலோ
வாழ்மைதானதம்பிழைத்தவர்க்குமாகுமோ. (கக)

புத்திரர்குருக்கணின்பொருவில்கேண்மைமர்
மித்திரரடைத்துளோர்மெலியர்வன்மையோர்
இத்தனைபேரையுமிராமன்வெஞ்சரஞ்
சித்திரவதஞ்செயக்கண்டுதீர்தியோ. (கஉ)

---

* பிறப்புமாற்றினை-அரக்கர்குலவியற்கையையொழித்தனை.
† எய்துவான்-எய்துதற்கு.

எத்துணைவகையினுமுறதியெய்தின
ஒத்தனவுணர்த்தினேனுணரகிற்றிலை
அத்தவென்பிழைபொறுத்தருடியாலெனை
உத்தமனாக்கரொழியப்போயினன். (கஉ)

அனலனுமனிலனுமான்சம்பாதியும்
வினையவர்கால்வரும்விரைவின்வந்தனர்
கனைகழற்கால்கின்கருமச்சூட்சியர்
இனைவரும்வீடணனேடுமேயினர். (கச)

அரக்கனுமாங்கனைரமைச்சர்கால்வரும்
சூரக்கினத்தவரொடுமனிசர்கொள்ளேரீர்க்
கரைக்கண்வந்திருத்தனரென்றகாலையில்
பொருக்கெனவெழுதுமென்றெண்ணிப்போயினர். (கரு)

அளக்கரைக்கடந்த * மேலறிக்தம்பியும்
விளக்கொளிபரத்தலிற்பாலின்வெண்கடல்
வளத்தடந்தாமரைமலர்ந்ததாமெனக்
களப்பெருந்தானையைக்கண்ணினேக்கினன். (கக)

ஊனுடையுடம்பினவுயிர்கள்யாவையும்
ஏனையவொருதலைநிறுத்தியெண்ணினல்
வானரம்பெரிதெனமறுவில்சிந்தையான்
தூதரச்சுபடைத் † தூணவர்ச்சொல்லினன். (கஎ)

அற்றந்தலைன்றவர்க்கன்புபூண்டனன்
மறந்தானன்புகழலால்வாழ்வுவேண்டிலேன்
பிறந்தவென்னுறுதிகீபிடிக்கலாயெனத்
துறந்தனனினிசசெயல்சொல்லுவீரென்றனன். (கஅ)

மாட்சியினமைந்ததுவேறுமற்றிலை
தாட்சியிற்பொருடருந்தருமமூர்த்தியைக்
‡ காட்சியேயினிக்கடனென்றுகல்விசால்
சூட்சியின்கிழவருந்துணிந்துசொல்லினர். (கக)

கல்லதுசொல்லினீர்காமும்வேறினி
அல்லதுசெய்துமேலரக்காதுமால்
எல்லையில்பெருங்குணத்திராமன்ருளினை
புல்லுதும்புல்லிபிப்பிறவிபோக்குதும். (உ0)

மூன்புறக்கண்டிலேன்கேள்விமூன்பிலேன்
அன்புறக்காரணமறியகில்லேன்

---

* மேலறிந்தம்பியும்-வருங்காரியமுணர்ந்த விபீடணனும்
† தூணவர் மந்திரியர். ‡காட்சியே - காணுதலே.

என்புதக்குளிருநெஞ்சுருகுமேலவன்
புன்புலப்பிறவியின்பகைஞன்போலுமால். (உக)

ஆதியம்பரமனுக்கன்புநல்லறம்
நீதியின்வழாமையுமுயிர்க்குநேயமும்
வேதியரருளுநான்விரும்பிப்பெற்றநெஞ்
போதுறுகிழவனேத்தவமுன்பூண்டனான். (உஉ)

ஆயதுபயப்பதோரணமதியாயது
தாயதுகினைந்ததுதொல்லையாவர்க்கும்
நாயகன்மலர்க்கழனணுகிநம்மனத்
தேயதுமுடித்துமென்றினிதுமேயினன். (உங)

இருளுறவெய்துவதியல்பன்றுமெனப்
பொருளுறவுணர்ந்தவப்புலன்கொள்புந்தியார்
மருளுறுசூழலின்மறைந்துவைகினர்
உருளுறுதேரவனுதயமெய்தினன். (உச)

அப்புறத்திராமனவ்வலங்குவேலையைக்
குப்புறக்கருதுவான்குவளைநோக்கிதன்
துப்புறச்சிவந்தவாய்கினைந்துசோர்குவான்
இப்புறத்திருங்கரைமருங்கினெய்தினன். (உடு)

கானலுங்கழிகளுமணலுங்கண்டலும்
பானலுங்குவளையும்பரந்தபுன்னையும்
மேனிறையன்னமும் * பெடையும்வேட்கையூர்
பூநிறச்சோலையும்புரிந்துநோக்கினன். (உசு)

* தரளமும்பவளமும்தரங்கமீட்டிய
திரண்மணிக்குப்பையுங்கனகதீரமும்
மருளுமென்பொதும்பருமணலின்குன்றமும்
புரணெடுந்திரைகளும்புரிந்துநோக்கினன். (உஎ)

மின்னுமணிவிரற்றேயவீழ்கணீர்
துன்னரும்பெருஞ்சுழியழிப்பச்சோர்வினே
டின்னகைதூசேச்சியரிழைக்குமாழிசால்
புன்னையம்பொதும்பரும்புக்குநோக்கினன். (உஅ)

கூதிர்நுண்குழம்பனித்திவலைக்கோவைகான்
மோதிவெண்டிரைவரமுடவெண்டாழைமேல்

---

* பெடையும்-என்பது பிறவும் எனப்பாடமோதப்படுகின்றது.
† தரளம்-முத்து.

பாதியஞ்சிறையிடைப்பெடையைப்பாடினைத்
தோதிமந்துயில்வதண்டியிர்ப்புவீங்கினன். (உசு)

அருந்துதற்கினியமீன்கொணரவன்பினல்
பெருந்தடங்கொம்பிடைப்பிரிந்தசேவலை
வருந்திசைநோக்கியோர்மழலைவெண்குரு
கிருந்ததகண்டெின் நீரங்கலெய்தினன். (ஙo)

ஒருதனிப்பேடைமேலுள்ளமோடலால்
பெருவலியகூ குருகிரண்டும்பேர்கில
திருகுவெஞ்சினத்தனதருகட்டியன
பொருவனகண்டதன்புருவங்கோட்டினன். (ஙக)

உண்ணிறைபூடலிற்றோற்றவோதிமம்
கண்ணுறுகலியால்வெல்லக்கண்டவன்
தண்ணிறப்பவளவாயிதழைத்தற்பொதி
வெண்ணிறமுத்தினுலதுக்கிவிம்மினன். (ஙஉ)

இத்திறமெய்தியகாலையெய்தறும்
வித்தகர்சொற்களான்மெலிவுநீங்கினன்
ஒத்தனனிாமனுமுணர்வுதோன்றிய
பித்தரிலொருவகைபெயர்த்துபோயினன். (ஙங)

உறைவிடமெய்திலொருக்கேள்வியின்
துறையறிதுணைவரோடிருந்தசூழலின்
முறைபிதானையின்மருங்கு † முற்றினன்
அறைகடல்வீடணனயிர்ப்பில்சிந்தையான். (ஙச)

விபீடணன் ஓராயுின்னடைக்கலமென்றுகூறுதல்.

மற்பொருளுளதென்னின்மாறிலாக்
கொற்றவசரணெனக்கூயதோருரை
உற்றதுசெவித்தலத்தையெல்லென
நற்றுணைவரைமுகநயந்துநோக்குரு. (ஙடு)

எந்தையேயிராகவசரணமென்றசொல்
தந்தவ † ரெனவரோசாற்றுமின்னென
மந்தணமுற்றுழீ இயவெஞ்சேனையின்
முந்தினர்க்குற்றதைமொழிருவாமரோ. (ஙசு)

முற்றியகுரிசிலேமுழங்குதானையின்
உற்றனர்நிருதர்வந்தென்னவொன்றினர்

---

* குருகு-ஒருசாதிப்பறவை ‡ முற்றினன்-அடைந்தான்.
‡ எனவரோ-யாவரோ.

எற்றுநிர்பற்றுதிரெறிதிரென்றிடை
சுற்றினருருமெனத்தெழிக்குஞ்சொல்லினர். (நூஎ)

தந்ததருமமேகொணர்ந்ததானிவன்
வெந்தொழித்தீவினைப்பயத்தமேன்மையான்
வந்தனனிலங்கையர்மன்னனுரைஞ்
சிந்தனைமுடித்தனவென்னுஞ்செய்கையார். (நூஅ)

இருபதுகரத்தலையீரைந்தென்னுமத்
திருவிலிக்கன்னைவதைத்ததோவென்பார்
பொருதொழிலெம்மோடும்பொருதிபோரென்பார்
ஒருவரிலொருவர்சென்றுறக்கியுன்றுவார். (நூகூ)

பற்றினஞ்சிறையிடைவைத்துப்பாருடைக்
கொற்றவர்க்குணர்த்துதுமென்றுகூறுவார்
எற்றுவதன்றியேயிவனைக்கண் * டிறை
நிற்றலென்பிறிதெனநெருக்கிசேர்குவார். (நூ0)

இமைப்பதன்முன்விசும்பெழுந்துபோயபின்
அமைப்பதென்பிறிதிவரைக்கரல்லரோ
† சமைப்பதுகொலையலாற்றக்கதியாவதோ
குமைப்பதுகலனெனமூடிக்கூறினர். (நூக)

இணையந்தனவியைத்தனவினையகூறலும்
மயிந்தனுந்துமித்தனுமென்னுமாண்பினர்
அயிந்திரனிறைக்கலுணையேவலால்
நயந்தெரிகாவலரிருவர்கண்ணினர். (நூஉ)

விலக்கினர்படைஞரைவேதநீதிநூல்
இலக்கணமேக்கியவியல்பரெய்திஞர்
சலக்குறியிலரெனவருஞ்சார்ந்தனர்
புலக்குறியறதெறிபொருத்தநோக்கினர். (நூங)

யாரிவணெய்தியகருமம்யாவது
போரதுபுரிதிரோபுறத்தொரெண்ணமோ
சார்புறின்றரிர்சனமத்தவாறெலாஞ்
சோர்விலிர்மெய்ம்முறைசொல்லுவீரென்றான். (நூச)

பகலவன்வழிமுதற்பாரிலையகன்
புகலவன்கழலடைத்தய்யப்போத்தனன்
தகவுறுசிந்தையன்தருமநீதியன்
மகன்மகண்மைத்தனுமுகற்குவாய்மையான். (நூரு)

---

* இறை-சிறிது. † சமைப்பது-செய்வது.

அறநிலையழாமையுமாதிமூர்த்திபால்
நிறைவருசேமுகின்றவாய்மையும்
மறையவர்க்கன்புமேன்றினையமாமலர்
இறைவன்றாளெடுத்தவத்தினெய்தினன். (சசு)

சுதியையத்தகிலிடைப்பொதிந்ததுன்மதி
இதியேயிறையிடையிறைவன்றேவியை
விதியேயுய்குதிவிடாதுவேட்டியேல்
பதியென்றுறுதிகள்பலவும்பன்னினன். (சள)

மந்தருசிந்தையன்மதியினீங்கினன்
பிறந்தனேபின்பதிற்பிழைத்திபோகுதி
இறந்தனேநிற்றியேலென்னவின்னவன்
துர்த்தனனெனவிரித்தனலன்சொல்லினன். (சஅ)

மயிர்த்தனுமவ்வுரைமனத்துவைத்துநீ
இயைந்ததுநாயகற்கியம்புவேனெனப்
பெயர்தனண்தம்பியும்பெயர்வில்சேனையும்
அயர்ந்திலிர்காமினென்றமைவதாக்கியே (சக)

தருமமுஞானமுந்தவமும்வேலியாய்
மருவரும்பெருமையும்பொறையும்வாயிலாய்க்
கருணையங்கோயிலுளிருந்தகண்ணனே
அருணெறியெய்திச்சென்றடிவணங்கினன். (அ0)

உண்மையுணர்த்துவதாழியாயெனப்
புண்டரீகத்தடம்புரையும் * பூட்சியான்
மண்டிலச்சடைமுடிதளக்கிவாய்மையாய்
கண்டதுண்கேட்டதுங்கழறுவாயென்றான். (அக)

வினைவினையதிற்றிலம்வீடணப்பெயர்
நளிர்மலர்க்கையினஞ்சுவரோடென்
கனவியல்வஞ்சனையிலங்கைகாவலற்
கினவனஞ்சேனையினவெணெய்தினன். (அஉ)

கொல்லுமின்பற்றுமினென்னுக்கொள்கையால்
பல்பெருந்தானைசென்றடர்க்கப்பார்த்தியாம்
நில்லுமினென்றுநீயாரைநின்னிலை
சொல்லுதியென்னவோர்துணைவன்சொல்லினன். (அங)

மூரண்புகுதிவினைமுடித்தமூன்னவன்
† கரண்புகுசூழலேசூழக்காண்பதோர்

---

* பூட்சியான்-உடலினன். † கரணபுகுசூழலேசூழ-மனஞ்சென்றவழியிற் செல்ல.

அரண்பிரிந்திலனவருளின்வேலையைச்
சரண்புகுந்தனனெனமுன்னஞ்சாற்றினன். (இச)

ஆயவன்தருமமுமாதிமூர்த்திபால்
மேயதோர்பத்தியுமெய்யும் * வேதியர்
நாயகன்தரவெடுத்தவத்தகண்ணினன்
தூயவனென்பதோர்பொருளுஞ்சொல்லினன். (ஙஙி)

கற்புடைத்தேவியையிடாதுகாத்தியேல்
எற்புடைக்குன்றமாமிலங்கையேழினின்
பொற்புடைமுடித்தலைபுரளுமென்றொரு
சற்பொருளுணர்த்தினனென்றுரைட்டினன் (இசு)

ஏந்தெழிலிராவணனினைவசொன்னகீ
சாந்தொழிற்குரிஞையென்சார்புரிற்பியேல்
ஆந்தினைப்பொழுதினிலகதியாமெனப்
போந்தனனென்றனன்புகுந்ததென்றனன். (இஎ)

அப்பொழுதிராமனுமருடினண்பனை
இப்பொருள்கேட்டனீயம்புவீரிவன்
கைப்புதற்பாலனேகழியற்பாலனே
ஒப்புறநோக்கினும்முணர்விலனென்றனன். (இசி)

விபீடணனைக்குறித்துச் சுக்கிரீவன் தன் கருத்தறைத்தல்.

தடமலர்க்கண்ணனைத்தடக்கைகூப்பினின்
றிடனிதுகாலமீதென்னவெண்ணுவான்
கடனறிகாவலன்கழறினனோ
சுடர்கெமணிமுடிச்சுக்கிரீவனே. (இக)

கனிமுதல்வேதக்கணுவாமனல்
மனுமுதல்யாவையுமரம்புகண்டனீ
இனையனகேட்கவோவெம்மனோர்க்கிவ
வினவியகாரணம்விளிக்குமேலனாய். (ஈ0)

ஆயினும்வினம்புவெனருளினுழியாய்
ஞயினதாகலினதிவிற்கேற்றன
தூயவென்றெண்ணினுர்துணிவன்றென்னினும்
மேயதுகேட்டியால்விளவுசோக்குவாய். (ஈக)

வெம்முனைவீணுதலினன்றுவேறொரு
தம்மையாளுயிர்கொளத்துணிதலாலன்று

* வேதியர்நாயகன்-பிரமன்

தம்மூனைத்துறந்ததுதருமநீதியோ
* செம்மையிலரக்கரில்யாவற்சிரியோர்.. (கூஉ)

தகையுறுதம்மூனைத்தாயைத்தந்தையை
மிகையுறுகுரவரையுலகின்வேந்தனைப்
பகையுறவருதலுந்துறந்தபண்பிது
நகையுறலன்றியுரையக்கற்பாலதோ (கூக)

வேண்டெழியினையன விளம்பிவெம்மூனை
பூண்டெழியஞ்சிவெஞ்செருவிற்புக்குடன்
மாண்டெழியன்றிமம்மருங்குவந்தவன்
ஆண்டொழிலுலகினுக்காணியாமன்றே. (கூச)

மிகைப்புலந்தருமமேவேட்டபோதவர்
தகைப்புலந்துறந்துபோய்ச்சார்தலன்றியே
நகைப்புலம்பொதுவுறநடந்தநாயகன்
பகைப்புலஞ்சார்தலோபழியினீங்குமோ (கூடி)

வார்க்குறவினைகழற்றம்முன்வாழ்ந்தான்
சீர்க்குறவாயிடைச்செறுத்தீறிய
போர்க்குறவன்றியேபுகுந்தபோதிவன்
ஆர்க்குறவாகுவனருளினுழியாய் (கூஎ)

ஒட்டியகனகமாலுருவமாகிய
சிட்டனன்மருமகனிழைத்தசீவினை
கிட்டியபோதினிற்றவமுங்கேள்வியும்
விட்டதுகண்டோம்விடாது † வேட்குமோ. (கூஏ)

கூற்றுவன்றன்னெடிவுலகங்கூடிவந்
தேற்றனவென்னிலும்வெல்லவேற்றுள
மாற்றவன்தம்பிமம்மருங்கிவந்திவன்
தோற்றுமோவன்னவன்றுணைவனுகுமோ. (கூஐ)

அரக்கரையாசறக்கொன்றுகல்லறம்
பூரக்கவந்தனமெனும்பெருமைபூண்டனாம்
இரக்கமிலவரையேதுணைக்கோடேலால்
சுருக்கமுண்டவர்வலிக்கென்றுதான்றுமால். (கூக)

விண்டெழியொருநிலைநிற்பர்மெய்ம்மூகம்
கண்டெழியொருநிலைநிற்பர்கைப்பொருள்
கொண்டெழியொருநிலைநிற்பர்கூழுடன்
உண்டெழியொருநிலைநிற்பருர்றவர். (ஙஅ)

* செம்மையில-ஒழுக்கமற்ற. † வேட்குமோ-விரும்புவேமோ.

வஞ்சனையற்றிடவந்தவாறலால்
தஞ்சனநம்வயிற்சார்ந்துளானலன்
நஞ்சனக்கொடியனேயந்துகோடியோ
அஞ்சனவண்ணவென்றறியக்கூறினன். (எக)

அன்னவன்பின்னுறவலகில்கேள்வியால்
தன்னிகர்பிறிதிலாத்தகையசாம்பனே
என்னையுன்கருத்தென * விறைவிளையினன்
தொன்முறைதெறிதெரிந்தவனுஞ்சொல்லுவான். (எஉ)

விபீடணனைக்குறித்துச் சாட்டன் தன்கருத்துணர்த்துதல்.

அறிஞரேயாயினுமரியதெவ்வரைச்
செறிஞரேயாவரேற்கெதிரிண்ணமாம்
கெறிதனேநோக்கினுநிருதர்நிற்பதோர்
குறிநனியுளதெனவுலகங்கொள்ளுமோ. (எங)

வெற்றியுந்தருகுவர்வினையம்வேண்டுவர்
முற்றவருறுகுறைமுடிப்பர்முன்பிலர்
உற்றுறுநெடும்பகையுடையரல்லதூஉம்
சிற்றினத்தவரொடுஞ்செறிதல்சிறிதோ. (எச)

வேதமும்வேள்வியுமயக்கிவேதியர்க்
கேதமுமிமையவர்க்கிடருமீட்டிய
பாதகர்நம்வயிற்படர்வரானெனின்
நீதிலராய்நமக்கன்புசெய்வரோ. (எடு)

கைப்புகுந்துறுசரணருளிக்காத்துமேல்
பொய்க்கொலைஞ்சினைபுணர்த்தபோதினும்
மெய்க்கொளவிளியினும்விடுதுமென்னினும்
திக்குறுநெடும்பழியறமுஞ்சிறுமால். (எசு)

மேனனிவினைவதவினம்பல்வேண்டுமோ
காணகத்திறைவியோடுறையுங்காலையின்
மானெனவந்தவன்வரையை † மாணுமிவ்
வேனையன்வாவுமென்றினையகூறினன். (எஎ)

பால்வருபனுவலின்றுணிவுபற்றிய
சால்பெருங்கேள்வியின்றூனேராயகன்
நீலனேகீன்கருத்தியம்புகீயென
‡ மேலவன்வினம்பலும்விளம்பன்மேயினன். (எஅ)

* இறை-இராமன். † மாணும்-ஒக்கும். ‡ மேலவன்-இராமன்.

விபீடணனைக்குறித்து நீலன் தன்கருத்துணர்த்துதல்.

பகையுரைதணெனப்பற்றற்பாலதாம்
வகையுளவன்னவைவரம்பில்கேள்வியாய்
தொகையுடக்கூறுவென்குரங்கின்சொல்லென
நகையுறத்தக்கனநயந்துகோடியால். (எக)

தன்குலக்கிளைஞரைத்தருக்கும்போரிடைப்
பொன்குகர்க்கொன்றவர்க்கெளியர்போந்தவர்
மன்கையர்திறத்தினின்வயிர்த்தசிந்தையர்
சின்கலில்பெரும்பொருளிழந்துசீறியோர் (அ0)

பேரபிமானங்களுற்றபெற்றியோர்
போரிடைப்புறங்கொடுத்தஞ்சிப்போந்தவர்
சேர்வருதாயத்து * சிரப்பினேர்பிறர்
சீரியர்கிளைஞரைமடியச்செற்றனோர். (அக)

அடுத்தாட்டரசியல்புடையவரணையாற்
படுத்தவர்பட்டவர்பகைஞரோடொரு
மடக்கொடிபயந்தவர்மைந்தராயினும்
உடற்கொளத்தகையர்கம்முழைவந்தொன்றினுல். (அஉ)

தாமவர்க்கெளிவருந்தகைமையாலவர்
சாமுறவல்லவர்நம்மைகண்ணினர்
தோமுறநீக்குதறுணிவாதலின்
யாமிவன்வரவிவற்றென்னென்றுன்னுவாம். (அஙூ)

காலமேநோக்கினுங்கற்றநூல்களின்
மூலமேநோக்கினுமுளிந்துபோந்தவன்
சீலமேநோக்கியாந்தெளிந்துதேறுதற்
கேலுமேயென்றெடுத்தினையகூறினுன். (அச)

மற்றனமந்திரிக்கிழவர்வாய்மையால்
குற்றமில்கேள்வியரன்புகூர்ந்தவர்
பற்றுதல்பழுதெனப்பழுதிலாவொரு
பெற்றியினுணர்வினுர்முடியப்பேசினுர். (அடு)

உறுபொருன்யாவருமொன்றக்கூறினுர்
செறிபெருங்கேள்வியாய்கருத்தென்செப்பென
நெறிதருமாருதியென்னுநேரிலா
அறிவனேநோக்கினன்றிவின்மேலுளான். (அஎ)

* சிற்பினேர் என்றும் பாடம்.

இணங்கினரதிலரெனினுமெண்ணுங்கால்
கணங்கொள்கைதம்மனோர்கடன்மைகாணென
வணங்கியசென்னியன்மறைத்தவாயினன்
நணங்கியகேள்வியானுவல்வதாயினன். (அஎ)

விபீடணனைக்குறித்து அனுமன் தன்கருத்துணர்த்துதல்.

எத்தனையுளர்தெரிந்தெண்ணவேய்த்தவர்
அத்தனைவருமொருபொருளையன்றன
உத்தமரதுதெரிந்துணரவோதினர்
மித்தகவினிச்சிலவிளம்பவேண்டுமோ. (அஅ)

தூயவர்துணிதிறன்றூயதே
ஆயினுமொருபொருளுரைப்பெனழியாய்
நீயனென்றிவனையானயிர்த்தல்செய்திலேன்
மேயினிலபொருள்விளம்பவேண்டுமால் (அக)

வண்டலைகலக்கலாம்வஞ்சர்வாண்முகம்
கண்டதோர்பொழுதினிற்றெரியுங் † கைதவம்
உண்டெனினதீதவர்கொளிக்கவொண்ணுமோ
விண்டவர்பலபகன்மருவிவீழ்வரோ. (கo)

உன்னத்தினுள்ளதையுரையின்முற்றற
மென்னத்தம்முகங்களேவிளம்புமாகலால்
கன்னத்தின்விளைவெலாங்கருத்திலாலிருட்
பன்னத்தினன்றியேவெளியிற்பல்குமோ. (கக)

வாலிவிண்பெறவரிஞையவன்பெறக்
கோலியவரிசிலேவலியுங்கொற்றமும்
சேலமுமுணர்ந்துநிற்சேர்ந்துதெள்ளிதின்
மேலரசெய்துவான்விரும்பிமேயினன். (கஉ)

செறிகழலரக்கர்தமரசுசீரியோர்
நெறியலதாகலினிலக்கலாமையும்
எறிகடலுலகெலாமிளவலுற்றதோர்
பிறிவருங்கணையுமெய்யும்பேணினன். (கங)

காலமன்றிவன்வருகாலமென்பரேல்
வாலிதன்னுறுபகைவலியதேறிய
தாலினியங்கிவற்கிறுதியாவதால்
மூலமென்றனைவரைப்பிரிவுமுற்றினன். (கச)

* இணங்கினர்-நினைத்தவர்கள். † கைதவம்-வஞ்சனை.

நீத்தொழிலரக்கர்தமாயச்செய்வினை
வாய்த்துளரன்னவையுணருமாண்பிலுல்
காய்த்தவரவர்களேகையுற்றூர்தமக்
கேற்றதோருழியுமெளிதினெய்துமால். (கஇ)

தெளிவுறலரிதிவர்மனத்திற்றீமையாம்
விளிவதுசெய்குவரென்னவேண்டுதல்
ஒளியுறவுயர்ந்தவரொப்பவெண்ணலார்
எளியவர்நிறத்திவையெண்ணலேயுமோ (கஈ)

கொல்லுமினிவனெனென்றரக்கன்கூறிய
எல்லையிற்றூதரையெறிதலென்பது
புல்லிதுபழியொடும்புணரும்போர்த்தொழில்
வெல்லலம்பின்னெனென்றிடைவிலக்கினன். (கஉ)

மாதரைக்கோறலுமறத்துறீங்கிய
ஆதரைக்கோறலுமழிவுசெய்யினும்
தூதரைக்கோறலுந்துய்தன்றுமெனு
ஏதுவிற்றெரிந்தனவெடுத்துக்காட்டினன். (கஊ)

எல்லியில்யானிவ * னிரணமாளிகை
செல்லியபோதினுந்திரிந்தபோதினும்
கல்லணரிமித்தங்களனிகயர்துன
அல்லதுமுண்டானறிந்ததாழியாய். (கஎ)

நிந்தனோநறவுமெறியிலூன்களும்
தந்தனகண்டிலென்றருமதானமும்
வந்தனீயும்பிறவுமாண்பமைந்
† தந்தணரில்லெனப்பொலிந்ததாமரோ. (க00)

‡அன்னவன்றனிமகளலரின்மேலயன்
சொன்னதோர்சாபமுண்டென்னத்துன்மதி
கன்னுதலீண்டுமேனணுகுங்கூற்றென
என்னுடையிறைவிக்குமினிதுகூறினன். (க0க)

வே று.

பெற்றுடையபெருவரமும்பிறந்துடையவஞ்சனையும்பிறவுமுன்கை [மே
லிற்றொடையின்விகனெனாயாவதெவ்வெந்தொழியுமெனக்கருதிமேற்சொல்லோ

---

* இரணமாளிகை-மூரசொலியினையுடைய மாளிகை.

† இக்கவியாலந்தணர்கள் ஊனுண்கள்ளுமுண்ணுதாரென்பது கன்கு தினங்குதல்காண்க. ‡ அன்னவன்-அவ்விபீடணன்.

உற்றுடையபெருவரமூமுகத்துடையதண்ணளியுமுணர்வுநோக்கின்
மற்றுடையர்தாமுனரோவானரக்கணன்றியேதவத்தின்வாய்த்தார். (கூஉ)

தேவர்க்குச்தானவர்க்குத்திசைமுகனேமுதலாயதேவதேவர்
மூவர்க்குமுடிப்பரியகாரியத்தைமுற்றுவிப்பான்மூண்டின்றே
ஆவத்தின்வந்தபயமென்றுனையயிர்த்தகலவிடுதியாயின்
* கூவத்தின்சிறுபுனலேக்கடலயிர்த்ததொவ்வாதோகொற்றவேந்தே, ()

பகைப்புலத்தோர்துணையல்லரென்றியானப்பற்றேமேலறிஞர்பார்க்கின்
தகைப்புலத்ததாமன்றேதற்றுயமுனதாயப்பற்றுன்மிக்க
தகைப்புலத்தோர்தந்தையர்கடம்பியர்கடமவரிவர்தாமேயன்றே
மிகைப்புலத்துவினைதின்றதொருபொருளைக்காதலிக்கின்விளிஞராவர். ()

ஆதலாலிவன்வரவுநல்லரவேயெனவுணர்ந்தேனடியனேனுன்
வேதனூலெனத்தகையதிருவுளத்தின்குறிப்பறியேனென்றுவிட்டான்
காதலன்முகனுலுங்கணிப்பரியகலையனத்துங்கதிரோன்முன்சென்
றேதிலனேதகீர்கடந்துபகைகடிந்தலகையுய்யக்கொண்டான். (கூடு)

இராமன் விபீடணனைக்குறித்து தன்கருத்துரைத்தல்.

மாருதிவினையவார்த்தைசெவிமடுத்தமிழ்தின்மாந்திப்
போறிவாளனன்றான்றெனப்பிறரைநோக்கிச்
சிரிதுபேலிம்மாற்றம்தெளிவுறத்தேர்மினென்னு
ஆரியனுரைப்பதானனேவருமதனைக்கேட்டார். (கூக)

கருத்துறநோக்கிப்போந்தகாலமுன்றுகாதல்
அருத்தியுமாசின்மேற்றேயறிவினுக்கவதியில்லை
பெருத்துயர்தவத்தினுனும்பிழைப்பிலனென்னும்பெற்றி,
திருத்தியதாருமன்றேநம்வயிற்சேர்ந்தசெய்கை. (கூஎ)

மற்றினையுரைப்பதில்லைமாருதிவடித்துச்சொன்ன
பெற்றியேபெற்றியன்னதன்றெனிற்பிறிதொன்றுளும்
வெற்றியேபெருகதோற்கவீகவியாதுவாழ்க
பற்றுதலன்றியுன்டோபுகலெமைப்பகர்கின்றுனை. (கூஅ)

இன்றுவந்தானென்றுண்டோவெற்றையையாயையுண்னைக்
கொன்றுவந்தானென்றுண்டோபுகலதுகூறுகின்றுன்
தொன்றுவந்தன்புபேணுத்தேவனுமவனேபின்னைப்
பின்றுமென்றுலாம்பாற்புகழன்றிப்பிரிதுண்டாமோ. (கூக)

பிறந்தகாட்டோடன்றியொருதுலைக்கபெரியோன்பெற்றி
மறந்தகாலுண்டேயென்னச்சரணென்றுவாழ்கின்று

* கூவம்-இணை.

துறந்தநாட்டின்றுவந்துதன்னிளஞ்சூட்டியாலே
இறந்தானன்றேவென்றுயிருந்தாளாவதென்றான். (கஎ0)

இடைந்தவர்க்கபயம்யாமென்றிரந்தவர்க்கெதிர்வேலே
கடைந்தவர்க்காகியாலமுண்டவற்கண்டிலீரோ
உடைந்தவர்க்குதவாஞையினுள்ளதொன்றீயாஞையின்
அடைந்தவர்க்கருளாஞையின்றமென்ஞமாண்மையென்ஞும். (கஎக)

பேடையைப்பிடித்துத்தன்னேப்பிடிக்கவந்தடைந்தபேதை
வேடனுக்குதவிசெய்துவிறகினடைவெந்தீமூட்டிப்
பாறுபசியைபோக்கித்தன்னுடல்கொடுத்த • பைம்புள்
வீடுபெற்றுயர்ந்தவார்த்தைவேசத்தின்வீழுமதன்றே. (கஎஉ)

† போதகமொன்றுகன்றியிடங்கர்மாப்பொருதபோரின்
ஆதியம்பரமேயாணன்னபயமென்றழைத்தவர்நான்
வேதமுமுடிவுகாணுமெய்ப்பொருள்வெளிவந்தெய்தி
மாதயர்தடைத்தவார்த்தைமறப்பரோமறப்பிலாதார். (கஎங)

மண்ணியிரெல்லாந்தானேவருவித்துவளர்க்குமாயன்
தன்னைவுலகமெல்லாந்தருமழுமையையுந்தானே
என்னினுமடைந்தோர்தம்மையேமுறவினிதினேம்பிப்
பின்னும்வீடனிக்குமென்றுற்பிறிதொருசாற்றுமுண்டோ. (கஎச)

நஞ்சினைமிடற்றுவைத்த ‡ சகைமழுவாளனூரும்
தஞ்சனமுன்னுந்தானேதாதைபாற்கொடுத்துச்சாதல்
அஞ்சினைபயமென்றவர்தணற்காகியர்ந்தான்
வெஞ்சினக்கூற்றைமாற்றுமேன்மையின்மேன்மையுண்டோ. (கஎ0)

சரணைனக்கியார்கொலென்றசானகியழுதசாம்ப
அரணுனக்காவென்வஞ்சியஞ்சலென்றருளினெய்தி
முரணுடைக்கொடியோன்கொல்லமொய்யமர்முடித்துத்தெய்வ
மரணமென்றுதைபெற்றதென்வயின்வழக்கன்றுமோ. (கஎக)

உய்யநிற்பயமென்றுனியிரைத்தன்னுயிரி ¶ னும்பாக்
கய்யனுமொருவன்செய்தவுதவியிற்கருதிலோனும்
மய்யறநெறியினேக்கிமாமறைநெறியினின்ற
மெய்யினேப்பொய்யென்றொன்னுமீன்றிலாரரின்வீழ்வார். (கஎஉ)

தேதையைக்குறித்ததேயோதேவரைத்தேமைசெய்து
பேதையைக்கொல்லனென்றபெணியவிரதப்பெற்றி

• பைம்புள்-புறு. † போதகம்-யாஜை.
‡ சகைமழு-ஒளிவிடுகின்றபரசு. ¶ ஓம்பா-ஓட்டிக்காத.

வேயிரபயமென்மூர்க்கன்தானான்விரித்துச்சொன்ன
காதையைக்குறித்துநின்றவவ்வுரைகடக்கலாமோ. (கசஅ)

காரியமாகவண்டேயாருக * கருணையோர்க்குச்
சீரியதன்மைமோக்கினிதளின்மேற்பிறந்ததுண்டோ
பூரியரேயுத்தம்மைப்புகல்புகுந்தோர்க்குப்பொன்மு
ஆருயிர்கொடுத்துக்காத்தற்கெண்ணிலாவரசர்க்கென்னும். (கசக)

ஆதலானபயமென்றபொழுதத்தேயபயதானம்
ஈதலேகடப்பாடென்பதியம்பினீரென்பால்வைத்த
காதலானினிவேறெண்ணக்கடவதென்கதிரோன்மைத்த
கோதிலாதவனேநீயேயென்வயிற்கொணர்தியென்றான். (கஉ0)

சுக்கிரீவன் விபீடணனே நாடிவருதல்.

அய்யுறவெல்லார்தீருமளவையாயமைத்ததன்றே
தெய்வாயகனதுள்ளந்தேறியவடைவேதேறிக்
கய்புகற்கமைவதானுன்கடிதினிற்கொணர்வலென்னு
மெய்யினுக்குறையுளானவொருவன்பால்விரைவிற்சென்றான். ()

விபீடணன் சுக்கிரீவனெதிரே செல்லுதல்.

வருகின்றகவியின்வேர்ந்தமயிந்தனுக்கினியவள்ளல்
தருகென்றுணர்ந்ணனின்னையெதிர்கொளற்கருக்கன்றத்த
இருகுன்றமனையதோளானெய்தினனென்னலோடும்
திரிகின்றவுள்ளத்தானுமகமலர்ந்தவன்முன்சென்றான். (கஉஉ)

இருவரு டொருவரையொருவர் ஆலிங்கனஞ்செய்தல்.

தொல்லருங்காலமெல்லாம்பழகினுந்தாயரல்லார்
புல்லலருள்ளத்தாயார்பொருந்துவரெதிர்ந்தனான்றே
ஒல்லைவந்துணர்வுமொன்றவிருவருமொருதாமுற்ற
எல்லியும்பகலும்போலத்தழுவினரெழுவிற்றோளார். (கஉங)

சுக்கிரீவன் விபீடணனை இராமனடிபணிய வருதுதல்.

தழுவினர்நின்றகாலைத்தாமரைக்கண்ணன்றன்கள்
முழுமுதற்குலத்திற்கேற்றமுறைமையாலுவகைமூள
வழுவலிலபயமுன்பால்வழங்கினனவன்பொற்பாதம்
தொழுதியால்விரைவினென்னுக்கதிரவன்சிறுவன்சொன்னான். ()

சிக்கவேறலையான்சொன்னவாசகஞ்செவிபுகாமுன்
கங்குலினிறத்தினுன்றன்கண்மழைத்தாரைகான்ற
அங்கமு மனமுதென்னக்குளிர்ததவ்வகத்தையிக்குப்
பொங்கியவுவகையென்னப்பொடிந்தனவுரோமப்புள்ளி. (கஉடு)

* கருணையோர்க்கு-அருளுடையோர்க்கு † மனமதென்ன-மனதையொப்ப

பஞ்சனச்சிவக்குமென்காற்றெவியைப்பிரித்தபாவி
வஞ்சனுக்கிளையவென்னைவருகவென்றருள்செய்தானே
தஞ்சனக்கருங்குஞ்சேதாழ்சடைக்கடவுளுண்ட
நஞ்சனத்தகையேனன்றேநாயகனருளினுயேன். (கஉக)

மறுளுறுமனத்தினுனென்வாய்மொழிமறுத்தான்வானத்
தருளுறுதேரினுமிலங்கைமீதேறென்றே
தெருளுறுந்தைவந்தேற்றமீதாகிற்செய்யும்
அருளிதுவாயிற்கெட்டேன்பிழைப்பரோவரக்கராயோர். (கஉஎ)

தீர்வருமின்னமம்மைச்செய்யினுஞ்செய்யுந்தைப்
பேரருளாளர்த்தத்தஞ்செய்கையிற்பிழைப்பதண்டோ
கார்வரைநிறுவித்தன்னைக்கனலெழக்கலக்கக்கண்டும்
ஆர்கலியமரருய்யவமிழ்துபண்டளித்ததன்றே. (கஉஅ)

துறவியினுறவுபூண்டதுயவர்துணைவனென்னே
உறவுவந்தருளிமீளாவடைக்கலமுதவினனே
மறவினைக்கலில்லாமாயமுமாயவாழ்க்கைப்
பிறவியும்பெயர்த்தேன்பின்னுரகினிற்பிழைப்பதானேன். (கஉக)

திருத்தியவுணர்வுமிக்கசெங்கதிர்ச்செல்வன்செம்மல்
ஒருத்தரைகலனுந்திங்குக்தெரினுமுயிரினும்பும்
கருத்தினனன்றேதன்னைக்கழலடைந்தோரைக்காணும்
அருத்தியனமலன்றுழாதேகுதியறிஞவென்றான். (கங0)

* மொய்தவழ்சிரிகண்மற்றும்பலவுடன்முடுகிச்செல்ல
மய்தவழ்சிரியுமேருக்குன்றமும்வீருவதென்னச்
செய்தவம்பயந்தவீரர்திரண்மரமேழுந்திய
எய்தவனிருந்தசூழலிருவருமெய்தச்சென்றார். (கங்க)

விபீடணன் இராமனைத் தரிசித்தல்.

மாற்கடஞ்சூழ்ந்தவைப்பினக்கதன்மருங்குகாப்ப
காற்கடலுதித்தபாரினுயகன்புதல்வனுமப்
பாற்கடல்சுற்றவிற்கைவடவரைபாங்குசிற்பக்
கார்க்கடல்கமலம்பூத்ததெனப்பொலிவானைக்கண்டான். (கங்உ)

அள்ளிமீதலகைவீசுமரிக்குலச்சேனைகாப்பண்
தென்னுதண்டிரையிற்றுஞ்சிப்பிறிதொருதிறனுஞ்சாரா
வெள்ளியகடலின்மேனுள்விண்ணவர்தொழுதுவேண்டப்
பள்ளிதீர்ந்திருந்தானென்னப்பொலிதரும்பண்பினுனே. (கங்ஊ)

* மொய்தவழ்-யானைகளுலாவுகின்ற.

கோணுதற்கமைந்தகோலப்புருவம்போற்றிரையுங்கூடப்
பூணுதற்கினியமுத்தின்பொலிமணல்பரந்தவைப்பிற்
காணுதற்கினியநீலவெண்மையிற்கருமைகாட்டி
வாணுதற்சீதைகண்ணின்மணியெனவயங்குவாரே: (கஉச)

படர்மழைசுமந்தகாலைப்புகர்வருமமர்கோமான்
அடர்சிலைதுறந்ததென்னவாரந்தீர்மார்பினானைக்
கடர்கடைமத்திற்பாம்புகழற்றியதென்னக்காசின்
சுடரொளிவலயந்தீர்ந்தசுந்தரத்தோளினானை. (கஉடி)

கற்றைவெண்ணிலவுநீக்கிக்கருணையாலமிழ்தங்காலும்
முற்றுறுகலையிற்றூயமுழுமதிமுகத்தினானைப்
பெற்றவனளித்தமோலியிலையவன்பெறத்தான்பெற்ற
சிற்றவைபணித்தமோலிபொலிகின்றசென்னியானை. (கஉக)

வீரனேகோக்கியங்கமென்மயிர்ச்சிலிப்பக்கண்ணீர்
வாரநெஞ்சுருகிச்செங்கணஞ்சனமலையன்றுதில்
கார்முகில்கமலம்பூத்ததன்றிவன்கண்ணன்கொல்லாம
ஆரருள்சுரக்குநீயறிதங்கரிதாதவென்றான். (கஉள)

மின்மினியொளியின்மாயும்பிறவியைவேரின்வாங்கச்
செம்மணிமகுடநீக்கித்திருவடிபுனைந்தசெல்வன்
தன்முனுர்கமலத்தண்ணருதையார்சரணந்தாழ
என்முனுெனக்குச்செய்தவுதவியென்மேம்பலுற்றான். (கஉஅ)

பெருந்தவமியற்றினோர்க்கும்பேர்வரும்பிறவிநோய்க்கு
மருந்தனின்றான்றானேவடிக்கணைதொடுத்துக்கொல்வான்
இருந்தனனின்றதென்னுமியம்புவதில்லைதீர்ந்த
அருந்தவமுடையரம்மாவரக்கரென்றகத்துட்கொண்டான். (கஉஉ)

கரங்கண்மீச்சுமந்துசெல்லுங்கதிர்மணிமுடியன்கல்லும்
மரங்களுமுருகநோக்குங்காதலான்கருணைவள்ளல்
இரங்கினனெனக்குந்தோறுமிருநிலத்திறைஞ்சுகின்றான்
வரங்களின்வாரியன்னதாளிணைவந்துவீழ்ந்தான். (கசo)

அழிந்ததுபிறவியென்னு * மகத்தியன்முகத்திற்காட்ட
வழிந்தகண்ணீரின்மண்ணின்மார்புறவணங்கினானைப்
பொழிந்ததோர்கருணைதன்னுற்புல்லினனென்றுதோன்ற
எழுந்தினிதிருத்தியென்னுமலர்க்கையாலிருக்கையீந்தான். (கசக)

---

* அகத்தியன்-உள்ளத்தின்தன்மை.

இராமன்வுபீடணனுக்கு இலங்கையரசளித்தேனெனல்.

ஆழியானவனோக்கியருள்சுரந்துவகைதூண்ட
எழிலேடோழாய்நின்றவுலகுமென்பெயருமெங்காள்
வாழுநாளன்றிகாறும்வானெயிற்றரக்கர்வைகும்
தாழ்கடலிலங்கைச்செல்வநின்னதேதந்தேனென்றான். (கசஉ)

அனைத்துயிரும்வாழ்ந்தேமென வார்த்தல்.

தீர்த்தனதருளோநோக்கிச்செய்ததோர்பிறப்புப்பெற்றான்
கூர்த்தகல்லறத்தைநோக்கிக்குறித்ததோயாதுகொல்லோ
வார்த்தையஃதிரைத்தலோடுந்தனித்தனிவாழ்ந்தேமென்ன
ஆர்த்தனவுலகினுள்ளசராசரமனைத்துமம்மா. (கசஊ)

இராமன்விபீடணனுக்கு மதுடதாரணஞ்செய்யக் கட்டளையிடுதல்.

உஞ்சனேனடியனேனென்றாழ்முறைவணங்கிநின்ற
அஞ்சனமேனியானையழகனுமருளிநோக்கித்
தஞ்சமற்றுனையலாலதவநிலாப்புகழான்றன்னைத்
தஞ்சலியனத்தையூட்டுதிமகுடமென்றான். (கசச)

விபீடணன் பாதுகை மதுடம் வீரும்புதல்.

விலைவினையறியுமென்றிவீடணனென்றுவியா
அளவறுபெருமைச்செல்வமளித்தனையாயினைய
களவியலரக்கன்பின்னேதோன்றியகடன்மைதீர
* இலையவற்கவித்தமோலியென்னையுங்கவித்தியென்றான். (கசடி)

சுகலெழிமைவரானேமுன்புபின் † குன்றுசூழ்வான்
மகலெழுமெருவராணேமெம்முழையன்பின்வந்த
அகனமர்காதலையநின்னெழுமெழுவராணேம்
புகலருங்கானந்தந்துபுதல்வராற்பொலிந்தானுய்ந்தை. (கசக)

விபீடணன் தீருமுடி மதுடஞ்சூடி நீற்றல்.

கலினிப்பகர்வதென்னேனாயகனாயினேனே
உடனுதித்தவர்களோடுமொருவனென்றுரையாநின்றாய்
அடிகடமயிற்சிறந்தேனென்னையிப்பொழுதுசனீக்கித்
தொடுகழற்செம்பொன்மௌலிசென்னியிற்சூட்டிக்கொண்டான். ()

திருவடிமுடியிற்சூட்டிச்செங்கதிருச்சிசேர்ந்த
அருவரையென்னநின்றவரக்கர்தம்மரசைநோக்கி
நீருவருமின்பமுற்றார்யாவருமின்பமுற்றார்
பொருவருமமரர்வாழ்த்திப்பூமழைபொழிவதானார். (கசஅ)

---

* இலையவற்கவித்தமோலி-பரதனுக்களித்த பாதுகைமகுடம்.
† குன்றுசூழ்வான்மகன்-சுக்கிரீவன்.

ஆர்த்தனபரவையேழுமார்த்தனமேகமார்த்த
வார்த்தொழிற்புணருந்தெய்வமங்கலமுரசுஞ்சங்கும்
தூர்த்தனகனகமாரிசொரிந்தனதறமென்சுண்ணம்
போர்த்ததுவானத்தன்றங்கெழுந்ததுதுழனிப்பெம்மல். (கசக)

மொழிந்தசொல்லபிழ்தமண்ணடிறத்தினின்முறைமைமீங்கி
இழிந்தவென்மரபுமின்றேயுயர்ந்தவெண்றிடாரிற்றீர்த்தான்
செழுந்தனிமலரோன்பின்னேயிராவணன்றீமைசெல்வம்
அழிந்ததென்றறனுந்தன்வா * யாவலங்கொட்டிற்றன்றே. (கஜ0)

இன்னதோர்செல்வித்தாகவிராமனுமிலங்கைவேந்தன்
தன்னெடுஞ்செல்வந்தானேபெற்றமைபலருங்கேட்பப்
பன்னெடுந்தானைசூழப்பகலவன்சேயுநீயும்
மன்னெடுங்குமரபாடிவீட்டினைவலஞ்செய்கென்றான். (கஜக)

முடிசூடிய விபீடணனைப் பாடி வீட்டினைவலம் வருவித்தல்.

அந்தமில்குணத்திறையடியினைமுடியினேறும்
சந்தனவிமானமேற்றிவானரத்தலைவர்தாங்க
இந்திரற்குரியசெல்வமெய்திஞனிவனென்றேத்தி
மந்தரத்தடந்தோள்வீரர்வலஞ்செய்தார்தானைவைப்பை. (கஜஉ)

இராமன் திருவடியின்பெருமை சொல்லொணுதனல்.

தேவுமார்தேடரின்றசேவடிதானுந்தேடி
தவோனன்றுகண்டகான்முகன்கழீஇயகான்னீர்
ஆவாபாவமஞ்சுநீவதிமேலமராவார்
சூவோரெய்துந்தன்மைசொல்லுவார்யாவர்சொல்லீர். (கஜட)

விபீடணன்பெற்ற பேற்றினையியத்தல்.

இற்றைநாளளவும்யாருமிருடிகளிமையோர்ஞான
மூற்றிஞ்ரன்புபூண்டார்வேள்விகண்முடித்துநின்றூர்
மற்றுமாதவருமெல்லாம்வாழையிற்றிலங்கைவேந்தன்
பெற்றதார்பெற்றுரென்றுவியந்தனர்பெரியோரெல்லாம். (கஜச)

சு வது. விபீடணனடைக்கலப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-சுகூ.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

---

* ஆவலங்கொட்டல்-வாயாலாலித்தல்.

ஐந்தாவது

இலங்கைகேள்விப்படலம்.

வந்தடிவணங்கியசிருதர்மன்னலற்
கந்தமிலாததோருறையுளவ்வழித்
தந்தனன்விடுத்தபினிரவிதன்சுதர்
சிந்தினெய்யவென்றெண்ணித்தீர்த்தனன். (க)

அந்திமாலைப்பொழுது வருதல்.

சந்திவந்தனைத்தொழின்முடித்துத்தன்னெமும்
புந்திநொந்திராமனுமுயிர்ப்பப்பூங்கணை
சிந்திவந்திறுத்தனன்மதனன்றீயிறத்
தந்திவந்திறுத்ததுகுறுத்ததண்டமே. (உ)

நட்சத்திரோதயம்.

மாத்திடந்நிசைதொறுமறைத்தவல்லிருள்
கோத்ததுகருங்கடல்கொள்ளைகொண்டனன
நீத்தநீர்ப்பொய்கையினிறைந்தாண்மலர்
பூத்தனமீன்குலம்பொலிந்ததண்டமே. (ங)

சில்லியல்கோதையைச்சினந்துதேம்பிய
வில்லியைத்திருமனம்வெதுப்பும்வேட்கையால்
* எல்லியைக்காண்டலுமலர்ந்தவீட்டிலல்
மல்லிகைக்கானமும்வானமொத்ததே. (ச)

சந்திரோதயம்.

ஒன்றுமுட்கறுப்பிலைடொளியின்வாளரீ இத்
தன்றனிமுகத்திலெனின்னைத் † தாழ்ந்தற
வென்றவடிவேலனையின்றுவெல்குவேன்
என்றதுபோலவக்கதழுந்ததிர்த்ததே. (ஞ)

கண்ணினையப்புறங்கரந்துபோதினும்
பெண்ணிறமுண்டெனிற்பிடிப்பலீண்டென
உண்ணிறைநெஞ்சுடலுலகமெங்கணும்
வெண்ணிறநிலவெனும்வலையவீசினன். (ட)

கடலோலி

புடைக்கையவன்றிரையெடுத்தார்க்கும்போர்க்கடல்
உடைக்கருந்தன்னிறமொளித்துக்கொண்டவன்

* எல்லியை-இரவை. † தாழ்ந்தற-தெரியாத.

அடைக்கவந்தானெனையரியின்றனையால்
இடைக்கவந்தானெனக்கிளர்ந்ததெத்திசே. (ஈ)

நிலாப்பரத்தல்

மேலுகத்தொகுதியான்முதிர்ந்தமெய்யெலாம்
தோலுகுத்தாலெனவரவத்தொல்கடல்
வாலுகத்தாலிடைப்பரந்தவைப்பெலாம்
பாலுகுத்தாலெனநிலவுபாய்ந்ததால். (அ)

தென்றல் வீசுதல்.

* மன்றல்வாய்மல்லிகையெயிறுவண்டினம்
கன்றியவிடத்ததுகறின்கண்ணது
குன்றின்வாய்முழையினிற்குலாயகொட்பது
தென்றலென்றுருபுலியுயிர்த்துச்சென்றதால். (கு)

மன்மதபாணமும் சந்திரிகையும்.

கரத்தொடும்பாழிமாக்கடல்கடைந்தளான்
உரத்தொடுக்காலெடுமுருவவோங்கிய
மரத்தொடுத்தொளத்தவன்மார்பின்மன்மதன்
சரத்தொடும்பாய்ந்தனநிலவின்றூரைவாள். (கூ)

இரவில் இராமன் சீதையைநினைந்து வருந்தியதுரைத்தல்.

உடலினைநோக்குமின்னுயிரைநோக்குமால்
இடரினைநோக்குமற்றியாதுநோக்கலன்
கடலினைநோக்குமக்கள்வன்வைகுறும்
இடரினைநோக்குந்தன்சிலேயைநோக்குமால். (கூ)

பணிபழுத்தமைந்தபூணல்குற்பண்பிலுல்
பிணிபழுத்தமைந்ததோர்பித்திலுள்ளத்தான்
அணிபழுத்தமைந்தமுத்தரும்புசெம்மணி
மணிபழுத்தமைந்தவாய்மறக்கவல்லனே. (கூ)

சுக்கிரீவன்மேலாக வேண்டுவன நினையேனல்.

ஆயதோளையினருக்கன்மைந்தனீ
தேய்வதென்காரியகிரப்புஞ்சிந்தையை
மேயவன்றன்னெடுமெண்ணிமேலினித்
தூயதுரிசைக்கிலேயென்னச்சொல்லினன். (கூ)

அவ்வழியுணர்வுவந்தயர்வுதீர்ந்தினன்
செவ்வழியறிஞனைக்கொணர்திசன்றென

* மன்றல்வாய்மல்லிகை யெயிறுவண்டினைக், கன்றியசீர்த்தது நிலவி ன்கண்ணது என்றும் பாடம்.

இவ்வழிவருதியென்றியம்பவெய்தினன்
வெவ்வழிவிலங்கினனெறிவைமேவினன். (கச)

மருக்கொளர்தாமரைவாசகாண்மலர்
செருக்கிடதடமெனவிருந்தசீதியான்
திருக்கொளர்தாமரைபணிந்தசெம்மலே
இருக்கவீண்டெழுந்தெனவிருந்தகாலையில். (கஅ)

இராமன்விபீடணனை இலங்கையின்றிற முரையெனல்.

ஆர்கலியிலங்கையினரணுமவ்வழி
வார்கெழுகணைகழலரக்கன்வண்மையும்
தார்கெழுதானையினளவுந்தன்மையும்
நீர்கெழுதன்மையாய்நிகழ்த்துவாயென்றான். (கக)

எழுதலுமிருதியென்றிராமனேயினன்
முழுதுணர்புலவனேமுளரிக்கண்ணினன்
பழுதறவினவியபொருளைப்பண்பினல்
தொழுதுயர்கையினன்தெரியச்சொல்லினன். (கச)

இலங்கையினுற்பவ முரைத்தல்.

கிலையுடைவடவரைகுலையகோர்த்ததன்
தலையென விளங்கியதமனியப்பெரு
மலையினைமும்முடிவாங்கியோங்குநீர்
அலைகடலிட்டனனனுமன்றுதேயே. (கஅ)

எழுநூறுயோசனையகலமிட்டகீழ்
ஆழநூறியோசனையாழிமால்வரை
வாழியாயுலகினைவளைந்தவண்ணமே
சூழுமாமதிலதுசுடர்க்குமேலதால். (கக)

மருங்குடைவினையமும்பொறியின்மாட்சியும்
இருங்கடியரணமும்பிறவுமெண்ணினல்
சுருங்கிடுமெனப்பலசொல்லிற்சுற்றிய
கருங்கடலகழதுநீருங்கண்டிரால். (உ0)

வடதிசையயற்கொளிவாயில்வைகுவோர்
இடையிலரெண்ணிருகோடியென்பரால்
கடையுகமுடிவினிற்காலனென்பதென்
விடைவருபாகனைப்பொருவுமேண்மையோர். (உக)

மேற்றிசைவாயிலின்வைகும்வெய்யவர்க்
கேற்றமுமுளவவர்க்கிரண்டுகோடிமேல்
கூற்றையுங்கட்பொறிகுறுகக்காண்பரேல்
ஊற்றுறுகுருதியோயிருமுண்பரால். (உஉ)

தென்றிசைவாயிலின்வைகுந் தீயவர்
என்றவரெண்ணிருகோடியென்பரால்
குன்றுறழ்டியவர்கொடுமைகூறியென்
வன்றிறல்யமனையுமரசுமாற்றுவார். (உட)

கீட்டிசைவாயிலின்வைகுங்கீழவர்
ஈட்டமுமெண்ணிருகோடியென்பரால்
கோட்டிருந்திசைசிலைக் * கும்பக்குன்றையும்
தாட்டிணைபிடித்தகன்றரையினெற்றுவார். (உச)

விண்ணிடைவிழித்தனர்நிற்கும்வெய்யவர்
எண்ணிருகோடியினிரட்டியென்பரால்
மண்ணிடைவானவர்வருவரென்றவர்
கண்ணிலர்கரையிலர்கரந்துபோயினர். (உடு)

பிறவ்வியகெமதிற்பின்னுமுன்னரும்
உறங்கல $ ருண்பதமூலவையாதலால்
கறங்கெனத்திரிபவர்கணக்குவேண்டுமேல்
அறைத்துணதையிறுநூறுகோடியால். (உசு)

இப்படிமதிலொருமூன்றுவேறினி
ஒப்பருங்பெருமையுமுரைக்கவேண்டுமோ
மெய்ப்பெருந்திருநகர்காக்கும்வெய்யவர்
மூப்பதுகோடியின்மும்மைமுற்றினர். (உஎ)

சிறப்பவன்செய்திடச்செல்வமெய்தினர்
அறப்பெரும்பகைஞர்களளவிலாற்றலர்
உறப்பெரும்பகைவரினுதவுமுண்மையர்
இறப்பிலரெண்ணிருநூறுகோடியே. (உஅ)

விடமலவிழியெனும்வெகுளிக்கண்ணினர்
கடனலவிமைத்தலுமென்னுக்காலர்
வடவரைபுரைவனகோயில்வாயிலின்
இடம்வலம்வருபவரென்னெண்கோடியால். (உக)

பேயனேனென்பலபிதற்றிப்பேர்த்தவன்
மாயிருஞாலத்துவைத்தமாப்படை
தேயினுகாலெலாந்தேய்க்கவேண்டுவ
தாயிரவெள்ளமென்றறிந்ததாழியாய் (கo)

---

* கும்பக்குன்றையும்-மத்தகத்தினையுடையயானையையும்.

† உண்பதுமூலவையாயென என்றும்பாடம்.

* அன்றியுமவனகன்கோயில்வாய்மனே
முன்றிலின் † வைகுவார்முறைமைகூறிடின்
ஒன்றியவுவகையுமெக்குமூற்றத்தார்
குன்றினும்வலியவர்கோடிகோடியால். (கச)

தேர்பதினாயிரம்பதுமஞ்செம்முகக்
கார்வரையவற்றினுக்கிரட்டிகால்வயத்
தார்பரியவற்றினுக்கிரட்டியொட்டகம்
தார்வருபுரவியினிரட்டிசாலுமே. (கஉ)

இலங்கையினாணிதுபடையினெண்ணிது
வலங்கையில்வாள்சிவன்கொடுக்கவாங்கியே
அலங்கலந்தோளவன்றனேவரார்தமில்
வலங்களும்வரங்களுந்தவத்தின்வாய்த்தவர். (கங)

வேறு.

தும்பியீட்டருமிரதமும்புரவியுந்தொடர்ந்த
அம்பொன்மாப்படையையிருகோடிகொண்டமைந்தான்
செம்பொனூட்டுசித்தரைச்சிறையிடவைத்தான்
கும்பனென்றுளனூழிவெங்கதிரினுங்கொடியான். (கச)

உகம்பல்காலமுந்தவஞ்செய்துபெருவரமுடையான்
சுகம்பல்போலால்வேறிலன்பொருபடைத்தொகையான்
சகம்பலென்றிலையில்லதோர்நரசிங்கமனையான்
அகம்பனென்றுளனலகடல்பருகுமமைவான். (கஇ)

பொருப்பைமீதிடும்புரவியும்பூட்கையுந்தேரும்
உருப்பவிற்படையொன்பதுகோடியுமுடையான்
செருப்பைவானிடைச்சினக்கடாய்கடாய்வந்துசெறுத்த
செருப்பைவென்றவனிகும்பனென்றுளனொருகொடியோன். ()

பேயையாளியையானையைக்கழுதையைப்பிணித்த
ஆயதேர்ப்படையையிருகோடிகொண்டமைந்தான்
தாயையாயினுஞ்சலித்திலெஞ்சனேதவிரா
மாயையாலுளன்மகோதரனென்றொருமறவோன். (கஎ)

குன்றில்வாழ்பவர்கோடிகாலக்நினுக்கிறைவன்
இன்றுளார்பின்னைநாளையிலாரெனவெயிற்றால்
தின்றுளானெம்பன்மூறைதேவரைச்செருவின்
வென்றுளானுளன்வேல்வியின்பகைஞரெவ்யோன். (கஅ)

* அன்றுமவன்மகன் எனவும்பாடம் உண்டு.
† மாறினர்-முறையின்வருவாரும்என, பிரதியந்தரம்.

மண்ணுளாரையும்வானி லுள்ளாரையும்வகுத்தால்
உண்ணுநாளொருநாளினென்றெளிர்படைத்தானே
எண்ணிலிருகோடியனெரியஞ்சவிழிக்கும்
கண்ணுளானுளன் சூரியன்பகையென்சோர்கழலான். (சுக)

தேவருந்தக்கமுனிவருந்திசைமுகன்முதலா
மூவரும்பக்கநோக்கியேமொழிதரமுனிவான்
தாவரும்பக்கமெண்ணிருகோடியின்றலைவன்
மாபெரும்பக்கனென்றுளன்குன்றினும்வலியான். (சஅ)

உச்சிரத்தெரிகதிரெனவுருத்தெரிமுகத்தன்
கச்சிப்படைநாலிருகோடிக்குநாதன்
முச்சிரத்தயிற்றலைவற்கும்விலக்கருமொய்ம்பன்
வச்சிரத்தெயிற்றவனுளன்கூற்றுவன்மாற்றான். (சக)

அசஞ்சலப்படையையிருகோடியணிமரின்
வசஞ்செயாதவன்றானன்றிப்பிறரிலாவலியான்
இசைந்தவெஞ்சமத்தியக்கரைவேரொடுமுன்னன்
பிசைந்துபோந்தவன்பிசாசனென்றுளனெருபித்தன். (சஉ)

செல்லிமாப்பெருந்தேரொடெங்கரிபரிசிறந்த
வில்லின்மாப்படையேழிருகோடிக்குவேந்தன்
கல்லின்மாப்படிகலக்குவன்கடலெனக்காந்திச்
சொல்லுமாற்றலன்றுன்முகனென்றறந்துறந்தான். (சங)

இலங்கைகாட்டன்னவெறிகடற்றீவிடையுறையும்
* அலங்கல்வேற்படையையிருகோடிக்குமரசன்
வலங்கொள்வசட்டொழில்விஞ்சையர்பெரும்புகழ்மறைத்தான்
விலங்குசாட்டவனென்றுளன்வெயிலுகவிழிப்பான். (சச)

சாமசாட்டியசவமெனினுளென்றுமொருவர்
ஈமசாட்டிடையிடாமற்றன்னெயிற்றிடையிடுவான்
தாமசாட்டியகொடிப்படைப்பதுமத்தின்றலைவன்
தூமசாட்டவனென்றுளன்றேவரைத்துரந்தான். (சஙி)

போரின்மத்தனும்பொருவருமத்தனுமுலவா
தீரின்மத்தனும்பெருமையார்நெடுங்கடற்படையார்
ஆருமத்தனேவலியுடையாரிலையவரால்
பேருமத்தனெயத்தனேயுலகமும்பெரியோய். (சசு)

இன்னதன்மையரெத்தனேயாயிரரென்கேள்
அன்னவன்பெருத்தூணவராயமர்த்தொழிற்கமைந்தார்

* அலங்கல்-மாலை.

சொன்னசொன்னவாபடைத்துணையிரட்டியின்ரொகையான்
பின்னேயெண்ணுவான்பிரகத்தனென்ரொருபித்தன். (சள)

சேனைகாவலனிந்திரன்சிந்துரச்சென்னி
யானைகால்குலைந்தாழியோரேழும்விட்டகல
ஏனைவானவரிருக்கைவிட்டியலுற்றலையச்
சோனைமாரியிற்சுகேசனேபலமுறைதூர்ந்தான். (சஅ)

தம்பிமுற்பகற்சந்திரர்கால்வரித்தயக்கும்
கும்பமாக்களிக்கோடிருகைகளால்வாங்கிச்
செம்பொன்மால்வரைமதம்பட்டதாமெனத்திரிந்தான்
கும்பகன்னனென்றுளன்பண்டுதேவரைக்குமைத்தான். (சக)

கோனிரண்டையுங்கொடுஞ்சிறைவைத்தவக்குமரன்
மூளும்வெஞ்சினத்திந்திரஜித்தனைமொழிவான்
ஆளுமிந்திரற்கன்னவன்பிணித்ததற்பின்னைத்
தாளுமார்பினுந்தோளினுமுளலினுந்தழும்பு. (கo)

தன்னையுத்தெறுந்தருமமென் * றிறைஞ்சுந்தாழான்
முன்னவன்றாப்பெற்றதோர்முழுவலிச்சிலையான்
அன்னவன்றனக்கினியவனப்பெயரொழித்தான்
பின்னெரிந்திரனிலாமையிற்போதிகாயன். (கக)

தேவராந்தகனாராந்தகன்றிரிசிராவென்னும்
மூவராந்தகைமுதல்வராந்தலைவருமுனையில்
போவராததகையழிவராமெனத்தனிப்பொருவார்
ஆவராந்தகையிராவணற்கரும்பெறற்புதல்வர். (கஉ)

விபீடணன் இராவணன் திறமுரைத்தல்.

இனையதன்மையர்வலியிஃதிராவணனென்னும்
அனையவன்றிறம்யானறியவெலாமறைவென்
தனையனென்முகன்றகைமகன்சிறுவற்குத்தவத்தால்
முனைவர்கோன்வரமுக்கணன்வரத்தாலுமையர்த்தான். (கங)

எள்ளிலம்பெரும்பூதமும்யாவையுஞ்சூழப்
புள்ளிமானுரியாடையனுமையையேம்புணர்ந்த
வெள்ளியம்பெருந்தடங்கிரிவேரொடும்வாங்கி
அள்ளிவிண்டொடவெடுத்தனனுலகெலாமலங்க. (கச)

ஆன்றவெண்டிசையுலகெலாஞ்சுமக்கின்றயானை
ஊன்றுகோடிறத்திரன்புயத்தழுத்தியவொண்மை

---

* இறை-சிறிதும்.

தோன்றுமென்னவேதுணுக்கமுற்றறிவரத்தொகுதி
மூன்றுகோடியின்மேலொருமுப்பத்துமூவர். (குடு)

குலங்களோடுந்தங்குலமணிமுடியொடுங்குறைய
அலங்கல்வாள்கொடுகாலகேயரைக்கொன்றதற்பின்
இலங்கைவேந்தனென்றுரைத்தலுமிடியுண்டவரவீழ்
கலங்குமாலினுள்தானவர்தேவியர்கருப்பம். (குசு)

குரண்டமாநீளகையிலெளித்துறைகுபோன்
* நிரண்டமாகந்தன்றிருவொடுநியமுமிழந்து
புரண்டுமொன்றிரள்புலிகண்டதாமெனப்போனுன்
இரண்டுமானமுமிலங்கைமாநகரமுமிழந்து. (குள)

புண்ணுஞ்செய்ததுமுதுகெனப்புறங்கொடுத்தோடி
உண்ணுஞ்செய்கையிற்றசமுகக்கூற்றந்தன்னுயிர்மேல்
நண்ணுஞ்செய்கையதெனக்கொடோடொறுத்தன்னுள்
எண்ணுஞ்செய்கையனந்தகன்றன்பதமிழந்தான். (குஅ)

இருணன்காசறவெழுகதிரைனிற்கவென்றும்
அருணன்கண்களுங்கண்டிலாவிலங்கைபண்டமரில்
பருணன்றன்பெரும்பாசமும்பறிப்புண்பெயத்தால்
வருணனுய்த்தனன்மகரநீர்வெள்ளத்துமறைத்து. (குக)

என்றலப்புறச்சொல்லுகேளிராவணனென்னும்
குன்றலப்பினுமூலப்பிலாத்தோளினுன்கொற்றம்
இன்றலப்பினுமாகாயேயுலப்பினுஞ்சிலகான்
சென்றலப்பினுநினக்கன்றிப்பிறர்க்கென்றுந் † தீரான் (கூல)

விபீடணன் அனுமன்றிறமுரைத்தல்.

ஈபெட்டவொண்ணிலர்தோரணத்தெழுவால்
பாபெட்டவர்பகடன்மணலினும்பலரால்
சூபெட்டதுகொடிநகரடுபுலிதுரத்த
ஆபெட்டதேபட்டனரனுமனுலரக்கர். (கக)

காய்த்தவக்கணத்தரக்கர்தமுடலுகுகறைத்தோல்
நீத்தவெக்கரினிறைத்துளகருங்கடனெருப்பின்
வாய்த்தவக்கனைவரிலிலமலையொடும்வாங்கித்
தேய்த்தவக்குழம்புலர்ந்திலவிலங்கையிற்றெருவில். (கஉ)

சேனைக்காவலரோரைவருளர்பண்டுதேவர்
வானைக்காவலுமானமுமாற்றியமறவர்

---

* இரண்டுமொடுமென்றும்பாடம். † தீரான்-அழியான்.

தானைக்கார்வருங்கடலொடுத்தமரொடுத்தாழும்
யானைக்காற்பட்டசெல்லெனவொல்லையினவித்தார். (சுசு)

எங்குலத்தவரெண்பதினாயிரரிறைவர்
இக்கரப்பெயர்கிரியனதோற்றத்தர்கிளர்ந்தார்
வெங்கரத்தினுங்காலினும்வாலினும்வீக்கிச்
சங்கரற்கழிமுப்புரத்தவரெனச்சமைத்தார். (சுச)

வெம்புமாகடற்சேனைகொண்டெதிர்பொரவெகுண்டான்
அம்புமாயிரத்தாயிரமிவன்புயத்தழுத்தி
உம்பர்வானகத்தொருதனிகமனசென்றுற்றான்
சம்புமாலியும்வீல்லினற் * சுருக்குண்டதலைவ. (சுஎ)

சொன்னமாமதிலிலங்கையின்பரப்பீதுதுகைத்துச்
சின்னமானவர்கணக்கிலர்நீர்களேகொரிதிர்
இன்னமாருளர்வீரர்மற்றிவன்சுடவெரிந்த
வன்னமாகரவிந்தக்குருதியாலகன்று. (சுசு)

இராவணனேழுநாள் விசும்பிடை இருந்தான்.

விலங்கல்வொத்தவாவேறினிவிளம்புவதெவனே
அலங்கன்மாலையுஞ்சாந்தமுமன்றுதானணிந்த
கலன்களோடுமச்சாத்தியதுகிலொடுங்கதிர்வான்
இலங்கைவேந்தனுமேழுநாள்விசும்பிடையிருந்தான். (சுஅ)

பிரமன் இலங்கையழன்போல வியற்றினன்.

மொதுமற்றிண்டிறலரக்கனிலங்கையுறுவன்றேன்
அதுமற்றவ்வழியரணமும்பெருமையுமறைந்தேன்
இதுமற்றவ்வழியெய்தியதிராவணனேவப்
பதுமத்தண்ணலேபண்டுபோலக்கர்படைத்தான். (சுஅ)

காத்துமானையிற்கரன்முதல்வீரருங்கவியின்
வேத்துமென்றிவர்விளித்தவாகேட்டன்றுவிலங்கல்
நீத்தவாகண்டமரக்கரைச்செருவிடைமுருக்கிப்
போந்தவாகண்கொனிற்குப்புகுந்ததுபுகழோய். (சுக)

கேள்கொண்மேலையான்கிளத்தியபொருளெலாங்கேட்டான்
வாள்கொணேக்கியைப்பாக்கியப்பழுத்தனமயிலே
கான்கள்சாலவுநீங்கலினலங்கடமெலிந்த
தோள்கள்வீங்கித்தன்றாதனைப்பார்த்திலைசொன்னான். (எ0)

* சுருக்குண்டு-உயிர்குறைதி

இராமனனுமனைப் புகழ்தல்.

கூட்டினுர்படைபாகத்தின்மேற்படக்கொன்றாய்
ஊட்டினுயிரியூர்முற்றுமினியகொன்றண்டோ
கேட்டவாற்றினுர்கிளிமொழிச்சீதையைக்கிடைத்தும்
மீட்டிலாததென்விற்றொழில்காட்டக்கொல்வீர். (எக)

நின்செய்தோன்வலிநிரம்பியலங்கையைசேர்ந்தோம்
பின்செய்தோஞ்சிலவனைவினிப்பீடின்றுபெறுமோ
பொன்செய்தோளினுய்போர்ப்பெரும்படையொடும்புக்கோம்
என்செய்தோமென்றுபெரும்புகழெய்துவானிருந்தோம். (எஉ)

என்னதாக்கியவலியொடவ்விராவணன்வலியும்
உன்னதாக்கினைபாக்கியமுருக்கொண்டதொப்பாய்
மூன்னதாக்கியமூவுலகாக்கியமுதலோன்
பின்னதாக்கியபதினக்காக்கினென்பெற்றாய். (எங)

என்றுகூறலுமெழுந்திருநிலனுறவிறைஞ்சி
ஒன்றும்பேசலனினன்வணங்கியவரவோன்
நின்றவானரத்தலைவருமரசுமந் * நெடியோன்
வென்றிகேட்டலும்வீடுபெற்றுரெனவியந்தார். (எச)

டு-வது இலங்கைகேள்விப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-டுஉ.
கம்பகாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ ரு வ து,

வருணனைவழிவேண்டுபடலம்.

தொடக்குமென்னினிவ்வுலகொருமூன்றையுந்தோளால்
அடக்கும்வண்ணமுமழித்தலுமொருபொருளன்றால்
இடக்கும்வண்ணவெங்கடலினைக்கினர்பெருஞ்சேனை
கடக்கும்வண்ணமுமெண்ணுதியெண்ணுதல்கற்றாய். (க)

கரத்துநின்றநின்றன்மையையதுசெலக்கருதும்
பரத்தலன்றிருக்குலமுதற்றலைவரார்பரிவாய்
வரத்தரும்மிந்தமாக்கடல்படைசெலவழிவே
றிரத்தவேண்டுதியெறிதிரைப்பாலையையென்றான். (உ)

டு யான்என்ற தின்டனுமனை.

நன்றிலங்கையர்நாயகன்மொழியெனகயந்தான்
ஒன்றுதன்பெருந்துணைவரும்புடைசெலவுரவோன்
சென்றுவேலையைச்சேர்தலும்விசும்பிடைச்சிவந்த
குன்றின்மேனின்றுகுதித்தனபகலவன்குதிரை. (சு)

கொழுங்கதிர்ப்பகைக்கோளிருணீங்கியகொள்கை
செழுஞ்சுடர்ப்பனிக்கலையெலாநிரம்பியதிங்கள்
புழுங்குவெஞ்சினத்தஞ்சனப்பொறிவரியரவம்
விழுங்குநீங்கியதொத்துவேலைசூழ்ஞாலம். (சு)

இராமன் புல்லணையிற் கிடத்து வருணன்நீத்தாஞ்செபித்தல்.

தருணமங்கையைமீட்பதோர்நெறிதருகென்னும்
பொருணயத்துகந்தானெனியகேசியபுல்லில்
கருணையங்கடறுயின்றனன்கருங்கடலேக்கி
வருணமந்திரமெண்ணினன்விதிமுறைவணங்கி. (ஞ)

பூழிசென்றுதன்றிருவுருப்பொருத்தவும்பொரைநீர்
வாழிவெங்கதிர்மணிமுகம்வருடவும்வளர்ந்தான்
ஊழிசென்றனவொப்பனவொருபகலவையேர்
எழுசென்றனவந்திலனெறிகடற்கிறைவன். (ஈ)

இராமன் வருணன் வராமையாற் சீற்றங் கொள்ளுதல்.

ஊற்றமீக்கொண்டவேலையானுண்டிலையென்னும்
மாற்றமீக்கவும்பெற்றிலம்யாமெனுமனத்தால்
ஏற்றமீக்கொண்டபுனலிடையெரிமூளத்தென்னச்
சீற்றமீக்கொண்டெவ்வந்தனதாமபிரைச்செங்கண். (எ)

மாண்டவில்லிழுத்தயருநான்வழிதனைவணங்கி
வேண்டவில்லையென்றெளிதித்ததாமெனமனம்வெதும்பி
நீண்டவில்லுடைநெடுஞ்சனலுயிர்ப்பொடுநொண்
பூண்டவில்லெனக்குனித்தனகொழுங்கடைப்புருவம். (அ)

ஒன்றுவேண்டலராயினுமொருவர்பாலொருவர்
சென்றுவேண்டுவரேலவர்சிறுமையிற்றீரார்
இன்றுவேண்டியதெறிகடனெறிதலுமறுத்தால்
நன்றுநன்றெனாகையொடும்புகையுகநக்கான். (க)

பாரநீங்கியசிலையினனிராவணன்பறிப்பத்
தாரநீங்கியதன்மையனுதவிற்றகைசால்
வீரநீங்கியமணிசனென்றிகழ்ச்சிமேல்விளைய
ஈரநீங்கியதெறிகடலாமெனவிசைத்தான். (கo)

புரந்துகோடலும்புகழொடுகோடலும்பொருது
தரந்துகோடலுமென்றிவைதொண்மையிற்றொடர்ந்த
இரந்துகோடலுளியற்கையுந்தருமமுமெஞ்சக்
கரந்துகோடலேகன்றினிற்றதென்கழறி. (கச)

கானிடைப்புகுந்திருங்கனிகாயொடுதுகர்ந்த
ஊனுடைப்பொறையுடம்பினென்றகொண்ணெர்ந்த
மீனுடைக் $ கடற்பெருமையும்வில்லொடுநின்ற
மானுடச்சிறுதன்மையுங்காண்பரால்வாளேர். (கஉ)

ஏதமஞ்சிநானிரந்ததேயெளிதெனவிகழ்ந்த
ஓதமஞ்சிலேடிரண்டும்வெங்தொருபொடியாகப்
பூதமஞ்சும்வந்தஞ்சலித்துயிர்கொண்டுபொருமப்
பாதமஞ்சலர்செஞ்செவேபடர்வரென்புடைஞர். (கங)

மறுமைகண்டமெய்ஞ்ஞானியர்ஞாலத்துவரினும்
வெறுமைகண்டபின்யாவரும்யாரென விரும்பார்
குறுமைகண்டவர்கொழுங்கனலென்னினுங்கூசார்
சிறுமைகண்டவர்பெருமைகண்டல்லதுதேறார். (கச)

திருதியென்பதொன்றிழிதராவூழியிற்சினவும்
பருதிமண்டிலமெனப்பொலிமுகத்தினன்பலகால்
தருதிவில்லெனுமளவையிற்றம்பியும்வெம்பிக்
குருதிவெங்கனலுமிழ்ந்தின்றகண்ணினன்கொடித்தான். (கடு)

வாங்கிவெஞ்சிலைவாளியின்மற்றொருவேலை
வீங்குதோள்வலம்வீக்கினன்கோதையவிரலால்
தாங்கிநாணினைத்தாக்கினன்றுக்கியதமரம்
ஒங்குமுக்கணுண்றேவியைத்தீர்த்துளதுடல். (கக)

மாரியின்பெருந்தளியினும்வரம்பிலவடித்த
சிரிதென்றவையெவற்றினுஞ்சிரியதெரிந்து
பாரியங்கிரும்புனலெலாமுடிவினிற்பருகும்
சூரியன்கதிரனையனசுசேரந்தரந்தான். (கஎ)

பெரியமால்வரையேழினும்பெருவலிபெற்று
வரிகொள்வெஞ்சிலைவளர்பிறையாமெனவாங்கித்.
திரிவரிற்பனயாவையுமுடிவினிற்றீக்கும்
எரியின்மும்மடிகொடியனசுசேரமெய்தான். (கஅ)

மீனுநாகமும்விண்டொடுமேலகளும்வீறகாய்
ஏனநிற்பனயாவையுமேலெரியெய்தப்

$ கடற்பெருமையும்-கடற்காசினை வருணன் பெருமிதமும்.

பேனகீர்செடுகெய்யெனப்பெய்கணைகெருப்பால்
கூனையங்கியின்குண்டமொத்ததுகடற்குட்டம். (கக)

பாழிவன்னெஞ்கொஞ்சிலவழங்கியபகழி
எழுவேலையுமெரியொடுபுகைமடித்தேகி
ஊழிவெங்கனற்கொழுந்துகளுருத்தெழுந்தோடி
ஆழிமால்வரைக்கப்புறத்திருளையுமவித்த. (உ0)

மருமதாரையினெரியுண்டமகரங்கண்மயங்கிச்
செருமவானிடைக்கற்பகமரங்களுந்தீய
நிருமியாவிட்டநெடுங்கணைபாய்தலினெருப்போ
டிருமுவீழ்ந்தெனச்சென்றனகடற்றுளியும்பர். (உக)

கூடும்வெம்பொறிக்கொடுங்கனலுடர்ந்தனகொளுந்த
ஓடுமேகங்கள்பொரிந்திடையுதிர்ந்தனவும்பர்
ஆடுமங்கையர்கருங்குழல்வினர்த்தனவளக்கர்
கோடுதிர்ந்தெழக்கொழும்புகைப்பிழம்புமீக்கொள்ள. (உஉ)

நிமிர்ந்தசெஞ்சரநிறைந்தொறும்பதலுநெய்த்தோர்
உமிழ்ந்துலர்ந்தனமகரங்களுலப்பிலவுருவத்
தமிந்ததுண்டமும்பலபடத்துரந்தனதொடர்ந்து
திமிங்கிலங்களுந்திமிங்கிலகிலங்களுஞ்சிதறி. (உங)

நீறுமீச்செலநெருப்பெழப்பொருப்பெலாமெரிய
தூறுமாயிரகோடியுங்கடுங்கணைநுழைய
ஆறுகீழ்ப்படவளறுபட்டழுந்தியவளக்கர்
சேறுதீர்ந்தெழக்காந்தினசேடன்றன்சிரங்கள். (உச)

மொய்த்தமீன்குலமுதலறமுருங்கினமொழியில்
பொய்த்தசான்றவன்குலமெனப்பொருகணையெரிய
உய்த்தகும்புடைநெடுங்கலமோடுவகடுப்பத்
தய்த்தவம்பொடுத்திரிந்தனசாலமீன்சாலம். (உடு)

ஒத்தியோடியகுருதிவெங்கனல்களேசெறிய
அத்திவானகம்கடுத்ததவ்வளப்பருமளக்கர்
பத்திபத்திகளாய்நெடுங்கணையடா
வெந்துதீர்தனகரிந்தனபொரிந்தனசிலமீன் (ருஉ)

வெய்யகாயகன்வடிக்கணைக்குடித்திடவற்றி
அய்யநீருடைத்தாய்மருங்கருங்கணன்மண்டக்
கய்கலன்தெறிகருங்கடல்காரகல்கடுப்ப
வெய்யசெய்யிடைவேவனவொத்தனசிலமீன். (உள

குணிப்பருங்கொடும்பகழிகள்குருதிவாய்மடுப்பக்
கணிப்பரும்புனல்கடையுறக்குடித்தலிற்காந்து
மணிப்பருந்தடங்குப்பைகண்மறிகடல்வெந்து
தணிப்பருந்தழல்சொரிந்தனபோன்றனதயங்கி. (உசு)

எங்கும்வெள்ளிடைமடித்தலினிழுதுடையினீண்
சங்கமுங்கறீகிழங்கெனவிடையிடைத்தழுவி
அங்கம்வெந்துபோளத்றிடையடுக்கியகிடந்த
பொங்குரான்னெடும்புனலப்பொரித்தனபோன்ற. (உக)

அதிரும்வெங்கணையொன்றையொன்றடந்தெரியுய்ப்ப
வெதிரின்வன்னெடுங்காணெனவெந்தனமீனம்
பொதுவின்மன்னுயிர்க்குலங்களுந்துணிந்தனபொழிந்த
உதிரமுங்கடற்றிரைகளும்பொருவனவொருபால். (உ0)

அண்ணல்வெங்கணையறுத்திடத்தெறித்தெழுந்தளக்கர்
பண்ணைவெம்புனல்படப்படநெருப்பொடும்பற்றி
மண்ணில்வேருறப்பற்றியநெடுமரமற்றும்
எண்ணெய்தோய்ந்தனவெரிந்தனகிரிக்குலமெல்லாம். (உக)

தெய்வநாயகன்றெரிகணைதிசைமுகந்தொருவன்
வையிதாமெனப்பிழைப்பிலமனத்தினுங்கடெ
வெய்யவன்னெருப்பிடையிடைபொறித்தெழவெறிநீர்ப்
பொய்கைதாமரைபூத்தெனப்பொலிந்தனபுணரி. (உஉ)

செப்பின்மேலவர்சீறினுமதுசிறப்பாதல்
தப்புமேயதுகண்டனமுவரியிற்றணியா
வுப்புவேலையென்றுலகுறுபெரும்பழிநீங்கி
* அப்புவேலையாய்நிறைந்ததுகுறைத்தோவளக்கர். (உங)

தாரையுண்டபேரண்டங்களடங்கலுந்தானே
வாரியுண்டருள்செய்தல்றிதுவொருவலியோ
பாரையுண்பதுபடர்புனலப்பெரும்பரவை
நீரையுண்பதுநெருப்பெனுமப்பொருணிறுத்தான். (உச)

வே று.

மங்கலம்பொருந்தியதவத்துமாதவர்
கங்கலும்பகலுமக்கடலுள்வைகுவா
ரங்கம்வெந்திலரவனடிகளெண்ணலால்
பொங்குவெங்கனலெனும்புனலிற்போயினர். (உரு)

தென்றிசைகுடதிசைமுதலதிக்கெலாந்
தன்றியபெரும்புகைப்படலஞ்சுற்றலாற்

* அப்புவேலை-அம்புக்கடல்.

கன்றியரிறத்தனகதிரவன்பரி
கின்றனசென்றிலகெறியினீங்கின. (நக)

பிறிந்தவர்க்குறபொருளுணரும்பெற்றியோர்
அறிந்திருந்தறிந்திலரேனயராமெனச்
செறிந்ததம்பெடைகளைத்தேடித்தீக்கொள
மறிந்தனகரிந்தனவானப்புள்ளெலாம். (நஎ)

கமையறுகருங்கடல்கணிகைபரந்
தமைவனவொத்தபோதறையவேண்டுமோ
சுமையுறுபெரும்புசைப்படலஞ்சுற்றலால்
* இமையவரிமைத்தனர்வியர்ப்புமெய்திஞர். (நஅ)

பூச்செலாதவணடைபோல்கிலாமையால்
ஏச்செலாமெய்தியவன்னம்யாவையுக்
தீச்செலாதெறிபிறிதின்மையாற்றிசை
மீச்செலாபுனலவன்புகழின்வீற்றதால். (நக)

பம்புறுதெங்கடற்பறவையாவையு
மும்பரிற்செல்லலுற்றுகிவீழ்ந்தன
வம்பரமம்பரத்தேகலாற்றல
விம்பரிலுதிர்ந்தனவெரியுமெய்யன. (ச0)

பட்டனபடப்படப்படாதபுட்குலஞ்
சுட்டுவந்தெரிக்குலப்படலஞ்சுற்றலா
லிட்டழியறிகிலவிரியல்போவன
முட்டையென்றெடித்தன † கடித்தமுத்தலாம். (சக)

வள்ளலேப்பாவிகாண்மனிதனென்றுகொண்
டெள்ளலுற்றறைந்தனமெண்ணிலாமென
வெள்ளிவெண்பற்களேக்கிழித்துவிண்ணுறத்
துள்ளலுற்றிரிந்தனகுரங்குசூழ்ந்தில. (சட)

தானெடுத்தீமைகளுடைதன்மையார்
மாதெடுங்கடலிடைமறைந்துவைகுவார்
தூதெடுங்குருதிவேலவுணர்துஞ்சினர்
மீதெடுத்திரியெனமிதந்துவீங்கினர். (சஞ)

தசும்பிடைவிரிந்தனவென்னுந்தாரைய
பசும்பொனின்விமானங்களுருப்பாய்ந்தன
‡ அசும்பறவறந்தனவாறெலாம்
விசும்பிடைவிளங்கியமீனும்வெந்தவால். (சச)

---

* இமையவர்-தேவர். † கடித்த-முட்டையையொத்த.
‡ அசும்பற-ஊற்றில்லாதாக.

செறிவுறுசெம்மைய தீயையோம்புவ
தெறியுறுசெலவின தவத்தினீண்டன
வுறுதினமுறப்பலவுருவுகொண்டன
குறுமுனியெனக்கடல்குடித்தகூர்ங்கணை. (சடு)

மோதலக்கணைகடன்முழங்கத்தீயினற்
பூதலங்காவொடுமெரிந்தபொன்மதில்
வேதலுமிலங்கையுமிளப்போயின
தூதன்வந்தானெனத்துணுக்கங்கொண்டதால். (சசு)

அருக்கனிலொளிவிடுமாடகக்கிரி
யுருக்கெனவுருகினவுதிரந்தோய்ந்தன
முருக்கெனச்சிவக்கனமுரியவெந்தன
கரிக்குவைகர்த்தனபவளக்காடெலாம். (சஎ)

பேருடைக்கிரியெனப்பெருத்தமீன்களு
மோரிடத்துயிர்தரித்தொதுங்கஇற்றில்
நீரிடைப்புகுஞ்சிலநெருப்புநண்ணெனப்
பாரிடைக்குதித்தனபதைக்குமெய்யென. (சஅ)

சுருள்கடற்றிரைகளைத்தொலையவுண்டனல்
பருகிடப்புனலிலபகழிபாரிட
மருள்கொளப்படர்வனகர்வைப்பையு
மிருள்கெடச்சென்றுளவிரவிபோல்வன. (சஙு)

கரும்புறக்கடல்களோடுலங்காய்ச்சிய
விரும்புறச்செல்வனவழிவகிழுற
வரும்புறத்தண்டத்தையுருவியப்புறம்
பெரும்புறக்கடலுயுந்தொடர்ந்துபின்செல்ல. (ஙo)

திடறிறந்தகுமணித்திரள்கள்சேணில
மூடறிரந்துதிரம்வந்தகுவபோன்றன
கடறிறந்தெங்கணும்வற்றவக்கடல்
* குடறிறந்தனவெனக்கிடந்தகோளரா. (ஙஎ)

ஆழியிற்புனலறமணிகளட்டிய
பேழையிற்பொலிந்தனபரவைபேறுறப்
பூழையிற்பெருகனையுருவப்புக்கன
மூழையிற்பொலிந்தன ‡.முரலும்வெள்ளமே. (ஙஉ)

கின்றுநூறுயிரம்பகழிகீட்டலாற்
குன்றுநூறுயிரக்கோடியாயின

---

* குடறிறந்தனவென - குடல்வெளிப்பட்டாங்கு,
‡ முரலும் - ஒலிக்கின்ற.

சென்றுதேய்வுறவோபுலவர்சீறினு
மொன்றுநூறுயினவுவரிமுத்தெல்லாம். (இஉ)

சூடுபெற்றையனேதொலைக்குமன்னுயிர்
வீடுபெற்றனவிடைமிடைந்தவேணுவின்
காடுபெற்றியபெருங்கனலிகைபரந்
தோடியுற்றதுகெருப்புவரிநீரெலாம். (இசு)

காலவான்கடுங்கணைசுற்றுங்கவ்வலா
னீலவான்முகிலினீக்கிப்பூநிறக்
கோலவான்களிறெடுங்கூடைசுற்றினுன்
போலமாநிலமகள்பொலிந்துதோன்றினுன். (இஎ)

கற்றவர்கற்றவருணர்வுகாண்கிலாக்
கொற்றவன்படைக்கலங்குடித்தவேலைவிட்
டெற்றுயிர்ப்படைத்தெழுந்தோடலுற்றதால்
மற்றொருகடல்புகவடவைவைத்தியோ. (இக)

வாழியருலகினவளைத்துவானுறச்
சூழிரும்பெருஞ்சுடர்ப்பிழம்புதோன்றலா
லூழியினுலகெலாமுண்ணவோங்கிய
வாழியிற்பொலிந்ததவ்வாழியண்ணகாள். (இஎ)

ஏனையரெண்ணவேறுலகினீண்டிலு
ரானவர்செய்தனவறையவேண்டுமோ
மேனிமிர்ந்தெழுகனல்வெதுப்பமீதுபோய்
வானவர்மலரயனுலகின்வைகினர். (இசு)

† இடுக்கினியியம்புவலென்னையிவ்வழி
மூடுக்குவென்வருணனேயென்னமூண்டெழு
தடுக்கரும்வெகுளியான்சதுமுகன்படை
தொடுத்தனனமரருந்துணுக்கமெய்தினர். (இகூ)

மழைக்குலக்கதநினவருணன்வாயுலர்ந்
தழைத்தனனுலகமுமடைத்தவாறெலாம்
இழைத்தனனெடுத்திசையாதும்யாரினிப்
பிழைப்பிலரென்பதோர்பெரும்பயத்தினுல். (இ0)

வே று.

அண்டமூலத்துக்கப்பாலாழியுங்கொதித்தெழு
தெண்டிரைக்கடலின்செய்கைசெப்பியென்றேவுண்சென்னி

† இடுக்கு-வருத்தம்.

பண்டைகாளிருத்தகங்கைகங்கையும்பதைத்தாள்பார்ப்பான்
குண்டிகையிருந்தநீருங் † குளுகுளுகொதித்ததன்றே.

இரக்கம்வந்தெதிர்ந்தகாலத்துலகெலாமீன்றுமீளக்
கரக்குமாயகனைத்தானுமுணர்ந்திலன்சீற்றங்கண்டே
வரக்கருதாதுதாழ்த்தவருணனின்மாறுகொண்டா
ராக்கரேயல்லரென்னுவறிஞருமலக்கணுற்றார். (கூ)

உற்றொருதனியேதானேதன்கணேயுலகமெல்லாம்
பெற்றவன்முனியப்புக்காணதுவினிப்பிழைப்பதெங்ஙன்
குற்றமொன்றிலாதோர்மேலுங்கோள்வரக்குறுகுமென்னு
மற்றையபூதமெல்லாம்வருணனைவைதமாதோ. (கூ)

இராமனெதிரே வருணனேய்துதல்.

எழுசுடர்ப்படலையோடெரிரும்புகையெழும்பியெங்கும்
வழிதெரிவறிவிலாததோக்கினன்வருணனென்பா
னழுதழிகண்ணனன்பாலுருகியநெஞ்சணஞ்சித்
தொழுதெழுகையனெய்திற்றேன்றிணவழுத்துஞ்சொல்லான். (கசு)

நீயெனைநினைந்ததன்மைநெஞ்சுடன்முடிவினின்றே
னுயினேனறிந்திலேனென்றண்ணலுக்கயிர்ப்புறீங்கக்
காயெரிப்படலைசூழ்ந்தகருங்கடற்றாங்கத்தூடே
தீயிடைநடப்பான்போலச்செறிபுனற்கிறைவன்சென்றான். (கஞ)

வந்தனனென்பமன்னுமறிகடற்கிறைவன்வாயிற்
சிந்தியமொழிடன்றீர்ந்தசென்னியன்றிகைத்தனெஞ்சன்
வெந்தழிந்திருகுமெய்யன்விழுப்புகைப்படலம்விம்ம
வந்தரினலமர்தஞ்சித்தியருழந்தலக்கணுற்றான். (கசு)

தவையறுமுலகிற்கெல்லாதாயகனீயேநிற்
கவையகின்சரணமல்லாற்பிறிதொன்றுகண்டதுண்டோ
இவையுனக்கரியவோதானெனக்கெனவலிவேறுண்டோ
வவையகின்றயவெண்ணுவடுத்தடுத்தரற்றுகின்றான். (கஎ)

இராமனே வருணன் துதித்தல்.

ஆழிநீயனலுநீயேயல்லவையெல்லாநீயே
யூழிநீயுலகுநீயேயவற்றையுயிருநீயே
வாழியாயடியேனின்னேமறப்பனேவையங்குசெந்தீச்
சூழுறவுலந்துபோனேன்காத்தருள்சுருதிமூர்த்தி. (கஅ)

காட்டுவாயுலகங்காட்டித்தவைகடையிற்செந்தீ
யூட்டுவாய்புண்பாய்நீயேயுனக்குமொண்ணுதலுண்டோ.

† கொளகொளஎன்றும்பாடம்.

தீட்டுவோன் பகழியொன்று லுலகங்களெவையுந்தீய
வீட்டுவாய்தினையினுயற்றித்தனவேண்டுமோதான். (அக)

சண்டவான்கிரணவாளாற்றயங்கிருட்காசொய்க்கு
மண்டிலத்துறையுஞ்சோதிவள்ளலேமறையின்வாழ்வே
பண்டைநான்முகனேயாதிச்சராசரத்துள்ளபள்ளப்
புண்டரீகத்துவைகும்புராதனபோற்றிபோற்றி. (அஎ)

கள்ளமாயுலகங்கொள்ளுங்கருணையான்மழையிற்கூறும்
எள்ளலாகாதமூலத்தியாதுக்குமுதலாயுள்ள
வள்ளலேகாத்தியென்றமாகரிவருத்தத்தீரப்
புள்ளின்மேல்வந்துதோன்றும்புராதனபோற்றிபோற்றி. (அக)

அன்னேயத்தனீயேயல்லவையெல்லாநீயே
பின்னுநீமுன்னுநீயேபேறுநீயிகழ்வுநீயே
யென்னேநீயிகழ்ந்ததென்றதெங்கனேயீசனய
வுன்னேயுணராய்காயேனெங்ஙனமுணர்வேனுன்னை. (அஉ)

பாயிருள்சிக்குற்றெய்வப்பரிதியைப்பழிக்குமாலே
மாயிருங்கரத்தான்மண்மேலடியுறையாகவைத்துத்
தீயனசிறியோர்செய்தாற்பொறுப்பதுபெரியோர்மேற்றே
ஆயிரசாமத்தையாசரணமென்றடியில்வீழ்ந்தான். (அங)

இராமன் கோபமாறுதல்.

பருப்பதம்வேவதென்னப்படரொளிபடராநின்ற
உருப்பெறக்காட்டிநின்றயானனக்கபயமென்ன
அருப்பறப்பிறந்தகோபமாறினனுரைவாற்றல்
கொருப்புறப்பொங்கும் * வெம்பானீருற்றதன்னரான். (அச)

ஆறினமஞ்சனுன்பாலளித்தனமபயமன்பால்
ஈறிலாவணக்கஞ்செய்தியாமிரந்திடவெய்யாதே
சீறுமாகண்வெந்தநிறத்தினேத்தெரிவதாகக்
கூறுநீயறியவென்றுன்வருணனுந்தொழுதுகூறும். (அடு)

பார்த்தனிற்பொறையின்மிக்கபத்தினிக்குற்றபண்பு
வார்த்தையினறிந்ததல்லாற்றேவர்பால்வக்கிலேனுல்
தீர்த்தநின்னுணேயேழாஞ்செறிதிரைக்கடலின்மீனின்
போர்த்தொழில்விலக்கப்போனேனறிந்திலேன்புகுந்ததொன்றும். (அக)

என்றலுமிரக்கியையனித்திறறிக்கவித்தப்
பொன்றலில்பகழிக்கப்பாலிலக்கமென்புகறியென்ன.

---

* வெம்பால்-இனிமையானபால்.

நன்றெனவருணன்யானுமுலகமுலிவுதீர்த்தாம்
குன்றெனவுயர்ந்ததோளாய்கூறுவலென்றுகூறும். (அ)

இராமன்கனைக்கு வருணன் இலக்குரைத்தல்.

மன்னவமருகர்தாரமென்பதோர்தீவின்வாழ்வார்
அன்னவர்சதகோடிக்குமேலுனாரவுணராயோர்
தின்னவேயுலகமெல்லாந்தீர்த்தனெனைக்குந்தியார்
மின்னுமிழ்கணையையெய்யோர்மேற்செலவிடுதியென்றான். (எ)

கேடிதூறெறிந்துளோர்க்குமுணர்விற்குமிகிரின்றோன்
கோடிதூருயதியவவுணரைக்குலக்களோடும்
ஓடிதூறென்றுவிட்டாளுரிமையொடுகாமுன்னம்
பாடிதூருகதூறிமீண்டதப்பகழித்தெய்வம். (ஏ)

ஆய்வினையுடையராகியறம்பிழையாதார்க்கெல்லாம்
எய்வனலனேயன்றியிதுநிவர்தடைவதுண்டோ
மாய்வினையியற்றிமுற்றுமவருணன்மேல்வர்தீர்த்தம்
தீய்வினையுடையார்மாட்டேதிங்கினைச்செய்ததன்றே. (அ0)

பாபமேயியற்றிஞரைப்பண்டெங்காதமோடித்
* தாபமேபெருகும்வண்ணமெரியெழச்சுட்டதன்றே
தீபமேயனையஞானத்திருமறைமுனிவன்செப்பும்
சாபமேயொத்ததம்புதருமமேவலியதம்மா. (அக)

மொழியுனக்கபயமென்றுயாதலான்முனிவுதீர்ந்தேன்
பழியெனக்காகுமென்றுபாதகர்பரவையென்னும்
குழியினைக்கருதிச்செய்த †குமண்டையைக்குறித்துதீங்க
வழியினைத்தருதியென்றுவருணனைநோக்கிவள்ளல். (அஉ)

ஆழமுமகலந்தானுமளப்பரிதெனக்குமைய
ஏழையமிக்கிரின்றவுலகுக்குமெல்லையில்லே
வாழியாய்வற்றிநீங்கில்வரம்பிலகாலமெல்லாம்
தாழுறின்சேனையுள்ளந்தளர்வுறுத்தவத்தின்மிக்காய். (அங)

கல்லெனவலித்துநிற்பிற்கணக்கிலவுயிர்களெல்லாம்
ஒல்லையினுலந்துவீயுமிட்டதொன்றெழுகாவண்ணம்
எல்லையில்காலமெல்லாமேந்துதனெளிதினென்தாய்
சொல்லுதிசேதுவென்றுரைத்தியற்றியென்றிரத்தின்வேலாய். (அச)

* தாபம்-புகை. †குமண்டையை-குற்றத்தினை.

சன்றி துபுரிதுமன்றேநளிகடற்பெருமைநம்பால்
இன்றி துதீருமென்னிலெளிவரும்பூதமெல்லாம்
குன்றுகொண்டடுக்கிச்சேதுகுயிற்றுதிரென்றுகூறிச்
சென்றனனிருந்தைதோக்கிவருணனுமருளிச்சென்றான். (அடி)

சுவது. வருணனை வழிவேண்டுபடலம் முற்றிற்று.

ஆடி திருவிருத்தம்-சுகக.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளே சரணம்.

ஏழாவது

சேதுபந்தனப் படலம்.

அனவதுமறிஞரோடாரக்கர்கோமகற்
கினவலுமினிதுடனிருக்க * வெண்ணினைன்
வினைவனசெய்வனமுடிக்கவேண்டுவான்
னனன்வருகென்றனன்கவிக்குராயகன். (க)

வந்தனன்வானரத்தச்சன்மன்னனின்
சிந்தனையென்னைனச்செறிதிரைக்கடல்
பந்தனைசெய்குதல்பணிமக்கென
நிந்தனையிலாதவன்செய்யநேர்ந்தனன். (உ)

விபீடணன் பின்னு நடந்தவைகளையுரைத்தல்

அற்றதிகாயனுக்கைதலேயிலதாக்கியாண்ட
வெற்றியனுபவீரன்மீண்டிலனிலங்கைமேனாள்
பெற்றவனெய்துமென்னும்பெற்றியையுன்னிப்பிற்போ
துற்றனன்மைந்தன்றானேநாற்பதுவெள்ளத்தோடும். (உஉஅ)

ஈண்டுநெஞ்சேனவெள்ளமிருபதிற்றிரட்டிமாளத்
தூண்டினன்பகழிமாரிதலைவர்கடொலைந்துசோர
மூண்டெழுபோரிற்பாரின்முறைமுறைமுடித்தான்பின்னர்
ஆண்டகையோடுமேற்றானையிரமடங்கற்றேரான். (உஉக)

அனுமன்மேனின்றவையனையிரந்தேருமாயத்
தனுவலங்காட்டிப்பின்னேநாற்பதுவெள்ளத்தானே
பனியெனப்பவித்தன்னன்பலத்தையுந்தொலைத்துப்பட்டான்
இனியெனவயிரவாளியெண்ணிலநிறத்தினெய்தான். (உகஐ)

ஏவுண்டப்குவாயோடெங்குருதிநீரிழியநின்றான்
தாவுண்டதானேமுற்றும்படவொருதமியன்சோர்வான்
போவுண்டதென்னினேயபுணர்க்குமாமாயமென்று
பாவுண்டகீர்த்தியானுக்குணர்த்தினன்பரிதிபட்டான். (உகக)

மாயத்தாலிருண்டதாழியுலகெலாம்வஞ்சன்வானில்
போயத்தானுடையவஞ்சவரத்திறலொளித்துப்போயிவ்
வாயத்தார்பாசமேவியயர்வித்தானம்பில்வெம்பும்
காயத்தானென்னச்சொல்லிவணங்கிளனகலுழிக்கண்ணன் (உகஉ)

விபீடணனுபாயங் கூறல்.

பின்னையுமெழுந்துபோர்த்தும்வணங்கியெம்பெருமயாரும்
இன்னுயிர்துறந்தாரல்லரிறுக்கியபாசமிற்றால்
புன்னுனேப்பசழிக்கோயுந்தரத்ததோபுலம்பியென்னே
இன்னலுற்றயரல்வெல்லாதருமத்தைப்பாவமென்றான். (உகங)

நாகபாசத்தின் வரலாறு கூறுதல்.

யாரிதுகொடுத்ததேவனென்னையீதினைத்தீரும்
காரணம்யாதுநின்னுலுணர்ந்ததுகழறிக்காணென்
றரியன்வினவவண்ணல்வீடணனமலசாலச்
சீரிதென்றதனையுள்ளபரிசெலாந்தெரியச்சொன்னான். (உகச)

ஆழியஞ்செல்வபண்டிங்ககலிடமளித்தவண்ணல்
வேழ்வியிற்படைத்ததீசன்வேண்டினன்பெற்றுவெற்றித்
தாழ்வுறுசிந்தையோற்குத் தவத்தினுலளித்ததாணை
ஊழியினிமிர்ந்தகாலத்துருமினதூற்றமீதால். (உசுடு)

அன்னதனுற்றலன்றேயாயிரங்கண்ணினுனைப்
பின்னுறவயிரத்தின்டோள்பிணித்ததுபெயர்த்தொன்றெண்ணி
என்னினியனுமன்றேவேயிறுக்கியதினுலாண்டும்
பொன்னுலகாளுஞ்செல்வந்துறந்ததுபுலவோரெல்லாம். (உசுக)

தான்விடின்விடுமிதொன்றேசதுமுகன்முதல்வராய
வான்விடின்விடாதுமற்றிம்மண்ணினையெண்ணியென்னே
ஊன்விடவுயிர்போய்நீங்கநீங்கும்வேறுய்தியில்லைத்
தேன்விடுதுளபத்தாராயிதுவிதன்செய்கையென்றான். (உசுள)

சூய்ந்துள்ளதேவர்மேலேயெழுகென்னுலகம்யாவும்
தீய்ந்துகந்நறியானுந்தீர்கென்னுவிலங்கைசிந்தப்
பாய்ந்தவர்சுற்றமுற்றும்படப்பெனுவியன்றபண்போ
டேய்ந்ததபகர்தியென்றுனிமையவரிடுக்கண்டீர்ப்பான். (உசுஅ)

வரங்கொடுத்தினையபாசம்வழங்கினன்தானேநேர்வந்
திரங்கிடத்தக்கதுண்டேலிகழ்கிலெனில்லையென்னின்
உரங்கெடுத்துலகமூன்றுமொருவனேரம்பிற்சுட்ட
புரங்களிற்றீத்துக்காண்பேன்பொடியொருகடிகைப்போழ்தின். (உசுக)

எம்பியேயிறக்குமென்னினெனக்கினியிலங்கைவேந்தன்
தம்பியேபுகழ்தானென்னேபழியென்னேயறந்தானென்னே
நம்பியேயென்னேச்சேர்ந்தநண்பரினல்லவாமேல்
உம்பருமுலகத்துள்ளவுயிர்களுமுதவிபார்த்தால். (உசுஎ)

என்றுகொண்டியம்பியீண்டிங்கொருவனிங்கிடக்கண்செய்ய
வென்றருமுலகைமாய்த்தல்வியன்றுலென்றுவிம்மி
நின்றுநின்றுன்னியுன்னிநெடிதுயிர்த்தலக்கணுற்றான்
தன்றுணைத்தம்பிமேலுந் † துணைவர்மேற்றாழ்ந்தவன்பான். (உசுஏ)

மீட்டும்வந்தினையவீரன்வெற்பன்னவிசயத்தோளைப்
பூட்டுறுபாசந்தன்னைப்பன்முறைபுரிந்துநோக்கி
வீட்டியதென்னிற்பின்னைவீவெனென்றெண்ணும்வேதத்
தோட்டியின்றொடக்கினிற்குந்துணைக்கைமால்யானையன்னான். (உசுஐ)

† துணைவர்-வானரவீரர்.

பெரியதிருவடி தோத்திரம்.

இத்தன்மையெய்துமளவின்கண்வந்தவிமையோர்களஞ்சியதுபோய்
எத்தன்மையெய்திமுடியுங்கொலென்றுசூலகின்றவெல்லையிதன்வாய்
அத்தன்மைகண்டுபுடைநின்றவண்ணல்கலுழன்றனன்பின்மிசையால்
சித்தர்நடுங்கியிதுதீரமெள்ளவிருளூடுவந்துதெரிவான்.

(இதன்பதப்பொருள்.)

இத்தன்மை - இவ்வண்ணம், எய்துமளவின்கண் - நடக்குங்காலத்தில், வந்த - இராமாதுஜன் விறல்காணவுற்ற, இமையோர்கள் - பிரமஉருத்திரேந்திராதிதேவர்கள், அஞ்சி - பயந்து, இது-இக்கோபம், போய் - மிகுந்து, எத்தன்மை - எவ்விதமாய், எய்தி - நடந்து, முடியுங்கொலென - ஆறுமோவென்று, சூலகின்ற-நடுங்குகின்ற, எல்லை - சமயமாகிய, இதன்வாய் - இத்தருணத்தில், அத்தன்மை - அந்தப்பிரகாரத்தை, கண்டு - பார்த்து, புடை - பக்கத்திலே, நின்ற நில்லாநின்ற, அண்ணல்கலுழன் - பெருமாளுடைய பெரியதிருவடி, தன்-பெருமாளுடைய, அன்பின் மிசையால்-பிரியத்தின் மிகுதியால், சித்தம் - மனது, நடுங்கி - கலங்கி, இது - இந்தத்துயரம், தீர-நீங்க, மெள்ள - பையை, இருளூடு - அந்தகாரத்தினுள்ளே, வந்துதெரிவான்-தோன்றிவிளங்குகிறான்,—என்றவாறு.

இது முதலெட்டுப் பாட்டும் சூளகம். இதன் கருத்து பெரியதிருவடிகள் வருமாறும் பெருமாளைக்கண்டு தொழுமாறுந் துதிக்குமாறுங் கூறுகின்றது. பதப்பொருள் கீழுரைத்தாங்குரைக்க காட்டு - கோயில்கடோறும் பெரியதிருவடியை புறப்பாட்டிற்சேவித்து நடத்தல் - நிற்றல் - கைகுவித்தல் - பணிதல் - மொழிதல்களைப் பாவித்துக்காண்க. இனிவிடைகூறவே விளங்குமாகாலா னவ்விரண்டு மூள்ளுறுத்திக் கூறுகின்றிலம். மறைந்து வந்த நியாமகனேத்தொடர்ந் தடிமை செய்யக்கடவ நியாமியங்களு மறைந்து நின்றமையாற் புடைநின்ற வண்ணல் கலுழனென்றார். (உசுங)

அசையாதசிந்தையரவாலனுங்கவழியாதவுள்ளமழிவான்
இசையாவிலங்கையரசோடுமண்ணலருளின்மைகண்டுநையவான்
விசையாலனுங்கவடமேருவையமொளியால்விளங்கவிமையாத்
திசையானைகண்கண்முகிழாவொடுங்கநிறைகால்வழங்குசிறையான்.

இ-ள். அசையாத - கலங்காத, சிந்தை - மனம், அரவால் - நாகபாசத்தாலே, அனுங்க - பெருமாள்களங்க, (அதுகண்டு) அழியாத - நடுங்காத, உள்ளம் - மனம், அழிவான் - நடுங்குவானாய், இசையா - சரணாகதிக்குடன்படாத, இலங்கையரசோடும் - இராவணன்முதலிய யாவர்விஷயத்திலும், அண்ணல் பெருமாள, அருளின்மை - அருளின்றிக் கோபங்கொள்ளுதலே, கண்டும் - பார்த்தும், நையவான் - விரும்பாதவனாய், விசையால் - வேகத்தாலே, அனுங்கவடமேரு - மேருமலை சூலையவும், ஐயம் - உலகமெல்லாம், ஒளி

யால்-காந்தியால், விளங்க-பிரகாசிக்கவும்; இமையா-நிமையாத, திசையானைகள்-திக்காணைகள், கண்கள் - விழிகள், முகிழா - மூடி, ஒடுங்க-பதுங்கவும், நிறை - நிரம்பிய. கால் - காற்றை, வழங்கு - தருகின்ற, சிறையான் - இறகையுடையவனுய்,—எ-று.

கலங்மாத திருவுள்ளம் பெருமாள் கலங்கக்கண்டு திருவடி தானுங்கலங்கினனென்றார். இசையாவிலங்கை யரசோடுமென்ற தெச்சவும்மையாகலான் யாவர் விஷயத்திலுமென்றும். (உசச)

காதங்கள்கோடிகடைசென்றுகாணுநயனங்கள்வாரிகலுழக்
கேதங்கள்கூரவயர்கின்றவள்ளறிருமேனிகண்டுகிளர்வான்
சீதங்கொள்வேலையலைசிந்தஞாலமிருள்சிந்தவந்தசிறையான்
வேதங்கள்பாடவுலகங்கள்யாவும்வினைசிந்தநாகமெலிய.

இ-ள். காதங்கள் கோடி - கோடிகாதத்தின், கடைசென்று - எல்லையளவுஞ்சென்று, காணும் • அங்குள்ளனவற்றையுந் தெரியத்தக்க, நயனங்கள்-கண்களிலே, வாரி - ஊறிவருகிறநீர், கலுழ - சிந்தவும், கேதங்கள்கூர - துக்கமிகுதியாக, அயர்கின்ற - சோர்ந்துகிடக்கிற, வள்ளல்-பரமோதாரராகிய பெருமானுடைய, திருமேனி - திவ்வியமங்கள விக்கிரகத்தை, கண்டு - பார்த்து, கிளர்வான் - பூரித்தவனுய், சீதங்கொள் - குளிர்ச்சையைக்கொண்ட, வேலை-சமுத்திரமானது, அலை - தரங்கங்களை, சிந்த - மிகுத்துவீசவும், ஞாலம்-உலகத்தைமூடிய, இருள் - அந்தகாரம், சிந்த - சிதறிவிலகவும். வந்த - விளங்கிவருகிற, சிறையான் - இறகினுலே, வேதங்கள்-வேதகாணங்களை, பாட-கோஷிக்கவும், உலகங்கள்யாவும் - எல்லாவுலகங்களும், வினை - பாவங்களை, சிந்த - நீங்கவும், நாகம் - பிடித்திருக்கிற நாகபாசம், மெலிய - தளரவும்,—எ-று. .

இருக்கெசுச்சாமவதருவச் சிறையாகலா னச்சிறகொலியான் வேதங்கள் பாடவென்றார். (உசஙி)

அல்லேச்சுருட்டிவெயிலேப்பரப்பியகலாசையெங்குமழியா
வில்லேச்செலுத்திநிலவைத்திரட்டிவிரிகின்றசோதிவிளிர
எல்லேக்குயிற்றியெரிகின்றமோலியிடைநின்றமேருவெனுமத்
தொல்லேப்பொருப்பின்மிசையேவிளங்குசுடரோனின்மும்மைசுடர.

இ-ள். அல்லே-இருளை, சுருட்டி - இறகடிக்கொள்ளுதலாலே சுருளப்பண்ணியும், வெயிலே - சூரியகிரணத்தை, பரப்பி - பொன்னெளியாலேவிரித்து, அகல்-அகன்ற, ஆசையெங்கும் - திக்குகளெல்லாம், அழியா-சேதியாத, வில்லே - மூக்கின்வளைவாகிற வில்லொளியை, செலுத்தி - ஒதுங்கப்பண்ணியும், நிலவை - சந்திரனை, திரட்டி - கண்டதொளியாலே திரளப்பண்ணியும், விரிகின்ற - அச்சந்திரனிழலிருந்து மிகாகிற்கிற, சோதி - சந்திரிகை, மிளிர-விளங்கவும், எல்லே சூரியனெளியை, குயிற்றி - சேரப்பண்ணி, எரிகின்ற-காந்துகின்ற, மோலி - கிரீடமானது, இடை நின்ற - உலக நடுவிலே நில்லா

நிற்கிற, மேருவெனும் - வடமேருவென்கிற, அ - அந்த, தொல்லை - பழமை யான, பொருப்பின்மிசையே - மலையின்மேலே, விளங்கு - பிரகாசியாநின்ற, சுடரோனின் - சூரியனைப்பார்க்கிலும், மும்மை - மும்மடங்கு, சுடர் - விள ங்க,—எ-று.

தோன்றிமறையும் வானவில்லைப்போலாது அழியாவில்லென்றது வேற் றுமையணி. விற்போல் வளைந்த மூக்கை வில்லென்றதும் நிலவைப்போலுங் கண்டத்தொளியை நிலவென்றது முருவகவுயர்வு நவிற்சியணிகள். செலுத்த லும் சிட்டலும் அதனதன் பிரதிபிம்பத்தை. மோலி சுடரோனின் மும்மை சுடரவென்ற தெதிர்நிலையணி. பெரிய திருவடியை யிடைநின்றமேருவெனு மத்தொல்லைப் பொருப்பென்ற துருவகவுயர்வு நவிற்சியணி. ஆகவே வில்லு நிலவுஞ்சுடரோனு மொருகாலத்தின் மேருமிசை தொடரச்செய்தது தொடர் புயர்வுநவிற்சியணி. (உசக)

நன்பால்வெளங்குமணிகோடியோடெளிர்போ துசெம்பொன்முதலாத்
தன்பாலியைந்தநிழல்கொண்டமைந்ததழுவா துவந்துதழுவ
மின்பாலியன்றதொருகுன்றம்வானின்மிளிர்கின்றதென்னவெயிலோன்
தென்பாலெழுந்துவடபானிமிர்ந்துவருகின்றசெய்கைதெரிய.

இ-ள். நன்பால் - கண்டத்தொளியாகிய பரிசுத்த வெள்ளையில், விளங் கும் - விளங்காநின்ற, மணிகோடியோடு-கோடி அரதகக்கோவை மாலையோடு, நளிர்-பிரகாசியாநின்ற, போது - புட்பமாலையும், செம்பொன் - சிவந்த பொன் னரிமாலையும், முதலா - ஆதியாகிய, தன்பால்-அம்மாலைகளிடத்து, இயைந்த-தனித்தனியே பொருந்திய, நிழல்கொண்டு - பிரபைகளைக்கொண்டு, அமைந்த உண்டாகியவை, தழுவாது - மார்பிலே பொருந்தாமல், வந்து - அம்மாலைக ளாய்த்தோன்றி, தழுவ - பொருந்தவும், மின்பால் - ஒளிவிடும்பதுதிகளெல் லாம், இயைந்தது - கூடியதாகிய, ஒருகுன்றம் - ஒருநெடியமலை, வானின் ஆகாயத்தினின்றும், விழுகின்றதென்ன - இறங்குவதுபோல, வெயிலோன்-சூரியன், தென்பால் - தென்றிசையில், எழுந்து - உதயமாகி, வடபால் - வட திசைநோக்கி, நிமிர்ந்து-மேலெழுந்து, வருகின்ற - வாராநிற்கிற, செய்கைதெ ரிய - ஞாதனவிசேஷமாய்த் தோன்றவும்,—எ-று.

பொன்னரிமாலை - என்பது—பொன்வண்டுமாலை.

பால்போலுங் கண்டத்தொளியைப் பாலென்ற துருவகவுயர்வுநவிற்சி யணி. மணியாலும் பூவாலும்பொன்னாலுமாகிய மாலைகளைத்தழுவாதென்றது அதனதன் பிரதிபிம்பத்தை தழுவவென்றது அம்மாலைகள் மின்பாலியைந்த தொருகுன்றமென்னவென்றது பண்புவமை. அம்மாலைகளது தொங்குதலை குன்றம் வானின் விழுகின்றதென்னவென்றது தொழிலுவமை. தருதிபற்றி விழுகின்றதென்றதற்கியையத் தொங்குதலைவருவிக்க. கீழ்ப்பாட்டிலுரைத் தாமென்ற வுத்தியான மோலியாகிய தன்மை-(மறத்தல் துறத்தல்களையுடை

சூரியன் மின்பாலியைந்த தொருகுன்றமாகிய வுதயகிரியிலே தென்றிசையி லுதித்து வடதிசைமேற் செல்வதாகச்செய்தது தொடர் புயர்வு நவிற்சி. உதய கிரியென்னுது மின்பாலியைந்தொரு குன்றமென்றதும், மேலியென்னுது வெயிலோனென்றதும் உருவகவுயர்வுநவிற்சி. மொழிந்த பொருளோடென்ற வவ்வயின் மொழியாததனையு முட்டின்று முடித்தலென்னு முத்தியால் உதய கிரிக்குந் தென்றிசைக்கும் வெயிலோனுக்கு மியையப் பெரியதிருவடி தலை யாகிய தேர்மேலென்று கொள்வது முருவகவுயர்வு நவிற்சி. (உசஎ)

பன்னகர்சென் னிமணிகோடிகோடிபலகொண்டுசெய்தவகையால்
மின்னுலியன்றதெனலாய்விளங்குமிளிர்பூண்வயங்கும்வெயில்கால்
பொன்னுலியன்றநகையோடைபொங்கவனமாலுமார்புபுரளத்
தென்னுளிபிரிந்ததுயர்தீரவண்ணறிருமேனிகண்டுதொழுவான்.

இ-ள் பன்னகர் - பலநாகங்களுக்குள் சிரேஷ்டர்களுடைய, சென்னி மணி - சிரோரத்தினங்களை, கோடிகோடி - உச்சியினின்றும் உச்சியினின்றும், பல - அநேகமாக, கொண்டு - சீத்தெடுத்து, செய்தவகையால் - இழைத்த வகுப்புகளாலே, மின்னுல் - மின்னலைக்கொண்டு, இயன்றது - செய்தது, எனலாய் - என்று சொல்லும்படியாய், விளங்கும் - பிரகாசியாகின்ற, மிளிர்- காந்தியையுடைய, பூண் - ஆபரணங்களும், வயங்கும் - பிரகாசியாகின்ற, வெ யில் - சூரியப்பிரபையை, கால் - கக்குகின்ற, பொன்னுல் - சுவர்ணத்தாலே, இயன்ற - செய்த, நகை - விளங்குதலையுடைய, ஓடை - நெற்றிப்பட்டமும், பொங்க பிரகாசிக்கவும், வனமாலை - துளசிமணிமாலை, மார்பு - மார்பின் கண்ணே, புரள - அசையவும், தென்னுள் - ஆதிகாலத்தில், பிரிந்த - நீங்க லாகிய, துயர் - கிலேசம், தீர - போக, அண்ணல் - பெருமானுடைய, திரு மேனி - திவ்வியமங்கள விக்கிரகத்தை, கண்டு - பார்த்து, தொழுவான் - கை குவிப்பானுய். ()

கோடிகோடியென்பவற்றி லொன்தனுருபுகடொக்கன. இவ்வடுக்குமொழி பலவுச்சிகளைக் குறிப்பிக்கின்றது. பலகொண்டென்றமையால் பூண்-ஓடை-மாலை-என்பவற்றி லெண்ணும்மைகடொக்கன. (உசஅ)

முடிமேனிமிர்ந்தமுகிழேறுகையன்முகின்மேனிமிர்ந்தவொளியான்
அடிமேல்விழுந்துபணியாமனின்றகிலேயுன்னியுன்னியழிவான்
கொடிமேலிருந்திவ்வுலகேழொடேழுதாழுகின்றகோளுமிலனுய்ப்
படிமேலெழுந்துவருவான்விரைந்துபலகானினேந்துபணிவான்.

இ-ள். முடிமேல் - உச்சிக்குமேலே, நிமிர்ந்த - உயர்ந்த, முகிழேறு-சுவி த்தலைக்கொண்ட, கையன் - காங்கேயுடையவனுய், முகின்மேல் - மேகத் தைக்காட்டிலும், நிமிர்ந்த - அதிகமான, ஒளியான் - சாமளவர்ணத்தையு டைய பெருமானுடைய, அடிமேல் - திருவடியின்கீழே, விழுந்துபணியாமல்- சாஷ்டாங்கதண்டஞ் சமர்ப்பியாமல், நின்று - நின்றுகொண்டு, அங்கிலே-

சோகித்தக்கிடக்கிற வந்தச்சுபாவத்தை, உன்னியுன்னி - நினைத்துநினைத்து, அழிவான் - தளர்வானும், கொடிமேல் - துவசத்தின்மேல், இருந்து - வாசம் பண்ணி, இ - இந்த, உலகேழொடேழு பதினலுலகமும், தொழ - வணங்கு தல்செய்ய, நின்றகோலும் - நில்லாநின்றகொள்கையும். இலனுய் - இல்லா தவனுய், படிமேல் - பூமியின்கண்ணே, எழுந்து - எழுந்தருளி, வருவான் விளைந்து - விளைந்துகடப்பவனும், பலகால் - அநேகவிதமாய், நினைந்து-எண்ணியெண்ணி, பணிவான் - வணங்குவானும்,—எ-று.

தெரிவான் முதற்றெழுவானிறுதியாகிய முற்றுக்களெச்சமாய் முகிழேறு கையனுய்ப் பணியலாயினன் எனக்கூட்டுக. (உசுக)

வந்தான்மறைந்துபிரிவால்வருந்துமலர்மேலயன்றன்முதலோர
தந்தாதைதாதையிறைவாமறைந்துவிளையாடுகின்றதனியோய்
சிந்தாகுலங்கள்களவாய்தளர்ந்துதுயர்கூரலென்னசெயலோ
எந்தாய்வருந்தலுடை யாய்வருந்தலெனவின்னபன்னிமொழிவான.

இ-ள். வந்தான்மறைந்து - மறைந்துவந்தானென்றபடி, இனிச்சொல் லாமல்வந்தால்) பிரிவால் - பிரிவாற்றுமையாலே, வருந்தும் - நோவையடை வான், (யாரென்றால்) மலர்மேல் - பூமேலிருக்கிற, அயன் - நான்முகன், தன் - தனக்கு, முதலோர் - மூலவராகிய நிதியருரிகள், தம் - தமக்கு, தாதை - காரணராகிய சேனையர்கோனுக்கு, தாதை - பிரதானராகிய, (திரு வநந்தாழ்வான் மறைந்துவந்தால் வருந்துமென்றவயம்) இறைவா - பரமபுரு ஷனே, மறைந்து - எனக்குரையாது, விளையாடுகின்ற - லீலைசெய்கின்ற, தனியோய் - ஒப்பற்றவனே, சிந்தாகுலங்கள் - மனக்கிலேசங்களே, களவாய்-எல்லாருக்கும் போக்குகிறவனே, தளர்ந்து - மெலிந்து, துயர்கூரல் - துக்க த்தழுந்துதல், என்னசெயலோ - யாதுகாரணமோ, எந்தாய் - என்சுவாமியே, வருந்தல் - நோவுபடாதை, உடையாய் - சர்வசுவாமியே, வருந்தல் - நோவு படாதை, என - என்று, இன்ன - இவ்விதங்களாய், பன்னி - பிரலாபித்து, மொழிவான் - துதிக்கத்தொடங்குவான்,—எ-று.

தாதையென்றது மகனெனுங் காரியம்பிறக்கக் காரணமாயிலுனை யாக லாலனுக்குக் காரணமானோர் நித்தியசூரிகளாகவும். அவருக்குக்காரணஞ்சே னையர்கோனுகவும், அவருக்குக்காரணங் கருடனுகிய தாமாயிருக்க சைச்சயா நிசந்தானத்தாற் றம்மைக்கூறுது திருவநந்தாழ்வானைக் கூறினரென்றுகொ ள்க. அண்ணல்கலுழனென்னு மெழுவாய் பணிவானுய் மொழிவானென் னும் பயனிலைகொண்டது. இனிவரும் பாட்டுகளுக்குக்கருத்து முதலியவை ந்தும் பொருள்விளக்கவேண்டியவாறே யெழுதுகின்றமையாலாங்காங்குணர்க இருக்கெசுச்சாம வதருவச்சிறை யென்றது சிறையையுடையனென்றருகு பெய ராய் சொஞ்சேதனமென்கிற செய்யுளிற்காண்க. (உகம)

தேவாதிதேவர்பலரானுமுந்துதிருநாமமோதுசெயலோய்
மூவாதகாலமுலகேழொடேழுமரசாளுமேன்மைமுதல்வா

மேவாதவின்பமவைமேவிமேவநெடுவீடுகோட்டமுடியாய்
ஆவாய்வருந்தியழிவாய்கொலாரிவ்வதிரேகமாயையறிவார்.

இதில் வீற்றிருந் தேழுலகுந்தனிக் கோல்செல்ல வீவில் சோற்றன் மிக் காலுமம்மானே மருந்தாதையென்கிறார்.

இ-ள். தேவு - சேனையர்கோனே, ஆதி - முதலாகவுடைய, தேவர் - நித் தியசூரிகள், பலராலும் - அநேகராலும், முந்து - ஆரம்பத்திலே, திருநாமம் - ஹரி என்கிற திருநாமத்தைக்கொண்டு, ஒது - துதிக்கத்தக்க, செயலோய் - செய்கையையுடையவனே, மூவாது - தேவ மனித திரியக்குத் தாவராதீம் யாவையுங்கெடாமல், அந்நாளும் - உட்கொண்ட அக்காலத்திலும், உலகு - உல கங்கள், எழொடேழும் - பதினலும், அரசு - தனிக்கோல்வழியே, ஆளும் - செல்லநடத்துகிற, மேன்மை - மேம்பாட்டையுடைய, முதல்வா - காரண பூதனே, மேவாத - மானிடராகவரலரிதாகிய, இன்பம் ஆநந்தங்கள், அவை - அப்படிஎன்றும், மேவி - அடைந்து, மேவு - பின்படையத்தக்க, அந்தெ வீடு - அவ்வின்பங்களினெடியவின்பத்தை, காட்டி - காட்டுதற்கிடமான, அம் - அழகிய, முடியாய் - பதினலுலகுக்கும் தலையான திருநாட்டையுடைய வனே, ஆவாய் - இங்குநிலுற நிலையிலுமாகுமவன், வருந்தி - இங்கனேகோவு பட்டு, அழிவாய்கொல் - கலங்குமவனே, ஆர் - மயர்வறமதிநலமருளப்பெரு தாரில் யாவர், இவ்-கலங்காதவன் கலங்குதலாகியவிந்த, அதிரேகமாயை-மகா மாயையை, அறிவார் - அறியத்தக்கவர், ஒருவருமறியாரென்றபடி,—எ-று.

நாளுமென்றவும்மையா லுட்கொள்ளாத காலத்திலு மாசாளுகை தானே போதரும். உருத்திரனுக் கந்தரியாமியாய்நின் றுயிர்வாழ்தற்கிடமாகிய பூதவு டம்பைப்பிரித்தபோ தவ்வுடம்பழிதல்பற்றி அழித்தலுமோர் செய்கையென் னும் பிறர்தம்மதமேற்கெடுங்கு கவேந்து தாளுட்டித்தனது நிறுப்பானுண்ட போது முண்ணுதபோதும் அசாளுகை தவிரானென்கிறார். இதுபற்றியன் றே கடவுள்வாழ்த்தில் உலகம் யாவையுந் தாமுளவாக்கலு நிலைபெறுத்தலு நீக்கலுமென்றது. மனிதன் மனிதன் மனிதகந்தருவன் தேவகந்தருவன் பிதிர் கருமத் தேவன்றனுடன்ன சுரன் சுரனிந்திரனுசானும் பிசாபதிபாலேன் கனகன் விசாட்டிரணிய கர்ப்பன் முறைகருதுமிப் பதினெருபேர்கள் பினவா னந்தங்களுமையாம்பிரளயவெள்ளக்கடல் வாமாநந்தம் என்னுமிப்பாட்டானே உயர்வறவுயர்நலமென்றுகொள்க. மனிதவின்பந்தொடங்கி மலரோனின் பங் காறுமொவ்வொன்றுக வீட்டையுமின்பத்தை வீடென்றதாகுபெயர். மேவு காட்டவெனப் பெயரெச்சங்களாகவும், உயர்வறவுயர் நலத்தைக் காட்டுகின்ற திருநாட்டை முடியாகவும், அதனீற்றயலெதிர் மறையாகாரமாகவு மயங்கக் கூறுதல் சூற்றமன்றேவென்னிலன்று, தேவாதியென்று தொடங்கிய கீழுமெ ழுவாயென்று நடத்துகிற மேலுநோக்கி எற்புழியறிந்திதற்கிவ்வகையாமெனத் தகும் வகைசெலுத்துதறந்திரவுத்தியென்கிறபடியே யுய்த்துணர்கவென்பா

ஆழமுடைத்தாலாகிய வழகுதோன்றக்கூறினர். இவ்வாறுகூறுகின்ற வெல்லாங் கம்பருத்திரமென்பது காடகவழக்கு சித்திரமெனவுங்கூறுப (உஙிக)

எழுவாயெவர்க்குமுதலாகியீறெடுடையாகியெங்குமுளையாய்
வழுவாதவர்க்கும்வரமீயவல்லேயவரால்வரங்கள்பெறுவாய்
தொழுவாயுணர்ச்சிதொடராததன்மையுறுவாய்மறைந்துதுயரால்
அழுவாயொருத்தனுலேபோலுமாரிவ்வதிரேகமாயையறிவார்

மேலே பரத்துவங்கூறி யிதிலே வியூகமும் அந்தரியாமித்துவமும் வீபவமுங் கூறத்தொடங்கி எகமூர்த்தி யிருமூர்த்தி மூன்றுமூர்த்தி பலமூர்த்தியாகி யைந்துபூதமா யிரண்செடாயருவாகி நாகமேறி நடுக்கடலுட்பெயின்ற நாராயணனே வருந்தாதை யென்கிறார்.

இ-ள். எழுவாய் - பாற்கடலில் வாசுதேவனு யெழுந்தருளுவாய், எவர்க்கும் - எவ்வகைமேம்பாட்டோருக்கும், முதலாகி - ஆக்குங்காரணனுய், ஈறெடு - நீக்குங்காரணனுதலோடு, இடையாகி - காக்குங்காரணனுமாயெழுவாயென்றன்வயம், எங்கும்-காந்தஞ்சிலிடத்தொறு மிடந்திகழ் பொருடொறும், உளையாய் - வீய பிக்குமவனுய், வழுவாது - தப்பாமல், அவர்க்கும் - அந்தமூவருக்கும், வரம் - வேண்டுமவைகளை, ஈயவல்லே - கொடுக்கமாட்டுவை, அவரால் - அந்தமூவராலும், வரங்கள் - வேண்டுமவைகளை, பெறுவாய் - பிரமா விஷ்ணு ருத்திரர்களாகிக்கொள்ளுவாய், தொழுவாய் - இந்திராதிதேவர்களாய் வணங்குவாய், உணர்ச்சி - மெய்புணர்வை, தொடராது - பொருந்தாமல் பிரமாதிகளைத் தொழுவாயென்றன்வயம், அது - அந்த மெய்புணர்வை, அன்மை - அல்லாத வையத்திரி பறியாமைகளையுடைய, உருவாய் - மனிதவடிவாகி, மறைந்து - தெரியாதவனுய், துயரால் - துன்பத்தாலே, அழுவாய்-அழுமவனுய், ஒருத்தன் - இராமனென்னுமொப்பற்றவனுய், உளை - உளனுகிறாய், போலும் - முன்னிலையசை, ஆர் - எவர், இ - இந்த, அதிரேகம்-பெரிதாகிய, மாயை - மயக்கத்தை, அறிவார் - தெரிகிறவர், இப்படிப்பட்ட மகாமாயையறிவாரார்,—எ-று.

ஆமோத-பிரமோத-சம்மோதமென்கிற மூன்றுலகங்களிலும் சங்கருஷ்ணப் பிரத்யும்நாநிருத்தர்களா யெழுந்தருளியிருக்கிறார்களென்பது சித்தாந்தமாகலாற் பிரமாதிமூவர்க்குரிய முத்தொழிற்குங்காரணமாக வம்மூவரையுங் கூறினராயிற்று. வரங்கள்பெறுவாயென்றதனுலே அம்மூவரதருக்கிரகத்தாலிம்மூவரு முத்தொழிற்குரியராயினரென்றுமாயிற்று. இப்பாட்டெடுகைபடக் கூறுதி சுருங்கச்சொல்லலென்னுமழகுகுன்றக்கூறலன்று மேல்விளங்கவைத்தலால்.

(ஒ டுஉ)

உன்னெருக்கவைத்தலிருவர்க்குமொத்தியொருவர்க்குமுண்மையுரையாய்
மூன்னெருக்கநிற்றியுலகொக்கவொத்திமுடிவொக்கினென்றுமுடிவாய்

என்னெக்குமின்னசெயலோவிதென்னிலிருளொக்குமென்றுவிடிவாய்
அந்நொப்பமேகொல்பிறிதேகொலாரிவ்வதிரோகமாயையறிவார்.

கீழே வைகுந்தத்திற் பாவாசுதேவனென்றேகமூர்த்தி பாற்கடலில் வாசு தேவனே டிருமூர்த்தி மூன்றுமூர்த்தி பலமூர்த்தியென்ற ராதியிலே மூன்று மூர்த்தி பலமூர்த்தியென்றதை யநுவாதித் தைந்துபூதமா யிரண்டு சுடரா யருவானவனே வருந்தாதையென்கிறார்.

இ-ள். உன் - விஷ்ணுவாகிய வுன்னெடு, ஒக்க - கூட்டியெண்ண, வை த்த - நிறுத்திய, இருவர்க்கும் - பிரமருத்திரர்க்கும், ஒத்தி - வியாபகத்தி லொத்திருக்கிறாய், ஒருவர்க்கும் - இருவரிலொருவருக்காயினும், உண்மை - (எல்லாநாராயணனேயென்கிற) மெய்யுணர்ச்சியை, உரையாய் - தெரியப்ப டுத்தாய், முன் - இம்மூவருக்கு முன்பே, ஒக்க - விஷ்ணுவவதரித்தா னென் பதற்கியைய, நிற்றி - இராமனாய் நிற்கிறாய், உஅகு - ஐந்துபூதமிரண்டு சுட ரென்பதற்கு, ஒக்க - இயைய, ஒத்தி - வியாபகத்தி லொத்திருக்கிறாய், மு டிவு - இத்தலீலாவிபூதியடங்கலும், ஒக்கின் - இருமூர்த்தியு மேகமூர்த்தியே யென்று கலக்குமிடத்தில், ஒன்றும் - பொருந்துதற்கிடமான, மூடியாய்-திரு நாடாகிய நித்திய விபூதிநாதனே, என் - யாதொன்று, ஒக்கும் - இப்படியெ ல்லாவற்றிலும் வியாபித்திருக்கும், இன்ன - இப்படிப்பட்ட, செயலோ - செ ய்கைதானே, இது - இந்த வ்யாபகவஸ்து, என்னில் - என்றாராயப்புக்கால், இருள் - அந்தகாரத்தை, ஒக்கும் - ஒத்துவிளங்காதிருக்கும்; (இது இன்னசெ யலோ என்னெக்குமென்னி லிருளொக்கு மென்றற்வயம்) என்று - சூரியன் போல, விடியாய் - விளக்கமாகாய், (இரண்டு சுடரென்பதில்லேயெனின்- இருளென்பதில் மதிதோன்றி யென்றிலடங்கினதற்கொண் சுடராவியிடத்தி னிற் றிங்களொறுமினிதுறவு செய்குவதேயென்பதனுற்காண்க.) அந்நொப்ப மே - எக்குமூலையென் றங்குச்சொன்னநொப்பமே,)மங்கிய வருவாநொப்ப மூலியே) பிறிதே - வேறொன்று அன்று, இரண்டுகொல்லு மசைவிலே, கொ ப்பத்தினேகாரத்தேற்றம், பிறிதினேகாரம் வினு, மூடிவொக்கினென்பதில் எழனுருபைந்தனுருபாய்மயங்கிற்று,—எ-று. (உஇசு)

வாளைளித்திமுடியாமனீதிவருநாளுநிற்றிமறையோய்
பேணியுனக்கொர்பொருள்வேண்டுமென்றுபெறுவானருத்திபிழையாய்
ஊணையுயிர்க்குமுயிராகிநிற்றியுணர்வாயபெண்ணினுருவாய்
ஆணுமற்றுமலியாகியாரிவ்வதிரோகமாயையறிவார்.

இதில் ஆயபதப்பொருளைக்கூறிக் கீழே எல்லாநாராயணனே யென்ற ஸ்தத் திருஷ்டாந்தாத்தாற்கூறி வருந்தாதையென்கிறார்.

இ-ள். வாழ்நாள் - உடம்போடுகூடி வாழுநாளை, அளித்தி - கொடுக்கி றாய், முடியாமல் - தீராமல், நீங்காது பந்தத்தைக்கொடுக்கிறா யென்றபடி.) நீதி - நிக்காமை விரித்தவறநூலின்வழியே, வருநாளும் - அடையுங்கால

த்திலும், நிற்றி - வீட்டையுந்தந்துநிற்கிறாய், மறையோய் - வேதவிளக்கே, பேணுய் - அறம்பொருளின்பங்களே வேண்டினோரை விரும்பாய், உனக்கு-ஒன்றுலொன்று குறைவில்லாதவனக்கு, ஓர்பொருள் வேண்டுமென்று ஏதேனுமொருபொருளையாயினுங் கருதிப்பேணுயென்றன்வயம், (அவர்கருதிய வின்றிலொன்றைத்தந்து பந்தத்தில் விடுகிறுயென்றுகருத்து) பெறுவான் - கைங்கரியமாகிய பரமபுருஷார்த்தத்தை வேண்டினோரைப்பெறுதற்கு, அருத்தி - விரும்பிநிற்றலை, பிழையாய் - தவிராய், (இவ்விரண்டடியாலும் உருவோபாய புருஷார்த்தங்களின்னபடியென்றும், அதற்குத்தகுதியாகத் தலைக்கட்டுகிறுன் அர்ச்சாவதாரமா யென்றுங் கூறினராயிற்று. தமருகந்ததெவ்வுருவமவ்வுருவந்தானே தமருகந்ததெப்போ மற்றப்போ, மாறுயிணைந்த தன்பொன்னடியன்றி இவைகளாற்காண்க.) ஊணுய் - அன்னமயமாகிய வுடம்பாகியும், உயிர்க்கும் - அவ்வுடம்பில்வாழு மான்மாவாகியு மவ்வான்மாவுக்கும், உயிராகி - பரமான்மாவாகி, நிற்றி-நிற்கிறாய், (அசித்தும் - சித்தும் - ஈஸ்வரனுமாகி நிற்கிறுயென்றுயிற்று. ஆகவே அசித்தும் - சித்தும் - சரீரமாகத்தான் சரீரியாய் நிற்கிறுயென்று கருத்து. எங்ஙனேயென்னின்) உணர்வாய - இம்மூன்றையுங் காட்சியளவையாலறிதற்காகிய, பெண்ணினுருவாய்-பிராகிருதியென்றதற்குப் பெண்வடிவாகியும், ஆணுகி - அத்தாலே மயங்கிக்கிடக்கிற புருடனென்றறிதற்காண்வடிவாகியும், மற்று - அசைநிலை, (இவ்விரண்டுக்கும் வேறுகியி பிறிதெனப்பொருள்கூறவுமாம்.) அலியாகி - பெண்டென்மையும் ஆண்டென்மையு மல்லாததுமாகி - ஊணுயுயிர்க்குமுயிராகி நிற்றியென்றன்வயம், மற்றின்கணும்மையை நகினிலச்சொற்றீவகமாக்கி யேனேயிரண்டிடத்துங்கூட்டுக. ஊணுயென்றபோதே யுயிராயென்பதுதானே போதாவேண்டி யுயிர்க்குமொன்றுடனே விதந்தார். இவ்விடத்தும்மைகடொக்கன.

(உஙுச)

தானந்தமில்லேபலவென்னுமொன்றுதனியென்னுமொன்றுதவிரா
ஞானந்தொடர்ந்தசுடரென்னுமொன்றுநயனந்தொடர்ந்தவொளியால்
வானந்தொடர்ந்தபதமென்னுமூன்னேமறைநாலின்வந்தமுறையாவ
ணுந்தமென்னுமயலென்னுமாரிவ்வதிரேகமாயைபறிவார்.

ஈழே திருமந்திரத்தைச்சொன்னுராய் வேதவிளக்கென்றது நால்வகையென்றும் அவற்றினதுசார மிருவகையென்றுங்கூறி வருந்தாதையென்கிறுர்.

இ-ள். தான் - வேதவிளக்காகியதுதான், அந்தமில்லே . முடிவில்லேயாலால், பல - மனமும் வாசகமுஞ் செய்கையும் யானு நீதானே, என்னும் - (ப்ரஹ்மாப்ரம்மம்) என்றுசொல்லும், ஒன்று - இருக்கு, தனி - யானுந்தானுயொந்தானே, என்னும் - (அஹம்ப்ரம்மாஸ்மி) என்றுசொல்லும், ஒன்று-எசு, தவிரா - நீங்காத, ஞானம் - அறிவை, தொடர்ந்த - கூடிய, சுடர் - ஜோதி அவனேஸ்ஞகியொழிந்தான், என்னும் - (தத்வமஸி என்றுசொல்லும், ஒன்று - சாமம், நயனம் - (எண்ணிற்கண்ணிலொன்றே என்கையால் அன்றிக்கே

நயனம்) இரண்டுகண்களும், தொடர்ந்த - (கூட்லான்கண்ணுகிய சூரியமண்டலத்தை தொடர்ந்த) பற்றிச்செல்லுகிற, ஒளியால் - ஜோதியாலே, வானம் - பரமாகாசமாக, தொடர்ந்த - கூடப்பெற்ற, பதம் - இடம், (யானேநீயாகி யென்னேயாள்வானே) என்னும் - (அயமான்மாப்ரம்மம்)" என்றுசொல்லும்தகுதி பற்றிவருவித்து, ஒன்று - அதர்வணம், உன்னே இராமனுகியவுன்னேயே, மறைநாலின் - நான்குவேதத்தாலும், வந்த - கிரண்டுவந்த, முறையால் - கிரமமித்துவாகையாலே, ஆநந்தம் - முழுநலம், என்னும் - என்றுசொல்லும், அயல் - அவ்வாநந்தத்துக்கிடமாகிய முழுவுணர்வு, என்னும் - என்றுசொல்லும், ஆக ஞாநாந்தமடனென்றது சாரம். உன்னேயே யென்பதிற் றேற்றேகாரந்தொக்கது செய்யுளாகலான்,—எ-று. (உடுடு)

மீளாதவேதமுடிவின்கணின்னேமெய்யாகமெய்யினினேயும்
கேளாதவென்றுபிறவென்றுசொன்னகெடுவார்கள்சொன்னகடவான்
மாளாதநீதியிகழாமைநின்கணபிமானமில்லவறியோர்
ஆளாயும்வாழ்தியசாள்தியாரிவ்வதிரேகமாயையறிவார்.

வேதாந்தக்கருத்தணராத சூனியவாதிகளேக் கண்டித்து அடிமையும் ஆண்டானுமானவனே வருந்தாதையென்கிறார்.

இ-ள். மீளாதவேதம் - அவ்வேதம் மீளாது (இதன்றிதன்றென்று சென்ற வேதங்கள் மீட்சியின்றிக்கே,) முடிவின்கண் - அந்தங்களிலே, நின்னே - நாராயணனுகிய வுன்னே, மெய்யாக - ஞாநாநந்தமயனுக, மெய்யில் - தமதறிவின்கண்ணே, நினேயும் எண்ணும் இவற்றை, கேளாதவென்று - கேட்டறியாதனவென்றும், பிறவென்று - கண்டறியாதனவென்றும், சொன்ன - முதலிலே சொன்னவைக்கு, கெடுவார்கள் - அறிவுகெடுமவர்கள், சொன்ன - அவாவ்மனகோசரமென்றவற்றைத் தானேசொல்லிய, கடவால் - மறுமொழியினலே, மாளாத - அழியாத, நீதி - வேதங்களது சொல்லுகையை, இகழாமல - தப்பாமல், நின் - உன்னுடைய, கண்ணபிமானம் - கடாக்ஷவீக்ஷண்யும், இல்லே - இல்லேயாகி வறியோர் - சூனியவாதிகளானுர்கள், (அவர்கள் வேதவிரோதிகளாகையாலே அவ்வேதவிளக்காகிய வுனக்கு விரோதிகளானுர்களென்று கருத்து. ஊன்சுடர்மிகு சுருதியுளென்றதை யறியாரே வறியார் நித்தியமாகலான் ஞானத்தைமெய்யென்றுர்) ஆளாயும் - நானென்கிற வடிமையாயிருந்தும். வாழ்தி - கைங்கரியமாகிய புருஷார்த்தத்தோடு வாழ்கிறாய், அரசு-நாராயணனென்கிற ஆண்டானுகியும், ஆள்தி - அக்கைங்கரியத்தைக் கொள்ளுகிறாய்.— எ-று. (உடுசு)

சொல்லென்றுரைத்திபொருளாதியமறையுந்துறந்துதிரிவாய்
வில்லொன்றெடுத்திசரமொன்றெடுத்திமிளிர்சங்கமங்கையுடையாய்
கொன்லென்றுரைத்திகொலையுண்டுநிற்றிகொடியாயுன்மாயையறியேன்
அல்லென்றுநிற்றிபகலாதியாரிவ்வதிரேகமாயையறிவார்.

கீழே திருமந்திரத்தை வெளியிட்டபடியைக்கூறி யிதிலே அதனது சங்கிரகமாகிய பிரணவத்தையும் தனது பொருளையுங்கூறி வேதவிளக்கென்பதை யறியாது சூனியமான விாவணுதிகளறிய வெளிவந்தவனே வருந்தாதை யென்கிறார்.

இ-ள். சொல்லொன்று - மூன்றெழுத்தாகிய பதமொன்றை. உரைத்தி- உபதேசிக்கிறாய், பொருள் - ஆண்டானுக்கே அடிமைகளென்கிற பொருளும், ஆதி - நாராயணவடிவாகிறாய் (மூன்று திருநாமமென்றதிலே ஹரி என்று இதிலே ஓம் என்று இப்பிடித்தொடங்குதாகிய), தூய-பரிசுத்தத்தையுடைய, மறையும் - வேதத்தையும், துறந்து - விட்டு, திரிவாய் - ஞானநந்த மயனென் பதற்குவேறாய், வில்லொன்று - வேறே ஒருவில்லை, எடுத்தி - எடுக்கிறாய், சரமொன்று - அவ்வில்லுக்கேற்ற பாணமொன்றும், எடுத்தி - எடுக்கிறாய், மிளிர் - பிரகாசியாநின்ற, சங்கம் - சங்குமுதலிய திவ்வியாயுதங்களை, அங் கை - அழகியகையிலே, உடையாய் - வேதத்திலே உடையவனென்று சொல் லப்படுகிறாய், (சங்கென்றதில் மற்றையாயுதங்களையு முபலக்ஷணமாய்க்கூட்டுக) கொல்லென்றுரைத்தி - தேவருக் கந்தரியாமியாய் வதைபண்ணென்கிறாய், கொலையுண்டி - இராக்கதருக் கந்தரியாமியாய்வதைபட்டு, நிற்றி - நிற்கிறாய், கொடியாய் - இப்படிக் கோணலாயிருக்கிறவனே, உன்மாயை - உனது மயக் கச்செய்கையை, அறியேன் - ஊர்தியாகிய யானே யறியேன், அல்லென்றும்- ஆவரணமாகவும், நிற்றி-நிற்கிறாய், பகல்-விக்ஷேபமும், ஆதி-ஆகிறாய்,—எ-று.

மறந்தாயுமொத்திமறவாயுமொத்திமயலாரும்யானுமறியேம்
துறந்தாயுமொத்திதுறவாயுமொத்தியொருதன்மைசொல்லவரியாய்
பிறந்தாயுமொத்திபிறவாயுமொத்திபிறவாமனல்குபெரியோய்
அறந்தானிறுத்தலரிதாகவாரிவ்வதிரேகமாயையறிவார்.

கீழே அந்தரியாமியாகையாலே ஆவரணசத்தியாலே யொருகான்மயக்கி யும், விக்ஷேபசத்தியாலே யொருகால்விளக்கியும் நிற்கிறதையன்றிச் சூனியவா திகளறிய விபவமாகி நிற்கிறநிலையிலும் அம்மயக்க விளக்கங்களே யுடையவனே வருந்தாதையென்கிறார்.

இ-ள். மறந்தாயும் - மூற்றுமுணர்தல் முடிவிலாற்றல்களே மறந்தாயென் றலும், ஒத்தி-அன்புமிகுத்துச் சித்தங்கலங்குதலாலே ஒத்திருக்கின்றாய், மற வாயும்-அவற்றை மறவாயென்றலும், ஒத்தி-இலங்கையரசு முதலானதோட சூளின்மையாலே யொத்திருக்கின்றாய், மயல்-பிரகிருதிக்குள்ளாகிய, ஆரும்- எல்லாரும், யானும்-அதிகாரியாகிய யானும், அறியேய்-அறியாதிருக்கிறோம், துற ந்தாயும்-நீ சங்கசக்கராதி அகந்தகருடாதிகளை விட்டிருக்கிறாயென்றலும், ஒத்தி மறைந்துவந்தமையாலொத்திருக்கிறாய், துறவாயும்-அவைகளைவிடாதிருக்கின் றாயென்றலும், ஒத்தி அவைகளுடையேயின்றமையாலொத்திருக்கிறாய், ஒரு

தன்மை - (மறுத்தல் துறத்தல்களே யுடையன் மறவாமை துறவாமைகளேயி லனென்) றொருபடியாக, சொல்ல - (மயலாலே யவைகளேயுடைய னென்றும் என்னுலேயவைகளே யிலனென்றுஞ்) சொல்லுதற்கு, அரியாய் - அருமையானவனே (இருதிறத்தாருக்கு மிரண்டுபடியாகையா லொருபடியல்லேயென்கிறார். இவை யுரைத்தாமென்னு முத்திகள், பிறந்தாயும் - (சக்கிரவர்த்தித் திருமகனு) யவதரித்தா யென்றலும், ஒத்தி - வில்லொன்று சரமொன்றெடுத்தமையா லொத்திருக்கிறாய், பிறவாயும் நெடுவீகொட்ட முடியா யென்றலும், ஒத்தி-(பல்லாயிரத்தின முடியாதபக்கமவை வீசமேனி வடுத்தீரவும், தன்னசங்கமுந் தானுமுழங்கிற்றுகவும், மேலேவிக்கொள்ளுதலாலே ஒத்திருக்கிறாய், இவை உரைத்து மென்னுமுத்தி, பிறவாமல் - (பிறவித்துன்பமென்றடைந்தாரைமீள) வப்பிறவியில் விடாமல், நல்கு - கடைகணிக்கின்ற, பெரியோய் - (இயல்பாகவே பாசங்களினீங்கினேய், அறம் - தருமத்தை, தான்தானுன தன்மையொன்றையே கொண்டு, நிறுத்தல்-நிலைநிற்கச் செய்தலில், அரிதாகி - கூடாமையா யிரண்டுபடியுங்கொண்டு நிற்கிறுயென்றன்வயம் என்றுலென்பது - சொல்லெச்சம்,—எ-று. (உஅள)

வினைவர்க்கமுற்றுமுடனேபடைத்தியையெய்தியென்றும்வீவிலா
னினைவர்க்குநெஞ்சினுமகாமமுற்றியறியாமைநிற்றிமனமா
முனைவர்க்குமொத்தியமரர்க்குமொத்திமுழுமூடனென்றிம்முதலோர்
அனைவர்க்குமொத்தியறியாமையாரிவ்வதிசேகமாயையறிவார்.

இதில் முக்காலங்களுமுணர்ந்த பெரியதிருவடி தாமாக இந்திரியங்களின் மனமாகின்றேனும் யானேயென்னுங் கீதோபதேசாசாரியனே வருந்தாதையென்கிறார்.

இ ள். வினை - வினையைத் தருகையாலே வினையென்றதாகுபெயர், வர்க்கமுற்றும் - அவ்வினைமுழுதும், உடனே - எககாலத்திலே, படைத்தி - சிருட்டிக்கிறாய், அவை - அவ்வினைகளே, எய்தி - அடைந்து, என்றும் - (அவற்றின் பயனேப்பொறுக்கவாட்டாம லெக்காலத்திலும், வீளையா - மீளவுண்டாகாமல், நினைவர்க்கு - எண்ணுவோர்க்கு, நெஞ்சில் - சுழுத்திநிலையில், உறு - எல்லாவற்றிலு மிருந்த, காமம் - காமத்தை, முற்றி - நிரம்பச்செய்து, அறியாமல்-அவ்வினையாமையை யெண்ணுவோரை யறியவொட்டாமல், நிற்றிமனமா-மனமாக நிற்கிறாய், முனைவர்க்கும்-முதல்வராகிய பிரமருத்திராதிகளுக்கும், ஒத்தி - ஒத்துநிற்கிறாய், அமரர்க்கும் - இந்திராதி தேவர்களுக்கும், ஒத்தி - ஒத்து நிற்கிறாய், முழுமூடர் - முழுதுமறிவீனர், என்று - என்று சொல்லப்படுகிற, இம்முதலோர் - இவ்விராவணுதிகளோடு, அனைவர்க்கும் - எல்லாருக்கும், ஒத்தி - (உருப்பசி - மோகினி, அகலிகை - சீதை, கைகேசி - முதலாயினேர் விஷயத்தில், பிரம னுருத்திர னிந்திர னிராவணன் சக்கிரவர்த்தி முதலாயினேர் மிக்க காமங்கொண்டமையா லொத்து நிற்கிறாய், அறியாமை-மதிகலமருளப்பெற்றறியாமல், இவ்வதிசேகமாயையை யறிவாரார், எல்லாவற்

மிலு மிக்கதுகாமமென்பதை காதலகாதலறியாமை யென்கிறதிருவள்ளுவ
ராற்காண்க,—எ-று. (உகூ)

எறிந்தாருமேறுபவொருமின்னபொருள்கண்டிரங்குபவரும்
செறிந்தாரினுண்மையெனலாயதன்மைதெரிகின்றதுன்னிடையே
பிறிந்தார்பிறிந்தபொருளோடுபோதிபிறியாதுநிற்றிபெரியோய்
அறிந்தாறிந்தபொருளாதியாரிவ்வதிரேகமாயையறிவார்.

இதில் அவ்வினைவர்க்கு மித்துணைத்தென்று மத்துணையுமனமாகிய தின்னிடத்துந் தோன்றநிற்கிறவனே வருந்தாதை யென்கிறார்.

இ-ள். எறிந்தாரும் - காகபாசத்தை வீசினோரும், ஏறுபவொரும் - அவ்வீசலையேற்றுக்கிடக்கிறவரும், இன்னபொருள் - வெற்றிதோல்வியென் றிருவகையானபொருளையும், கண்டு - பார்த்து, இரங்குபவரும் - கலங்குபவருமாக, செறிந்தாரில் - கூடினோரிடத்தே, நுண்மையெனலாயதன்மை - அணுரூபமான மனமென்று சொல்லலாகியபடி, தெரிகின்றது - விளங்குகின்றது, உன்னிடையே - உனது விஷயத்திலே, எவ்வாறென்னில்) பிறிந்தார் - வெகுளியாற்பிறிந்தாராகிய இராவணதிகள விஷயத்தில், பிறிந்தபொருளோடு - பிறிதற்கேதுவான வெகுளியென்கிற பொருளோடு, போதி - போகிறாய், பிறியாது - (காமத்தாற் பிறியாராகிய இளையபெருமாளாதிகள் விஷயத்திற் காமத்தோடு) பிறியாமல், நிற்றி - நிற்கிறாய், பெரியோய் - வரம்பிலின்பத்தால் பெரியோனே, அறிந்தார்-இவ்விருதிறத்தையுங் கண்டறிந்தாராகிய விஸ்வாமிதிராதிகள் விஷயத்தில், அறிந்த பொருள்-(எத்தன்மையெய்தி முடியுங்கொலென்னு) மயக்கமாகியபொருள், ஆதி - காமித்தலும் கோபித்தலுமின்றி மயக்கமாகி நிற்கிறாய், இவ்வதிரேகமாயையறிவாரார், வாளுள் - மறந்தாய்-எறிந்தார் இம்மூன்றுசெய்யுளு நிரனிறையணி. கண்டிருந்த தேவர்களே யென்செய்யலாமென்றெண்ணுகையான் மயக்கமாயிற்று. காமாதி-ஆறுவர்க்கமும் இராகாதி- பதின்மூன்று வர்க்கமுமடங்க காமம் வெகுளி - மயக்க மிவைமூன்றென்ற திருவள்ளுவரிவரு மடக்கினமைகாண்க,—எ-று.

பேராயிரக்களுடையாய்பிறந்தபொருடோறுநிற்றிபிரியாய்
தீராய்பிரிந்துதிரிவாய்திறந்தொறவைதேறுமென்றுதெளியாய்
கூராழியங்கையுடையாய்நிரண்டொருருவாதிகோடலுரிபோல்
ஆராயினேதுமிலையாதியாரிவ்வதிரேகமாயையறிவார்.

இதிலே திரிபுடியாய்த் தேடுதற்கரியவனே வருந்தாதையென்கிறார்.

இ-ள். பேராயிரக்களுடையாய்-ஆயிரநாமங்களையுடையவனே, பிறந்த-உடம்போடு பிறந்த, பொருடோறும் - ஆன்மாக்களெல்லாம், நிற்றி - நிற்கிறாய், பிரியாய்-பிரியாதவனும், தீராய் - அப்படி ஒருபடியேநீங்காதவனும், பிரிந்து-மெய் வாய்-கண்ணென்னு மூக்குச் செவிவழியாலே, திரிவாய்-வேறுபடி

வாய், திறன்தெறு - இகிலும்மைதொக்கது, (சுவையொளி யூரேசை நாற்றங் களையுண்டு) அவை-அப்பொறிகளும், தேறுமென்று - அறியுமென்று, தெளி வாய் - தெளியப்படாளுய் கூர்-கூரிய, ஆழி - திருவாழியை, அங்கை-அழகிய கையிலே, உடையாய் - உடையவனே, திரண்டு - திரிபுடியாகத்திரண்டு, ஒரு ருவாதி-ஒருவடிவாகிறுய், கோடல்-வெண்காந்தற்கிழங்கை, உரிபோல்-உரித் தாற்போல, ஆரயின்-உள்ளேயிருப்ப தெது வென்றுராயப்புக்கால், ஏதுமிலை யாதி-ஒன்றுமில்லையாகிறுய், இவ்வதிரேகமாயையறிவாரார், இன்பமுதலிய பேற்றுக்கேதுவா மிந்திரியமனமாமஃதே-யின்பமலியான்மாத்தோறும் மிருப் பதாலநந்தமெனவுரித்தத்-தின்பருதியெனவு மணுரூபமெனவுந் துலங்கவிலங் கும்மான்கண்-னின்பருதிகவர்ந்து கெண்டையெனப்பிறழ்ந்து வண்டிறழ்நேத்தி ரத்தினுளே, என்பது நியாயவிவேகம் இம்மூன்றுபாட்டும் பிறர்மதத்திற்கு டன்படல்,—எ-று. (உசுக)

என்றின்னபன்னியழிவானெறிந்தவெறிசோதிகீறவிருள்போய்ப்
பொன்றுன்னியன்னவெயில்வீசுகின்றபொருள்கண்டுநின்றபுகழோன்
கின்றுன்னியுன்னியிவன்யாவனென்றுநிமிர்கின்றவெல்லைநிமிரச்
சென்றுன்னிமுன்னருடனையினைவ்வுலகேழுமூடுசிறையான்.

இவ்வாறு திருவடிதெருட்டப் பெருமாள் சோகந்தெளிந்துகண்டமை கூறுகின்றது.

இ-ள், என்று-என்றுசொல்லி, இன்ன-இவ்விதமாக, பன்னி-பிரலாபித்து அழிவான்-கலங்குகின்ற திருவடி. எறிந்த-வீசிய, எறிசோதி-காந்துகிற சூரி யன், கீற-கிழிக்க, இருள்-மயக்கவிருளானது, போய்-கழிந்து, பொன் - சுவர் ணப்பிரபை, தன்னியன்ன-தெருங்கினற்போல, வெயில்-சூரியப்பிரபையை வீசுகின்ற தந்துநிற்கிற, பொருள் - தமது பெருளாகிய திருவடியை, கண்டு-பார்த்து, நின்ற-நிலேபெற்ற, புகழோன் வாத்ஸல்யாதி கல்யாணகுணங்களே யுடைய பெருமாள், நின்று-நிதானித்து, உன்னியுன்னி - எண்ணியெண்ணி, இவன்-இந்த மஹாபுருஷன், யாவனென்று-எவ்வுலகத்தானென்று, நிமிர்கின்ற தலேதூக்குகிற. எல்லை-சமயத்தில், நிமிர-மூழுதுந்தலேதூக்க, சென்று-போய், உன்னிமுன்னர்-ஆலோசிக்கிற பெருமாளுக்கு முன்னே, உடனையினன்-கூட லாளன், இவ்வுலகேழும் - இந்த வுலகேழையும், மூடு - மறைக்கத்தக்க, சிறை யான்-சிறகையுடையவன்,—எ-று. (உசுஉ)

எறிந்தவெறிசோதி-இருள் உருவகவுயர்நவிற்சி. பொன்றுன்னியன்னவெ யில் உவமையணி. வீசுகின்ற பொருளென்பதுமது வில்லியென்றுற்போல வுன்னியென்றது வினேமுதற்பொருண்மையுணர்த்து மிகாவிகுதி.

வாசங்கலந்தமறைநாளதூலின்வகையென்பதென்னேமழையென்
ரூசங்கைகொண்டகொடைமீளியண்ணல்சராமன்வெண்ணெயணுகும்
தேசங்கலந்தமறைவாணர்செஞ்சொலறிவாளரென்றிம்முதலோர்
பாசங்கலந்தபசிபோலகன்றபதகன்றூரந்தவுகம்.

இ-ள். வாசம்-பரிமளத்தோடு, கலந்த-கூடிப்பிறந்த, மரை-தாமரையினது நாளம்-தண்டிலுண்டாகிய, நூலின் - மெல்லிய விழையினது, வகைத்-விதமாயிற்று, என்பது-என்று சொல்லுமது, என்னை - எப்படி, (தேரீர்க்கும் வடம் போலு நாகபாசத்தை மெல்லிய தாமரைநூல்போலாயிற் றென்கிறது முழுதுந் தேயாமையா லவ்வுவமை கூடாதென்றபடி.) மழையென்று - கைம்மாறு கருதாது வழங்கு மேகமென்று, ஆசங்கைகொண்ட - மயங்குதலுச்செய்துகிற்கிற, கொடை - கொடுத்தற்றொழிலிலே, மீளி - மீட்சியில்லாதவளுகையால், அண்ணல்-அக்கொடைவீரிற்றலைவனுகிய, சராசமன் - சராசமுதலியார்வாழும், வெண்ணெயணுகும்-வெண்ணெய்நல்லூரையடைந்த, தேசங்கலந்த-ஞானவொளியாகிய வழகுகூடிய, மறைவாணர் - வடநூன்முனிவரும், செஞ்சொலறிவாளர்-தென்மொழிப்புலவரும், என்று என்றுசொல்லுகிற, இம்முதலோர் இவர் முதலாயினோரை, பாசம் கயிறாக, கலந்த - பிணிக்கப்பட்டிருக்கிற, பசிபோல்-உதராக்கினிபோல, அகன்ற-நீங்கின, பதகன். இந்திரசித்தாகிய வஞ்சகன், துரந்த-பிரயோகித்த, உரகம் - நாகபாசம் இவ்வுவமை நாகபாசமுழுதுமில்லையாயிற்றென்று துவனிக்கின்றதாகையாற் கூறெவ்வுவமை கூடாதென்றூர் என்றதொழிப்பணி. சராசமனென்ப தருவகவுயர்வுநவிற்சி. ஆசங்கித்தல்-மயங்குதல். இன்னதல்லதுவென மொழிதலென்னு முத்தி,—எ-று. (உகூங்)

பல்லாயிரத்தின்முடியாதபக்கமவைவீசவந்துபடர்கால்
செல்லாநிலத்தினிருளாதல்செல்லவுடனின்றவாளிசிதறற்
றெல்லாவிதத்துமுணர்வோடெண்ணியிவனேபிழைக்குமெனவோர்
வல்லாளெருத்தனிடையேபடித்தவிவானமேனிவடிவும்.

இவ்விரண்டுபாட்டும் நாகபாசம் நீங்கினமை கூறுகின்றன.

இ-ள். பல் பல்லுக்குவமையான முருந்து, (அதாவது இறகினடிக்குருத்து.) ஆயிரத்தின்-ஆயிரமென்கிற கணக்கினும், முடியாத-அளவுபடாது மேவிடுகிற, பக்கம்-சிறகுகளாகிய, அவை அவ்விரண்டாலும், வீச-வெயிலெறிய வந்து-நாசிவழியே வந்து, படர்-பாதிகழிந்து பாதி மீண்டு மவ்வழியே செல்லுகிற, கால்-பிராணவாயு, செல்லாத-போகக்கூடாத, நிலத்தின் - சுவாதிட்டானநிலையிலுள்ள, இருள்-மயக்கமாகிய விருள், ஆதல்-ஆகியிருந்தது, செல்ல-கழியுமளவில் உடல்-அவரவருடம்புகளிலே, நின்ற-தைத்திருந்த, வாளி-பாணங்களும், சிதைவுற்று-அழிவுபட்டு, எல்லாவிதத்தும்-சகல விஷயங்களிலும், உணர்வோடு - சோர்வுறாத வுணர்வோடு, நண்ணி-நடக்கப்பெற்று, இவனே-இத்தன்மையவனு, பிழைக்கும் - சோர்வையடைவான், என - என்று சொல்லலாக, ஓர் - ஒப்பற்ற அல்லதுணருமவனுன, வல்லாளெருத்தன் - உணர்வால்வல்லவொருவன், இடையே - இவ்வுணர்வோடு நண்ணிய நடுவிலே, படித்த - பூர்வகர்மத்தாலடையலான், வடி-சோர்வாகிய குற்றத்தை, ஆன-ஒப்பாயின, மேனி

அவருடம்பிலுள்ள, வடுவும்-பாணத்தாலாகிய தழும்புகளும், உடலிற் றழும்பு கூட வில்லையென்றுயிற்று,—எ-று.

இசையுமெனினுமிசையாதெனினும் வசைதீரவெண்ணுவர் சான்றோர் கலான் இடையேபடுத்த வடுவிசையினரி மாவுளங்கிழித்த வம்பினிற்றீதோ வரிமாப்பிழைப்பெய்த கோல்தீதன்றுகையாலே இடையேபடுத்த வடுகுற்ற மன்றென்றார், இது வேற்றுப்பொருள் வைப்பணி இதற்குவமையணியங்கம். முருந்தைப்பல்லென்றது எதிர்நிலையை யங்கமாகக்கொண்ட வுருவகவுயர்வு கவிற்சி. மயக்கத்தை யிருளென்றதுமது. (உசச)

தருமத்தினுன்றுமொழுகாதசெய்கைதழுவிப்புணர்ந்ததகையால்
உருமொத்தவெங்கண்வினைதீயவஞ்சருடலுய்த்ததில்லையுலகின்
கருமத்தினின்றகவிசேனவெள்ளமலர்மேலவ்வள்ளல்கடைநாள்
நிருமித்தவெண்ணவுயிரோடெழுந்துநிலைநின்றதெய்வமெறியால்.

இ-ள். தருமத்தின்-அறத்தின்வழியே, ஒன்றும் - ஒருவிதத்திலும், ஒழுகாத-நடவாத, செய்கை - செய்யுந்தன்மையை, தழுவி-அநுசரித்து, புணர்ந்த அச்செய்யுந்தன்மையான பாவத்தோடுகூடிய, தகையால்-பண்பிலுலே, உரும் இடியை, ஒத்த-ஒப்பான, வெங்கண் - கொடுமையான, வினை - பாவமானது, தீய-நரகிக்கும்படி, வஞ்சர்-பாதகருடைய, உடல்-தேகங்களிலே, உய்த்ததில்லை-அப்பக்கத்தொளிசென்றதில்லை, உலகின் - உயர்ந்தோர்களுடைய, கருமத்தின் - காரியத்தின்கண்ணே, நின்ற-உத்தியோகித்துநின்ற, கவிசேனை-வானரசேனையாகிய. வெள்ளம்-எழுபதுவெள்ளமும், மலர்மேல்-பூமேலிருந்து, அவ்வள்ளல் - முன்னே சிருட்டித்த அந்தப்பிரமன். கடைநாள்-அவ்வெள்ள முடிவாகிய பிற்காலத்திலும் நிருமித்ததென்ன - மீளவுஞ் சிருட்டித்தாற்போல, உயிரோடெழுந்து - உயிருடனே யெழுந்து, நிலைநின்ற-பெருமானருகே நின்றன, தெய்வமெறியால் - ஈஸ்வரசங்கல்பத்தாலே. கடைநாணிருமித்தென்ன வென்பதில் பொருளுவமை. உலகினென்பதிலாறனுருபைத்த னுருபாய்மயங்கிற்று, வெவ்வியகண்போறலிற்கொடுமையை வெங்கணென்றார்,—எ-று. ()

இளையானெழுந்துதொழுவானையன்பினிணையாரமார்பினணையா
விளையாததுன்பம்விளைவித்ததெய்வம்வெளிவந்ததென்னவியவாக்
கிளையாரினின்னதுணையோரையாவிகெழுவாவெழுந்துதழுவா
முளையாதகிளைகளுகான்முன்வந்துமுறைநின்றவீரன்மொழிவான்.

இ-ள். இளையான்-சலியாதவனும், எழுந்து-வீரத்தோடெழுந்து, தொழுவானை-வணங்குகிற வினையபெருமானே, அன்போடு-பிரியமோடே, இணை-தம்மோடொத்ததன்மை, ஆர - தோன்ற, மார்பின் - திருமார்பிலே, அணையா - அணைத்து, விளையாத-வரத்தகாத, துன்பம்-துக்கத்தை, விளைவித்த-வரப்பண்ணின, தெய்வம்-காட்சியாகாத தெய்வத்தானே, வெளிவந்தது - காணவந்தது, என்ன - என்கிறதாக, வியவர்-அதிசயித்து கிளையாரின்-மீண்டு முய்யாதவர்

போல, இன்ன-இத்தன்மையான, துணையோரை - அளவாயினோரை, ஆவி-தமது பிராணன், கெழுவா-அப்போது பொருந்தியதாக, எழுந்து-அத்தினை யோரின் முன்னே யெழுந்து, தழுவா-தழுவிக்கொண்டு, மூளாத-ஆகாயத் தின் மூளாத்துமறையாத, திங்கள்-பாதிச்சந்திரனைப்போலும், உகிரான்முன் கத்தையுடைய பெரிய திருவடிக்குமுன்னே, முறைநின்று - தெய்வசங்நிதானத்தின்முறையேநின்று, அவ்வீரன்-அவ்விராகு வீரனுகியபெருமாள், மொழிவான்-சொல்லத்தொடங்கினன்- (உசுசு)

வேறு.

கருடனை இராமன் நீயாவனென வினவுதல்.

அய்யநீயாரையெங்களருந்தவப்பயத்தினன்வந்
தெய்தினையுயிரும்வாழ்வுமீந்தனையெம்மனோரால்
கய்யுறைகோடற்கொத்தகாட்சியையல்லமீட்சி
செய்திறமிலையாலென்றுன்றேவர்க்குந்தெரிக்கிலாதான். (உசஎ)

பொருளினிபுணர்வேறுபுறத்துமொன்றுண்டோபுந்தித்
தெருளினையுடையாகிற்செயலருங்கருணைச்செல்வம்
மருளினையிரவின்வந்தவாழ்க்கையீதருகின்வாயால்
அருளினையென்னினெய்தவரியனவளவோவைய. (உசஅ)

இராமன் கருடனைப்புகழ்தல்.

கண்டிலைமுன்புசொல்லக்கேட்டிலைகடலெனென்றெம்பால்
கொண்டிலைகொடுப்பதல்லாற்குறையிலையிதன்கொள்கை
உண்டிலையென்னநின்றவுயிர்தந்தவுதவியோனே
பண்டிலாண்புரைகள்செய்வதென்பகர்கியென்றுன். (உசக)

கருடன் போதல்.

பறவையின்குலங்கள்காக்கும்பாவகன்பழையநின்னே
றெவுளதன்மையெல்லாமுணர்த்துவெனாக்கலேடம்
மறவினைமுடித்தபின்னர்வருவெனின்னுழையன்மாயப்
பிறவியின்பகைஞரல்குவிடையெனப்பெயர்ந்துபோனன். (உஎ0)

ஆரியனவனைநோக்கியாருயிருதவியாதும்
காரியமில்லான்போனன்கருணையோர்கடன்மையீதால்
பேரியலாளர்செய்கையுதியம்பிடித்துமென்னர்
மாரியைநோக்கிக்கைம்மாறியற்றுமோவையமென்றுன். (உஎக)

இறந்தனனிளவலென்னவிறைவியுமிடுக்கணெய்தும்
மறந்தனருறைகுகின்றவஞ்சருமறுகிமீளப்
பிறந்தனனென்றுகொண்டோர்பெரும்பயம்பிடிப்பீன்றே
அறந்தருசிக்கையன்பவர்த்துமென்றனுமன்சொன்னன். (உஎஉ)

வானரரராரவரரித்தல்.

அழகிதென்றண்ணல்கூறவார்த்தனர்கடல்களஞ்சி
குழைவுறவந்தனுச்சிக்குன்றநின்றண்டகோளம்
ஏழுமிசையுலகமேன்மேலெங்கிடவீரிந்துசிந்தி
மழைவிழுமலைகள்கிறமாதிரம்பிளக்கமாதோ: (உஎக)

ஸ்ரவாராமிராவணன் கேட்டல்.

பழிப்பருஞ்சிந்தையாள்பாற்சிந்தனைபடரக்கண்கள்
விழிப்பிலன்மேனிசாலவெதும்பினனீசன்வேலும்
குழிப்பரிதாயமார்பைமன்மதன்கொற்றவாளி
இழிப்புறவுயிர்ப்புநீங்கிக்கிடந்தவாளரக்கன்கேட்டான். (உஎச)

தாதைசொற்றலைமேற்கொண்டதாபதன்தருமமூர்த்தி
* ஈதைஊர்க்குநாமத்திராமனெயெண்ணியெங்கும்
சீதையுமவையுன்னிச்சிந்தனைதீர்த்துந்தீராப்
பேதையுமன்றியவ்வூர்யாருளர்துயில்பெரிதார். (உஎடி)

இராவணன் நகைத்தல்.

சிங்கவேறசனியேறுகேட்டலுஞ்சீற்றச்சேனை
பொங்கியதென்னமன்னன்பொருக்கெனவெழுந்துபோரில்
மங்கினர்பகைஞரென்றவார்த்தையேவலியதென்ன
அங்கையோடங்கைகொட்டியலங்கற்றோள்குலுங்கநக்கான். (உஎசு)

இடிக்கின்றதகனியென்னவிரைக்கின்றதிராமன்போர்வில்
வெடிக்கின்றதண்டமென்னப்படுவதுதம்பிவின்ஞண்
அடிக்கின்றதென்னவந்துசெவிதாறுமனுமனர்ப்புப்
பிடிக்கின்றதுலகமெங்கும்பரிதிசேயார்ப்பின்பெற்றி. (உஎஎ)

அங்கதனவனேவார்த்தானந்தாமார்க்கின்றனும்
வெங்கதநீலன்மற்றைவீரரும்வேறுவேறு
பொங்கினார்த்தவோசையண்டத்தும்புறத்தும்போன
சங்கையொன்றின்றித்தீர்ந்தார்பாசத்தைத்தருமதல்க. (உஎஅ)

இராவணனிந்திரசித்தின் மாளிகையடைதல்.

என்பதுசொல்லிப்பன்னிச்சேக்கைநின்றிழிந்துவேந்தன்
ஒன்பதுகோடிவாட்கையராக்கர்வந்துழையர்சுற்றப்
பொன்பொதிவிளக்கங்கோடிபூங்குழைமகளிரேந்தத்
தன்பெருங்கோயினின்றுமகன்றனிக்கோயில்சார்ந்தான். (உஎக)

தாங்கியதுகிலார்மெள்ளச்சரிந்துவீழ்குழலார்தாங்கி
வீங்கியவுயிர்ப்பார்விண்ணேவிழுங்கியமுலையார்மெல்லத்

* ஈதை-துன்பம்.

தூங்கியவிழியார்த் தள்ளித் துனங்கியகடையார்வல்லி
வாங்கியமருங்குன் மாதரானந்தரான்மயங்கிவந்தார். (உஅர்)

பானமுந்துயிலுங்கண்டகனவும்புண்கனிந்தபண்ணைக்
கானமுந்தள்ளத்தள்ளிக்களியொடுங்கள்ளங்கற்ற
மீனினும்பெரியவாட்கண்விழிப்பதுமுகிழ்ப்பதாக
வானவர்மகளிர்போனர்மழலையஞ்சதங்கைமாழ்க. (உஅக)

மழையினீல'மூட்டிவாசமும்புகையுமாட்டி
உழையுழைசுருட்டிமென்பூகுவித்திடைக்கிடையுறென்னுப்
பிழையுடவிதியார்செய்தபெருங்குழற்கருங்கட்செவ்வாய்
இழையணிமகளிர்சூழ்ந்தாரனந்தாலிடங்கடோறும். (உஅஉ)

தேனிடைக்கரும்பிற்பாலிலமுதினிற்கிளவிதேடி
மானிடைக்கயவில்வாளின்மலரிடைநயனம்வாங்கி
மேனடையனையமற்றுநல்வழிதல்கவேண்டி
வானுடையண்ணல்செய்தமங்கையர்மருங்குசென்றார். (உஅங)

தொடங்கியவார்ப்பிலேசைசெவிப்புலந்தொடர்தலோடும்
இடங்கரின்வயப்போத்தன்னவெறுழ்வலியரக்கர்யாரும்
மடங்கலின்முழக்கங்கேட்டவான்கரியொத்தார்மாதர்
அடங்கலுமசனிகேட்ட * வளையுறையரவமொத்தார். (உஅச).

அரக்கனுமைந்தன்வைகுமாடகத்தலைந்தமாடம்
பொருக்கெனச்சென்றுபுக்கான்புண்ணினிற்குமிழிபொங்கத்
தரிக்கிலன்மடங்கலேற்றுற்றெறலேப்புண்டுசாய்ந்துபோன
கருக்கிளர்மேகமன்னகளிறனையானைக்கண்டான். (உஅடு)

இந்திரசித்தனிராவணனை வந்ததென்னென வினுதல்.

எழுந்தடிவணங்கலாற்றுனிருகையுமரிதினேற்றித்
தொழுந்தொழிலானேநோக்கித்துணுக்குற்றமனத்தன்றேன்றல்
அழுங்கினைவந்ததென்னையடுத்ததென்றடுத்துச்சொன்னன்
புழுங்கியபுண்ணினுனுயினையனபுகறலுற்றனை. (உஅசு)

உருவினவுரத்தைமுற்றுமுலப்பிலவுதிரம்வற்றப்
பருவினவளப்பிலாதபகழிகள்கவசம்பற்றற்
றருகினபின்னைச்சாலவலியெனையகண்கள்
செருகினவன்றேயானுமாயையிற்றீர்ந்திலேனுல். (உஅள)

இந்திரன்விடையின்பாகனெறுவலிக்கலுழனேறும்
கந்தரனருக்கனென்றித்தொடக்கத்தார்தொடர்ந்தபோரில்

* அவை-வலை.

கொந்திலெனீனையதொன்றுதவன்றிலென்மனிதனேண்மை
மந்தரமனையதோளாய்வரம்புடைத்தன்றுமன்னே. (உஅடி)

இளையவன்றன்மையீதாலிராமனதாற்றலெண்ணின்
தவையவிலழுங்கன்மார்பகம்வயிற் * றங்கிற்றன்ருல்
வீளவுகண்டுணர்தலல்லால்வென்றிமேல்வீளயுமென்ன
உளையதன்றென்னச்சொன்னனுற்றளதுணர்ந்திலாதான். (உஅக)

வென்றதுபாசத்தாலுமாயையின்வீளவிலுலும்
கொன்றதுருக்குவீரர்தம்மொடக்கொற்றத்தோனை
நின்றனனிராமனின்னுநிகழ்ந்தவாநிகழ்கமேன்மேல்
என்றனனென்னக்கேட்டவிராவணனிதனைச்சொன்னன். (உகo)

இராவணன் இந்திரசித்தினிடம் கிலக்குமணியசேழனதைகூறல்.

வார்கழற்காலமற்றவ்விலக்குவன்வயிரவில்லின்
பேரொலியாவம்விண்ணைப்பிளந்திடக்குரங்குபேர்ந்த
காரொலிமடங்கவல்லக்கம்பிக்கக்களத்திருர்த்த
போரொலியொன்றுமையவறிந்திலேபோலுமென்ருன். (உகக)

அய்யவெம்பாசந்தன்னலார்ப்புண்டாரசனியென்னப்
பெய்யும்வெஞ்சரத்தான்மேனிபிளப்புண்டாருணர்வுபோந்தார்
உய்யுமொன்றுரைத்ததுண்மையோவொழிக்கவொன்றே
செய்யுமென்றெண்ணத்தெய்வஞ்சிறிதன்றேதெரியினம்மா. (உகஉ)

ஈதுரைநிகழும்வேலையெய்துவதறியப்பேரய
தூதுவர்விரைவின்வந்தார்புகுந்தடிதொழுதலோடும்
யாதவணிகழ்ந்ததென்னவிராவணனியம்பவீரின்
ரேதியகல்வியாளர்புகுந்துளதுரைக்கலுற்ருர். (உகங)

தூதர் நடந்தவைகூறல்.

பாசத்தாற்பிணிப்புண்டாரைப்பகழியாற்களப்பட்டாரைத்
தேசத்தாராசன்மைந்தனிடையிருள்சேர்த்துநின்றே
ஏசத்தானிரங்கியேங்கியுலகெலாமெரிப்பெனென்ருன்
வாசத்தார்மாலைமார்பனுறைகலுழன்வந்தான். (உகச)

அன்னவன்வரவுகாணுவயிலெயிற்றரவமெல்லாம்
சின்னபின்னங்களானபுண்ணெமையர்வுதீர்ந்தார்
முன்னையின்வலியராகிமொய்க்கள்நெருங்கிமொய்த்தார்
இன்னதுநிகழ்ந்ததென்ருராக்கனீதெடித்துச்சொன்னன். (உகஎ)

இராவணன் கலுழனை இகழ்தல்.

ஏற்றருந்தடந்தோளாற்றலெண்மகனெய்தபாசம்
காற்றிடைக்கழித்துத்தீர்த்தான்கலுழனுங்காண்மின்காண்மின்

* தங்கிற்றன்ருல்-தங்கிற்று. ஆல்-அசை.

வார்த்தையீதாயினன்ருலிராவணன்வாழ்ந்தவாழ்க்கை
மூத்ததுகொள்கைபோலாமென்னுடைமுயற்சியெல்லாம். (உகக)

உண்டிலகேழுமேழுமிழ்ந்தவனென்னுமூற்றம்
கொண்டவனென்ஞேடேற்றசெருவினின்மறுக்கங்கொண்டான்
மண்டிலந்திரிந்தபோதுமறிகடன்மறைந்தபோதும்
கண்டிலன்போலுஞ்சொற்றகலுழனன்றென்னேக்கண்ணுல். (உகஎ)

காங்களினேமிசங்கந்தாங்கியகரியோன்காக்கும்
புரங்களுமழியப்போனபோழ்திலென்சிலையிற்பொங்கி
உரங்களில்முதுகிற்ருளினுறையுமுகிறையினுற்ற
சரங்களுநிற்கவேகொல்வந்ததவ்வருணன்றம்பி. (உகஅ)

இந்திரசித்தனை நீயேசென்று பொருதினை இராவணனுரைத்தல்.

ஈண்டதுகிடக்கமேன்மேலியைந்தவாறிசையவெஞ்சி
மீண்டவர்தம்மைக்கொல்லும்வேட்கையைவேட்குமன்றே
ஆண்டகைநீயேயின்றுமாற்றுகியரும்போரன்ஞேன்
காண்டலுநாணுமென்ருன்மைந்தனுங்கருத்தைச்சொன்னுன். (உகக)

இந்திரசித்து மறுத்துடன்படல்.

இன்ருருபொழுதுதாழ்த்தென்னிகற்பெருஞ்சிரமநீங்கிச்
சென்ருருகணைத்திஞலேநான்முகன்படைத்ததெய்வ
வென்றிவெம்படையிஞலுன்மனத்துயர்மீட்பேனென்ருன்
நன்றெனவரக்கன்போய்த்தனதிமலர்க்கோயில்புக்கான். (உஙஙo)

கஅ-வது. நாகபாசப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம-உடுக.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

பத்தொன்பதாவது

படைத்தலைவர்வதைப்படலம்.

ஆர்த்தெழுமோசைகேட்டவரக்கருமுசமார்ப்பப்
போர்த்தொழில்வேட்கைபூண்டுபொங்கினர்புருத்துமொய்த்தார்
தார்த்தடமார்பன்றன்னேத்தாவிடையென்னச்சார்ந்தார்
பார்த்தனன்முனிந்துமன்னனினேயனபகர்வதானுன். (க)

மாபெரும்பக்கலேடுவான்புகைக்கண்ணன்வந்தான்
வடுதியெம்மையென்பார்தம்முகமினிதினேக்கிப்

போவதுபுரிதிரென்னப்புகறலும்பொருததூதர்
தேவமற்றிவர்கள்செய்கைகேளெனத்தெரியச்சொன்னார். (உ)

தூதர் சேனை வீரர்தீறங்கூறல்.

ஆனையும்பரியுந்தேருமரக்கருமமைந்தவாளிச்
சானையும்வீயநின்றதலைமகன்றனிமையோரார்
மானவன்வாளிவாளியென்கின்றயமலைவாயார்
போனவர்மீளவந்துபுகுந்தனர்போலுமென்றார். (ஊ)

வே று.

சேனைகள்மீது இராவணன் சீற்றங்கோடல்.

அற்றவர்கூறலுமாழலிற்றீய்
முற்றறியகோபமூருங்கமுனிந்தான்
இற்றிதுவோவிவர்சேவகமென்னப்
பற்றுமினென்றனன்வெம்மைபயின்றான். (எ)

என்றலுமெய்தினர்கிங்கரரென்பார்
பின்றலினேரைவலிந்துபிடித்தார்
நின்றனராயிடைநீலநிறத்தான்
கொன்றிடுவீரிலர்கொண்மினிதென்றான். (ஏ)

சேனைகள் முக்குறும்பான் இராவணன் கட்டளையிடல்.

ஏற்றமினிச்செயல்வேறிலையீர்வீர்
நாற்றதுகர்ந்துயர்நாசியைநாம்க்
கோற்றருதிண்பணைகொட்டினிர்கொண்மீர்
சாற்றுமினஞ்சினரென்றுரைதந்தே. (ஐ)

மாலி தடுத்துரைத்தல்.

அக்கணனேயயில்வாளினர்நேரா
மிக்குயர்நாசியையீரவிரைந்தார்
புக்கனரப்பொழுதிற்புகழ்தக்கோய்
தக்கிலதென்றனன்மாலிதடுத்தான். (ஒ)

அஞ்சமமஞ்சியழிந்துளராளர்
வெஞ்சமம்வேறலும்வென்றியதன்றுய்த்
துஞ்சலுமென்றிவைதெரிலையவன்றே
தஞ்சினவாருளராண்மைதகைந்தார். (ஓ)

அந்தரமொன்றுமறிந்திலையன்றே
வந்தனமம்வயினெத்துணைமன்னர்
தந்திரம்வானவர்தானவரென்னும்
இந்திரனஞ்சினனெண்ணுதியன்றே. (ஔ)

வருணனெவ்வினன்வந்துவணக்கிக்
கருணைபெறுந்துணையும்முயிர்கால்வான்
இருணிறவஞ்சகரெங்குளரெந்தாய்
பருணிதர்தண்டமிதன்றுபகர்ந்தால். (கஅ)

பத்தொருநான்குபகுத்தபரப்பின்
அத்தனெவெள்ளமரக்கரவிந்தார்
ஒத்தொருமூவர்பிழைத்தனருய்ந்தார்
வித்தகர்மாரினிவீரம்விளைப்பார். (கக)

பாசமுமிற்றதுபாதியின்மேலும்
காசமுமுற்றதுநம்பிநடந்தாய்
பூசன்முகத்தொருகான்முளைபோதா
நீசரைவெட்டுதியோநெகொடி. (கஉ)

வாழியில்க்குவனென்னின்மறுக்குற்
றூழியரக்கர்தம்வாயிலடைப்பார்
எழுகடற்றுணையோவினிகாசி
ஊழியறுத்திடினும்முலவாதால். (கங)

தூதுநடந்தவனைத்தொழுதங்நாள்
ஓதுநெஞ்செருவஞ்சியுடைந்தார்
தீதிலர்நின்றவர்சேனையினின்றூர்
பாதியின்மேலுளர்நாசிபடைத்தார். (கச)

விட்டிலேசீதையையாமெனினின்னீர்
ஒட்டியபோருளதோவொருநாளே
வெட்டுதிநாசியைவெந்தொழில்வல்லோர்
பட்டிலரென்றிலையென்றுபகர்ந்தான். (கஙி)

ஆறினபின்னரழிந்தனரன்னர்
சேறினரன்னதுசிந்தையுணர்ந்தார்
சீறியநெஞ்சினர்செங்கணரொன்றே
கூறினர்தங்கிலைசெய்கைகுறித்தார். (கசு)

நின்மகனை இந்திரசித்துமாயையாலோடி யொளித்திலனேவேனல்.

உன்மகனெல்லியொதுங்கினனென்றே
மின்னகுவானிடையேகவிரைந்தான்
அன்னதின்மாயையியற்றியகன்றன்
இன்னகையினனுய்ந்தனனெந்தாய். (கஎ)

இப்பகலொன்றினிலுளையினல்லால்
மூப்பகமீர்கிலமாவிமுடிப்பேம்.

வெப்பகலாவெரிவெந்தழல்வெந்த
செப்பகல்வெண்ணெயிலேன்மைதெரிந்தோய். (கஅ)

விட்டனமெம்மைவிடுத்தினிவெம்போர்
பட்டனரொன்றுபடுத்தனரொன்றே
கெட்டனரென்பதுகேளலையென்னை
ஒட்டினராவிமுடிக்கவுவந்தார். (கக)

இராவணன் சேனைகளை யேவுதல்.

அன்னவர்தம்மொடுமையிருவெள்ளம்
மின்னுபடைக்கையரக்கரைவிட்டான்
சொன்னதொகைக்கமையாவினைகூடத்தேர்
துன்னுவயப்பரியோடுதொகுத்தான். (உ0)

நெய்யழல்வேள்வியெடும்பகைநேர்விண்
தய்வருசூரியசத்துருவென்பான்
பெய்கழன்மாலிபிசாசனெனும்பேர்
வெய்யவன்வச்சிரம்வென்றவெயிற்றான். (உக)

என்றவரோடுமெழுந்துலகேழும்
வென்றவனேவலின்முன்னம்விரைந்தார்
சென்றனமால்கரிதேர்பரிசெல்லக்
குன்றினமென்னநடந்தனர்கோட்பால். (உஉ)

விண்ணைவிழுங்கியதூளியவிண்ணோர்
கண்ணைவிழுங்குதலிற்கரைகாணார்
எண்ணைவிழுங்கியசேனையர்யாரும்
பண்ணைவிழுங்கவுணர்ந்திலர்பண்பால். (உங)

கால்கிளர்தேரொடுகால்வரையோடு
மேல்கிளர்பல்கொடிவெண்டிரைவீச
மால்கடலான திமாமழைவானப்
பால்கிளர்மீனிடையாடியபண்பால். (உச)

பேரிகலித்தனபேருலகைச்சூழ்
வரிகலித்தனவாமெனயானைக்
காரிகலிக்கடலோடுகலித்த
மாரிகலித்தெனவாகிகலித்த. (உஇ)

சென்றனசென்றனசுவட்டொடுசெல்லா
நின்றுபிணங்கியகலவியினில்லா
ஒன்றினையொன்றுதொடர்ந்தனவோடைக்
குன்றுநடந்தனபோற்கொலையானை. (உசு)

மாகநெடுங்கரம்வானின்வழங்கா
மேகநெடும்புனல்வாரினமேன்மேல்
போகவிலங்கினவுண்டனபோலாங்
காகநெடுங்களியானைகளிப்பால். (உஎ)

எரிந்தெழுபல்படையின்ஞெளிவீரர்
அருங்கலமின்ஞெளிதேர்பரியானை
பொருந்தியபண்ணைளிதாமொளிபொங்க
இரிந்தனபேரிருளெண்டிசைதோறும். (உஅ)

இராமன்வருபவன் யாவனென விபீடணன் பதிலுரைத்தல்.

எய்தியசேனையையீசனெ திர்ந்தான்
வெய்திவண்வந்தவன்மாயையின்வெற்றி
செய்தவனேகொறெரித்தியிதென்ரூன்
அய்யமில்வீடணனன்னதுரைத்தான். (உக)

வே று.

முழைக்குலச்சீயம்வெம்போர்வேட்டதுமுனிந்தெதன்னப்
புழைப்பிறையெயிற்றுப்பேழ்வாயிடிக்குலம்பொடிப்பவார்த்துத்
தழைப்பொறிவாளிப்புட்டில்கட்டிவிற்ருங்கிச்சார்வான்
மழைக்குரற்றேரின்மேலான்மாபெரும்பக்கன்மன்ஞை. (கூ0)

வே று.

'கைகிறக்கனல்பொழிதெறுகட்செக்கர்மான்
பகைகிறத்தவருயிர்பருகும்பண்பிஞல்
நகைகிறப்பெருங்கடல்வரையநக்குவான்
புகைகிறக்கண்ணவன்பொலம்பொற்றேரிஞன். (கூக)

பிச்சரிற்றிகைத்தனன்பெற்றபோரிஞன்
முச்சிரத்தயிலிஞன்மூரித்தேரிஞன்
இச்சிரமும்மதெயெனவக்தெய்துவான்
வச்சிரத்தெயிற்றவன்மலையின்மேனியான். (கூஉ)

காலையுமனத்தையும்பிறருகாண்பதோர்
வாலுளைப்புரவியின்மடித்தவாயிஞன்
வேலையினர்ப்பினன்விண்ணைமீக்கொளும்
சூலமொன்றுடையவன்பிசாசன்ரூன்றிஞன். (கூங)

சூரியன்பகைஞனச்சுடர்பொற்றேரினன்
நீரினுமுழக்கினனெருப்பின்வெம்மையான்
ஆரியவேள்விபின்பகைஞனுமரோ
சோரியுங்கனலியுஞ்சொரியுங்கண்ணிஞன். (கூச)

சாலிவண்கதிர்நிகர்புரவித்தானையான்
மூலிவெல்கொடிமையிற்றவத்தின்முற்றினான்
சூலியும்வெருக்கொளத்தேரிற்றோன்றுவான்
மாலியென்றடிமுறைவணங்கிக்கூறினான். (ஈடு)

அசுரவானர யுத்தம்.

ஆர்த்தெதிர்ஈடந்ததவ்வரியின்றானையும்
தீர்த்தனைவாழ்த்தியுற்றிரண்டசேனையும்
போர்த்தொழில்புரிந்தனர்புலவர்போக்கிலார்
வேர்த்துயிர்பதைத்தனர்நெஞ்சிவிம்மியே. (ஈன)

கல்லெறிந்தனகடையுருமிற்காலென
வில்லெறிந்தனகணைவிசும்பின்மேகத்த
செல்லெறிந்தனவெனச்சிதறிவீழ்ந்தன
பல்லெறிந்தனதலைமலையின்பண்பென. (ஈள)

கடம்படுகரிபடக்கலினமாப்பட
இடம்படுசில்லியினீர்த்தேர்பட
உடம்படுமாக்கரையநந்தணுச்சியில்
படம்படுமெனப்படுங்கவியின்கற்படை. (ஈஅ)

கொலையொடுங்காநெடும்புயத்தின்குன்றெடும்
நிலைநெடுங்காலொடுநிமிர்ந்தவாலொடும்
மலையொடுமாத்தொடுங்கவியின்வன்னெடுந்
தலையொடும்போம்விசைத்தெதிர்ந்தசக்கரம். (ஈக)

ஆண்டகைக்கவிக்குலத்தலைவராக்கையைக்
கீண்டனபுவியினைக்கிழித்தமாக்கரி
தாண்டுவகுலப்பரிமனத்திற்றூவுவ
தூண்டினர்கைவிசைத்தெரிந்ததோமரம். (ச0)

சில்லியந்தேர்க்கொடிசிதையச்சாரதி
பல்லுடைநெடுந்தலைமடியப்பாதகர்
வில்லொடுகழுத்திறப்பகட்டைவீட்டுமால்
கல்லெனக்கவிக்குலம்வீசுங்கல்லரோ. (சக)

காகமுந்தினமலைமுழையிற்கட்செவி
உரகமுந்தினவெனவொளிக்குமொள்ளிலை
அரகமுந்திணகவித்தலைவராக்கையில்
தரகமுந்தினரெடுத்தெதியுஞ்சூலமே. (சஉ)

வால்பிடித்தடிக்கும்வானரத்தைமால்கரி
கால்பிடித்தடிக்குமக்கரியினைக்கவி

தோல்பிடித்தரக்கரையெறியுஞ்சூர்முசு
வேல்பிடித்தெறிவரம்முச்வைவெங்கணர். (சசு)

முற்படுகவிக்குலமுடுகவீசிய
கற்படக்களம்படுமரக்கர்க்கார்க்கடல்
பற்படுதலைபடப்படுவர்பாதகர்
விற்படுகணைபடக்குரங்கின்வேலையே. (சசு)

எயிற்றெடுநெடுந்தலையிட்டகல்லொடும்
வயிற்றிடைபுகப்பலபகலும்வைகிய
பயிற்றியராயினுந்தெரிக்கும்பண்பிலார்
அயிர்ப்பர்தங்கணவரையணுகியங்ஙனார். (சஎ)

கிச்சுறுகிரிபடக்கிளர்பொற்றேர்க்கிழை
அச்சிறச்செல்கிலவாடல்வாம்பரி
எச்சுறுதுயரிடையெய்தவீத்தணர்
முச்சிறுவாழ்க்கையின்மூண்டனோரென. (சஅ)

மீயவர்யாவரும்வீயவெங்கரி
சேயறுங்குருதியிற்றிரிவசேர்வில
நாயகராளொடுமெவியரவ்விதம்
பாயொடுவேலையிற்றிரியும்பண்பின. (சஅ)

படையொடுமேலவர்மடியப்பல்பரி
இடையிடைதாலிழுந்திழிந்தபண்பன
கடனெடுங்குருதியகனலிகாலுறு
வடவையைநிகர்த்தனவுதிரவாயன, (சஅ)

ரவணன்.

தூமக்கண்ணனுமதுமனுமெதிரெதிர்தொடர்ந்தார்
தாமத்தங்கதன்மாபெரும்பக்கனைத்தடுத்தான்
சேமத்திண்சிலைமாலியுநீலனுஞ்செறுத்தார்
வாமப்போர்வயப்பிசாசனும்பனசனுமலைந்தார். (சக)

சூரியன்பெரும்பகைஞனுஞ்சூரியன்மகனும்
நேரெதிர்ந்தனர்நெருப்புடைவேள்வியின்பகையும்
ஆரியன்றனித்தம்பியுமவரெதிரடர்ந்தார்
வீரவச்சிரத்தெயிற்றனுமிடபனுமிடைந்தார். (இ0)

வெங்கண்வெள்ளெயிற்றரக்கரிற்கவிக்குலவீரச்
சிங்கமன்னபோர்த்தலைவரிற்றலைவராய்த்தெரிந்தார்
அங்கமர்க்களத்தொருவரோடொருவர்சென்றடர்த்தார்
பொங்குவெஞ்செருத்தேவருமெக்குறப்பொருதார், (இக)

இன்னகாலையினீலஞ்சுவெள்ளம்வந்தேற்ற
மின்னும்வெள்ளெயிற்றரக்கர்தஞ்சேனையைவீரன்
அன்னவெஞ்சமத்தாறுவெள்ளத்தையுமவித்தான்
சொன்னநாலையுமிலக்குவன்பகழியாற்றொலைத்தான். (இஉ)

உப்புடைக்கடன்மடித்தனவுதிராநீரோதம்
அப்பொடொத்தனகடித்திலவார்கலிமுழுதும்
செப்புருக்கெனத்தெரிந்ததுமீன்குலஞ்செருக்கித்
துப்பொடொத்தனமுத்தினங்குன்றியிற்றோன்ற. (இங)

தத்துநீர்க்கடன்முழுவதுக்குருதியாய்த்தழங்கச்
சித்திரக்குலப்பன்னிறமணிகளுஞ்சேர்ந்த
ஒத்தவேறுருத்தெரியலவுயர்மதத்தோங்கல்
மத்தகத்துருதளமும்வேசொரிமுத்தும். (இச)

அதிரவெஞ்செருவன்னதொன்றமைக்கின்றவளவில்
வீனத்தாரிமையோர்கள்வெதும்பினரால். (ககஉ)

விட்டீயவழங்கியவெம்படையில்
சுட்டீயகிமிர்ந்தசுடர்ச்சுடரும்
கட்டீயுமொருங்குகலக்தெழலால்
உட்டீயுறவெந்தனவேழுலகும். (ககச)

தேரார்ப்பொலிவீரர்தெழிப்பொலியும்
தாரார்ப்பொலியுங்கழறுக்கொலியும்
போராற்சிலோணிபுடைப்பொலியும்
காரார்ப்பொலியுங்களிறூர்ப்பொலியும். (ககஎ)

எல்லாருமிராவணனேயனேயர்
வெல்லாவுலகில்லவர்மெய்வலியார்
தொல்லார்படைவந்துதொடர்ந்ததனை
நல்லாணுமுருத்தெதிர்கண்ணினனால். (ககக)

ஊழிக்கனல்போல்பலருந்தினபோர்
ஆழிப்படையம்பொடுமற்றகலப்
பாழிக்கடைநாள்விடுபன்மழைபோல்
வாழிச்சுடர்வாளிவழங்கினனால். (ககஅ)

சூரோடுதொடர்ந்தசுடர்க்கணைதான்
தாரோடகலக்கடிந்திடலும்
தேரோடுமடித்தனர்செக்கதிரோன்
ஊரோடுமடித்தனனெத்துரவோர். (ககஅ)

கொல்லோடுசுடர்க்கணைகூற்றினிணப்
பல்லோடுதொடர்ந்தனபாய்தலினால்
செல்லோடெழுமாமுகில்சிக்கினபோல்
வில்லோடும்விழுந்தமிடற்கரமே. (ககக)

செம்போடுதிரத்திரையாழியின்வாய்
வெம்போடரவக்குலமேனிமிரும்
கொம்போடும்விழுந்தனவொத்தகுறைக்
தம்போலிவிழுந்தவடற்கரமே. (உ00)

முன்னேடுதிரப்புனன்மூதுலகைப்
பின்னேடிவலோத்தபெருங்கடல்வாய்
மின்னேடும்விழுந்தன்மேகமெனப்
பொன்னேடைசெலிரிபுக்கனவால். (உ0க)

மறவெற்றியரக்கர்வலக்கையொடும்
சுறவக்குருதிக்கடல்வீழ்ந்தகைவாள்
சுறவொத்தனமீதுதுடித்தெழலால்
இறவொத்தனவாவுமினப்பரியே. (உ0உ)

தாமச்சுடர்வாளிதடிந்தகலப்
பாமக்குருதிப்படிகின்றபடைச்
சேமப்படர்கேடகமால்கடல்சேர்
ஆமைக்குலமொத்தனவத்தனையால். (உ0ஊ)

காம்போடுதாளைகள்காருதிரப்
பாம்போடுகடற்படிவுற்றனவால்
வாம்போர்செவ்வாடைமலைந்தகலக்
கூம்போடுயர்பாய்கள்குறைந்தனபோல். (உ0எ)

மண்டப்படுசோரியின்வாரியின்வீழ்
கண்டத்தொளைசெவ்வியகாலொடுதோள்
மூண்டத்திரிதண்டின்முரட்டொருவன்
றுண்டச்சுறவொத்ததுடித்தனவால். (உ0ஏ)

தெளிவுற்றபளிங்குறுசில்லிகொடேர்
விளிவுற்றுறவேறுறவீழ்வனதாம்
அருளிமுற்றியசேரியின்வாரியினுழ்
ஒளிமுற்றியதிங்களையொத்தனவால். (உ0ஐ)

நிலைகோடலின்வென்றியரக்கரைநேர்
கொலைகோடலின்மன்குறிகோளுறுமேல்
நிலைகோடியதோறுசிரத்திரள்வன்
மலைகோடியின்மேலுமறிந்திடுமால். (உ0ஒ)

திண்மார்பின்மிசைச்செறிசாலிகையின்
கண்வாளிகடைச்செறிகான்றுழைந்
தெண்வாயுறமொய்த்தனவின்னறையுற்
றுண்வாய்வரிவண்டினமொத்தனவால். (உ0ஓ)

பாரூகளத்தொருவன்பகலின்
கூரியகாலிலொர்கூறிடையே
தாரையினோசனைதூழில்களம்
மாரிதுழல்சாரிகைவந்தனனால். (உ0ஔ)

நின்ரருடனின்றிமிர்ந்தயலே
சென்ரெதிர்சென்றுசிதைத்திடலால்

தன்முதையையோர்வுறுதன்மகனேர்
கொன்முனிவனென்பதெனென்றுகொள்வார். (உ50)

இங்கேயுளனிங்குளனிங்குளனென்
றங்கேயுணர்ந்றவலந்தலைவாய்
வெங்கோபநெடும்படைவெஞ்சரம்விட்
டெங்கேனும்வழங்குவரேகுவரால். (உ5உ)

ஒருவன்னைவன்னுமுணர்ச்சியிலார்
இரவன்றிதுவோர்பகலென்பர்களால்
சரவன்றிராமர்கணக்கிலரால்
பரவைம்மணலிற்பலரென்பர்களால். (உ5ஊ)

ஒருவன்னெருவன்மலைபோலுயர்வோன்
ஒருவன்படைவெள்ளமோரர்யிரமே
ஒருவன்னெருவன்னுயிருண்டதலால்
ஒருவன்னுயிருண்டதுமுள்ளதுவே. (உ5ரு)

தேர்மேலுளர்மாவொடுசெந்தறுகட்
கார்மேலுளர்மாகடன்மேலுளரிப்
பார்மேதுளரும்பர்பரந்துளரால்
போர்மேலிராமர்புகுந்தடர்வார். (உ5சு)

என்னும்படியெங்கணுமெங்கணுமாய்த்
துன்னுஞ்சுழலுந்திரியுஞ்சுடரும்
பின்னும்மருகும்முடலும்பிரியான்
மன்னன்மகன்வீரர்மயங்கினரால். (உ5டு)

வே று.

பமெதகரிபரிசெர்தினபனிவரையிரதமவிர்தன
விடுதிசைசெவிடுபினர்தனவிரிகடலனறதெழுர்தன
அடுபுலியவுணர்தமங்கையரலர்விழியருவிகள்சிர்தின
கடுமணிகெடியவெனுஞ்சிலகணகணகணகணெனுர்தொறும். (உ5ள)

வே று.

ஊனேறுபடக்கைவீரரெதிரெதிருருவர்தோறும்
கூனேறுசிலையுர்தானுங்குதிக்கின்றகடுப்பின்கோட்பால்
வானேறினர்கடேருமலைகின்றவயவர்தேரும்
* தானேறிவர்ர்ததேரேயாக்கினனனியேறன்னன். (உ5எ)

காயிருஞ்சிலையொன்றேனுங்கணைப்புட்டிலொன்றதேனும்
தூயெழுபகழிமாரிமழைத்துளித்தாகையின்மேல

* தானேறிவர்ர்ததேர்-தரை.

ஆயிரக்கைகள்செய்தசெய்தனவமலன்செல்லை
ஆயிரக்கையுங்கூடியிரண்டுகையாயவன்றே. (உகஅ)

பொய்யொருமூகத்தனுகி மனிதனும்புணர்ப்பிதன்ரூல
மெய்யுறவுணர்ந்தோம்வெள்ளமாயிரமிடைத்தசேனை
செய்யுறவினையமெல்லாமொருமுகத்தெரிவதுண்டே
ஐயிறுநூறுமல்லவரந்தமாமுகங்களம்மா. (உகக)

கண்ணுதன்மூர்த்திதானுஞான்முகக்கடவுடானும்
எண்ணுதற்தொடரவெய்தகோலெனவெண்ணலுற்றார்
பண்ணையால்வகுக்கமாட்டார்தனித்தனிப்பார்க்கலுற்றார்
ஒண்ணுமோகணிக்கவென்பாருவகையினுயர்ந்ததோளார் (உஉ0)

வெள்ளமீரைந்துநூறேவிகேணையவற்றின்மெய்யே
உள்ளவாறுளவாமென்றேருருரைக்கணக்குணர்துமேனும்
கொள்ளையோருருவைநூறுகொண்டனபலவாற்கொற்ற
வள்ளலேவழங்கினனேவென்றனர்மற்றைவரேனர். (உஉக)

குடைக்கெலாங்கொடிகட்கெல்லாங்கொண்டனகுவிந்தகொற்றப்
படைக்கெலாம்பகழிக்கெல்லாம்யானேதேர்பரிமாவாதிக்
கடைக்கெலாந்துரந்தவாளிக்கணித்தநிற்களவைகாட்டி
அடைக்கலாமறிஞர்யாரேயென்றனர்மூனிவரப்பால். (உஉஉ)

கண்டத்துக்கழுத்துமீதாய்க்கபாலத்துக்கடக்கலுற்ற
சண்டப்போரரக்கர்தம்மைத்தொடர்ந்துகோல்புணருந்தண்மை
பிண்டத்திற்கருவாந்தன்பேருருக்கனேப்பிரமன்றந்த
அண்டத்தைமறையப்பெய்துகுலுக்கியதனையவான. (உஉக)

கோடியையிரண்டுதொக்கபடைக்கலமள்ளர்கூவி
ஓடியோர்பக்கமாகவுயிரிழந்துலத்தலோடும்
வீடிலின்றழிவதென்னேவிண்ணவர்படைகள்வீசி
மூடுதுமினனேயென்றியாவருமூண்டுமொய்த்தார். (உஉச)

தேவாத்திரப்பிரயோகக்கண்டனம்

விண்டுவின்படையேயாதிமேவயன்படையீருகச்
கொண்டொருங்குடனேவிட்டார்குலுங்கியதமர்கூட்டம்
அண்டமுங்கீழுமேலாவாயிதனையண்ணல்
கண்டொருமுறுவல்காட்டியவற்றினையவற்றுற்காத்தான். (உஉஇ)

தானவைதொடுத்தபோதுதடுப்பரிதலகத்தானே
ஞானிவடவைத்தீயிற்புக்கெனப்பொரிந்துபோமென்
ரூனதுதெரிந்தவள்ளலளப்பருங்கோடியம்பால்
ஏனையர்தலைகளெல்லாமிடியுண்டமலையினிட்டான். (உஉச)

மூலபலழற்றிலு மழித்தல்.

ஆயிரவெள்ளத்தோருமகிளத்தவிர்த்துவீழ்க்கார்
மாயிருஞாலத்தாடன்வன்பொறைப்பாரீக்கி
மீயுயர்ந்தெழுந்தானன்றேவீக்கொலிவேலின்றம்
போயொருங்கண்டத்தோடுங்கோடியோசனைகள்பொங்கி. (உஉஎ)

வேறு.

ஆனையாயிரத்தேர்பதினாயிரமடர்பரியொருகோடி
சேனைகாவலாயிரம்பேர்படிற்செழுமணிக்கவத்தமொன்றும்
கானமாயிரமாயிரகோடிக்குக்கவின்மணிகணிலென்னும்
ஏனவம்மணியேழரைநாழிகையாடியதினிதன்றே. (உஉஅ)

வேறு.

நினைந்ததுமுடித்தேமென்னுவானவர்துயரநீத்தார்
புனைந்தனென்வாகையென்னுவிந்திரனுவகைபூத்தான்
வினைந்தனவல்லவேதம்வரம்புபெற்றுயர்ந்தமாதோ
அனைந்தனுக்கலகேனேந்தியயர்வுயிர்த்தவலந்தீர்ந்தான். (உஉக

தேவராதியரிராமனை வாழ்த்துதல்.

தாய்படைத்துடையசெல்வமீதெனத்தம்பிக்கீந்து
வேய்படைத்துடையகானம்விண்ணவர்தவத்தின்மேவி
தோய்படைத்தொழிலால்யார்க்குந்துயர்துடைத்தானேதோக்கி
வாய்படைத்துடையாரெல்லாம்வாழ்த்தினர்வணக்கஞ்செய்தார். ()

நீமொய்த்தவனையசெங்கணரக்கரைமுழுதுஞ்சிக்கிப்
பூமொய்த்தகரத்தானைவிண்ணவர்போற்றநின்றான்
பேய்மொய்த்தநரிகளீண்டிப்பெரும்பிணம்பிறங்கித்தோன்றும்
ஈமத்துட்டமியதின்றகறையிடற்றிறைவனெத்தான். (உகக)

* அண்டமர்க்களமும்வீச்தவரக்கரெவ்வுயிருமாகக்
கொண்டதோருருவந்தன்னுளிறுதிகான்வந்துகூட
மண்டொண்மதித்துங்காட்டமன்னுயிரனைத்தும்வாரி
உண்டவன்றனேயானதன்னெருமூர்த்தியொத்தான். (உகஉ)

தேவர்மலர்மழை பொழிதல்.

ஆருலந்துறந்ததேவரள்ளினர்சொரிந்தவெள்ளச்
சேதறுமலருஞ்சாந்துஞ்செருத்தொழில்வருத்தந்தீர்க்க
மாகொலைசெய்தவன்னல்வானமர்க்களத்தைக்கைவிட்
டேகினனிளவலோடுமிராமனேற்றகைம்மேல். (ஒ ஈஉ)

* அண்டமதளவவீச்த என்றும் பாடம்.

இவ்வழியியன்றவெல்லாமியம்பிஞமிரிந்தபோன
தெவ்வழியாற்றல்வெற்றிச்சேனையின்செலவுஞ்சென்ற
வெவ்வழியரக்கர்கோமான்செய்கையுமினையவன்வீரன்
எவ்வமிலாற்றற்போருமற்றுமாமியம்பலுற்றும். (உசு)

பெரும்படைத்தலைவர்யாரும்பெயர்ந்திலர்பெயர்ந்துபோய்காம்;
விரும்பினம்வாழ்க்கையென்றுல்யாரிடைவிலக்கற்பாலார்
வரும்பழிதடைத்தம்வானின்வைகுதும்யாமுமென்ஞ
இருங்கடல்பெயர்ந்ததென்னத்தாமே புமீண்டதிப்பால். (உசுடு)

கூ-வது மூலபலவதைப்படலம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-சுசுஅக.

கம்பசாட்டாழ்வார் திருவடிகளே சரணம்.

முப்பத்தொன்றுவது
வேலைற்றபட்டலம்.

செல்லியாயிரஞ்செல்லுமேப்பரியொடுஞ்செறிந்த
எல்லவாங்கதிர்மண்டிலமாறுகொண்டிமைக்கும்
செல்லுந்தேர்மிசைச்சென்றனன்றேவரைத்தொலைத்த
வில்லும்வெங்கணைப்புட்டிலுங்கொற்றமும்வினுக. (க)

அரக்கர்சேனையோராயிரவெள்ளத்தையமரில்
தரக்கமானுடர்தம்மையென்றொருபுடைதறந்து
வெருக்கொள்வானரச்சேனைமேற்றன்செல்வான்விரும்பி
இருக்குந்தேரொடும்போயவனிராவணனெதிர்ந்தான். (உ)

நூறுகோடிதேர்நொறில்பரிநூறிருகோடி
யாறுபோன்மதமாகளிறையிருகோடி
ஏறுகோளுறுபதாதியுமிவற்றினுமிரட்டி
சேறுகோளரியேறனனுடனன்றுசென்ற. (ங).

மூன்றுவைப்பினுமப்புறத்துலகினுமுனையின்
என்றுகோளுறும்வீரர்களும்மினென்றிசைக்கும்
ஆன்றபேரியுமதிர்குரற்சங்கமுமசனி
ஈன்றகாளமுமேழொடேழுலகமுமிசைப்ப. (ச)

அனையவாகியவரக்கர்க்குமரனைக்கனையவுணர்
வினையவானவர்வெவ்வினைப்பயத்தினைவீரர்

நினையுமெஞ்சினைச்சுவதோர்செருப்பினைநிமிர்ந்து
கனையுமெண்ணையுங்கடப்பதோர்கடலினைக்கண்டார். (இ)

கண்டுகைகளோடணிவகுத்துருமுழற்கற்கள்
கொண்டுகூற்றமுங்கூக்குறத்தோள்புடைகொட்டி
அண்டகோளங்களடக்கழிந்துலவுறவார்த்தார்
மண்டுபோரிடைமடிவதோலனைமதித்தார். (ஈ)

அசுரவானரயுத்தம்.

அரக்கன்சேனையுமாருயிர்வழங்குவானமைந்த
குரக்குவேலையுமொன்றொடொன்றெதிரெதிர்கோத்த
செருக்கிகோர்த்தனசெருப்பிடைபொடித்தனசெருப்பின்
உருக்குசெம்பெனவம்பரத்தோடினதுதிரம். (எ)

அற்றவன்றலையறுகுறையெழுந்தெழுந்தண்டத்
தொற்றவானகமுதயமண்டிலமெனவொளிரச்
சுற்றுமேகத்தைத்தோற்றியகுருதிநீர்துளிப்ப
மூற்றம்வையகம்போர்க்களமாமெனமுயல். (அ)

தூவியம்பெடையரியினமிதமச்சூழி
தூவியம்பெடைசோர்ந்தனசொரியுடல்சுரிப்ப
மேவியம்படைபடப்படர்குருதியின்வீழ்ந்த
மேவியம்படைக்கடலிடைக்குடரொடுமிதப்ப. (க)

(இ-ள்.) (யானைகள்) அம் - அழகிய, படைக்கடலிடை - சேனைக்கடலினடுவே, மேலி - சேர்ந்து, (சோமபிரான்) அம்பு - அம்புகளை, ஏடை- (தொடுக்க) எடுக்கையில், (மதநீருண்ணவரும்) தூவி-சிறகுவளத்தையுடைய, பெடையினம் - பெண்வண்டுகூட்டமும், அரியினம் - ஆண்வண்டுக்கூட்டமும், மறிதர - மீண்டுபோக, சூழி - முகபடாத்தை, தூவி - சின்னப்பத்தியெறிந்து, சோர்ந்தன - சோர்வடைந்து, மேவியம் - பெருமைமேவிய, படை - அந்த அம்புகள், பட - பட்டதனால், படர்குருதியின்-பரவியோடின்ற உதிரத்தில், சொரியுடல் - இரத்தத்தைச்சொரிகின்ற தம்முடல், சுரிப்ப - சுழன்றமிழும்படி, வீழ்ந்த - வீழ்ந்து, குடரொடு - (வயிற்றினின்றும் வெளிப்பட்ட) குடரோடு, மிதப்ப - மிதப்பன-எ-று.

இனமென்பதைப் பெடையென்பதனோடு கூட்டுக. யானைகள்-சொல்லெச்சம், இது சூழ்தூவியென்றமையால் பெறப்பட்டது ஒழிந்தவகலம் இசையெச்சம். மேவி என்னும் வினையெஞ்சுவினவி தூவியென்னும் வினை கொண்டது. அம் சாரியை. (க)

கண்டிறத்தனகண்வர்தம்முகத்தவர்முறுவல்
கண்டிறத்தனமடந்தையருயிரொடெக்கலந்தார்

பண்டிறத்தனபழம்புணர்க்கன்புகப்பன்னிப்
பண்டிறத்தனபுலம்பொலிசிலம்பொலிபணிப்ப. (கo)

(இ-ள்.) பண்டு - முன்னுள்களில், இறந்தன-உண்டெழிந்தனவாகிய பழம்புணர்க்கு - பழமையாகிய சுரதநூலிற்கூறும் புணர்ச்சிகள் காரணமாக, அன்புக - அன்பின்கண்ணீர்சிந்த பன்னி-அப்புணர்ச்சிகளேப்பலவாகுகறி, பண - நிறைநரம்பியாழினிசையையும், நிறம் - குறைநரம்பியாழினிசையையும், தனபுலம்பொலி-தமது அழுகையொலியும், சிலம்பொலி - சிலம்பிலெலியும், பணிப்ப - இயம்பும்படி, (அழுதுகொண்டோடி)கணவர் தம் - காயகருடைய, கண்-கண்கள், நிறந்தன-விழித்தவாகிய, முகத்து - முகங்களில், அவர் மூறுவல்-அவர்களுடையமுகமை, கண்டுபார்த்து மயிழ்ந்து, இறந்து-உடலேவிட்டு, அணமடந்தையர் - அக்கற்புடைமகளிர்கள், உயிரோடும்-கணவருடைய உயிரோடும், கலந்தார்-சேர்ந்தனர்கள்.-எ-று.

பண் - எழ்நரம்புமுள்ளது நிறம்-எழிற்குறைநரம்புள்ளது. இவ்விரண்டுந் தம்மகத்தெழுமோசைக் காரணமையினிவையும் அன்பும் ஆகுபெயர். அழுதுகொண்டோடி - இசையெச்சம். புணர்-முதனிலைத்தொழிற்பெயர் புணர்க்கு - உருபுமயக்கம். பணிப்ப, உபசாரவழக்கு நூலின துபழமையை அதனலுணர்த்தப்படும்பொருண்மேலேற்றிப்பழம்புணர்க்கெனக் கூறினர் அண்ணமடந்தையர், சோமபிரானுடைய அம்பு தம்மூரத்தையுருவிச்செல்லாநிற்கையில் வேல்கொண்டெறிய விழித்தகணிமைத்தலு மேரட்டாமெனக் கருது மியல்பினராகலின் விழித்துநின்று, விண்ணவர்மூதலியோரையும் வென்றிகொண்ட கம்மருமத்தை யுருவிற்றன்றே விம்மனிதன்வாளி யென வியந்து கைத்துடலேநீத்து விண்ணடைந்த கணவரோடுகலந்தனரென்பது கருத்து. இது தன்னேவேட்டல். (கo)

ஏழுமேழுமென்றுசைக்கின்றவுலகங்களியாவும்
ஊழிபோவதேயொப்பதோருலேவுறவுடற்ற
நாழில்வெஞ்சமநோக்கியவிராவணனுவன்றன்
தாழிலென்படைதருக்கறுமென்பதோர்தன்மை. (கக)

மாமுங்கல்லுமேவில்லொடுவாண்மழுச்சூலம்
அரமுங்கல்லும்வேன்முதலியவயிற்படையடுக்கிச்
சிரமுங்கல்லெனச்சிந்தலிற்சிதைந்ததென்சேணே
உரமுங்கல்வியுமுடையவன்செருவின்றதொருபால். (கஉ)

அழலுங்கட்களிறணியொடுந்துணிபமொலி
சுழலும்பல்பரித்தேரொடுபுரவியுஞ்சுற்றக்
கழலுஞ்சோரிநீராற்றெருக்கடலிடைக்கலக்கும்
குழலுநூலும்போன்மனுமனுந்தானுமக்குமரன். (கங)

வில்லுங்கூற்றுவற்குண்டெனத்திரிகின்றவீரன்
கொல்லுங்கூற்றெனக்குறைகுயிர்கிறைப்பெருங்குழுவை

ஒல்லுங்கோளரியுருமன்னகுரங்கினதுதிரும்
பல்லுங்கூர்க்கின்றகூர்க்கிலவரக்கர்தம்படைகள். (கச)

இராவணன்வானரசேனையப் பொருதழித்தல்.

கண்டுகின்றபரைப்பொழுதினிக்காலத்தைக்கழிப்பின்
உண்டுகைவிடுங்கூற்றுவனிருதர்பேருயிரை
மண்டுவெஞ்செருவாலெருகளத்திடைமடித்தே
கொண்டுமீள்கவென்கொற்றமென்றிராவணன்கொதித்தான். (கடி)

ஊதைபோல்வனவருமுறழ்திறலனவருவிப்
பூதரங்களைப்பிளப்பனவண்டத்தைப்பொதுப்ப
மாதிரங்களையளப்பனமாற்றருங்கூற்றின்
தூதுபோல்வனசுகேணமுறைமுரைதுரந்தான். (கக)

ஆளிபோன்றுளனெதிர்ந்தபோதமர்க்களத்தடைந்த
ஞாளிபோன்றுளனென்பதென்னள்ளிருணடைந்த
காளிபோன்றுளனிராவணன்வெள்ளிடைக்கரந்த
பூளைபோன்றதப்பொருளெனத்தரிகடம்புணரி. (கஎ)

இரியல்போகின்றசேனையயிலக்குவன்விலக்கி
அரிகளஞ்சன்மினஞ்சன்மினென்றருள்வழங்கித்
திரியுமாருதிதாளெனுத்தேர்மிசைச்சென்றான்
எரியும்வெஞ்சினத்திராவணனெதிர்புகுந்தேற்றான் (கஅ)

இலக்குமணன் இராவணனம்புகளை யழித்தல்.

ஏற்றுக்கோடனமிராவணனெரிமுகப்பகழி
நூற்றுக்கோடியின்மேற்செலச்சிலைகொடுநூக்கக்
காற்றுக்கோடியபஞ்சனத்திசைதொறுங்காக்க
வேற்றுக்கோல்கொடிலக்கினனிலக்குவன்விசையால். (கக)

விலக்கினுன்றடக்தோளினுமார்பினும்விசிகம்
உலக்கவுய்த்தனனிராவணனெக்தொடைதருவக்
கலக்கமுற்றிலனிளவனிமுள்ளத்திற்கனன்றான்
அலக்கணெய்துவித்தானடலரக்கனையம்பால். (உ0)

காக்கலாகலாக்கடுப்பினிற்றொடுப்பனகணைகள்
நூக்கினுன்கணைநுறுக்கினுனரக்கனுதழில்
ஆக்கும்வெஞ்சமத்தரிதிவன்றனைவெல்வதம்பால்
நீக்கியென்னினிச்செய்வதென்றிராவணனினைக்தான். (உக)

கடவுண்மாப்படைதொகேற்கின்மற்றவைமுற்றுங்கடக்க
விடவுமாற்றவும்வல்லனல்லாரையும்வெல்லும்

தடவுமாற்றலைக்கூற்றையுத்தமையனைப்போலச்
சுடவுமாற்றுமெவ்வுலகையுமெவனுக்குந்தோலான். (உஉ)

மோகமொன்றுண்முதலவன்வருத்தமுன்னுன்
ஆகமற்றதுகொற்றமுஞ்சிவன்றனையழிப்ப
தேகமுற்றியவிஞ்சையையிவன்வயினேவிக்
காகமுற்றுழல்களத்தினிற்கிடத்துவென்கடிதின். (உங)

மோகனுத்தீரப் பிரயோகழ மாழியாலழிவும்

என்பதன்னிவவிஞ்சையையனத்திடையெண்ணி
முன்பன்மேல்வரத்தனன துகண்முடுதி
அன்பின்வீடணனுழியான் படையினனுத்தி
என்பதோதினனிலக்குவன துதொடுத்தெய்தான். (உச)

வீடணன்சொலவிண்டுவின்படைக்கலம்விட்டான்
மூடுவெஞ்சினமோகத்தைதீக்கலுமுனித்தான்
மாடுதின் றவனுபாயங்கண்மதித்திடவந்த
கேடுசேர்த்தமக்கென்பதுமனங்கொண்டுளைர்த்தான். (உடி)

மயன்கொடுத்ததுமகளொடுவெங்கனல்வேள்வி
அயன்படைத்ததளதாழியுங்குலிசமுமனைய
துயர்த்தகொற்றமுழுழியுங்கடந்ததளதருமிற்
சயத்தனைப்பொருந்தம்பியையுயிர்கொளச்சமைத்தான். (உக)

இராவணன் விபீடணன்மீது வேலேவுதல்.

விட்டபோதினிலெருவனைவீட்டியேமீளும்
பட்டபோதவனுண்முகனையினும்பகைக்கும்
வட்டவேலதுவலங்கொண்டுவாங்கினன்வணங்கி
எட்டசிற்கலாத்தம்பிமேல்வல்விசைத்தெறிந்தான். (உஎ)

இலக்குமணன் விபீடணற் கபயமளித்தல்.

எறிந்தகாலையில்வீடணனதனிலையெல்லாம்
அறிந்தசிக்தையவீதென்னுயிரழிக்கும்
பிறிந்துசெய்யலாம்பொருளிலையென்றலும்பெரியோன்
அறிந்துபோக்குவலஞ்சனியென்றிடையணைத்தான். (உஅ)

எய்தவாளியுமேவினபடைக்கலம்யாவும்
செய்தமாதவத்தொருவனைச்சிறைதொழிற்றீயோன்
வெய்தவினிலொழித்தன வீடணன்மாண்டான்
உய்தலில்லையென்றும்பரும்பெருமனமுலைந்தார். (உக)

வேலேற்பானெருவரை யொருவர் முந்துதல்.

தோற்பெனென்னினும்புகழ்நிற்குந்தருமமும்
ஆர்ப்பதல்வரடைக்கலர்புகுந்தவனழியப
பார்ப்பதென்னெடும்பழிவந்துதொடர்வதன்முன்னம்
ஏற்பனென்றனிமார்பினென்றிலக்குவனெதிர்த்தான். (கூ0)

இலக்குவற்குமுன்வீடணன்புகுமிருவரையும்
விலக்கியக்கதன்மேற்செலுமவனையும்விலக்கிக்
கலக்கும்வானரக்காவலனுமன்கடுகெ
அலக்கணன்னதையின்னதென்றுரைசெயலாமே. (கூக)

இலக்குமணன் இராவணனேவிய வேலினை யார்பிலேற்றல்.

மூன்னின்றுரெலாம்பின்னுரக்காலினின்முடுகி
நின்மின்யானிதுவிலக்குவனென்றுரைதோ
மின்னும்வேலினைவிண்ணவர்கண்புடைத்தியங்கப்
பொன்னின்மார்பிடையேற்றனன்முதுகிடைப்போன. (கூஉ)

விபிடனிராவணன் தேர்க்குதிரைகளை யழித்தல்

எங்குநீங்குதிநீயெனவீடணனெழுந்தான்
சிங்கவேறன்னசிற்றத்தானிராவணன்றேரில்
பொங்குபாய்பரிசாரதியொடும்படப்புடைத்தான்
சங்கவானவர்தலையெடுத்திடகெடுத்தண்டால். (கூக)

இலங்கைக்கிராவணன்போதலும் விபிடணனிகழ்தலும்.

சேய்விசும்பினினிமிர்ந்துநின்றிரிவணன்சிறிப்
பாய்கடுக்கணைபத்தவனுடல்புகப்பாய்ச்சி
ஆயிரஞ்சரமனுமன்றனுடலிடையழுத்திப்
போயினன்செருமுடித்ததென்றிலங்கையூர்புகுவான். (கூச)

தேடிச்சேர்ந்தவெண்பொருட்டினனுலகுடைச்செல்வன்
வாடிப்போயினனீயினிவஞ்சமேமதியால்
ஓடிப்போகுவதெக்கடாவுன்னெடுமுடனே
கூடிப்போவென்றரக்கன்மேல்வீடணன்வெகுண்டான். (கூடு)

வென்றியென்வயமான துவீடணப்பசுவைக்
கொன்றினிப்பயனில்லையென்றிராவணன்கொண்டான்
சின்றிலன்னென்றுதோக்கிலன்முனிவெலாநீத்தான்
பொன்றிணிந்தனமதிலுடையிலங்கையூர்புகுந்தான். (கூஎ)

அரக்கனேதினன்வீடணன்வாய்திறந்தரற்றி
இரக்கந்தானெனவிலக்குவனிணையடித்தலத்தில்

கரக்கலாக்காதலன்வீழ்ந்தனன்கலுழ்ந்தான்
குரக்குவெள்ளமுந்தலைவருந்துயரடைக்குளித்தார் (சுஎ)

பொன்னிரும்புறுங்காளிமைப்பொருப்பினற்போன்ற
என்னிருந்துநானிறப்பெளிக்கணத்தெனையாளும்
மன்னிருந்தினிவாழ்கிலனென்றனன்மறுக
நின்னிலென்றிறைசாம்பவனுயொன்றுநிகழ்த்தும். (சுஅ)

அனுமனிற்காமாருயிர்க்கிரங்குவதறிவோ
நினையுமத்துணைமாத்திரத்துலகெலாநிமிர்வான்
வினையினன்மருந்தளிக்கின்றுன்வீரர்க்குவீரன்
நினையுமல்லலுற்றழுங்கன்மினென்றிடர்தீர்த்தான். (சுக)

அனுமன் மருந்துகொண்டுவந்திலக்குமணனை யெழுப்புதல்.

மருத்தின்காதலன்மார்பிடைப்பெலாம்வாங்கி
இருத்தியோகடிதேகலையினவலையிஞ்ஞன்
வருத்தங்காணுமோமன்னவனென்னலுமன்னன்
கருத்தையுன்னியம்மாருதியுலகெலாங்கடந்தான். (சஅ)

வே று.

உய்த்தொருதிசைமேலோடியுலகெலாங்கடக்கப்பாய்ந்து
மெய்த்தொருமருந்துதன்னைவெற்பொடுங்கொணர்ந்தவீரன்
பொய்த்தலில்குறிகடானேபொதுவறநோக்கிப்பொன்போல்
வய்த்தவாள்கிக்கொண்டுவருதலில்வருத்தமுண்டோ. (சக)

இலக்குமணனுயிர்த்தெழுதல்.

தத்தனன்மருந்துதன்னைத்தாக்குதன்முன்னேயோகம்
வந்ததுமாண்டார்க்கெல்லாமுயிர்தரும்வலத்ததென்றால்
சொந்தவர்கொய்வுதீர்க்கச்சிறிதன்றேகொடிதன்முன்னே
இந்திரனுலகமார்க்கவெழுந்தனனிளையவீரன். (சஉ)

இலக்குமணன் விபீடணன் கியோவெனல்.

எழுந்தனன்றனுமன்தன்னையிருகையாற்றழுவியென்தாய்
வீழுந்திலனன்றேமற்றவ்வீடணனென்னவிம்மித்
தொழுந்துணையவனைநோக்கித்தணுக்கமுந்துயருநீங்கிக்
கொழுந்தியுமீண்டான்பட்டானரக்கனென்றுவகைகொண்டான். ()

அனைவரும் இராமனைக்காணப் போதல்.

தருமவென்றறிஞர்சொல்லுந்தனிப்பொருடன்னையின்னே
கருமமென்றறமனுக்குக்காட்டியதன்மைகண்டால்
அருமையென்னிராமற்கம்மாவறம்வெல்லும்பாவத்தோற்கும்
இருமையுநோக்கினென்னுவிராமன்பாலெழுந்தசென்றார். (சச)

ஒன்றலபலவென்றேங்குமுயர்பிணத்தும்பரோடும்
குன்றுகள்பலவுஞ்சோரிக்குரைகடலனைத்துந்தாவிச்
சென்றடைந்திராமன்றன்னைத்திருவடிவணக்கஞ்செய்தார்
வென்றியின்றலைவர்கண்டவிராமனென்விளம்பதென்றான். (சடு)

இராமனனுமனைத் தழுவிப்புகழ்தல்

உற்றதுமுழுதுநோக்கியொழிவறவுணர்வுளூறச்
சொற்றணன்சாம்பன்வீரனநுமனைத்தொடரப்புல்லிப்
பெற்றனனுன்னையென்னைபெறுதனபெரியோயொன்று
மற்றிடையீருசெல்லாவாயுளையாகவென்றான். (சசு)

புயல்பொழியருவிக்கண்ணன்பொருமலன்பொங்குகின்றான்
உயிர்புறத்தொழியகின்றவுடலன்னவுருவத்தம்பி
துயர்தமக்குதவிமீளாத்துறக்கம்பெற்றுயர்ந்ததொல்லைத்
தயரதற்கண்டாலொத்தான்தம்முனைத்தொழுதுசார்வான். (சஎ)

இளவலேநோக்கியையவிராகவகுலத்துக்கேற்ற
வளவினமடைந்தோர்க்காகிமன்னுயிர்கொடுத்தவன்மைத்
துளவியருங்கலாய்நீயன்னதுதுணிந்தாயென்றல்
அளவியலன்றுசெய்தற்கடுப்பதேயாகுமன்றே. (சஅ)

புறவொன்றின்பொருட்டின்யாக்கைபுண்ணுறவரிந்தபுத்தேள்
அறவனுமையநின்னைநிகர்க்கிலனப்பானின்ற
பிறவுனையுரைப்பதென்னேபேரருளாளரென்பார்
கறவையுங்கன்றுமொப்பார்தமக்கிடர்காண்கிலரென்றான். (சக)

சாலிகைமுதலவானபேர்ப்பரந்தாங்கிற்றெல்லாம்
நீனிறஞாயிறன்னநெடியவன்முறையினீக்கிக்
கோல்சொரிதனவுன்கொற்றவனுமன்கைக்கொடுத்துக்கொண்டல்
மேனிறைகுன்றமொன்றின்மெய்ம்மெலிவாற்றலுற்றான். (இ0)

கூக-வது. வேலேற்றபடலம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கூடுகூ.

கம்பராட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

ழப்பத்திரண்டாவது

வானரர் களங்காண்படலம்.



ஆயபின்கவிதன்வேந்துமளப்பருந்தானையேடும்
மேயினனிராமன்பாதம்வீடிருமுறைவணங்கிவீழ்ந்த
தியவர்பெருமைநோக்கிமகிழ்க்கமுந்திகைப்புமுற்றூர்
ஓய்வுறமனத்தாரொன்றுமுணர்ந்திலர்நாணமுற்றூர். (க)

மூண்டெழுசேனைவெள்ளமுலகொருமூன்றின்மேலும்
நீண்டனவதனையையவெங்கணனிமிர்ந்ததென்னத்
தூண்டிரண்டானையதிண்டோட்சூரியன்சிறுவன்சொல்லக்
காண்டியதீயரக்கர்வேந்தன்றன்னெங்களத்தையென்றான். (உ)

வானராதியர் படைகளங்காண்டல்

தொழுதனர்தலைவரெல்லார்தோன்றியகாதலாண்ட
எழுகெனவிரைவிற்சென்றாரிராவணற்கினையலோடும்
கழுகொடுபருந்தும்பாறும்பேய்களுங்கணங்கண்மற்றும்
சூழ்வியகளத்தைக்கண்ணிலேக்கினர்துணுக்கங்கொண்டார். (ங)

எஃகினர்தடக்கைமுற்றூரிரைத்திரைத்துள்ளமேற
வீங்கினர்வெருவலுற்றூர்விம்மினருள்ளம்வெம்ப
ஓங்கினர்மெள்ளமெள்ளவுயிர்க்கிலத்துவைகபூற
ஆங்கவரும்றதன்மையாரறிந்ததையகிற்பார். (ச)

ஆயிரம்பருவங்கண்டாற்காட்சிக்கோர்கரையிற்றன்றூல்
மேயினதுறைகடோறும்விம்பினர்நிற்பதல்லால்
பாய்திரைப்பரவையேழுங்காண்குறுபதகரென்ன
நீயிருந்துரைத்தியென்றூர்வீடனனெறியிற்சொன்னான். (ஞ)

வேறு.

காகப்பத்தர்ச்செங்கனமெங்குஞ்செறிகால
யோகத்தம்பிற்பொன்றினவேனுமுடலொன்றி
மேகச்சங்கந்தொக்கனவேழும்வெளியின்மை
நாகக்குன்றினின்றனகாண்மினமரங்கள். (ட)

வென்றிச்செங்கண்வெம்மையரக்கர்விசையூர்வ
ஒன்றிற்கொன்றுற்றம்புதலேப்பட்டுயிர்நுங்கப்
பொன்றிச்சிங்காகவுடற்பிற்பொலிகின்ற
குன்றிற்றஞ்சுந்தன்மைகர்க்குக்குறிகாணீர். (ண)

அளியிற்பொங்குமன்கணனேவுமயில்வாளிக்
களியிற்பட்டார்வாண்முகமின்னுங்கரையில்ல

புனைத்திட்டிற்கண்ணகன்வாரிக்கடல்பூத்த
நளினக்காடேயொப்பனகாண்மிரங்கள். (அ)

பூவாய்வாளிச்செல்லறிகாலேப் பரிபோன்றக்
கோவாய்வன்பாய்கொடிதின்பாயொகூட
மாவாய்தின்டோர்மண்டுதலானீர்மறுவேலே
நாவாய்மானச்செல்வனகாண்மினிமரங்கள். (கூ)

ஒழுகிப்பாயுமும்மதவேழமுயிரோடும்
பழகிற்கில்லாப்பஃறிரைதூங்கும்படர்வேலே
எழுகிற்கில்லாசெம்புனல்வெள்ளத்திடையிற்ற
முழுகித்தோன்றுமீனரசொக்கும்முறைதோக்கீர். (கூ)

கடக்காரென்னப்பொங்குகவத்தத்தொடுகைகள்
தொடக்காகிற்கும்பேயிலயத்தின்றொழில்பூண்ட
* மடக்கோவில்லாவார்படிமக்கூத்தமைவிப்பான்
நடக்கால்காட்டுக்கண்ணுளரொக்குக்கமரங்கள். (கக)

மழுவிற்கூர்வாள்வண்பலிடுக்கின்வயவீரர்
குழுவிற்கொண்டாங்காடி † தொடக்கப்பொறிகூட்டித்
தழுவிக்கொள்ளக்கள்ளமனப்பேயவைதன்னி
லழுவிச்சென்லும்மியல்பினகாண்மின்னமரங்கள். (கூ)

பொன்னின்னெடைமின்பிறழ்நெற்றிப்புகர்வேழம்
பின்னும்முன்னும்மாறினவீழ்விற்பிணவுற்ற :
தன்னின்னேராமெய்யுருபாலுத்தலைபெற்ற
என்னுந்தன்மைக்கேய்வனபல்வேறினைகாணீர். (கூ)

நாமத்தின்போர்மூற்றியகோபக்கைகாறிம்
பாமத்தொன்னீரன்னகிறத்தோர்பகுவாய்கள்
தாமத்தொடும்வெங்கனலின்னுஞ்சுடர்கின்ற
ஓமக்குண்டமொப்பனபல்வேறினைகாணீர். (கூ)

பின்னும்மோடையூடெல்வயப்போர்மிடல்வேழக்
கன்னம்மூலத்துற்றனவெண்சாமரைகாணீர்
மன்னும்மாநீர்த்தாமரைமானுமுதனத்த
அன்னம்வெல்லத்துஞ்சுவவொக்கின்றனைகாணீர். (கூ)

ஒளிம்முற்றுறுற்றுயர்வேழத்தொளிர்வெண்கோ
டாளின்மூற்றுச்செம்புனல்வெள்ளத்தனைகாணீர்

* மடக்கோவில்லா-முடக்குதல் நீக்காத
† தொடக்க-சுற்றிக்கொள்ள

கோளின்முற்றுச்செருக்கண்மேகக்குழுவின்கண்
காளின்முற்றுவெண்பிறைபோலுங்கமரங்காள். (கக)

கொடியும்வில்லுங்கோலொடுவேலுங்குவிதேரும்
துடியின்பாதக்குன்றின்மிசைத்தோல்விசியின்கட்
டொடியும்வெய்யோர்கண்ணெரிசெல்லவுடன்வெந்த
தடியுண்டாடிக்கூளிதடிக்கின்றனகாணீர். (கஎ)

சகரம்முந்நீர்செம்புனல்வெள்ளத்தமோறி
மகரந்தம்மின்வந்தனகாணுமணமுட்சிச்
சிகரம்மன்னயானைகொலென்னச்சிலநாணி
நகரன்றோக்கிச்செல்வனகாண்மின்னமரங்காள். (கஅ)

விண்ணிற்பட்டார்வெற்புரழ்காயம்பலமென்மே
மண்ணிற்செல்வார்மேனியின்வீழமடிவுற்றூர்
எண்ணிற்றிராவண்ணவைதீருமிடல்லாக்
கண்ணிற்றோன்றூர்விம்மியுளக்கும்படிகாணீர். (கக)

அச்சிற்றிண்டோளானையின்மாமேற்காலாளின்
மொய்ச்சுச்சென்றூர்மொய்குருதித்தாளாகண்மூட்ட
உச்சிச்சென்றுளையினும்வெய்யோனுதயத்தின்
குச்சிச்சென்றுளைத்துளைகுங்குறிகாணீர். (உ0)

காறூய்மேனிக்கண்டகக்கண்டப்பகைகாலே
ஆறூவென்னவிண்படர்செஞ்சோரியதாகி
வேறூர்கின்றவெண்மணிசெங்கேழ்திமிம்மி
மாறூர்வெய்யோன்மண்டிலமொக்கின்றதுகாணீர். (உக)

வேறு.

வானனையமண்ணனையவனைத்தெழுந்தகொழுங்குருதிமகரவேலை
தானனைவுற்றெழும்பறவைச்சிறைதளித்தபுதுமழையின்றுள்ளிதாங்கி
மீனனையதும்போதும்விரையருந்துஞ்சிறைவண்டிறைம்வேறெய்திக் [ண்
கானனமுக்கடிபொழிலு † முறியீன்றபோன்றெளிர்வகாண்மின்காண்மி

வரைபொருதமதயானைத் துணைமருப்புங்கிளை முத்துமணியும்வாரித்,
திரைபொறுதுபுறங்குவிப்பத்திறங்கொள்பெருமரமுருட்டிச் சிறைப்புள்
ளார்ப், நுரைகொடியும்வெண்குடையுஞ் சாமரையுமெனச் சுமந்துபினைத்
திரைன்மைக், கரைபொருதுகடன் மடக்குங் கலேகுருதிப் பேர்யாருகா
ண்மின்காண்மின்.

கய்க்குன்றப்பெருங்கரையதிருதர்புயக்கற்செறித்ததலிக்கானம்
மொய்க்கின்றபரித்திரையமூரட்கரியின்கோண்மாவமூளரிக்கானின்

† முறியீன்ற-தவிர்த்தன.

மெய்க்கின் றவரண்முகத்தவிழுக்குடரின் பாசடையதிணமேற்செற்ற
உய்க்கின் றவுதிரநிறக்களங்குளங்களுலப்பிறத்தவுவையுங்காண்மின். (உ)

செம்படைவாணஞ்சிலுழுதிணச்சேற்றினுதிரநீர்நிறைத்தகாப்பின்
கம்பகபெடிகிடந்தகரும்பரம்பினைமள்ளர்பரந்தகையில்
பங்கமலமலர்காறுமுடிபரந்தபெருங்கிடக்கைபரந்தபண்ணை
தடம்பணையினறும்பழனந்தழுவியதேயனப்பொலியுந்தகையுங்காண்மின்

வெளிறீர்த்தவரைபுரையுமிடலரக்கருடல்விழவும்வீரன்வில்லின்
ஒளிறீர்த்தமுழுதெதொணுருமேறுபலபடவுமுலகங்கீண்டு
களிறீர்த்தகாகபுரம்புக்கிழிந்தபகழிவழிதியினேடிக்
களிறீர்த்துப்புகமண்டுங்கருங்குருதித்தடஞ்சுழிகள்காண்மின்காண்மின்.

கைத்தலமுங் காத்திரமுங் கருங்கழுத்துதெம்புயமுமுராமுங்கண்டித்
தெய்த்திலபொவ்வத்திசைகடொறுமிருநிலத்தைக்கிழித்திழிந்ததென்னினல்
லான், மத்தகரிவயமாவின்வாணிருதர்பெருங்கடலின்மறறிவ்வாளி, தைத்
தளவாய்நின்றதென வென்றேயுங்காண்பரியதகையுங்காண்மின். (உஎ)

வே று.

குமுதாறுமுகத்தனகூற்றன
சமுதரோடுமடிந்தனசார்தரும்
திமிதமாலன்னவின்னனவித்திறம்
அமுதின்வந்தனவையிருகோடியால். (உஅ)

ஏறுநான்முகன்வேள்வியெழுத்தன
ஊறுமாரியுமோங்கலேயோதமும்
மாறுமாயினுமாமதமாய்வரும்
ஆறுமாறிலவாறிருகோடியால். (உக)

உயிர்வதத்தமுதிரம்வதத்ததம்
மயர்வதத்துமதமறவாதன
புயலவன்றிசைப்போர்மதயானையின்
இயல்பரம்பரையேழிருகோடியால். (கூ0)

கொடாதுநிற்றலிற்கொற்றமெடுத்திசை
எடாதுநிற்பன * காட்டமிமைப்பில
வடாதுதிக்கின்மீதவரையின்வழிக்
கடாமுகத்தமூனரிக்கணக்கவால். (கூக)

வானவர்க்கிறைவன்றிறைதந்தன
ஆனவர்க்கமோராயிரகோடியும்

* காட்டம்-இமைப்பில-கண்கள் இமைப்பற்றன.

தானவர்க்கிறைவன்றிறைதந்தன
னேனவர்க்கங்கணக்கிலவிவ்வெலாம். (கூ2)

பாற்கடல்பண்டமிழ்தம்பயந்தான்
ஆர்த்தெழுந்தனவாயிரமாயிரம்
மாற்கணப்பரியிக்கிவைமாறுவை
மேற்கின்வேலைவருணனெவென்றவால். (கூ3)

இருநிதிக்கிழவன்னிழற்றேனின
அரிவையப்பரியாயிரமாயிரம்
விரிசெனத்திகல்விஞ்சையர்வேத்தினப்
பொருதுபற்றியதாமரைபோலுமால். (கூ4)

என்றுகாணினுங்காட்டினுமீதிரைக்
குன்றுகாணினுங்கோளிலதாதலான்
நின்றுகாணுதுநேமியினுழைச்
சென்றுகாண்டுமென்றேகினர்செவ்வியோர். (கூ5)

ஆரியற்கெழுதாங்கவண்பாங்கரும்
போரியற்கைகினைத்தெழும்பொம்மலார்
பேருயிர்ப்பொடிருந்தனர்பின்புறம்
காரியத்தினிலேமைகழறுவாம். (கூ6

கூ2-வது வானரர்களங்காண்படலம் முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-கூடுவெடி.
கம்பராட்டாழ்வார் திருவடிகளே சரணம்.

முப்பத்துமூன்றுவது

இராவணன் களங்காண்படலம்.

அலக்கணெய்தியமாழிந்திட
உலக்கவான ரவீரரையோட்டியவ்
விலக்குவன்றனைவீட்டியிராவணன்
துலக்கமெய்தினன்சேமில்களிப்பினே. (1)

பொருந்துபொற்பெருங்கோயிலுட்போர்த்தொழில்
வருந்தினர்க்குத்தம்மன்பினின்வந்தவர்க்
கருந்துதற்கமைவாயினவாக்குவான்
விருந்தமைக்கவமைக்கின்றவேட்கையான்: (2)

வானராட்டைவருகெனவல்விரைச்
தேனராட்டவரோமேவர்தெய்தலும்

மானகாட்டத்தபோகமமைத்திர்மற்
றானகாட்டினிழத்திருதியிரென்றான். (۴)

நறவுமூனுகையதாலன
பிறவுமாடையுஞ்சாத்தமும்பெய்மலர்த்
திறமுநானப்புனலொடுசேக்கையும்
புறமுமுள்ளிறையப்புகுத்தவால். (۵)

கானசெய்ந்தன்குரைத்தாறப்புன
லானகோதறவாட்டியமுதாடும்
பானமூட்டிச்சயனம்பரப்பவும்
வானகாட்டியர்யாவரும்வந்தரால். (۶)

பாடுவோர்கள்பயினடம்பாவகத்
தாடுவோர்களமளியினண்புறக்
கூடுவோர்கண்முதலுங்குறைவறத்
தேடினனெனப்பண்ணையிற்சேர்ந்ததால். (۷)

அரைசராதியடியவரந்தமா
வரைசெய்மேனியிராக்கதர்வந்துளார்
விரைவினிற்பிரபோகம்விழைதரக்
கரைசெலாதபெருவளங்கண்ணினர். (۸)

இன்னதன்மையமைந்தவிராக்கதர்
மன்னன்மாவெய்தெய்தினவங்கினர்
அன்னசேனைகளகப்பட்டவாறெலாம்
தன்னுதாதர்செவியிடைச்சொல்லுவார். (۹)

நடுங்குகின்றவுடலினர்நாவுலர்ந்
தொடுங்குகின்றவுயிர்ப்பினருள்ளழிந்
திடுங்குகின்றவிழியினரேங்கிமேல்
பிடுங்குகின்றவுரையினர்பேசுவார். (۱۰)

வேறு.

முலபலமழிந்தமைதூதர் இராவணற்றரைத்தல்.

இன்றியார்விருந்திங்குண்பாரிகன்முகத்திமையோர்தத்த
வென்றியாயேவச்சென்றவாயிரவெள்ளச்சேனை
கின்றதிபுறத்ததாகவிராமன்கைகிமிர்த்தசாபம்
ஒன்றினுலிரண்டுமூன்றுகடிகையினுலத்தனென்றார். (۱۱)

வலிக்கடன்வானுளோரைக்கொண்டுவேகுத்தபோகம்
கலிக்கடனளிப்பலென்றுரிருதர்க்குக்கருதினுயேல்

பலிக்கடனளிக்கற்பாலையல்லதுன்குலத்தின்பாலோர்
ஒலிக்கடலுலகத்தில்லையுருளாருளரேயுள்ளார். (கக)

ஈட்டருமுவகையீட்டியிருந்தவனிசைத்தமாற்றம்
கேட்டலும்வெகுளியோடெதிணுக்கமுமிழிவுங்கிட்ட
ஊட்டரக்கனையசெங்கணெருப்புகவுயிர்ப்புவீங்கத்
தீட்டியபடிவமென்னத்தோன்றினன்றிகைத்தகெஞ்சன். (கஉ)

இராவணனையுறல்.

எனினும்வலியரானவிராக்கதர்யாண்டுவீயார்
உன்னினுமுலப்பிலாதாருவரியின்மனலினீள்வார்
பின்னெருபெயருமின்றிமாண்டனரென்றுபேசும்
வின்னிலையிதுவோபொய்ம்மைவிளம்பினர்போலுமென்றான், (கங)

கேட்டயலிருந்தமாலியீதொருகிழமைத்தாமோ
ஓட்டுறுதாதர்பொய்யேயுரைப்பரோவுலகம்யாவும்
வீட்டுவதிமைப்பினன்றேவிண்கெரிவிரித்தவெல்லாம்
மாட்டுவானெருவனன்றேயிறுதியின்மனத்தாலென்றான். (கச)

அளப்பருமுலகம்யாவுமமைத்துகாத்தழிக்கின்றான்றன்
உளப்பருந்தகைமைதன்னுலொருவனென்றுண்மையோதம்
இளப்பதுங்கேட்மேன்றேயரவின்மேற்கிடந்துமேனுள்
முனைத்தபேரிராமனென்றவீடணன்மொழிபொய்த்தாமோ. (கஞ)

* ஒன்றிடினுலகையுண்ணுமுலகத்தினுயிர்க்கொன்றாக
நின்றனவெல்லாம்பெய்தாலுடனுங்குநெருப்புங்காண்டும்
குன்றெடுமோனும்புல்லும்பல்லுயிர்க்குருமுவுங்கொல்லும்
வன்றிறற்காற்றுங்காண்டும்வலிக்கொருவரம்புமுண்டோ. (கட)

பட்டதுமுண்டேயுன்னையிந்திரச்செல்வம்பற்று
விட்டதுமெய்பேணையமீண்டொருவினையுமில்லைக்
கெட்டதுன்பொருட்டினுலேநின்னுடைக்கேளிரெல்லாம்
கிட்டதுசெய்தியென்றுனதற்கவன்சிற்றஞ்செய்தான். (கஎ)

இராவணனிலக்குமணனைக் கொன்றமையால் வெற்றிதன்னதாமெனல்.

இலக்குவன்றன்னைவேலாலெறிந்துயிர்கூற்றுக்கீந்தேன்
அலக்கணிற்றலைவரெல்லாமழுந்தினரதனைக்கண்டால்
உலக்குமாலிராமன்பின்னேயுயிர்ப்பொறையுகவானுற்ற
மலக்குமுண்டாகிலுகவாகையென்வயத்ததென்றான் (கஅ)

* ஒன்றிடினதனையுண்ணுமுலகத்தை விறகென்றோத எனவும்பாடம்.

தூதர்மருந்தா லிலக்குமண ரும்பிர்பெற்றனெனல்.

ஆண்டதுகேட்டுகின்றதுதுவரைமெய்யே
மீண்டதவ்விளவலாவிமாருதிமருத்துமெய்யில்
நீண்டவுந்தாழ்ந்தநில்லையாருமச்செங்கணானைப்
பூண்டனர்மருத்துவெற்பைவீசினனென்புக்கதென்றூர். (கக)

ஐயழற்றவிராவணன் கோபுரத்தின்மீதேறி முலபலமிறந்த வுண்மை காண்டல்.

தேறிலனுதலானேமறுகுறுசிந்தைதேற
ஏறினன்கனகத்தாரைக்கோபுரத்தும்பரெய்தி
ஊறினசேனைவெள்ளமுலக்தபேருண்மையெல்லாம்
காறினவுள்ளநோவக்கண்களாற்றெரிவக்கண்டான். (உ0)

கொய்தலைப்பூசற்பட்டோர்குலத்தியர்குவலைதோற்று
நெய்தலைவென்றவாட்கண்குமுதத்தினீர்மைகாட்டக்
கய்தலையுற்றபூசல்கடலொடுமிமிருங்காலைச்
செய்தலையுற்றவோசைச்செயலதுசெவியிற்கேட்டான். (உக)

எண்ணினீர்கடந்தயானைப்பெரும்பிணமேன்றியாணர்
மண்ணினீரளவுங்கல்லிமெமலைமறித்தமண்டும்
பண்ணினீராறுபல்பேய்ப்புதுப்புனலாடும்பொம்மற்
கண்ணினீராறுமாறக்கருங்கடன்மடப்பைக்கண்டான். (உஉ)

மூற்றியற்சிலைவலாளன்மொய்க்கணிமிதுப்பவாவி
பெற்றியல்பெற்றிபெற்றுமென்னவாளரக்கர்யாக்கை
நிற்றியற்குறங்காலோரிக்குரல்கொளியைசையாப்பல்பேய்
கற்றியல்பாணிகொட்டக்களிகடம்பயிலக்கண்டான். (உங)

விண்களிற்சென்றவண்டூட்கணவரையலகைவெய்ய
புண்களிற்கைகணீட்டிப்புதுநிணங்கவர்வதோக்கி
மண்களிற்றொடர்ந்துவானிற்பிடித்துவள்ளுகிரின்மானக்
கண்களிச்சுன்றுகீக்குமரக்கியர்குழாமுங்கண்டான். (உச)

குமிழிநீரோடுஞ்சோரிக்கனலொடுங்கொழிக்குங்கண்ணன்
தமிழ்நெறிவழக்கமன்னதனிச்சிலைவழக்கிற்சாய்ந்தார்
அமிழ்பெருங்குருதிவெள்ளமாற்றுவாய்மூகற்றிற்றேக்கி
உமிழ்வதேயொக்கும்வேலையோதம்வந்துடற்றக்கண்டான். (உஇ)

விண்பிளந்தேங்கவார்க்குய்வானரவீக்கங்கண்டான்
மண்பிளந்தழுந்தவாங்கவர்த்தநின்வருக்கங்கண்டான்
கண்பிளந்தகலநோக்கும்வானவர்களிப்புக்கண்டான்
புண்பிளந்தனையனெஞ்சன்கோபுரத்திழிந்துபோந்தான். (உக)

இராவணனரசிருக்கை மண்டபமெய்துதல்.

கைபிறக்கின்றவாயலைக்கொடுகடைவாய்க்கிப்
புகைபிறக்கின்றமூக்கன்பொறிபிறக்கின்றகண்ணன்
மிகைபிறக்கின்றநெஞ்சன்வெஞ்சினத்தீமேல்வீங்கிச்
சிகைபிறக்கின்றசொல்லனரியலிருக்கைசேர்ந்தான். (உஎ)

நாங-வது. இராவணன் கனங்காண்படலம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - நாகூஉ.

கம்பகாட்டாழ்வார் திருவடிகளே சரணம்.

முப்பத்தி நான்காவது

தேரூர்படலம்.

பூதரமனையமேனிப்புகைநிறப்புருவச்செந்தீ
மோதரனென்னுமத்தொருவனேமுகத்துநோக்கி
ஏதனதிறத்திலாதநிலவ்கையுளிருந்தசேனை
யாதையுமெழுகென்றானேமணிமுரசெற்றுகென்றான். (க)

எற்றியமுரசினோடுமேழிருநூறுகோடி
கொற்றவாணிருதர்சேனைகுழீஇயதுகொடித்திண்டேரும்
சுற்றுறதொலைக்கைமாவுத்துரகமும்பிறவுந்தொக்க
வற்றியவேலையென்னவிலக்கையூர்வரளிற்றார். (உ)

இராவணன் போர்க்கோலங்கொள்ளுதல்.

ஈசனேயிமையாமுக்கணிறைவனேயிருமைக்கேற்ற
பூசனேமுறையிற்செய்துதிருமறைபுகன்றதானம்
வீசினேனியற்றிமற்றும்வேட்டனவேட்டோர்க்கெல்லாம்
ஆசறாலிலையொல்காப்போர்த்தொழிற்கமைவதானான். (கூ)

வேறு,

அருவியஞ்சனக்குன்றிடையாயிரமருக்கர்
உருமிறேறெனம்வந்துதித்தனராமெனவொளிரக்
கருவிகான்முகன்வேள்வியிற்படைத்ததுங்கட்டிச்
செருவிலிந்திரன்றன்தபொற்கவசமுஞ்சேர்த்தான். (ச)

வாள்வலம்படமன்தரஞ்சுழன்றமாசுணத்தின்
தாள்வலம்தொளிர்தமனியக்கச்சொடுஞ்சார்த்திக்
கோள்வலம்தனகுவித்தனவாமெனுங்கொள்கை
மீள்வில்லிம்புரிமணிக்கடிசூத்திரம்வீக்கி. (ஞ)

மறைவிரித்தன்ன * மாறுமானமாக்கலுழன்
றிறைவிரித்தன்னகொய்சகமருங்குறச்சேர்த்தி
முறைவிரித்தன்னமுறுக்கியகோசிகமுறையே
பிறைவிரித்தன்னவெள்ளெயிற்றாவமும்பிணித்து. (கூ)

மழைக்குலத்தொடுவானுருமேறெலாம்வாரி
யிழைத்தொடுத்தனவேயவாளிடைமணியார்த்து
முழைக்கிடந்தவல்லரியினமுழங்குவபோல்வ
தழைக்குமின்னெளிப்பொன்மலர்ச்சதங்கையுஞ்சார்த்தி. (எ)

உருமிடித்துழியரவெனக்கரக்கமாவுலகின்
இருநிலத்திடையெவ்வுலகத்திடையாரும்
புரிதரப்படும்பொலங்கழலிலங்குறப்பூட்டிச்
சரியுடைச்சுடர்சாய்தலஞ்சார்வுறச்சார்த்தி. (அ)

காலெஞ்சாகியகரங்களினனந்தலேயகத்தன்
ஆலஞ்சார்மிடற்றலுங்கறைகிடந்தெனவிலங்கும்
கோலஞ்சரர்தெடுக்கோதையும்புட்டிலுங்கட்டித்
தாலஞ்சார்ந்தமாசுணமெனக்கங்கணந்தழுவ. (கு)

கடல்கடைந்தமால்வரையினேச்சுற்றியகற்றின்
அடல்கடந்தாதோளலங்குபோர்வலயங்களிலங்க
உடல்கடந்தாளொளியவனுதிர்த்தபொற்கிரின்
சுடர்தயங்குறக்குண்டலஞ்செவியிடைத்தூக்கி. (கo)

உதையக்குன்றத்தோடத்தத்தினுலாவுறுகிரின்
துதையுங்குங்குமத்தோளொடுதோளிடைதொடரப்
புதையிருட்பகைக்குண்டலமனையவைபொலியச்
சிதைவிறிக்களுமீனும்போன்முத்தினந்திகழ. (கக)

வேலேவாய்வந்துவெய்யவரனேவரும்வெய்ய
காலையுற்றனராமெனக்கதிர்க்குலங்காலும்
மாலைபத்தின்பேன்மதியமூராளிடைப்பலவாய்
மூலைமுற்றியவனேயமுத்தக்குடையிணைப்ப. (கஉ)

பகுத்தபல்வளக்குன்றினின்முழையன்னபகுவாய்
வகுத்தவான்கடைகடைதொறும்வலையெயிற்றீட்டம்
மிகுத்தநீலவான்மேகஞ்சூழ்விசும்பிடைத்தசும்பூ
ருகுத்தசெக்கரிற்பிறைக்குலமுளைத்தனவொக்க. (கங)

ஒத்ததன்மையினெளிர்வனதரளத்தினேதம்
தத்துகின்றனவீரபட்டத்தொகையங்க

* மாறு-பக்கத்தினையுடைய.

முத்தவோடையின்முரட்டிசைமுழுமதயானை
பத்துநெற்றியுஞ்சுற்றியபேரெழில்படைக்க. (கச)

புலவிமங்கையர்பூஞ்சிலம்பரற்றடிபோக்கித்
தலைமைகண்ணினர்தாழ்ந்திலர்மணிமுடித்தலங்கள்
உலகமொன்றினைவிளக்குறுங்கதிரினையோட்டி.
அலகிலெவ்வுலகத்திலும்வயங்கிருளற்ற. (கஞ)

சாகர்தானிலகான்முகனுடனயன்த
பாகமூன்றையும்வென்றுகொண்டமர்முன்பணித்த
வாகைமாலையுமருங்குறவரிவண்டோடளவித்
தோகையன்னவர்விழிதொடர்தும்பையுஞ்சூட்டி. (கக)

அகழிவேலையக்காலத்தையளக்கர்நுண்மலை
கிகழுமீன்களேவிஞ்சையரினைப்பதேனின்ற
இகழ்வில்பூதங்களிறப்பிணமிறுதிசெல்லாத
புகழெனச்சரக்தொலிவிலாத்தூணியும்பூட்டி. (கஎ)

இராவணன் தேர்த்திறம்.

வருகதேரெனவந்தவையமும்வானும்
உருகதேயமுமொமொருங்குடனிவரினுமுச்சிச்
சொருகுபூவண்ணசுமையதுதுரகமின்றெனினும்
கிருதர்கோமகனினைத்துழிச்செல்வதோர்கினைப்பில். (கஅ)

ஆயிரம்பறியமூதத்தின்வந்தருமருக்கன்
பாய்வயப்பசுங்குதிரையின்வழியவம்படர்நீர்
வாய்மடுக்குமாவடவையின்வயிற்றின்வன்காற்றி
னுயகற்குவந்துசித்தவம்பூண்டசோர்நலத்தின். (கக)

பாரிற்செல்வதுவிசும்பிடைப்படர்வதுபரந்த
நீரிற்செல்வதுநெருப்பினுஞ்செல்வதுநிமிர்ந்த
போரிற்செல்வதுபொன்னெடுமுகட்டிடைவிரிஞ்சன்
ஊரிற்செல்வதெவ்வுலகத்துஞ்செல்வதோரிமைப்பின். (உ0)

எண்டிசைப்பெருங்களிற்றிடைமணியென விசைக்கும்
கண்டையாயிரகோடியின்றொகையதுகதிரோன்
மண்டிலங்கமேருவிற்குவித்தெனவயங்கும்
அண்டம்விற்குநன்காசினங்குயிற்றியதடங்க. (உக)

மூனைவர்வானவர்முதலினரண்டத்துமுதல்வர்
ஏனைவரீத்தவுயிகலினிலிட்டவுமியம்பா
வினையின் வெய்யனபடைக்கலவேலையென்றிசைக்கும்
சுனையிறுண்மணற்றொகையனசுமந்ததுதொக்க. (உஉ)

கண்ணனேமியுங்கண்ணுதல்கணிச்சியுங்கமலத்
தண்ணல்குண்டிகைக்கலசமுமழியினுமழியாத்
திண்மைசான்றதுதேவருமுணர்வருஞ்செய்கை
உண்மையாமெனப்பெரியதுவென்றியினுறையுள். (உக)

இராவணன் இரதபூசையும் சுவணதானமுதலியவுஞ்செயீதல்.

அனையதேரினையருச்சலைவரன்முறையாற்றி
எனையரென்பதோர்கணக்கிலாமறையவரெவர்க்கும்
வினையினன்னிதிமுதலியவளப்பரும்வெறுக்கை
கினையினீண்டதோர்பெருங்கொடையருங்கடனேர்த்தான். (உச)

இராவணனிரதத்தி லாரோகணித்தல்.

ஏறினன்றெழுதிக்திரன்முதலியவிமையோர்
தேறினர்களுத்தியங்கினர்மயங்கினர்திகைத்தார்
வேறுகாஞ்சொலும்வினையிலெமெய்யினம்புலனும்
ஆறினர்களுமஞ்சினருலகெலாமனுக்க. (உ0)

இராவணனது வஞ்சினமோழி.

மன்றலங்குழற்சனகிதன்மலர்க்கையாண்வயிறு
கொன்றலந்தலைக்கொடுநெடுத்துயரிடைகுளித்தல்
அன்றிதென்றிடின்மயன்மகளத்தொழிலுறுதல்
இன்றிரண்டினொன்றுக்குவென்றலைப்படினென்றான். (உக)

இராவணனது தோற்றம்.

பலகளத்தலைமௌலியோடிலங்கலிற்பஃறோள்
அலகளந்தநீயாநெடுப்படைகளோடலங்க
விலகளந்தருகடற்றரைவிசும்பொடுவியப்ப
உலகளந்தவன்வளர்ந்தனனெனவுயர்ந்தான். (உ)

இராவணன் றேர்புடைத்தார்த்தல்.

விசும்புவிண்டிருகூறுறக்கற்குலம்வெடிப்பப்
பசும்புண்விண்டெனப்புவிபடப்பலவன்பசும்பொற்
*தசும்பினின்றிடைதிரிந்திடமிதகையமிழ்தின்
அசும்புசிந்திநொந்தலைவுறத்தோள்புடைத்தார்த்தான். (உஎ)

இராவணன் வின்னுணறிதல்.

நணித்துவெஞ்சமதோருவகையினலத்தால்
திணித்தடங்கிரிவெடித்துகச்சிலையாண்டெறித்தான்
மணிக்கொடுங்குழைவானவர்தானவர்மகளிர்
துணுக்கமெய்தினர்மங்கலநாண்களேத்தொட்டார். (உசு)

---

* தசும்பினின்று-தசும்பைப்போலின்று; தசும்புடம்.

சுரிக்குமண்டலத்தங்குநீர்சுரிப்புறவீங்க
விரைக்கும்பல்லுயிர்யாவையுநடுக்கமுற்றிரியப்
பரித்திலன்புவிபடர்சுடர்மணிதலைபலவும்
விரித்தெழுந்தனனத்தன்மீதென்பதோர்மெய்யான். (கூ0)

தோன்றிஞன்வத்துசுரர்களோடசுரரேதொடங்கி
மூன்றுநாட்டினுமுள்ளவர்யாவருமுடிய
ஊன்றிஞன்செருவென்றுயிருமிழ்தரவுதிரம்
கான்றுசாட்டங்கள்வடவனற்கிருமடிகனல. (கூக)

உலகிற்றேன்றியமறக்கமுமிமைப்பிலருலேவும்
மலையும்வானமும்வையமுமறுமறுக்கும்
அலைகொள்வேலைகளஞ்சினசலிக்கின்றவயர்வும்
தலைவனேமுதற்றண்டலிலோரெலாங்கண்டார். (கூஉ)

பீறிற்றுமண்டமென்பதோராகுலம்பிறக்க
வேறிட்டோர்பெருங்கம்பலம்பிமேல்வீங்க
மாறிப்பல்பொருள்வருக்குறுங்காலத்துண்மறுக்கம்
ஏறிற்றுற்றுளதென்னைகொலோவெனவெழுந்தார். (கூங)

கடர்கள்யாவையுங்கன்மலைக்குலங்களுங்காரும்
திடர்கொண்மேருவும்விசும்பிடைச்செல்வனிவண
அடர்கொள்சேனையுமரக்கனுந்தேரும்வந்தார்க்கும்
குடர்கள்பேரொலிக்கறலையென்பதுங்கொண்டான். (கூச)

இராவணன் வருகையை விபீடணன் இராமற்குரைத்தல்.

எழுந்துவந்தனிராவணனிராக்கதத்தானைக்
கொழுந்துமுற்றியதற்றதுகொற்றவகுலுங்குற்
றழுந்துகின்றதுநம்பலமமருமஞ்சி
விழுந்துசித்தினரென்றனன்வீடணன்விரைந்தான். (கூடு)

வே று,

இராமன் போருக்கெழுதல்.

தொழுங்கையொடுவாய்குழறிமெய்ம்முறைதளர்ந்த
விழுந்தகவிசேனையிடுபூசன்மிகவிண்ணோர்
அழுந்தபபோலமளிதுஞ்சியெழுமன்னான்
எழுந்தபடியேகடிதெழுந்தனனிராமன். (கூசு)

இராமன் போர்க்கோலங் கோடல்.

கடக்களிறெனத்தகையகண்ணெருகாலன்
விடக்கயிறெனப்பிறழும்வாள்வலன்விசித்தான்

முடக்கொடிதயர்க்குகெவோனினுறவோர்தம்
இடர்க்கடலினுக்குமுடிவின்றெனவிசைத்தான். (கூவ)

தன்னகவசத்துருவுதங்கவொருதன்னின்
பின்னகவசத்தபொருளில்லைபெரியோனே
மன்னகவசத்துறவரிந்தனவென்கோ
இன்னகவசத்தையுமொரீசனெனலாமால். (கூஅ)

புட்டிலொடுகோதைகள்புழுங்கியெரிகூற்றின்
அட்டிலெனலாயமலசங்கையினடக்கிக்
கட்டியுலகிற்பொருளெனக்கரையில்வாளி
வட்டில்புறம்வைத்தவைபொருந்திடவரிந்தான். (கூக)

சிவன் இராமனுக்குத் தோணுப்பக் கூறுதல்.

மூண்டசெருவின்றளவின்முற்றுமினிவெற்றி
ஆண்டகையதுண்மையினியச்சமகல்வுற்றீர்
பூண்டமணியாழிவயமாநிமிர்பொலந்தேர்
ஈண்டவிடுவீரமரரென்றரனிசைத்தான். (சூ0)

இந்திரன் தனது தேரினை இராமனுக்காக அனுப்புதல்.

தேவரதுகேட்டிதுசெயற்குரியதென்றூர்
எவ்வுரியிந்திரனெனத்தொழுதிகைத்தார்.
மூவுலகுமின்றெருகணத்தின்முறைமுற்றிக்
காவல்புரிதன்பொருவிதேர்கவர்தியென்றான். (சக)

மாதலிகொணர்ந்தநன்மகோததிவளாவும்
பூதலமெழுந்துபடர்தன்மையபொலன்தேர்
சீதமதிமண்டிலமேனியபுளவுந்தின்
பாதமெனநின்றதுபடர்ந்ததுவிசும்பின் (சஉ)

குலக்கிரிகளேழின்வலிகொண்டியர்கொடிஞ்சும்
அலக்குரியபாரின்வலியாழியினச்சும்
கலக்கறவுகுத்ததுகதத்தரவமெட்டும்
வலக்கயிறுகட்டியதுமுட்டியதுவானே. (சங)

ஆண்டிரெண்டுநாளிருதிங்களிலையென்று
* மீண்டனவுமேலனவும்விட்டுவிரிதட்டின்
பூண்டுளதுதாரகைமணிப்பொருவில்கோலை
நீண்டபுனைதாரினின்றுலவுகுன்றின். (சச)

தேவரதத்தின் நிதம்

மாதிரமனைத்தையுமணிச்சுவர்களாகக்
கோதறவகுத்ததுமழைக்குழுவையெல்லாம்

* ஈண்டனவும்ஒருங்குசேர்ந்தனவும்.

மீதுறுபதாகையெனவீசியதுமெய்ம்மைப்
பூதமலையெந்திரன்வலியர்பொலிவதம்மா. (சஇ)

மரத்தொடுமருத்துலகில்யாவுமுளவாரித்
தரத்தொடுதொடுத்தகொடிதங்கியதுசங்கக்
கரத்தொடுதொடுத்தகடன்மீதுமிமிர்காலத்
துரத்தொடுகடுத்தகதழோதையதனேதை. (சசு)

புண்டரிதனுந்தியன்வந்தபழமுர்த்தை
புண்டரிகமொட்டனையமொட்டின துபூதம்
உண்டவையபிற்றிடையொடுக்கியுமிழ்கின்றோன்
* அண்டசமணிச்சயனமொப்பதகலத்தின். (சஎ)

வேதமொருநாலுநிறைவேள்விகளும்வெவ்வே
றேதமலையேழுமலையேழுமுலகேழும்
பூதமலையைந்துமெரிமூன்றுநனிபொய்தீர்
மாதவமுமாவுதியுமைம்புலனுமற்றும். (சஅ)

அருணங்கரணமைந்துசுடரைந்துதிசைநாலும்
ஒருங்கருணமூன்றுமுழுஎல்வாயுவொருபத்தும்
பெரும்பகலுநீளிரவுமென்றிவையிணைக்கும்
பொரும்பரிகளாகநனிபூண்டதுபொலன்றேர். (சகு)

வந்ததனேவானவர்வணங்கிவலியோய்நீ
எந்தைதரவந்தனேயெக்குதவுகிற்பாய்
தந்ததவுவென்றியெனநின்றுதகைமென்பூச்
சிந்தினர்கள்மாதலிகடாவிநனிசென்றான். (இ0)

வினைப்பகைவிசைக்கொடிவிசும்புருவிமான
மனத்தின்விசைபெற்றுளதவத்தெனவாலே
டனைத்துலகமுர்தொழவடைத்தமழன்பால்
நினைப்புமிடைபிற்படநிமிர்த்துயர்நெடுந்தேர். (இக)

அலரிதனியாழிபுனைதேரிதனினன்றல்
உலகின்முடிவிற்பெரியவூழொளியிதன்றல்
நிலைகொனெடுமேருகிரியன்றுநெடிதம்மா
தலைவரொருமூவர்தனிமானமிததாலே (இஉ)

இராமன் மாதலியை வினதல்.

என்னேயிதம்மையிடையெய்தலெனவெண்ணு
மன்னவர்தமன்னன்மகன்மாதலியைவந்தாய்

* அண்டசமணிச்சயனம்- முட்டையிற்பிறந்த ஆதிசேடனுடைய படுக்கை,

பொன்னிலெளிர்தேரிதுகொடாபுகறியென்றான்
அன்னவனுமன்னதனேயாகவுரைசெய்தான். (நக)

இந்திரசாரதியின் விடை

மும்புரமெரித்தவனுகான்முகனுமுன்னுள்
அப்பகலியற்றியுளதாயிரமருக்கர்க்
கொப்புடையதூழிதிரிகாலுமுலவில்லா
இப்பொருவிறேர்வருவதிந்திரனதென்தாய். (நச)

அண்டமிதுபோல்வனவளப்பிலவுக்கிக்
கொண்டுபெயருங்குறுகுநீளுமவைகோளுற்
றுண்டவன்வயிற்றினேயுமொக்குமுவமைக்குப்
புண்டரிகன்சரமெனக்கடிதுபோமால். (நஙி)

கண்ணுமனமுன்செடியகாலு † மிவைகண்டால்
உண்ணும்விசையாலுணர்வுபிற்படாரோடும்
விண்ணுநிலனும்மெனவிசேடமிலதஃதே
எண்ணுநெடுநீரினுநெருப்பிடையுமென்தாய். (நசு)

நீருமுளதேயிதனினீரிலெழுகிற்கும்
பாருமுளதேயினிரட்டியவைபண்பின்
பேருமொருகாலையிருகாலையிடைபோராத்
தேருமுளதேயிதுவலாலுலகுசெய்தோய். (நஎ)

தேவருமுனித்தலைவருஞ்சிவனுமுன்னுள்
மூவுலகளித்தமுதலும்முதல்வமுன்னின்
றேவினர்சுரார்க்கிறைவனீர்துளவனென்றான்
மாவின்மனமொப்பவுணர்மாதலிவலித்தான். (நஅ)

இராமனேயமொழிய இரதாசுவங்கள் வேதமோதுதல்.

அய்யனிதுகேட்டிகலரக்கரகன்மாயச்
செய்கைகொலெனச்சிறிதுசிந்தையினினைந்தான்
மெய்யவனுரைத்ததெனவேண்டியிடப்பூண்ட
மொய்யரிவயப்பரிமொழிந்தமுதவேதம். (நக)

இந்திரன்சாரதியைப்பெயர்வினுதலுமவன்விடையிறுத்தலும்.

இல்லையினியையமெனவெண்ணியவிராமன்
கல்லவினேநீயுனதுகாமரவில்கென்ன
வல்லதனேயூர்வதொருமாதலியெனப்பேர்
சொல்லுவரெனத்தொழுதுநெஞ்சினெடுசொன்னன். (கo)

†இவைகண்டால்-இவைகளேயுற்றுப்பார்க்கின்,

இராமனனுமவிலக்குமணர்களை விளுதலும்
அன்னரின்னதிந்திரன்தேரேயென்றலும.

மாருதியைநோக்கியிளவாளரியைநோக்கி
நீர்கருதுகின்றதைகிகழ்த்துமெனநின்ரூன்
ஆரியன்வணங்கியவரையமிலமெய்யே
தேரிதுபுரந்தரனதென்றனர்தெளிந்தார். (சக)

தெய்வத்தேரிலிராமனேறியிருத்தல்.

விழுந்துபுரடவினிலத்தொடுவெதும்பத்
தொழுந்தகையநல்வினைகளிப்பிளெடுத்துள்ள
அழுந்துதுயாத்தமரார்த்தனர்கைமுக்திற்
றெழுந்ததலையேறவினிதேறினனிராமன். (சஉ)

சுசு - வது. தேரேறுபடலம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - சுசுசுசு.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளே சரணம்.

முப்பத்தைந்தாவது

இராவணன்வதைப்படலம்.

இராமனைத் தேவர் வாழ்த்துதல்.

ஆழியந்தடக்தேர்வீரனேறலுமாகூறிப்
பூழியிற்சுரித்ததன்மைநோக்கியபுலவர்போத
ஊழிவெங்காற்றின்வெய்யகலுழனையொன்றுஞ்சொல்லார்
வாழியவுமன்றேவேயத்தினர்மலர்கடேவி. (க)

எழுகதேர்சுமக்கவெல்லோம்வலியும்புக்கின்றபொன்றி
விழுகபோயரக்கன்வெல்கவேந்தர்க்குவேந்தன்விம்மி
அழுகபோராரக்கிமாரென்றூர்த்தனரமராழி
முழுகிமீதெழுந்ததென்னச்சென்றதுமூரித்திண்டேர். (உ)

இராவணன் இராமன்மீது தன்தேரைவிடக் கூறுதல்.

அன்னதுகண்ணிற்கண்டவரக்கனுமமரரீர்தார்
மன்னெடுந்தேரென்றன்னிவாய்மடித்தெயிறுதின்றூன்
பின்னதுவிடக்கவென்னத்தன்னுடைப்பெருந்திண்டேரை
மின்னுவளரிவீற்செங்கையிராமன்மேல்விடுதியென்றூன். (ஙு)

இரிந்தனகவிகளெல்லாமிமையவரிரதமீந்தார்
அரிந்தமன்வெல்லுமென்றற்கையுறவில்லென்றஞ்சார்

திரித்தனமரமுங்கல்லுஞ்சிந்தினர்திசையோடண்டம்
பிரித்தனகொல்லென்றெண்ணப்பிறந்தனமுழக்கின்பெற்றி. (ச)

வார்ப்பொலிமுரசினேதைவயவர்வரையப்புடைப்பிலேதை
போர்த்தொழிற்களத்தைமுற்றுஞ்சுற்றியபொம்மலோதை
ஆர்த்தலின்யாரும்பார்வீழ்ந்தடங்கினரிருவராடற்
றேர்க்குரலோதைபொதுகச்செவிமுற்றுஞ்செவிடுசெய்ய. (ஙி)

இராமன்யாதலியை நீ என்கருத்திற்கிசைய வோட்டுதேரேனல்.

மாதலிவதனநோக்கிமன்னர்தமன்னன்மைத்தன்
காதலாற்கருமமொன்றுகேட்டியாற்களித்தசிந்தை
ஏதலன்மிகுதியெல்லாமிடையிற்றபின்றையென்றன்
சோதனைநோக்கிச்செய்திதுடிப்பிலையென்னச்சொன்னான். (ஃ)

மாதலி அவ்வாறே செய்வேனெனல்.

வள்ளனின்கருத்துமாவின்சித்தையுமாற்றலார்தம்
உள்ளமுமிகையுமுற்றகுற்றமுமுறுதிதானும்
கள்ளமில்காலப்பாங்கருமமுங்கருதேனுகின்
தெள்ளிதென்விஞ்சையென்றுனமலனுஞ்சீரிதென்றான். (எ)

மகோதரன் தன்னை இலக்குமணனெடுபோர வனுப்பவேண்டுதலும்
இராவண னவ்வாறேசெய்தி யென்றலும்.

தோன்றினனிராமனீதாற்புரத்தான்றாத்தேர்மேல்
என்றிருவருக்கும்வெம்போரெய்தியதிடையேயாரோர்
சான்றெனநிற்றல்குற்றத்தருதியால்விடையீண்டென்றான்
வான்றொடர்குன்றமன்னமகோதரனிலங்கைமன்னன். (அ)

அம்புயமனையகண்ணன்றன்னையானரியினேறு
தம்பியைத்தொலைத்ததென்னத்தொலைக்குவென்தொடர்ந்துசின்ற
தம்பியைத்தடுத்தியாயிற்றக்கனேகொற்றமென்றான்
வெம்பிகலரக்கனஃதேசெய்வேனென்றவனின்மீண்டான். (கூ)

மகோதரன் இராமன்மேற்றேர்விடக்கூறுதல்.

மீண்டவனிளவலின்றபாணியின்விளம்காமுன்னம்
ஆண்டகைதெய்வத்திண்டோணுகியதனுருக்காலே
மூண்டெழுவெகுளியோடுமகோதரன்வெருண்டுமூட்டத்
தூண்டுதிதேரையென்றுசாரதிதொழுதுசொன்னான். (கூ)

மகோதரனைச் சாரதிதடுத்தல்.

எண்ணருங்கோடிவெங்கணிராவணரேயுமின்று
நண்ணியபொழுதுமீண்டேடப்பரோடிடப்பதல்லால்

அண்ணறன்ரூற்றங்கண்டாலேயநீகமலமன்ன
கண்ணனேயொழியவிப்பாற்சேறலேகருமமென்ரூன். (கச)

மகோதரனிராமனேடு போருதல்.

என்றலுமெயிற்றுப்பேழ்வாய்மடித்தடாவெடித்துநின்னைத்
தின்றனனெனினுமுண்டாம்பழுதெனச்சிற்றஞ்சித்தும்
குன்றனதோற்றத்தான்றன்கொடிகெடுத்தேரினேரே
சென்றதவ்விராமன்றிண்டோள்விளைந்ததுதிமிலத்திண்போர். (கஉ)

பொற்றடந்தேருமாவும்பூட்கையுமிலங்குவாட்கைக்
கற்றடந்திண்டோளாளுருருங்கியகடல்களெல்லாம்
வற்றியவீராமன்வாளிவடவனல்பருகவென்ரூன்
ஒற்றைவடந்தேரோடுமகோதரனொருவன்சென்ரூன். (கங)

அசனியேறிருந்தகொற்றக்கொடியின்மேலரவத்தேர்மேல்
குசையுறுபாகன்றன்மேற்கொற்றவன்குலவுத்தோண்மேல்
விசையுறுபகழிமாரிவித்தினுன்விண்ணிலேடும்
திசைகளும்திழியவார்த்தான்றீர்த்தனுமுலவல்செய்தான். (கச)

இராமனம்பால் மகோதரனிறத்தல்.

வில்லொன்ரூற்கவசமொன்ரூல்விறலுடைக்காமோரொன்ரூல்
கல்லொன்றதோளுமொன்ரூற்கழுத்தொன்ரூற்கடிதின்வாங்கி
செல்லொன்றுக்கணையாலேயன்சித்திரனுன்செப்பிவந்த
சொல்லொன்ரூய்ச்செய்கையொன்ரூய்த்துணித்தனனரக்கன்றஞ்சி

மோதரன்முடித்தவண்ணமூவகையுலகத்தோடும்
மாதிரமெவையும்வென்றவன்ரூழிலரக்கன்கண்டான்
சேதனேயுண்ணக்கண்டான்செலவிடுசெலவிடென்ரூன்
சூதனுமுகேத்தண்டச்சென்றதுதுரகத்தின்டேர். (கக)

பனிப்படாதின்றதென்னப்பரக்கின்றசேனைபாறித்
தனிப்படாருனினின்னுந்தாழ்கிலனென்னுந்தன்மை
துனிப்படாதின்றவீரனவனென்றுகோக்காவண்ணம்
குனிப்படாதின்றவில்லாலொல்லையினூறிக்கொன்ரூன். (கஎ)

இராவணன் துன்னிமித்தங்கள் காண்டல்.

அடல்வலியரக்கர்ப்போழ்தண்டங்களெழுத்துமண்மேம்
கடல்களும்வற்றவெற்றிக்கால்களிளர்த்துடற்றுங்காலே
வடவரைமுதலவானமலைக்குலஞ்சலிப்பபோன்று
சுடர்மணிவலயஞ்சித்தத்துடித்தனவிடத்தொற்ரோள். (கஅ)

வேறு.

உதிரமாரிசொரிந்ததுலகெலாம்
அதிரவானமிடித்ததருவரை
பிதிரவீழ்ந்ததசனியொளிபெறுக்
கதிரவன்றனையூருங்கலந்ததால். (கக)

வாவும்வாசிகடிங்கினவாங்கலில்
ஏவும்வெஞ்சிலைநாணிடையிற்றன
காவும்வாயுமுலர்ந்தனகாண்மலர்ப்
பூவின்மாலைபுலால்வெறிபூத்தலால். (உ0)

எழுதவீணைகொடேந்துபதாகைமேல்
கழுதுங்காகமுமொய்த்தனகண்கணீர்
ஒழுகின்றனவோடிகலாடன்மாத்
தொழுவினின்றனபோன்றனசூழிமா. (உக)

இன்னவாகியிமையவர்க்கின்பஞ்செய்
துன்னிமித்தங்கடோன்றினதோனறவும்
அன்னதொன்றுமறிந்திலனற்றுமோ
என்னைவல்லமனித்தனென்றெண்ணுவான். (உஉ)

வீங்குதேர்செலும்வேகத்துவேலிகீர்
ஓங்குநாளிலெனுதுங்குமுலகுபோல்
தாங்களாற்றலிலார்தமோறித்தாம்
வீங்கினரிருபாலுகெருங்கினர். (உங)

இராம விராவணயுத்தம்

கருமமுங்கடைக்கண்ணுமுஞானமும்
அருமைசேருமவிஞ்சையும்விஞ்சையும்
பெருமைசால்கொடும்பாவமும்பேர்கலாத்
தருமமும்மெனச்சென்றெதிர்தாக்கினர். (உச)

ரெமொராயிரந்தாங்கியசேடனும்
உரவுகொற்றத்துவணத்தரசனும்
பொரவுடன்றனர்போலப்பொருந்தினர்
இரவுகண்பகலும்மெனவேற்றனர். (உஎ)

வென்றியர்திசையானெகுண்டன
ஒன்றையொன்றுமுனிந்தவுமொத்தனர்
அன்றியுங்கரிங்கமுமாடகக்
குன்றமன்னவனும்பொருங்கொன்கையார். (உஅ)

துவனவிலலின்பொருட்டொருதொல்லோன்
எவனவீசனென்பார்பொரவேற்றெதிர்
புவனமூன்றும்பொலங்கழலாற்றொடும்
அவனுமச்சிவனும்மெனவாயினர். (உஎ)

கண்டசங்கரான்முகர்கைத்தலம்
விண்டசங்கத்தொல்லண்டம்வெடிபட
அண்டசங்கத்தமர்தமார்ப்பெலாம்
உண்டசங்கமிராவண னுதினன். (உஅ)

(இ-ன்.) கண்ட ஸ்ரீராமபிரானைத்தரிசித்துநின்ற, சங்கர நான்முகர்-வெனும், பிரமனும், கைத்தலம்-கூப்பியகைகள், விண்டு-அத்தொழிலில்நின்றும் நீங்கும்படி, அசங்கரடுங்கவும், தொல்லண்டம்-பிரமண்டத்தில், வெடிபட-மாறுலியுண்டாகவும், அண்டம்-விண்ணுலகத்தில், சங்கத்தமர்தம்-தேவர்கூட்டத்தினது, ஆர்ப்பெலாம் (களிப்பினாலவாரத்தை யெல்லாம்) உண்ட-தொலைத்த, சகலம்-சங்கை, இராவணனுதினன்-இராவணன்முழக்கினன்.(எ-று)

விண்டு-செயவெனச்சத்திரிபு, இத்தொழிலானே கூப்பல்பெற்றும் எல்லாப்படைப்புக்களினும் பிரமண்டம்முற்பட்டதாகலினதனைதொல்லண்டமென்றார். அசங்கவெடிபட வெண்ணுங்காரியப்பொருளாகிய வினையெச்ச மிரண்டடுக்கி ஊதினனென்னும்வினைகொண்டன. சங்கத்தமர்தம் என்பதை அமரர்தஞ்சங்கமெனக் கூட்டுக. சங்கரநான்முகர் கைத்தலம் விண்டசங்கமெனவே ஏனையோரது கண்டலக்கம் சொல்லவேண்டுவதின்றாயிற்று.

சொன்னசங்கினதோசைதுளங்குற
என்னசங்கென்றிமையவரேங்குற
அன்னசங்கைப்பொறுமையினரியன்
றன்னவெண்சங்கத்தானுமுழங்கிற்றால். (உக)

அய்யனேம்படைதானுமடிற்தொழில்
செய்யவத்தயல்சின்றனதேவரில்
மெய்யனன்னவைகண்டிலன்வேதங்கள்
பொய்யிறன்னைப்புலன்றெரியாமைபோல். (உ0)

ஆசையும்விசும்புமலையாழியும்
தேசமுமலியுந்தெடுத்தேவரும்
கூசவண்டங்குலுக்கக்குலுங்கொடார்
வாசவன்சங்கைமாதலிவாய்வைத்தான். (உக)

தமிலவாளியரக்கன்றுரப்பன
விமலன்மேனியின்வீழ்ந்தன்முன்னமே

* கமலவான்முகஅடியர்கட்கடை
அமலமேனியிற்றைத்தவநந்தமால். (கூ2)

சென்றதேரோரிரண்டொடேஞ்சேர்த்திய
குன்றின்வெங்கட்குதிரைகுதிப்பன
ஒன்றையொன்றுற்றெரியுகநோக்கின
தின்றுதீர்வனபோலுஞ்சினத்தன. (நகூ)

கொடியின்மேலுறைவீனேயுங்கொற்றம
இடியினேறுமுறையினிடித்தன
படியும்விண்ணும்பரவையும்பண்முறை
முடியுமென்பதோர்மூரிமுழக்கினால். (கூச)

ஏழுவேலையுமார்ப்பெடுத்தென்னலாம்
வீழிவெங்கணிராவணன்வில்லொலி
ஆழிகாதன்றிலேயொலியண்டம்வீண்
டேழிபேர்வுழிமாமழையொத்ததால். (கூடு)

ஆங்குநின்றவநுமனேபாதியாம்
வீங்குவெஞ்சினவீரரவிழுந்தனர்
ஏங்கிநின்றதலாலொன்றிழைத்திலர்
வாங்குசிந்தையர்செய்கைமறத்துளார். (கூக)

ஆவதென்னைகொலாமென்றறிகிலார்
ஏவர்வெல்வரென்றெண்ணலரேங்குவார்
போவர்மீள்வர்பதைப்பர்பொருமலால்
தேவருந்தங்கள்செய்கைமறத்துளார். (கூஎ)

சேணவந்தரநோக்கலுந்திண்சரம்
பூணுமுந்தினசிந்தினபூமழை
காணவந்தகடவுளர்கையெலாம்
ஆணவத்துணையாருளராவரே. (கூஅ)

நீண்டமின்னெலாவெனநிலவில்
பூண்டிரண்டிடைதிர்ந்தவும்போன்றன
ஆண்டவில்லிதன்வில்லுமாக்கன்றன்
நீண்டவல்லரில்லாதசிலையுமே. (கூக)

அரக்கனன்றெடுத்தார்க்கின்றவார்ப்பும்போர்
பொருப்புமெய்விற்றெழிப்புமுண்டேகொலாம்
குரைக்கும்வேலையுமேகக்குழாக்களும்
இரைத்திடிக்கின்றதின்றுமொரீறில. (அ0)

* கமலமுகவானகரடியர் என்றும்பாடம்.

மண்ணிற்செல்வனசெல்லினுமாசற
எண்ணிற்சூன்மழையல்லவிராவணன்
கண்ணிற்சிந்தையதிக்கடவேகத்த
விண்ணிற்செல்வன விண்ணின் றுவீழ்வன. (சக)

மால்கலங்கலில்சிந்தையன்மாதிரம்
நால்கலங்கநகுந்தொறுநாவொடும்
கால்கலங்குவதேவர்கணமழைச்
சூல்கலங்குமிலங்கைதுளங்குமால் (சஉ)

இக்கணத்துமெறிப்பதடித்தெனச்
செக்கர்மேகத்துதிர்க்குமெருப்பெனப்
பக்கம்வீசும்படர்சுடர்பஃறிசை
புக்கபோதப்பொடிப்பனபோக்கில. (சங)

கொற்றம்பிற்கொடுகொள்ளுதல்கோளிலாச்
சிற்றையாளனைத்தேவர்தம்சேமொடும்
பற்றிவானிற்சுழற்றிப்படியின்மேல்
எற்றுவேனென்றுரைக்குமிரைக்குமால். (சச)

தடித்துவைத்தன்ன வெங்கணைதாக்கற
வடித்துவைத்ததுமானுடற்கேவலி
ஒடித்துத்தேரையுதிர்த்தொருவில்லொடும்
பிடித்துக்கொள்வெண்ணெயெனப்பேருமால். (சடு)

வே று.

பதைக்கின்றதொர்மனமும்மிடைபடர்கின்றதொர்சினமும்
விதைக்கின்றனபொறிபொங்கினவிழியும்முடைவெய்யோன்
குதைக்கின்றனநிமிர்வெஞ்சிலைகுழையக்கொடுக்கடுக்கால்
உதைக்கின்றனசுடர்வெங்கணையுருமேறெனவெய்தான். (சக)

உருமொப்பனகணலொப்பனவூற்றத்தருகூற்றின்
மருமத்தினுறழிற்பனமழையொப்பனவாலோர்
கிருமித்தனபடைப்பற்றநிமிர்வுற்றனவமிழ்தப்
பெருமத்தினேமுறைசுற்றியபெரும்பாம்பினும்பெரிய, (சஎ)

துண்டப்படுதெடுமேருவைத்தொளைத்துன்னுறைதொக்கா
தண்டத்தையும் † பொதுத்தேகுமென்றிமையோர்களுமயிர்த்தார்
கண்டத்தெறுகணைக்காற்றினைக்கருணைக்கடல்கனகச்
சண்டச்சரமழைகொண்டவையிடையேயடத்தடுத்தான். (அ)

† பொதுத்த-துவாரஞ்செய்து,

உடையான்முயன்றெருகாரியமுறுதீவினையுடற்ற
இடையூறுறச்சிதைத்தாங்கெனச்சரஞ்சிந்தினவிறலும்
தொடையூறினகணைமாரிகடொகைதீர்த்தனதுரந்தான்
கடையூறுறுகணைமாரிகள்கால்வீழ்ந்தெனக்கடியான். (சக)

இராவணன்போர்த்திறங்கண்டு சிவனுநீதிகைத்தல்.

விண்போர்த்தனதிசைபோர்த்தனமலைபோர்த்தனவிமையோர்
கண்போர்த்தனகடல்போர்த்தனபடிபோர்த்தனகலையோர்
எண்போர்த்தனவெறிபோர்த்தனவிருள்போர்த்தனவென்னே
நின்போர்த்தொழிலென்றுனையினுரிபோர்த்தவன்றிகைத்தான். ()

அல்லாலெடுபெருந்தேவருமறைவாணருமஞ்சி
எல்லாருந்தங்கரங்கொண்டிருவிழிபொத்தினரிருந்தார்
செல்லாயிரம்விழுங்காலுகும்விலங்கொத்தனுசேனை
வில்லானனுமதுகண்டவைவிலக்குந்தொழில்வேட்டான். (இக)

செந்தீவினைமறைவாணனுக்கொருவன்சிறுவிலோளன்
முந்நீர்ந்தொருணவின்பயனெனலாயினமுதல்வன்
வந்நீர்தனவடிவெங்கணையனையான்வருத்தமைத்த
வெந்தீவினைப்பயனைத்தனவரக்கன்சொரிவிசிகம். (இஉ)

நூறுயிரவடிவெங்கணைநொடியொன்றினின்விடுவான்
ஆறுவிறன்மறவோனவைதனிநாயகனறப்பான்
கூறுயினகனல்சிந்தினகுடிக்கப்புனல்குமுகிச்
சேறுயினபொடியாயினதிடராயினகடலும் (இங)

வில்லாற்சரந்துறக்கின்றவற்குட்னேமிடல்வெம்போர்
வல்லானெழுமழுத்தோமரமணித்தண்டிருப்புலக்கை
தொல்லார்மிடல்வாளுசக்கரஞ்சூலம்மிவைதொடக்கத்
தெல்லாநெடுங்கரத்தாலெடுத்தெறிந்தான்செருவறிந்தான். (இச)

வேலாயிரமழுவாயிரமெழுவாயிரம்விசிகத்
கோலாயிரம்பிறவாயிரமொருகோல்படக்குறைவ
காலாயினகனலாயினவுருமாயினகதிய
சூலாயினமழையன்னவன்றெடைபல்வகைதொடுக்க. (இடு)

ஒத்துச்செருவிளக்கின்றதொரளவின்றலையுடனே
பத்துச்சிலையெடுத்தான்கணைதொடுத்தான்பலமுகிலாத்
தொத்துப்படநெடுந்தாரைகள்சொரிந்தாலெனதுரந்தான்
சுத்துக்கொடுநெடுங்கோல்படகளிருமெனக்கொந்தித்தான். (இசு)

ஈசன்விடுசரமாரியுமெரிசிந்துறுதறுகண்
தீசன்விசரமாரியுமிடையெங்கணுஞ்செருக்கத்

தேசம்முதலெம்பூதமுஞ்செருக்கண்டனசெருக்கிக்
கூசம்மயிர்பொடிப்பம்றனவனலாயினகொடிய. (நிஎ)

வேறு.

மந்தரக்கிரியெனமருத்துமாருதி
தந்தவப்பொருப்பெனபுரக்கண்டாமெனக்
கந்தருவர்கர்விசிம்பிற்கண்டென
அந்தரத்தெழுந்தவவ்வரக்கன்றேரரோ. (நிஅ)

எழுந்துயர்தேர்மிசையிலங்கைக்காவலன்
பொழிந்தனசரமனழையுருவிப்போதலால்
ஒழிந்ததுமொழிலெதென்னவொல்லெனக்
கழிந்ததுகவிக்குலமிராமன்காணவே. (நிக)

ராமன்மாதலியை ரதத்தினவிரைவின்மே லோட்டச்சொல்லுதல்.

முழவிடுதோளொடுமுடியும்பஃறலை
வீழவிடுவேனினிவிசும்புசேமமா
மழவிடையனையநம்படைஞர்மாண்டனர்
எழவிடுதேரையன்றிராமன்கூறினன். (கo)

ராமஇராவணர்கள் இரதங்களில்வானத்திற் சுழன்றுபோடிப்போதுதல்

அந்தஞ்செய்குவனெனவறிந்தமாதலி
உந்தினன்றெரெனுமுழிக்காற்றினை
இந்துமண்டிலத்தின்மேலிரவிமண்டிலம்
வந்தெனவந்ததம்மானத்தேரரோ. (கக)

இரிந்தனமழைக்குலமிழுத்திக்கெலாம்
முரிந்தனவுடுக்குலமுதிர்ந்துசிந்தின
தெரிந்தனதெடுவரைக்குடுமிநேர்முறை
திரிந்தனசாரிகைதேருந்தேருமே. (கஉ)

வலம்வருமிடம்வருமறிவாலெடு
நிலம்வருமிடம்வலதிரும்வேலியும்
அலம்வருங்குலவரையனைத்துமண்டமும்
சலம்வருங்குயவனதிகிரித்தன்மைபோல். (கங)

எழும்புகழிறைவன்றேராரக்கன்றேரிதென்
றழுந்திருள்பொழிதினெவ்வுலகுஞ்சேர்வன
தழும்பியதேவருந்தெரிவுதந்திலர்
பிழம்பினதிரிவனவெண்ணும்பெற்றியார். (கச)

உக்கிலாவுடுக்களுமுருள்கடாக்கலின்
செக்கிலாமலைகளுமெருப்புச்சிந்தலின்

வச்சிலாத்திசைகளுமுதிரம்வாய்வழிக்
கச்சிலாவுயிர்களுமிலைக்காண்பன (கூடு)

இந்திரனுலகத்தாரென்பரென்றவர்
சந்திரனுலகத்தாரென்பர்தாமரை
அந்தணனுலகத்தாரென்பரல்லரால்
மந்தரமலையினுரென்பர்வானவர். (கசு)

பாற்கடனலனுரென்பர்பல்வகை
மாக்கடலினுக்குரவ்வரம்பினுரென்பர்
மேற்கடலாரென்பர்கிழக்குளாரென்பர்
ஆர்க்கடையுருமென்பரறிந்தவானவர். (கஎ)

மீண்டனவோவென்பர்விசும்புவிண்கெக்
கீண்டனவோவென்பர்கீழவோவென்பர்
பூண்டனபுரவியோபுகியகாற்றென்பர்
மாண்டனவுலகமென்றணங்கும்வாயினர். (கஅ)

எழுடைக்கடலினுக்கீவொரேழினும்
எழுடைமலையினுமுலகொரேழினும்
சூழுடையண்டத்தின்சுவர்களெல்லையா
ஊழியகாற்றெனத்திரிந்தவோவில. (கக)

உடைக்கடலேழினுமுலகமேழினும்
இடைப்படுக்கீவினுமலையொரேழினும்
அடைக்கலப்பொருளெனவரக்கன்வீசிய
படைக்கலமழைபடுதலியின்பான்மைய. (எ0)

ஒறுத்துலகனைத்தையுமுழனுமோட்டிடை
இறுத்திலவிராவணனெறிந்தவெய்தண
அறுத்ததுத்தடித்ததுமன்றியாரியன்
செறுத்தொருதொழிலிடைசெய்தில்லையால். (எக)

விலங்கலும்வேலையுமேலுங்கீழரும்
அலங்கொளிதிரிதருமுலகனைத்தையும்
கலங்குறத்திரிந்ததோருழிக்காலக்காற்
றிலக்கையையெய்தின விமைப்பின்வந்ததோ. (எஉ)

இருவர்தேர்களிலுழள்ள குதிரைகளின்றிறம்

உய்த்துலகனைத்தினுமுழன்றசாரிகை
மொய்த்ததுகடலிடைமணலின்மும்மையால்
வித்தகர்கடவியவிசயத்தேர்ப்பரி
எய்த்திலவியர்த்திலவிரண்டுபோலவும். (எக)

இராமன்தேரிலுள்ள இடிக்கொடியை இராவணனறுத்தெறிதல்.

இத்திரன்றேரின்மேலுயர்ந்தவெற்றொழில்
உந்தரும்பெருவலியுருமினேற்றினைச்
சத்திரனையதோர்சரத்தினுற்றரை
சித்தனிராவணனெரியுஞ்செங்கணான். (எச)

சாய்ந்தவல்லுருமுபோயரவத்தாழ்கடல்
பாய்ந்தவல்லுருமென முழங்கிப்பாய்தலும்
விண்ணுடருக்கிங்கிவன்மேனிவிளக்கக்காணலாமென்பார்
பெண்ணுளிக்கொருத்திபெறும்பின்னேயேயிங்கிவனென்பார்
எண்ணுமதுவந்தெதிர்ப்படுமேலிவன்கையாலென்படுமென்பார். (கஙo)

மண்கைதாழவருமிதுவோர்மலையென்பாராண்வடிவென்பார்
திண்கையொன்றுலெடுக்குமரண்மிலையையென்பார்தினமுகத்த
கண்கனென்பாரல்லவெழுங்கனலேயென்பார்கண்டமடப்
பெண்களாளரிவ்வண்ணம்பேசப்பெருவீதியைக்கடந்தான். (கஙக)

கண்ணுர்நுதலானருளிய திண்கவசமிட்டுக்கழல்கட்டித்
திண்ணாவம்புறத்தார்த்துச்செம்பொற்றேரின்மிசையேறி
மண்ணேர்சூலயத்தானவர்கண்மறுகியோடமனங்கலங்கி
விண்ணேர்வெருவச்சிலையேந்திமேகநாதன்புறப்பட்டான். (கஙஉ)

இலங்கைவேந்தனிலங்கியவாளிறுகவீக்கியெதிரிகளால்
கலங்கலில்லாத்திண்கவசங்கட்டிவீரக்கழலார்த்து
விலங்கன்மேன்மின்பாந்தெனவீரபட்டநுதல்விசித்துத்
தலங்கொணெஞ்சன்வரைநெளியவேறிணன்பொற்றடத்தின்டேர். ()

தேருமாவுஞ்சினக்களிறுஞ்செறிந்துசெல்லவழிகாணர்
வீராணர்பின்னின்றுர்முன்னின்றுரையிகலெருக்கிப்
பேரும்பேருமெனவுரைப்பப்பேரும்பேருமிடமில்லா
ஊருந்தேரும்வருத்தவன்றுணெனுமுறியானெனவுரைத்தார். (கஙச)

உமையாள்பாகன்வரையெடுத்தவுயர்தோளரக்கன்படையெழுச்சி
சமையாதலகெங்கணுறையத்தரணியெழுந்தடங்குவி
அமையாதோங்கிக்கண்மறைப்பவகல்வானத்திலமரர்கள்கண்
இமையாதழியவெமையிழைத்தோனிம்பைசெய்தானெமக்கென்றார்.

மதுவின்மனைவியும் இராவணன் சிற்றன்னையுமான தம்பிநசி
இராவணனைச் சமாதானப்படுத்துதல்.

மேகநாதன்முன்செல்லவெய்யதம்பிபின்செல்ல
சாகமனையபுயத்திலங்கைகாதன்மதுவின்புரகண்ணச்
சோகமேவுமனத்தினளாய்த்துணைக்கண்ணருவிசோரவிட
வேகமதுவின்றேவியவன்விளக்குங்கழற்கான்மிசைவீழ்ந்தாள். (கஙசு)

தாளின்விழுந்ததாயர்தமைத்தாங்கியெடுத்துத்தசக்கிரிவன்
கேளிதென்சொல்லுன்மனத்துக்கேதமதனைவிடுதிவினைக்
கோளைவிதியையார்கடப்பாரென்றுகூறக்கொடியிடையாள்
மீளவவன்றனடிவீழ்ந்துவிம்மிவிம்மியிவைவிளம்பும். (கசுஎ)

மக்களிழந்தவிடும்பையினுமனையாளிழந்தவிடும்பையினும்
மிக்கவிடும்பையொவ்வாதவிதவையிடும்பையெனவிளம்பத்
தக்கதலனென்கழுத்திற்றூலிதந்தருளென்று
தொக்கமணிப்பூண்மார்பனைத்தொழுதுபின்னுமிவைசொல்லும். (கசுஅ)

விட்டுவிளங்குமணிமுடியாய்வேதஞ்சொன்னபிரமாதி
எட்டுமனத்திலொருமணமாமரக்கர்குலத்தினியல்பறிதி
கட்டுமெரியகாவலியுங்கலக்கிப்புக்குக்கன்னியரை
மூட்டியிவரைக்கொடுபோந்துவேட்கைமுறையேயெனமொழிந்தான். ()

என்றுசிறுதாயிவைகூறவெல்லாப்பிழையுமுனக்காக
இன்றுபொறுத்தோமுன்கணவனிமையோருலகங்கைக்கொள்ள
ஒன்றுமனத்தோனுமெனஞ்சேடொக்கநடக்கவுரைத்தியென
கன்றிதென்றுதியின்மதலைகல்லான்சென்றுகண்ணுற்றான். (கசஅ)

இராவணன் மதுவில்லில் விருந்துண்டல்.

உறக்கநீங்கியிராவணனின்னுறவுவேண்டியிக்கரின்
புறத்தினின்றுனவலுமெம்பொருந்தியினியபுசன்றவற்குத்
துறக்கம்வெல்லத்துணைப்படுதியென்றுதாயமொழிசொல்ல
மறுக்கிலாதமதுவிலங்கைமன்னன்றன்னைவந்துற்றான். (கசக)

கொற்றவரக்கன்மதுவந்துகொண்டாடப்போயவனில்லம்
உற்றமதுசெய்பூசனைகொண்டுவந்தகொருநாளினிதிருந்து
பிற்றைவைகல்பெருஞ்சேனைசூழவேகிப்பெருவினைகள்
அற்றதவத்தோர்பயிலிமயத்தனகாபுரியினையலிறுத்தான். (கசஉ)

இராவணனளகாபுரத்துச் சோலையை யடைதல்.

அரவம்பெருகும்பெருஞ்சேனையரக்கர்கோமானளகையயல்
குரவஞ்செருந்திசுரபுன்னைகோலத்தமாலங்குளிர்சந்தம்
மரவங்குருந்தம்பாடலஞ்சோகமௌவலாதிமரனெருங்கி
இரவும்பகலுந்தெரியாதவிருள்பூம்பொழிலையெய்தினான். (கசகூ)

வஞ்சமில்லாயோகியர்தம்மனம்போற்றெளிந்தமங்கையர்தம்
நெஞ்சுபோலமிகவாழ்ந்துசிலப்படாதநெடுநீரில
கஞ்சமலர்ப்பாசடைப்பள்ளிக்காதற்சேவலன்னமதன்
தஞ்சமாயபெடையோடுந்தழுவித்துயிலுந்தடத்தினதே. (கசச)

ஆடற்றெய்வமடைந்தையருமமர்களும்வந்தவ்விடத்துக்
கூடிக்கலவியமுதுண்டுகொழும்பூம்புனற்குளிர்சோலை

வாடைக்கன் றவந்தசைபபமயில்களாடவண்டினங்கள்
பாடக்கண்டாங்கினிதிருக்கும்படிகத்தலம்பூம்பள்ளியது. (கசஇ)

சூரியாத்தமனம்.

அந்தவரக்கனப்பொழிலினழகைநோக்கியளவில்லா
இந்தமாயப்படையெழுச்சியாவர்மேலென்றறியாது
சிந்தைகலங்கிச்செஞ்சுடரோனிவண்முனிற்கைதாமென்
றந்திநிரைநீர்ப்பெருங்கடலுளொளிப்பான்போலக்குவித்தானால். (கசக)

சந்திரோதயம்.

மாலியடையமடவார்கண்மனம்போற்செறிந்தவிருளினதாய்
மாலிடையமடவார்கண்மனமுங்கண்ணுவரிவண்டும்
மாலியடையவளர்புயத்துவயவாளரக்கன்வன்னெஞ்சம்
மாலியடையவாடையொடும்வந்ததாழிவளர்திங்கள். (கசஎ)

வெய்யமரீசியினமன்னன்வீழக்கண்டவிருட்குறும்பன்
வெய்யம்புக்கவக்குறும்பைமாய்ப்பான்றேன்றுமதிமன்னன்
மய்கொளாழிஞெர்ந்தார்ப்பமண்ணில்வாழுஞ்சராசரங்கள்
உய்யநிலவாம்படைபரப்பியுதயகிரிவாரணமேற. (கசஅ)

ஞயஞானச்சுடர்விளக்குத்தோன்றத்தோன்றநில்லாத
மாயையெனவுமறத்தினெதிர்வன்றீவினைமண்டிலமெனவும்
சேயவுலகங்காத்தளிப்பானேர்போர்புரியுநீண்முகத்துத்
தீயவரக்கர்நலமெனவந்தீர்ந்ததந்தச்செறியிருளே. (கசசு)

அரம்பைபவருதலு மவனையிராவணன் கண்டுகோழுதலும்

ஆயகாலினன்தென்றலசையவாங்கசரம்பாயப்
பாயதெஞ்சுபதைபதைத்துப்பிணைத்தோளரக்கர்பதியளகை
நாயகன்றன்மகளுயாளகூபரனைகண்ணுவாள்
மேபகாதன்மின்கொடிபோல்விளங்குமரம்பைதனைக்கண்டான். (கஅ0)

ஓடிப்போமினுடவர்களுயிரையிழவாதவன்றியாண்
தேடிக்கொண்மினென்பனபோற்சிலம்புபுலம்பும்பதத்தரவே
ஆடற்கதலியிளந்தண்டினழகையழிக்குங்குறங்காலே
வீடுற்றவரும்விரும்புமெழில்விளங்குமல்குற்றடத்தாலே. (கஅக)

வனவாசச்சீர்மாதவரும்வாணுளோருமற்றவரும்
மனமாலுற்றுவிழுந்தழுந்திம்வலஞ்சேருந்திச்சுழியானைத்
தனமாமலையைத்தாங்குவதொன்றில்லையாதினில்லாதென்
றனுமானத்தாலுண்டாகவுக்குமென்னுமிடையாலே. (கஅஉ)

பூணிற்பொலிந்துபுடைபரந்துபொங்கியெழுந்தமுலையுலகைக்
காணிற்கொல்லுமென்றவற்றின்கண்ணைமறைத்ததிலாலைச்

சேணிற்சுடர்ச்சோபரணத்திகழத்திகழுங்கழுத்தாளே
வாணித்திலத்தினிரைபதித்தவைத்தபவளவாயாளே. (கடுஉ)

நீண்பேரந்துகுழையோடுநெருக்கிமதர்த்தகண்ணுளேப்
பூண்டகொலையிற்புரிசாபப்புருவத்தாளேப்பூரித்தல்
மாண்டமதிபோலுதலாளேமலர்த்தாமரைபோன்முகத்தாளே
ஈண்டுமெலருகும்புகையுமின்றிக்கமழ்பூங்குழலாளே. (கடுக)

வே று.

மோகத்தாலராம்பையை வினுதல்.

கண்மேனங்கவிழ்ந்துகாதற்கடல்பெருக
எண்டிசையும்வென்றவிராவணனர்தாரிப்ப
ஒண்டிறன்மாரனுரத்தோர்கனையுய்ப்பத்
தின்டிறலோய்ந்தாங்கவனினையசித்தான். (கடுடு)

புண்டரிகமாதோபுனமயிலோபொற்கொடியோ
அண்டர்கடைத்தவமிழ்தோவதன்சுவையோ
தண்டதரனிந்தசகத்தினேத்தானீடழிப்பான்
கொண்டதொருகாலமோகோலத்தின்கொல்கலமோ. (கடுங)

விண்ணேருலகெல்லாம்வெற்றவெறும்பாழாக
மண்ணேரிலென்னேவடியடிமைகொள்ளவந்த
பெண்ணேநான்செய்தபெருந்தவத்தின்பேரேவென்
கண்ணேகளேகண்ணேகாமத்தின்றீங்கனியோ (கடுச)

ஆரோவறிதிலேனென்றவளேவந்தணுகிக்
காரோதிபேரழகைக்கண்ணிருபதாக்கவர்த்திக்
கூரேதனக்கிங்குறவேவருன்னுடைய
பேரோதுபெண்ணமிழ்தேபேசென்றவன்பேச (கடுஎ)

இராவணன் அரம்பையைப் பரிசித்தல்.

ஆயவளென்பேரரம்பையளகைக்கு
நாயகன்மைத்தனளகூபரனென்னும்
தூயவன்றேன்றலெனக்கென்றவள்சொல்லத்
தீயவரக்கன்சிரித்தினியசெப்பினான். (கடுக)

தேவரோயாநிதிரிபுவனத்துள்ளோர்கள்
யாயரோயானுமெதிர்ந்தோரைவகிரித்துப்
போவதேயல்லாற்பொதுமகளிராய்ப்பொருடேர்
பார்வையர்க்குமுண்டோபதியென்றவன்பகர. (கஉ0)

அரம்பை இராவணனுக்குப் பதிலுரைத்தல்.

போரார்வேற்கையாய்பொ துமகளீராகியவக்
காரார்குழலியரைக்காதலித்துக்கைக்கொண்டோர்
யாரேனுமாகவவரளவுதாமென்றும்
பாராதபாவையர்கடம்பதியாய்க்கொள்வாரால். (கசுக)

மெய்க்கொண்டவுள்ளத்துமேலோரேயாயிடினும்
பொய்க்கொண்டகித்தையாரேனும்பொதுவாய
மய்க்கொண்டகண்ணர்மனேவியராகித்தம்மைக்
கய்க்கொண்டிருந்தார்க்குத்தப்பக்கடனன்றால். (கசுஉ)

இராவணனரம்பையைப் பற்றுதலும் அவள்வணங்கியுரைத்தலும்.

என்றரம்பைகூறிவிராவணன்மேல்விழுந்து
சென்றவளைப்புல்கப்புகுமளவித்சேயிழையாள்
நின்றாடெய்திநெறியல்லவைசெய்யேல்
குன்றனையதோளாயெனத்தொழுதுகூறுவாள். (கசுந)

சன்மங்கடிந்தபுலத்தியனுக்தாதாபதன்றன்
தன்மைந்தன்மைந்தன்றமையன்வயிற்றுதித்த
கன்மைந்தனெங்கோனைகூபரன்முறையால்
நின்மைந்தனுதலினனியென்குருவென்றாள். (கசுச)

அரம்பையில் இராவணன் பொருந்தக்காமநுகர்த்தல்.

அரிவையிவைவிளம்பவாற்றுதங்கன்
தெரிகணைகள்பாயத்தன்சிந்தைதடுமாறி
ஒருதலையாவின்னுதுகாமமெனவுன்னன்
புரிகுழலைத்தான்பற்றிப்போகவிடத்தானுண்டான். (கசுடி)

வே று.

அரம்பை இராவணனைச் சபித்தல்.

வந்தியாகநீமாதிலமாதர்தம்
சித்தையாலன்றியாரைத்தீண்டினும்
கந்தவார்குழலாள்கற்பெரியினல்
வெந்துவீழ்தியென்றேகினள்விம்மினள். (கசுக)

வே று.

மின்னனையாள்சாலவெருவிவிரைந்தேகித்
தன்னுடையகாதலற்குத்தான்புகுந்தவாறுரைப்ப
அன்னவனுமோகத்தினியிழையைத்தவன்மியால்
தென்னிலங்கைமன்னவன்முன்செய்தபிழையுட்டெளித்தான். ()

அரம்பையினை லிராவணனிழிசெயலுணர்ந்த நளகூபான் சாபமிதல்

கல்லார்புகழ்ளகூபரனெருவன்
இல்லாளைத்தேராதுதீண்டிலிராவணனும்
பொல்லாவொழுக்கத்தான்பொன்முடிகளோடுதலை
எல்லாம்பொடியாகிவீழ்கவெனச்சபித்தான். (கசுச)

இராவணனது விரகதாப வுரைகள்.

கேசகனகமாதனையகொம்புதனைப்பிரிந்து
போகவெடும்பொழுதுபோனவழிபார்த்திருந்து
சோகமுறுமனத்தன்றூயணையின்மீதேறி
தேசமடன்குளிறனையான்வெய்துயிர்த்தான் (கசுக)

நீடுபெரும்பிலர்வலையவீசியிட
ஓடுமிடங்காணுளுளிப்பிடமுமொன்றின்றி
வாடியசிந்தைமதிலிலங்கைமன்னவனைக்
கோடியவின்மதனன்கொல்லத்தொடங்கினனே. (கஎ0)

வென்றிமதனன்விசேரம்பாய்வெம்புண்ணில்
சென்றுதுளைத்துபுகுந்தென்றற்கனலாவி
நின்றவிடந்தேடிலிலைகலங்கிநீயிர்த்தக்
கொன்றுமறியாதுளைந்தீங்கிவையுரைத்தான். (கஎக)

மின்னிடையினர்த்தம்மைவெல்லவரிதென்றெண்ணி
உன்னுடையகாந்தியொழித்தவொளிமுகத்தாள்
தன்னிடைநீசேர்ந்தழல்சொரிந்ததனன்மதியே
எனனிடைநீசேறவுனக்கென்னபிழையான்செய்தேன். (கஎஉ)

தாழ்ந்தாரைக்கொல்லார்தயாவுடையார்தங்கேடு
சூழ்ந்தாரேயாயிடினுஞ்சோலாவலிமதனன்
காந்தாரமென்மொழியான்கண்ணம்பாலேவுண்டு
வீழ்ந்தாரைக்கொல்லுமதுவீரற்கழிவாமால் (கஎங)

நின்றலைக்குமாழிக்குநீளுமிரவுக்கும்
அன்றிலுக்குத்தன்னையடக்குவாரில்லாத
தன்றலைக்கண்ணுயித்தனியேனுயிர்கொள்ளும்
தென்றலுக்குமென்னெஞ்சேற்றமென்னேதேர்ந்திடினே. (கஎச)

செம்பஞ்சின்சேறடியுஞ்சேர்க்குறங்குமல்குலும்
கொம்பஞ்சிடையுங்குவிமுலையுமென்மனத்தைக்
கம்பஞ்செய்தேளுங்கழுத்துங்கவின்முகமும்
அம்பஞ்சுக்கஞ்சுமென்னுயிரகற்றுமே. (கஎடு)

உம்பர்வளநாட்டுமொப்பிலாவுத்தமிகண்
அம்பவளமேலமணிதாளமுன்னிரைத்த
செம்பவளஞ்செவ்வாய்க்கரும்பவடன்செஞ்சொன்மதன்
வெம்பவளந்தாழ்புருவம்வில்லேவிளம்பிடினே. (கஎக)

விண்ணோர்பெருமான்றன்வெற்பெடுத்தவெண்விறல்தீர்த்
துண்ணோவுசெய்தெண்ணயிருணடாள்கேவலமும்
பெண்ணோவவளல்லன்பெண்ணுருவுகொண்டிருந்து
மண்ணோர்கோயெல்லாமாய்க்கவருங்கூற்றே (கஎஎ)

சூரிய வுதயம்

மதியானிவணிகழ்த்தவண்ணம்வேறுக
உதியாமையோரிரவோரூழியாயிற்றென்னக்
கொதியாவரக்கனைமக்கோளிழைக்குங்கொல்லென்று
கதிரோனெங்குவான்போலுதயங்கண்ணுற்றான். (கஎஅ)

வே று.

தேவர் திருமாலே யடைந்திராவணன் வருகை யுரைத்தல்.

தன்னிருநேர்ந்துவெய்யோன்றோன்றிடத்துயரகீங்கித்
தன்னெதிரில்லாவென்றித்தசமுகன்றானேசூழப்
பொன்னுலகத்தைகோக்கிப்புறப்படப்புரைதீர்வானோர்
மன்னுடனதனைக்கேட்டுமாயவனடிவந்துசார்ந்தார். (கஎக)

ஒருங்கியமனத்துளோர்களுன்னெழுமொளியையும்பர்
அருந்திமிழ்த்தையன்பற்கன்னையையகன்றுநீண்டு
திருந்தியகைகால்கண்வாய்செவிதொளிதிகழ்தலாலே
கருங்கட்கமலம்பூத்ததெனத்திகழ்காட்சியானை. (கஎ0)

உண்டிலெனின்றதம்மிலுணர்வலோர்பிணங்கநின்ற
புண்டரீகக்கணைனப்போக்கொடுவரவிலானைக்
கண்டனமென்றோர்க்கென்றுங்காண்பரியானையென்றும்
கண்டிலமென்றோர்கண்டகண்ணனைக்கண்ணிற்கண்டார். (கஎக)

கண்டடிவணங்கிநின்றகடவுளர்தம்மைநோக்கிக்
கொண்டலுங்கடலுமாமைகுன்றிக்கோலமேனி
வண்டுசேர்துளவமாலைமார்பனுமனத்திற்பீடை
உண்டதையுரைத்தீரென்னவும்பர்கோனுரைக்கலுற்றான் (கஎஉ)

மூன்பெமக்கிடரைச்செய்தமூணுலையசுரரோடு
வன்படையரக்கர்வர்க்கம்வழிவழியறுத்துமாற்றிப்
பின்பெமக்கிதமேசெய்துபெற்றதாயென்னப்பேணும்
அன்பலோரலக்கண்வந்தாலாருளார்நீயேயல்லால். (கஎஊ)

சிரத்தொகையறுத்துத்திக்குத்திருத்திசெய்தன்பாற்பெற்ற
வரத்தினன்வலியின்மிக்கோன்மண்ணுலகழித்தின்றெம்மை
நெருக்குவான்சேனையோடிருதர்கோன்வந்துநின்றான்
திருத்திகழ்மார்பயாங்கள்செய்வதென்னென்னச்சொன்னான் (கஅச)

உரைத்தவாசகங்கள்கேட்டவுத்தமனுலகைக்காயும்
அரக்கரையவியநூறியிராவணனயன்பாற்பெற்ற
வரத்தையோர்வழியினுலேமாற்றிமற்றவனீரைந்து
சிரத்தினையறுத்துலீழ்த்துஞ்சித்தைநோய்தீர்ப்பனென்றான். (கஅடி)

தேவாசுரர் தம்மிற் பொருதல்.

என்றரியியம்பக்கேட்டவிந்திரனிமையோரோடும்
தன்றிருநகரஞ்சென்றுசார்தலுந்தருக்கின்மிக்க
வென்றிவேலரக்கர்கோமான்விரிபெருஞ்சேனைசூழச்
சென்றுவிண்ணதிரவார்த்துத்தேவரைத்திகிக்கண்டான். (கஅக)

பிரமன் போர்காண வருதல்.

சேனையோடாக்கணம்மேற்செருச்செயவந்தானென்னு
வானவர்சேனைவெள்ளமறிகடலென்னப்பொங்கி
ஆனதேர்பரிமாவுந்தியரக்கரோடமர்செய்வேலை
ஆனவர்பூசல்காண்பானுதரித்தயன்வந்துற்றான். (கஅஎ)

கொற்றவானவர்கள்விட்டகொடும்படையரக்கர்சேனை
உற்றனவூழித்தீயினுடன்றனதொடர்ந்துகொல்ல
இற்றனகைகால்பொங்கியெழுந்தனருருதிவெள்ளம்
அற்றனதலைகள்பாடியாடினவலகைக்கூட்டம். (கஅஅ)

மின்படையேகோடிவிடித்துவிண்ணோர்கள்செல்லத்
தன்படைமடியக்கண்டதருமுகன்சலித்துத்தன்மேல்
அன்படைநெஞ்சராயிவ்வவனியையழிக்குமாற்றல்
வன்படைத்தலைவர்வானோர்மேற்செலவுருத்துவிட்டான். (கஅக)

சூரியன்பகைவன்கோபத்துன்முகன்றாமகேது
காரியமறியாவெண்றிக்கரன்றிரிசிரத்தோன்போரில்
கூரியதடணன்றீக்கொடுஞ்சுகசாரரென்போர்
பாரியல்போதுமில்லாப்பசாசன்வெம்பாசக்கண்ணன். (கக0)

சுமாலி வதை.

மன்னியபுகழ்மாரீசன்மகோதரனியாயகோபன்
பொன்னியவீரபக்கன்புகைக்கண்ணன்குருதிக்கண்ணன்
தன்னியலகம்பன்கும்பனிகும்பன்வெஞ்சம்புமாலி
துன்னரீண்மொய்ம்பினேஞ்சுழ்தரச்சுமாலிசேர்ந்தான். (கக0)

விட்டெறிசூலத்தண்டுவிறன்மழுவுலக்கைகூர்வாள்
கட்டிநீள்பாசத்தோட்டிகப்பணங்கலப்பையீட்டி
வட்டவேன்முதலாவந்திமழையிடிப்பென்னவார்ப்பக்
கெட்டனர்விண்ணோரைகளிர்த்தனவரக்கர்க்கெல்லாம். (ககஉ)

பொருப்புறழ்களிறுந்தேரும்புரவியும்போகத்தண்டி
இருப்புறழ்த்தண்டுவாளேமுதனெடும்படைகளேந்திச்
செருப்புரிவாளோராளோர்திரண்டனர்செறுத்துத்தம்மே
ஒருப்புரிதந்திநில்லாதுடைத்ததவ்வரக்கன்சேனை. (ககஊ)

இருபடைவீரருள்ளோர்யாவருமெழுந்துசாய்ந்து
பொருவலிச்சுமாலிகோக்கிப்பொருகணைமாரிதூவி
வருபடைமாயங்கண்டவ்வசுக்களோரெண்மராவோர்
செருவலிமிருபொற்றேளார்சென்றவனேடுநேர்ந்தார். (ககச)

ஒண்டிறலோர்கடம்மேலுற்றமர்செய்யுங்காலைக்
கண்டவர்வியப்பஞ்சாரவிந்திரன்கணறுபொங்கி
திண்டிறற்சுமாலிதேரைச்சின்னஞ்செய்தவன்றன்சென்னித்
தண்டினைவாங்கியாற்றற்றடக்கையாற்சுழற்றிவிட்டான். (ககடு)

காலவெந்தண்டமென்னக்கடவுளர்சிற்றமென்ன
ஆலமதென்ன வூழியனலென்னவரனூர்விட்ட
சூலமதென்னமாயோன்சுடர்விடுநேமியென்னச்
சீலமொன்றில்லான்றன்மேற்சென்றதுதேவர்வாழ்த்த. (ககரு)

குன்றின்வீழ்சனியென்னவமரர்கோன்குலிசமென்ன
வென்றிசேர்சுமாலிசென்னிவீழ்த்தவன்வெற்புமேனி
ஒன்றியவங்கமெல்லாமுருத்தெரிவுறுதவண்ணம்
கன்றியகுருதிநீராய்க்கரைத்ததுகதையாங்கூற்றம். (ககன)

மேகநாதன் தேவர்களை யெதிர்த்தலை.

பல்லணைகுளிப்பப்பண்டுபடிக்கொருவீரனென்னச்
சொல்லணையுறப்போர்வென்றதிறுகழற்சுமாலியென்னும்
வல்லணைமுறியவோடுமவ்வளர்படைவெள்ளந்தாங்கி
வில்லணைகட்டிப்போர்த்துவிலங்கினன்மேகநாதன். (ககஅ)

பரியின்மேற்பதாதிதன்மேற்பாய்மதவருவிவேழக்
கிரியின்மேற்செம்பொற்றேர்மேற்கிளர்வலிப்பாகன்றன்மேல்
விரிவுமேற்பதாகைதன்மேல்விறற்கணைவிடுத்தான்வெம்போர்
புரியுமேற்புவனமூன்றும்பொடிசெயவல்லவீரன். (ககக)

சயந்த விந்திரசித்த யுத்தம்.

ஒட்டியபரிதேர்காலாளுலகிடக்கண்டுகின்ற
ஓட்டவெண்குடைமாமௌலிவாசவன்மைந்தன்சிறி

விட்டிலங்கெயிற்றப்பேழ்வாய்மேகநாதன்றனேடு
முட்டினனவனுஞ்சென்றமுடினென்போரின்மூண்டான். (உ00)

இருவருமேகநாதனிவனவன்சயந்தனென்று
தெரிவருக்கமெமையோராற்றிரிபுவனத்துளோர்கள்
வெருவரிருவர்சேனைவியத்துபோர்கண்டுநிற்ப
ஒருவரையொருவர்வெல்லவுற்றமர்புரியுங்காலை. (உ0ச)

ஏழுகமறியவல்லவிராவணியெதிர்த்தோரஞ்ச
மாழுகமறிந்துதூணமோதலிமைத்தனன
கோழுகனென்னும்பாகன்குலாந்திடவவன்றன்மெய்யில்
நீழுகவயிரவாளிசெறிந்திடச்சயந்தன்சீறி. (உ0உ)

ஏகவீரியனுயுள்ளவிராவணியேறதிண்டேர்ப்
பாகன்மேற்பகழிமாரிதூண்டிடப்பாயுஞ்சோரி
வேகமாநொய்திற்பொங்கியோங்கியவெகுளித்தீயின்
மேகநாதன்றன்வாளிவிடுத்தனன்சயந்தன்றன்மேல் (உ0ஈ)

இயங்கியவடவைத்தீயினெரிசினிறத்திற்றைப்ப
மயங்கியசயந்தன்பாகன்மகன்வலிதப்பிலாமை
முயங்கியாங்கவனேக்கொண்டுமூலைக்களங்கடந்துபோகப்
பயங்கினர்வானோரெல்லாம்பாறினர்பரந்தாரெங்கும். (உ0ச)

தன்மகன்மயங்கச்செய்யாடலமகன்றன்தவத்தைத்
தொன்மகன்மைந்தன்றன்பாற்றோன்றியதாயமைந்தன்
புன்மகன்பயந்தவந்தப்புலமகன்சயமும்போரில்
தன்மகன்றனர்வுக்கேட்டசதமகன்சலத்தினிமிக்கான். (உ0ஊ)

யேகஞதனேடிநீதிரன் பொருதல்.

வருகதேரென்னவொல்லைமாதலிகொணர்ந்துநிற்பக்
குரைகழலணிந்துகோலைவிடுத்துத்தன்கோலமார்பில்
திருமணிக்கவசம்வீக்கித்திகழ்ந்ததற்பட்டஞ்சேர்த்தித்
தெரிவையர்திரண்டுவாழ்த்தவேறினன்செம்பொற்றிண்டேர். ()

ஆனகமுரசம்பேரியாழியகவின்கலெல்லாம்
வானகமுழக்கினின்றமுழங்மாகதர்களேத்தத்
தேனகுகோதைமாதைதிரண்டனர்குளிப்பத்தெய்வக்
கானம்வந்தெழுவந்தென்குக்கலந்துகர்திருவர்பாட. (உ0எ)

உருத்திரகணங்களானபதினொருவருமுற்றூரத்
தருக்குறமெண்மராயவசுக்களுஞ்சார்ந்துபோற்ற
மருத்துவிருவர்தாமுமுதலினர்வானோரேத்தச்
செருக்களமதனைநோக்கிச்சென்றனன்றேவர்கோமான். (உ0அ)

வேறு.

இத்துசேகரன்பொருப்பெடுத்ததோளிராவணன்
அத்தவிர்ந்தின்றன்மேலழன்றபோரமர்த்திட
வித்தையானதிண்புயத்துமேகநாதனில்லெனத்
தத்தையைத்தவிர்த்துவந்ததாமேயோதிறினன். (உடக)

வாரிமொண்டுகொண்டெழுந்துமாகமேவிவார்சிலைக்
காரதிர்த்துகொண்டுதூவுகாலமாரியாமென
வீரவெஞ்சிலைத்தடக்கைமேகநாதன்விண்ணகம்
தூரவும்பர்சேனையம்புதுன்றநின்றுதூவினன். (உடஎ)

காறுணிந்தகைதுணிந்தகந்தர்துணிந்தசீர்
வாறுணிந்தமத்தகந்துணிந்தவெண்மருப்பொடும்
தோறுணிந்தவண்மையாவர்சொல்லுவார்துணிந்தவான்
வேறுணிந்தவிற்றுணிந்தவெம்மழுத்துணிந்தவே. (உகக)

உறந்துணிந்தகாறுணிந்தவாறுணிந்தவுற்றமா
சிறந்துணிந்ததார்துணிந்தவார்துணிந்தசிண்பதக்
குரந்துணிந்தகூளியுற்றகுத்துவாளைதீரவுண்
பரந்தவிக்கிரன்பதாதிபட்டதேவர்பட்டினார். (உகஉ)

ஆழியற்றவாணியற்றவச்சுமற்றவற்றதேர்
ஊழியுற்றவாடையாலுலர்த்தகுன்றையொத்தவால்
வேழமுற்றவீரர்விபகைமேகநாதன்வெங்கனத்
தாழியுற்றதேவர்வெண்டயிர்க்குமத்தாயினன். (உகங)

எண்ணகத்தும்பைவீரசேனரூபியாயினும்
விண்ணகத்தும்விண்ணுமூடுவெற்பகத்தும்வேலுழும்
மண்ணகத்துமாதிரப்புறத்தகத்துமானுளோர்
கண்ணகத்துமுள்ளமோர்கருத்தகத்துமாயினன். (உகச)

சந்தவில்லிமூப்புரத்தழற்படச்சரந்தொடும்
அந்தவில்லியுஞ்சினத்தரக்கரோடுதானவர்
சிந்தவில்லியைத்தெடுத்ததேவர்தேவனும்மலால்
இந்தவில்லியொக்குமில்லியெங்குமில்லைமில்லையே. (உகடு)

என்றகூறிதான்மூகத்தனுதிதேவர்யாவரும்
வென்றிவில்லிமேகநாதன்வீரமேவிளம்பியுள்
கன்றதேவரொடுபோர்செய்காய்சினத்தரக்கர்போர்
இன்றுடேமுடிந்ததென்றியம்புகின்றவெல்லையில். (உகஎ)

வேறு.

தும்பகருணன் போருதல்.

அம்பரமுமெண்டிசையுமின் றிரவங்ணரவம்பெருகிடப்
தம்பமதுகொண்டொருதடக்கிரிதடத்துவருகின் றதெனவும்
கும்பகருணன்குருதிகண்கள்வழிந்தவொருகுன்றெனநடந்
தும்பரடைதன்கையொருதண்டுகொடறைந்தனனுலந்துவிழவே. (உகஎ)

அடற்பொருகளிற்றினேயெடுத்தொருகளிற்றினேயடித்துமணிதேர்
தடக்கையினெடுத்தொரிரதத்தினேயடித்தும்வலிதாவுகொடியோன்
படப்பரியினேப்பரியினெற்றியுமெதிர்த்தசுரரைச்சுரரொடும்
கடற்கடையுமத்தெனமிகைப்பொருபடைக்சடல்கலக்கினனரோ. (உகஅ)

கடித்தெயிறுறத்திருகியிட்டுவலிமிக்கதிருமட்டிதனிஞல்
அடித்தெனவுரத்தின்மிசைகுத்தியுமெதிர்த்தசுரரைக்கரமெடுத்
தடித்துமடியிற்படமிதித்துமவரைப்படவுதைத்துமணியார்
முடித்தலைமூளைப்புரளவெற்றியுமுரட்பலடைகளத்துதறினன். (உகக)

முறிந்தனதகர்ந்தனபிளந்தனநெரிந்தனமுரண்டிரள்புணை
பறிந்தனநுகங்களுமொடிந்தனவிரிந்துபரிபாகளுடுபோய்
மறிந்தனவிழுந்தகலமாமெனவழிந்தனவலிந்துகடவும்
செறிந்ததனேயாழிகளகன்றனிதைத்தபொறிதேர்நிரைகளே. (உஉ0)

மூரண்டருமெஞ்சுகண்முறித்தசிலகீள்வயிரமொய்கொள்பணையில்
இரண்டகைகொரிந்தசிலதிண்பதமொடிந்தசிலவிண்பதவியின்
இரண்டுபிடரைகொண்டுவிழுமஞ்சனவிழுந்திரணமொன்றுகளரிப்
புரண்டசிலகொம்புகண்முறிந்தசிலபொங்குமததும்பியினமே. (உஉக)

பரிந்தமிரிவார்குசைபரிந்தமணிதார்கள்பருமங்களுடனே
நெரிந்தவெரிசொன்புறவெளிந்தனகிடந்தனநெடுந்தரமாகச்
சொரிந்ததலைமூளையினதொங்குகுடரோடமரதாலந்தவலியோர்
சரிந்தனர்விண்வானவர்கடானவரடர்ந்தனர்தயக்குபடையால். (உஉஉ)

அருக்கரும்வகக்களுமுருத்திருமுட்பலனேத்தமரரும்
வெருக்கொளெருக்கொடுபொருக்கெனவுடற்று * குடவெஞ்செலியனும்
இரக்கமிலாக்கனேயடர்த்தவனுரத்தடமிரத்தமெழலால்
முருக்கலர்பொருப்பினிகர்த்திடவடிக்கணேமுகிழ்த்தனர்களால். ()

முத்தலையயிற்கனேயமுற்கமிரட்டியொகற்கடைமுரட்
சத்திமழுவச்சிரமுலக்கைகதைசக்கரமுரட்கணேகளாம்
வித்தினேவிதைத்துறுகளச்செருவினிற்பலிவினப்பயிர்விளைத்
தொத்தலைகமொத்தமொணேப்புதியதிட்டனர்களொத்தனர்களே. ()

* குடவெஞ்செலியன்-கும்பகருணன்.

பொழிந்தகணைமாரியுறவெங்கழியகண்டர்தள்புரண்டேல்கலம்
நிழிந்தனபரந்தனசெழுங்குருதியெண்டிசைகிடந்தமலைபோல்
விழுந்தனபெரும்பிணமெழுந்தனகவந்தவினம்வெங்களமெலாம்
ஒழிந்தனரிலாதவகையோடமர்மலைந்தனருலைந்தனர்களே. (உஉ.இ)

இராவணன் பொருதல்.

இப்படியரக்கர்களிமைப்பொழுதினிற்பொருகளத்தவிதலும்
மைப்படிமனத்திரள்புயத்தசமுகத்தன்வடவைக்கொடியதீ
எப்படிகொதித்தமனமப்படிகொதித்தெயிறதக்கிடையான்
வெப்படிமனச்சுரர்மிசைத்தனிரதத்தினேவிடித்தனனரோ. (உஉச)

வேறு.

நீவோர்சிலைகாணெறிந்துசிசாசரேசனிராவணன்
ஒடையானையின்மேலுமாதலியோய்விலாதுயர்தேரிலும
ஆடன்மாவினும்வீராகியவவனிகாவலர்மேலுமா
வாடைகூடியகோடைமாரியின்வாளிமாமழைதூவினான். (உஉ எ)

வெஞ்சரங்கள்பரந்துசென்றுதெருங்குவிண்ணவர்சேனையைப்
பஞ்சரங்கியவங்கியாமெனநின்றுபத்தியெரிந்ததால்
மஞ்சரங்கியமங்கவந்துசெறிந்தகூளிகள்வார்மதக்
குஞ்சரங்களுருண்டதேர்கள்குலைந்தவாசிதாலைத்தவே. (உஉஅ)

அன்னவன்செயல்கண்டுசிந்தையழன்றுவெற்றிலிந்திரன்
இன்னிலென்றெறிதேர்கடாவிதெடுத்திகந்தருங்கிடத்
தன்னெடுஞ்சிலைகாணெறித்ததசக்கரீவனுரத்தினும்
சென்னிமீதும்விடத்திலேறெறழ்தீயவாளிகடூவினான். (உஉக)

அந்தவம்புரிதத்தழுந்தவமாற்றலேதுமழிந்திலா
வெந்தசெம்பனகண்ணிராவணன்வெய்பவாளிகடூவவும்
இந்திரன்கணைமாரியாயவிரண்டுசேனையில்வீரரும்
தந்தமிற்சரமாரிதூவிடவெங்கணுஞ்சரமாயதே (உஉ0)

அரக்கர்சேனையவாசவன்றனனீகவீரழன்றுபோய்
நெருக்கிவேழமுமாளுமாவுநெடுங்களத்துவிழுத்தலும்
தரிக்கிலாதசக்கிரீவன்வெருண்டசோதியைக்குறித்
துரைக்குமென்னுரைகோடியாயினுணர்ந்துகொள்ளெனவோதுவான். ()

தேவர்சேனையிணட்புகத்திகழ்தேர்கடாவுதியாயின்யான்
யாவரும்படநூறியிந்திரனைப்படுத்தவனுதியாம்
ஓவரும்முயிருண்டுபின்னெனமொழியமூவுலகங்களும்
காவலென்னதுவாகநீடரசான்றியீதுகாண்டியால். (உஉஉ)

என்றுபுன்மொழிலோனியம்பவிசைத்தசாரதிமேருவாம்
குன்றுபோலுயர்தேரைவர்ணவர்கூடுசேனையினுள்விடச்
சென்றதேரதுகண்டுதியவரக்கனணினனென்னமே
வென்றிமேவியவிந்திரன்னிவைவிண்ணவர்க்குவிளம்பினன். (உஙங)

என்னைவஞ்சனைசெய்துகொன்றிடவெண்ணுமிந்தவிராவணன்
றன்னைகாணுமவன்றனைத்தளரப்பிணிக்குவெனென்றவன்
முன்னிலாதுவிலங்கியோடமுயங்குதேவர்முடுக்கிய
தென்னிலங்கையரக்கர்கோன்மிருசேனைபாழ்படநூறினன். (உஞச)

அன்னகாலையினூறுயோசனையுள்புருந்தணிகெட்டிடத்
தன்னெடும்படைசாய்நூறுதசக்கிரீவனைவானுளோர்
மன்னவன்படையோடுவந்துவளைப்பவஞ்சவரக்கரத்
தென்னிலங்கைமன்வீடினனெனசொந்துசிந்தையிலங்கினர் (உஞஇ)

அந்தவேலையின்மேகநாதனழன்றுபொங்கியடர்த்துறத்
தந்தைதன்னைவளைத்துவந்துதெருக்குதானையைநூறிய
விந்திரன்றனுரத்துமங்கனைறுதேரினும்வேகமா
உந்துமாதலிமேலும்வாளிகளோய்விலாவகைதூவினன். (உஞசு)

அண்டர்கட்சரசன்னெதிர்ந்தவமர்க்களத்தடையார்களால்
பண்டுபட்டறியாதபாடுபடத்தரிக்கிலனையவன்
கொண்டலொத்தமுழக்கிடைப்பொருகுன்றையொப்பதைவென்றிசேர்
சண்டவுக்கிரகிரியெனுங்கரிதன்னையோர்தொடியேறினன். (உஞஎ)

இந்திரனெடு மேகநாதன் பொருதல்.

எறிஞனயிராபதத்தையினிப்பிழைப்பரிதின்றென
ஆறிரண்டுவரக்கரவ்வழிபாகசாதனனங்கியிற்
சிறிஞனுறுபோரிலாளியெனத்தெசக்கிரீவன்மகன்
எறிஞனுயர்தேரின்மீதமரேசனும்பொரவுற்றனன். (உஞஅ)

வன்னிகொன்றைமிலைச்சுதமபைதரித்தவீசன்வரத்தினுல்
அன்னெடுந்திறன்மேகநாதனடர்த்தபோதகல்வானகம்
தன்னுபேரிருண்மூடமாயையகுப்பநெஞ்சுதளர்ந்திவான்
மன்னுதேவர்களாயினோர்கண்மயங்கியொன்றுமுணர்ந்திலார். (உஞக)

மேகநாதன் இந்திரனைப்பாசத்தால் பிணித்தல்.

செய்வதொன்றறியாதுசிந்தைகலங்கியிந்திரனின்றிடக்
கய்யுமெய்யுமகப்படத்தெறுகாலபாசமிதாமெனும்
வெய்யபாசமுறப்பிணித்தனன்மேகநாதனவிளங்குசீர்
அய்யவெய்யவரக்கரானவராடினர்சுரர்வாடினர். (உசஎ)

வே று.

இந்திரசித்தி ராவணனைக்கண்டே தனது வெற்றியையுரைத்தல்.

வெற்றிறலரக்கர்சேனைமேகநாதன்கைப்பாசத்
திற்றிரண்கட்டுண்டானென்றெறிகடலொலியினுர்ப்பத்
தந்தையைக்குசார்ந்துதாழ்ப்பருமுவகைபொங்க
எந்தைநீகேடடியென்னவிராவணியினையசொன்னன். (உசக)

என்னெதிர்நிற்கமாட்டாதிந்திரனென்கைப்பட்டான்
உன்னெதிரொருவரில்லையுருப்பரிமுதலாயுள்ள
அன்னமென்னடையினருன்னடியினைவருடவைய
உன்னைவானவர்சேவிப்புலகெலாமாடியென்றன். (உசஉ)

இராவணனிந்திரனைவென்ற தெவ்வுலகையும் வென்றதெனல்.

என்றவனியம்பக்கேட்டவிராவணனிருபதாய
தன்றிரடோள்களார்த்தழுவிக்கொண்டினிதுநின்று
பொன்றிண்மணிமாமோலிப்புரந்தரன்றன்னையின்று
வென்றதெவ்வுலகுமன்றேவென்றனன்விரைவினென்றன். (

இந்திரனைச் சிறையிடுதலும் பிரமாதியர் வருதலும்.

இன்னனபலவும்பன்னியிந்திரனேதெங்கள்
பொன்னகரெழுந்துபொங்கியெதிர்கொளப்புகுந்தசேவர்
மன்னவன்றன்னைக்கட்டிவன்சிறைவைத்தகாலை
அன்னவாகனனேமுன்கொண்டமாமுனிவர்வந்தார். (உசச)

பிரமன் இராவணனைப் புகழ்தல்.

வன்றிலங்கேசற்கண்மெலரயன்புகல்வான்வைவேல்
வெற்றிறலுடையவீரவேறுனக்கெதிராருன்றன்
மைந்தனிந்திரனைவென்றுவான்சிறைவைத்தலாலே
இந்திரசித்தென்றெல்லாவுலகுமியம்பப்பெற்றன். (உசடு)

சந்திரமவுலியீசன்றடவரையெடுத்தவன்றோன்
வெந்திறலரக்கர்கோவேவிண்ணவரெனைமுன்கொண்டு
வந்தகாரியமிதாக்கும்வலியுனக்கேறித்தெங்கும்
இந்திரன்றன்னையொல்லையிருஞ்சிறைவிடுதியென்றன் (உசக)

இந்திரசித்தழியாவரம் வேண்டுதல்.

என்றவனியம்பவேண்டியிராவணியியம்புவானிக்
கின்றவன்றன்னைவிட்டால்யான்பெறும்பேறுவேண்டும்
பொன்றிகழ்மேனியாழிப்புவனமுன்னளவும்பொன்று
தென்றானிருப்பதாகவிவ்வரமருள்கவென்றன். (உசஎ)

பிரமன் பிறந்தவை இறக்குமெனல்.

இராவணியினையுறவிதயத்திலெண்ணிப்பார்த்துப்
பாவருமுலகமெல்லாம்படைத்தவன்பகரும்பாருள்
சராசரமானயோனிசார்த்தபல்லுயிர்கட்கெல்லாம்
நிராமயமானநித்தத்துவமிதிங்கென்றான். (உசஅ)

இந்திராசித்திற்குப் பிரமன்வரமளித்தல்.

ஆயதுவிரிஞ்சன்கூறவரக்கர்கோன்மைந்தன்கூறும்
தீயிடைப்பிறந்தெய்வத்தேரினின்றியான்போர்செய்ய
ஆயுவுக்கிறந்திவாராவகையெனக்கருணையென்ன
நீயிதுபெற்றுயென்னிருதன்மற்றிதுகிழத்தும். (உசக)

நிடந்திகழ்மரியையசெந்தாரைவெல்வாணெண்ணித்
தொடங்கியவேள்விமுற்றப்பெற்றிடற்றன்னலார்கள்
அடங்கலுர்தோற்கவேண்டுமெனவயன்பெறுகவென்னத்
தடம்புயத்தரக்கன்மைந்தன்றன்மகிழ்ந்தினையசெய்தான். (உஙo)

இந்திராணைச் சிறைவிடுதல்.

சிறையினடிருத்தவர்த்தத்தேவர்கோன்தன்னைவிட்டு
மறையவன்றனக்குக்காட்டிமானவேள்மருமத்தன்ற
உறுதியர்பொறுக்கலாற்றுதொருவரையெடுத்துதோக்கான்
கறைகெழுவேற்கைவாளரக்கர்காவலன்கவிழ்ந்துநின்றான். (உஙக)

அன்னதன்மையனுய்ந்றவமார்கோன்றன்னைநோக்கிக்
கன்னிகர்தோளாய்முன்புகொளதமனிட்டசாபம்
உன்னைவந்துறுதலாலேயுனக்கிதுவந்ததுன்றன்
பொன்னகர்புகுதியென்றுவிட்டயன்போயினனால். (உஙஉ)

அ-வது. திக்குவிசயப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-ஙிஅ.

ஒன்பதாவது.

கார்த்தவீரியார்ச்சுனப்படலம்.

அரக்கர்கோன்விசயமடங்கலுங்கேட்ட * வாழியானிலியப்பெய்தித்
திரைக்கடலுலகம்வெருக்கொளவரக்கன்செருக்குராட்டேய்மன்னவரில்
ஒருத்தருண்டாகவுரைத்திலையடைத்தவலியுடையரானவரை
உரைத்திநீயென்னவுயர்பரம்பொருளுக்குதவியுண்குமுனியுரைக்கும். (க)

* ஆழியான்-இராமன்.

மாயிருஞாலமடிப்படுத்தெதிர்க்குமருவலரின் றிமண்ணுண்டே
ஆயிரத்திண்டோளருச்சனன் றனக்கும்வாலிக்குமடலழித்தனனத்
தீயவாளரக்கண்ணெனச்செப்பச்செறிபுகழிராக வன்மனத்துத்
தூயமாமுனியேயக்கதையிரித்துச்சொல்லெனமாமுனிசொல்லும். (உ)

உத்தமீர்வேலையுலகிடைவாழுமொளிமுடிமன்னரையோட்டி
அத்தவாளரக்கனுயிரத்திண்டோளருச்சுனனணிகரடைத்திங்
கித்தமாகருக்கிறைவனெவ்விடத்தானிராவணனிகல்செயச்சமைத்து
வத்தனெனவாங்குணர்த்துமினென்னமந்திரித்தலிவர்கண்மொழிவார்.

தெரிவையரோடுருமதையென்னுந்திருந்தியீர்விளையாட்டில்
புரியுஞெஞ்சினனுய்ப்போயினனரசனென்றவர்புகன்றிடக்கேட்டுப்
பொருகழலரக்கனவ்விடமோக்கிப்போகுவான்பூம்பொழிற்சாரல்
விரிபெருஞ்சிகரமாயிரமோக்கிவிளங்குசீர்வித்தையடைந்தான். (ச)

மழைமுகின்முழக்கங்கேட்டெதிர்பொரு துவாளரியேறெதிர்முழங்கும்
முழையுடையதனைமுனிவர்தானவர்கண்முகிழ்நகையரம்பையரோடும்
கழிபெருங்காதலொடும்விளையாடக்காமபோகக்கனிநுகரும்
இழிபுனலருவிதழுவினவாடையிடைதவழ்சாரன்மேவினதை. (டு)

இன்னமாமலையினெழிலினோக்கியிராவணனெழினுரையாட
மன்னியகாஞ்சிதிகழ்வரையல்குல்வஞ்சிநேரிடைசுழியுந்தி [தல்
பொன்னனியாரம்புளினமென்கொங்கைபொருகயல்கண்ணறல்கூந் [ன்
அன்னமென்னடைதேர்ந்துமதையென்னுமரிவையையத்தெரிவுறக்கண்டா

அத்திருகதியிலமைச்சர்களோடுமரக்கர்கோனகமகிழ்ந்தாடி
மைத்திகழ்மிடற்றுவளர்சடையோனமணல்குவித்தருச்சனைசெய்ய
கெய்த்திருண்குழலாரொடுமருச்சுனனுநீர்விளையாடுவானியிர்த்த
கைத்திரளதனுக்கடிவிசைநீரைக்கட்டினன்றெங்கிநின்றெதிர்ப்ப. (எ)

தேங்கியபெருநீருகரைபுரளச்சென்றுகுன்றிருபதிற்றிகழ்தோட்
டீங்குடையரக்கனவன்செயும்பூசைசிதைத்திடத்திகைத்தனன்றிறி
ஈங்கிதுவிளைத்தகாரணமெல்லாமிருவிருமறியினென்றியம்பப்
பூங்கழல்வானோர்புறங்கொடுத்தோடப்பொருசுகசாரணர்போனார். (அ)

போயவர்செறிதோட்பூமிமன்னவர்க்கும்பொருகயற்பூங்குழையார்க்கும்
நேயம்வந்தொன்றிநீர்விளையாட்டிகிழ்வுழிநெடுநிலமன்னன்
ஆயிரக்கையாலாற்றுநீரடைப்பவப்புனலெதிர்த்தமையறிந்து
தீயவர்வந்துதென்னிலங்கேசற்குச்செயதெளிவுறச்சொன்னார். (கூ)

ஆங்கவருரைப்பவமைச்சருந்தானுமருச்சுனனின்றிடமணுகிப்
பூங்கழலரக்கன்பொருதுவெய்துயிர்த்துப்புரவலனமைச்சரைநோக்கி
ஈங்கமர்செய்யவிராவணன்வந்தானென்றுகுன்றுயிரமென்ன
ஓங்கிருந்தோளாற்குணர்த்துமினென்னவுறுவலியமைச்சரீ துரைத்தார்.

தன்றெரிவையர்போற்றளர்த்தகெஞ்சினளுய்த்தராபதியவர்களுந்தானும்
றின்றுபோராற்றினீர்விளையாட்டினிகழ்வுழிநீயமர்புரிதல்
ன்றிதுவன்றுகாளைநீர்பொருமினென்றவர்கவின்றிடவரக்கன்
சென்றுமேல்வீழ்செறுவலியமைச்சரவனெதிர்சென்று போர்மூண்டார்.

தருக்கிலர்மிக்கதராபதியமைச்சர்தம்மொடுந்தசமுகனமைச்ச
ரெருக்கிவந்தெதிர்ப்பநிகழ்ந்ததுபெரும்போர்நெஞ்சமர்நெருக்கினனிரு
செருக்கியசேனைநிருதர்மேலழன்றுசென்றுதாக்கியதுசெந்நீரால் [பன்
முருக்கலர்வனத்துச்செவ்வித்தபடைஞர்மூண்டமர்புரிமூனைக்களமே. ()

வுக்கிரன்மனத்துமாபெரும்பக்கன்மகோதரன்வஞ்சமாரீசன்
செக்கரைநிகருஞ்சம்மயிர்செறிதோட்டீப்புகைகண்ணனேமுதலோர்
சக்கரமூலக்கைதண்டுவேல்குலிசந்தடமழுவாகியசமரத்
துக்கரமுடையவாயுதம்வழங்கவுடைந்ததாலருச்சுனனணீகம். (கூ)

தன்படைசாய்ந்துதன்னிடைவீழத்தரர்பதிநீர்விளையாட்டில்
அன்புடைமாதரஞ்சிமெய்ந்நடுங்கவஞ்சலீரென்றுகையமைத்து
மின்படைவேற்கண்விரிபுனல்விட்டுவெவ்வனலெனக்கொதித்திலங்கை
மன்படைதுரப்பவயப்பிரகத்தன்மற்றவனேடெதிர்மலர்ந்தாள். (கசு)

கோடியமனத்துக்கொடுந்திறலரக்கன்கொற்றவன்மிசைக்கொலைவலியால்
கீடியவுலக்கைநெருப்பெறழ்ந்துறப்பரீறுபட்டிடவதுதண்டால்
சாடிமற்றவனைத்தரைப்படவடிப்பத்தடம்புயமகோதரன்முதலோர்
டுடியவோட்டன்கண்டிலன்சேஞாழிவெற்றியெனவுடன்ருன். (கடு)

தண்டதுவாங்கித்தடக்கையாயிரத்தோன்றன்னெதிர்சமுகனெதிரோர்
மண்டியொன்றெருன்றிற்கறுவுகொண்டிரண்டுமெழுவிடமலேவனவெனவும்
கொண்டலினதிர்த்துக்கொதித்தடர்த்திரண்டுதின்றுபோர்கூடியவென
எண்டிசைக்களிகளிரண்டெதிர்மலேவவென்னவுமிருவரும்பொருதார். [வும்

கூற்றுவனென்னக்கொடுங்கனலென்னக்கொதித்திருதண்டினுலெற்றி
ஏற்றபோர்முகத்திராவணுர்ச்சுனர்களிருவரும்பொருவுழியரக்கன்
காற்றெனமுடுக்கிக்காலலனுரத்துக்கரத்தினுலடித்திடக்கலங்கா
தாற்றினனின்றுகருச்சுனனப்படிவரக்கர்கோனுற்றல்போயழிந்தான்.()

அன்னவன்றனரவறிந்தவாயிரந்தோளருச்சுனனுற்றலினவனைப்
பொன்னெடுந்தோன்களயர்வுறப்பிணித்தப்போதனுற்றுவெம்போரில்
மன்னவன்கைப்பட்டானெனநின்றமகோதரனதிவாளரக்கர் [தான்
நின்னிலென்றவன்மேனெடும்படைதுரப்பநிருபனுநெருப் பெனகொதித்

தண்வோண்முசலஞ்சக்காஞ்சுலந்தடமழுத்தோமராஞ்சில்
பிண்டிபாலங்கோன்முதலவாயுதங்கள்பெருங்கையாயிரங்களால்வாங்கிக்

கொண்டுமேல்வீழ்ந்கொடுத்திரலரக்கர்குலத்துகெட்டோடிடத்துரத்து
திண்டிறனிருபன்திருநகர்புகுந்துதியவன்றனைச்சிறைவைத்தான். (கசு)

கெட்டவாளரக்கர்கிளர்பெரும்பயத்தார்கேடில்சிராவணனமரில்
பட்டபாடெல்லாம்வீடணற்குரைப்பப்பரிவுறுமனத்தினனவன்போய்ச்
சிட்டனுயுள்ளபிதாமகற்குரைப்பச்சிக்ஷதைகொந்தச்சிறைவிடுப்பான்
வட்டமா-மதில்சூழருச்சனன்வாழும்வளநகர்மாமுனிவந்தான். (உ0)

அந்தமாமுனிவனடியினைவணங்கியருச்சனனருச்சனைசெய்தின்
கென்தைநீவந்தகாரணமென்கொலியம்புதியென்றவனிசைப்ப
இந்திராதியரைவென்றுறநெடுங்காளீட்டியவிறலெலாமுனக்குத்
தந்திராவணன்றலைக்கடைச்சிறையான்றராபதியாருனைத்தடுப்பார், ()

ஏறியவலிவேயினியுனக்கைமுமிரைவகேளிராவணன்றன்மேல்
சீறியசிற்றத்தவிர்ந்துதியவனைச்சிறைவிடுகெனமுனிசெப்ப
ஆறியமனத்தனுயவன்விடுப்பவரக்கனேயிலங்கையில்விடுத்துத்
தேறியசிந்தைச்செழுமறைமுனியார்திசைமுகன்றன்னுலகடைந்தான், ()

கூவது கார்த்தவீரியார்ச்சுனப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கூ0க.

பத்தாவது

வாலிவாலாற்கட்டுண்ட படலம்.

லேமாமுனியாற்சிறைபேர்ந்தவன்
காலனென்னக்கனலென்னவெய்யதோர்
ஆலமென்னவவனியிழித்துமா
வாலிமன்னும்வளநகரெய்தினன். (க)

இக்குவாலியிருந்திலனேவலன்
எக்குளானென்றீராவணன்கூறிடத்
தக்குசிருடைத்தாரைபைசாரின்
கக்குல்வாய்வந்தகாரணமென்னென்றான். (உ)

வாலிதன்னெடிவ்வாளமர்செய்திடக்
கோலிவந்தனென்றவன்கூறிடக்
காலனேகென்றுபிழைக்கவோ
* சாலநன்றெனத்தாரையியம்புவான். (ங)

தத்துமிப்பெயரான்முதற்றன்னலார்
வத்தவாலியுடன்மலர்ந்தோருடற்

* சால-மிக்க.

பத்தமேவியபல்லெலும்பின்குவை
இத்தமாமலையென்றுகோளேழைநீ. (ச)

ஆதலாலடல்வாலியொடும்பொரின்
சாதறிண்ணநீசாகாதான்கினும்
நீதிலாச்சிவபூசனைசெய்திடப்
பாய்தல்செய்யும்பதறலையென்றனள். (ஞ)

தரிக்கிலாயெனிற்றென்றிசைச்சாகரத்
தாக்கவேகுதியாலெனத்தாரையீ
துரைக்கவேகியுயர்சிவபூசையில்
இருக்கும்வாலியையெய்தினனேக்கினன். (ஈ)

வேறு.

மேருவையொக்குமேனியன்விலங்கும்விரிதிரைப்பரப்பிவந்துதிக்கும்
சூரியனெக்குமுகத்தினன்கடலேச்சுராசுரர்க்கமிழ்தெழக்கடைந்த
வீரியனரியான்பரவசனிவிழிமுகிழ்த்திருந்திடலிதுவே
காரியமிவனைக்கட்டுவெனென்னக்கருதினன்கருமனத்தரக்கன். (ஊ)

அவ்விடையவன்றன்கண்வீழித்தந்தவரக்கனையநீர்த்தறியான்போல்
தெவ்விடைவெம்போர்த்திறன்மிகுவாலிதிரியவுங்கண்முகிழ்த்திருப்ப
இவ்விடையிவனைக்கட்டுவெ * னென்னுவிராவணனுழைபுலியெனவும்
வெவ்விடையொதுங்கிவருகின்றதெனவுமெள்ளவந்தவனையபற்ற. (அ)

வெய்யவானரக்கன்கையிருபதிலுல்லீக்கவும்விறன்மிகுவாலி
கய்யிலையனெருக்கெனவிருக்கிவாலினற்கடிதுறக்கட்டி
மய்யணிகண்டன்பூசனை † முடித்திவாலுடனிராவணன்தூங்கப்
பய்யாவதனைக்கவ்விவிண்பறக்குங்கருடனின்மேற்கடல்பாய்ந்தான். (கூ)

வன்புளவாலிவல்லிசைப்பாயமற்றவன்மெய்விசைக்காற்றுல்
முன்புளமலையுமரங்களுமுரீஇதுமுன்புசென்றனமுரண்சேரப்
பின்புளவையும்பிறிதுபின்சென்றபெருவலிமகோதரன்மூதலரம்
அன்புடையமைச்சராசனைமீட்பானடன்மிகுவாலிபின்றொடர்ந்தார். (கo)

தாழ்வில்போராற்றற்றடறரைப்புயத்தோன்றரியலர்மயங்கிடவமரில்
சூழுமாமாயையரக்கர்தம்விசையாற்றொடரவெண்டிலமர்தொலையாப்
பாழிமாவாலிபாய்திடவவன்றன்பருவரைமெய்விசைப்பின்செல்
ஊழிமாருதமேகொண்டுபோய்மலைப்பவுரணழிந்தனவரும்வீழ்ந்தார். (கக)

பாரதவருடம்பரந்தயோசனைகளொன்பதினுயிரம்பாய்ந்து
நீர்தகுமுயங்குசெடுந்தடவிமயநிலையிரண்டாயிரநீங்கிச்
சேரதனுடையசித்தஞ்சம்புடமொண்பதினுயிரத்தீர்த்தாங்
கோணியேமகூடமோரிரண்டாயிரநிலைமைப்பினிற்பாய்ந்து. (கஉ)

* என்னு-என்று. † முடித்து-முடித்து.

பொன்னரிவருடம்பொருந்தியோசனைகளொன்பதினாயிரம்போக்கித்
தன்னிலையிரண்டாயிரமுடைஞிடதத்தாவிமேலக்கடல்சார்ந்த
பின்னரன்பூசைவிதிமுறைமுடித்துப்பெருகுசிரியவருடம்
ஒன்னலர்காலன்வாலியோசனைகளொன்பதினாயிரமொழிந்து. (கக)

நீலமால்வரையீராயிரநீங்கின்றெளிர்பொன்மலைவருடம்
மேலுயர்சுவேதமோசனைபதினாயிரம்விரைவினிற்பாய்ந்து
கோலநீள்குரவஞ்செருந்திழுன்சொன்னவளவுபோய்வடகடல்குறுகி
ஆலமாமிடற்றரனடியிணைபேணியங்கிருந்தருச்சனைமுடித்து. (கச)

மேற்கடலோடுவடகடலுள்ளயோசனைவிரிந்துபோய்க்கீழை
மாற்கடலெய்திவளர்சடையோனைமகிழ்ந்தவணிருந்துபூசித்துப்
பாற்கடலோடுதென்கடலுள்ளயோசனைவிசையொடுபாய்ந்து
போர்க்கடல்வாலிபுனைமணிமாடப்பொன்னகரிற்கிந்தைபுகுந்தான். (கடி)

ஆங்கவன்வரக்கண்டகமகிழ்தாரையவனெடுவாலிடைக்கிடந்து
தாங்கியவரக்கன்றன்றுயர்கண்டுதுகழல்வாலியையோக்கி
ஈங்கிவன்யாவனிவனேநீபோகவினிவிடுகெனமனமிரங்கித்
தேங்கமழ்குழலிசெப்பிடவிடுத்தியவற்கவனிவைசெப்பும். (கஉ)

பிஞ்ஞகன்பூசைபேணுதல்வேண்டிப்பெருங்கடலெறுஞ்செலவிரையும்
அஞ்சிலையதனிலரக்கனீவந்தகாரியமறிந்திலெனரக்கர்
வெஞ்சினைவந்தகாரணமதனைவிளம்பெனவிராவணன்விளம்பும்
உன்னெடுபொருவான்வந்தகப்பட்டேனுண்மையீதெனவனுரைக்கும். ()

மின்னெளிர்முடியாய்வென்றவர்தோற்பர் தோற்றவர்வெல்வர்வெஞ்
செருவில், என்னெடும்பொருவானிச்சையுண்டாயினிராவணபொருதியீ
ண்டென்னக், கன்னெடுந்தோளாய்கலங்கினென்வாலாற்கட்டுண்டுபட்ட
துடைக்க, இன்னமும் பொரவேர்வினிச்செருவமையுமின்றுகின்றேழனு
னென்றான். (கஅ)

என்றிலங்கேசனியம்பிடவாலியெழுந்தபேருவகையாலிருகைத்
தன்றிரடோளாற்றழுவியாங்கவனைத்தன்னெடுகரிடைக்கொண்டு
சென்றினிதூட்டிச்சிறந்தனசெப்பித்திங்களொன்றினிதுகொண்டிருந்தா
னின்றிராடொடங்கியென்பிரதாபியென்றிலங்கேசனைவிடுத்தான். (கக)

அலைதழுவுதடிம்பவணைத்துயிலீத்தயோத்திவர்தடைந்தடல்வீரச்
சிலைதழுவியசின்செஞ்சரமொன்றுசெஞ்சகம்பிளப்பபத்திறலோன்
சிலைதழுவியபூணித்திரன்குலிசத்தேறுபட்டிருசிறகற்ற
மலைவிழுவதுபோல்வீழ்ந்தனன்வீரமற்றனையொப்பவர்யாரே. (உ0)

கo-வது-வாலிவாலாற் கட்டுண்டபடலம் முற்றிற்று.

அ திருவிருத்தம்-உக.

அநுமப்படலம்.

இராமனனுமன் வீரப்பிரதாப முரைத்தல்.

* புலவாளரக்க † னிருநாலிரட்டியொருநாலுபெற்றபுயமும்
தலையானபத்துமுறவால்விசித்தசயவாலிகொற்றமுழுதும்
‡ மலையாசலத்துமறையோனுரைப்பவதெலாமனத்தி § லுணராச்
சிலையாலரக்கர்திறம்வேரறுத்தநிறலானுரைக்குமிவையே. (க)

மறவாலிகொற்றமதுவோவிடக்கமருவார்வெருக்கொள்வலியால்
நிறைவான்மிசைப்பொன்வரையீடழித்துநெடிழாதுசிற்சிலையால்
குறைபாதவிச்சையதனுலனப்பில்குணநீதிகொற்றமொடுகூ
டறிவாலிவற்றிலநுமானையொக்குமவரார்சகத்திலினியே. (உ)

§ அங்காரதாரைகுடர்மாலசூடியலேவேலதாவியடையார்
தங் ○ காரணங்கள்பொடியாகநூறிவருசம்புமாலிமுதலோர்
பொங்காவராமொடுகோர்பொருக்தவவர்சேனையானைபரிதேர்
சங்காரமாமெனுமானையொக்குமவரார்சகத்திலினியே. (ஊ)

வரையோருத்திரனைமீதெடுத்தவயவாளரக்கன்மகனைத்
தரையோடரைத்துநகர்தீமடுத்துவருசேனையச்சலதியில்
திரையோடமுக்கியொருதாவிலத்திவடதீரமுற்றதிசைமேல்
உரையோடுவெற்றியநுமானையொக்குமரவோர்சகத்திலுளரோ. (எ)

அருமாதவத்தின்முனிவாவுரைக்கினனுமானையொக்குமவரார்
செருவார்சிலேக்கையினையோனைமிக்கநிறவானரப்படையொடு
மருவார்மயக்கவடமேருவுக்குவடபான்மருத்துமலைகொண்
டொருநாழிகைக்குள்வருவாரொருத்தருளரோசகத்திலினியே. (ஏ)

இவனுலருக்கன்மகனேடெமக்குமினிதாயாட்புமியல்பும்
இவனுலனப்பில்பெருநீரடைத்தநினையாவயத்தநுமனும்
இவனுலரக்கர்பொருசேனையிற்சென்றிடையூறகற்றியவெலாம்
இவனுலரக்கர்குலம்வேரறுத்தனியானுரைப்பதெவனே. (ஐ)

இராமனகத்தியனை அனுமன் சரிதமுரையெனல்.

¶ பிறியாவறத்தினநுமான்வளர்ச்சிபெருமேருவிற்பெரியனும்
சிறிதாயொடுக்குமெனின்மேனியற்பவனுவானதிற்சிறியனும்

---

* புலவாள்-புலால்படிந்தவாள் †இருநாலிரட்டியொருநாலு-இருபது. ‡ மலையாசலத்துமறையோன் பொதிகை மலையிலிருக்கும் பார்ப்பானுமிய அகத்தியன். § உணரா-உணர்த்து. § அங்காரதாரை-சாயாக்கிரகணியென்னுமோரரக்கி. ○ அரணமென்பது எதுகைபற்றி ஆரணமென வந்தது. ¶ பிரியாவென்பது எதுகைபற்றிப் பிறியாவென வந்தது.

உறுகாரணத்தினளவாமுருக்கொளுயர்வீரனுற்றவலிதான்
அறியாதிருக்குமதுவேதமுற்றுமறிவானுரைத்தியெனவே. (எ)

மறவோர்குலத்தையறவோருத்தமனுநீதிபற்றியரசாள்
நிறலோனுரைத்தவமிழ்தூறுசொற்கள்செவிவாய்மடுத்துருகும்
குறியோனுரைக்குமொடியோய்குறிக்கொளெனமேதினிக்குணிசிர்
அறிவோரின்மிக்கவறுமானுநிப்புமதிசேவகச்செயலுமே. (அ)

அகத்தியனனுமனவ தாரழரைத்தல்.

வே று.

சூரியன்றருவரத்தினன் * சுவணமேருவெனும்
பே † ரினன்செறிபெருவரைத்தோளினன்பேணும்
பாரிலஞ்சனவயிற்றினிற் ‡ பவனனுக்குதித்தோன்
யாரினும்பெருவலியுடையெழின்மணிப்புதல்வன். (க)

பிறந்தபோழ்தினிப்பிள்ளைதன்பெருவலியறிந்த
திறந்ததாயருந்தந்தையுஞ்சென்றையுண்மகிழ்ந்தார்
மறங்கொணெஞ்சுடையவரெயிற்றரக்கர்தம்வாழ்நான்
குறைத்துளாரெனக்குனித்ததுவானவர்கூட்டம். (கo)

அனுமன்தனக்குணவென்னை யெனலும் அவள்கனியெனலும்.

$ தனிவிலாமதியன்னையைப்புதல்வனுந்தொழுதின்
னியதாமிரையாதெனக்கியம்புதியென்னப்
பனியுலாவியசோலையிற்பருவத்திற்றிவந்த
கனியெலாமுனகாவதென்றன்னைதான்கழற. (கக)

அனுமன் சூரியனைப் பழமென்னக்கருதியவள் மீதுபாய்தல்.

செழுமலர்த்திருவனையதாய்செழுங்கனிகாடிப்
¶ பழுவமுற்றிடப்பசியினற்பதைபதைத்திரங்கி
அழுதாற்றியபாலகனன்னைமுன்னுரைத்த
பழமக்கிதுவாமெனப்பரிதிமேற்பாய்ந்தான். (கஉ)

அனுமனை வேகத்திற்சிறந்தவ னதியெனத் தேவர்வாழ்த்துதலி.

பாயகோக்கினவானவர்தானவர்பழிப்பில்
தூயமாதவர்முதலினோர்தோன்றியவியப்பால்
வாயுவேகமும் § வயினதேயன்றன்மாக்கதியும்
ஒய்யிலாதிவனிடத்தினிலிருக்கவெண்ணுரைத்தார். (கஙு)

பின்னுங்கூறுவார்பிறந்தபோதையிவன்பிதாவே
அன்னவேகத்தனற்றலாலருக்கன்மேற்பாய்ந்தான்

* சுவணம்-பொன். † இனன்-சூரியன். ‡ பவனன்-வாயுபகவன்.
$ தனிவு-வெறுப்பு. ¶ பழுவம்-காடு. § வயினதேயன்-கருடன்.

மன்னுமாருதிவளர்த்தபின்மருவலராலேர்
என்னதாகியென்பவேரோவிவன்கையாலென்றூர். (கச)

வாயு அனுமன்மீது சூரியகிரணஞ் சீதளமாகப் படுகவெனல்.

ஈதுவானவர்தானவர்முதலிலேரியம்ப
வாதராசனீதியம்பினன்வாவுமென்மைத்தன்
மீதுவெய்யவன்வெங்கதிர்வெண்ணிலாவென்னச்
சீதசந்தனச்சீதளமாகுகவென்றூன். (கடி)

அனுமன் சூரியனைப்பற்றுதலும் அவன் சீறது தழந்தாயென்றலும்.

ஆய்ந்ததாதையீதியம்பிடவருக்கன்மேலறப்
பாய்ந்து * மண்டிலம்பற்றினன்கௌவலுமதனுக்
கேய்ந்தவெய்யவனிவன்சிசுவெனமனமிரங்கிக்
காய்ந்திலன்பெருங்ஞாயாற் † காதலவென்றூன். (கஉ)

இராது இந்திராணிடம் முறையிடுதல்.

அற்றைநாளிலவ்வலர்கதிர்மண்டிலமதனைப்
பற்றுவான்சென்றுபற்றலும்புற்றியேகின்ற
கொற்றமாருதினைக்கண்டுகுலிசத்துபோயிராகு
வெற்றிவிண்ணவர்வேந்தனைக்கண்டிவைவிளம்பும். (கஎ)

மன்னுமித்திரமதிகதிர்மண்டிலம்விழுங்க
முன்னமேயெமைவிதித்தனைமுறைகெடவேறூர்
அன்னியன்புகுத்தலர்கதிர்மண்டிலங்கௌவி
இன்னமும்விடானிவையென்னவியாயங்களென்றூன். (கஅ)

இந்திராணிராதுவைச் சூரியனைப்பற்றெனல்.

என்றுகூறிடவெரிவிழித்திந்திரன்வெள்ளிக்
குன்றுபோலயிராவதமேற்கொண்டுகுறுகிச்
சென்றிராகுவைத்தினகரற்பற்றெனச்செப்ப
கன்றிதென்றவனுயிறுதனைச்சென்றுகண்ணி. (கக)

இராதுவின்மீதனுமன் பாய்தலும் வனிதேந்திரனடி பணிதலும்.

இரவிமண்டிலம்பற்றுவானெண்ணியவிராகு
வரவுகண்டனன்மாருதிமண்டலம்விட்டே
அரவின்மேலுறப்பாய்தலுமாங்கவன்கதறி
வெருவியோடினன்விண்ணவர்கோனடிவீழ்ந்தான். (உ0)

அனுமன் ஐராவதத்தினை பெரியபழமெனப் பிடித்தல்.

வெருவியோடினவெவ்வராவினைத்தொடர்வேக
‡ அரியின்மே $ லரியழன்றயிராவதமுன்றப்

---

* மண்டிலம்-சூரியவட்டம். † காதல-குழந்தாய்.
‡ அரி-அநுமன். $ அரி-இந்திரன்.

பெரியதோர்கனிபெற்றனனெனப்பெரித்துவந்து
கரியின்மேலெழப்பாய்ந்தனன்காற்றினுங்கடியான். (உச)

இந்திரனுமனே வச்சிரத்தா லெறிதல்.

இன்னகாலையினிந்திரனெதிர்வருங்கூற்றம்
அன்னமாருதிமேற்கனலாலகாலமெனக்
கொன்னுனேப்பெருங்குலிசம்விட்டெறிதலுங்கொண்ட
தன்னினேப்பினேமதத்துபோய்த்தரணியில்வீழ்ந்தான். (உஉ)

வே று.

வாயுஅனுமனே யேடுத்துச் சென்றதையா தோளித்தல்.

மைத்தனேவீழக்கண்டவாயுவாசவன்மேற்சிறி
இத்தமூவுலகுமுற்றுமிமைப்பினிற்கெடுப்பனென்று
சித்தையினெண்ணியத்தச்சேயினேயெடுத்துக்கொண்டாங்
கந்தரத் * தியக்கமின்றியடங்கினனிருந்தகாலை. (உங)

வாயுகோபத்தாலுயிர்கண் முர்ச்சித்தல்.

உறவலியில்லாமாயவுடம்பினேயுள்ளேநின்று
பிறிவிலாதியக்குகின்றபிராணவாயுக் † கோவிப்ப
அறுகயிற்றூசல்போலவங்கொடிங்குண்ணின்றுட்டு
பொறியறுபாவைபோன்றுவீழ்ந்தனர்புவனத்துள்ளோர். (உச)

இறைவர்கன்காப்போரின்றி ‡ யிடும்பையாற்பெரிதுகொந்து
கறைகெழுவேற்கணுரைக்காமுறுவோர்களின்றி
மறையொலியின்றிச்சந்திவந்தனேயின்றிவேள்வித்
துறைகளுமின்றிவையஞ்சுனியமாயிற்றன்றே. (உடு)

மாத்திரைப்போழ்துமேனிற்குமோவாயுவின்றி
¶ மூத்திரப்புரீடவாயிலடைத்தலான்மூடுதோற்பை
காத்திரம்பெருத்துவீக்கக்கண்செவிமூக்குநாத்தோல்
சூத்திரமற்றுச்சித்துதொகுமணிக்கோவைபோன்ற. (உசு)

காமபோகத்தைநீத்துக்கற்சுவருலர்ந்த § காட்டம்
ஆமைனவிருத்தலானுமைம்புலனடக்கலானும்
வாமமூம்வலமூம்வாயுவழங்குதலில்லையானும்
ஏமமீருலகிலுள்ளோரியோகிகளென்னலானூர் (உஎ)

தேவராதியர் பிரமனையடைந்து தூறையுரைத்தல்.

ஆயவைகிழங்காலையமரர்தானவர்களாய
தூயமாதவர்கள்சித்தர்விஞ்சையர்துறக்கத்துள்ளோர்

* இயங்கம்-அசைவு. † கோவிப்ப-இயங்காமல் வெறுத்திருக்க. ‡ இடும்பை-துன்பம். ¶ மூத்திரப்புரீடவாயில்-சலமலத்துவாரங்கள். § காட்டம்-வீறு.

வாயுகோபத்தினுலேமகோதராராகியுள்ளோர்
காயகனுபிவந்தநான்முகன்றன்னேநண்ணி. (உசு)

ஆதிவேதியனேகேட்டியமர்கோன்குலிசத்தாலே
காதலனுயமைந்தன்காலன்வாய்வீழக்கண்டு
* வாதராயன்கோவிப்பவயிறுகள்பெருஞ்சாலென்னப்
பூதமதென்னவீங்கிப்புரண்டனர்புவனத்துள்ளோர். (உக)

பிரமன்வாயுவையடைந்து சமாதான முரைத்தல்.

என்றவரியம்பக்கேட்டவிரணியகருப்பனின்று
சென்றுநோய்தீர்ப்பனென்னுஞ்சிந்தையன்றேவர்சூழ
வன்றிறன்மாண்டசேயையடியிலேவைத்துநோயால்
கன்றியமனத்தனுயகாற்றினுக்கரசைக்கண்டான். (ஈ0)

பிரமன் பரிசத்தலால் அனுமன் உயிர்பெறுதல்.

இந்திரன்முதலாயுள்ளவிமையவர்சூழுவந்த
அந்தணன்றன்னேநோக்கியகதெழுதுன்பத்தோடு
வந்தடிபணிந்தோன்றன்னைமலர்க்கையாலெடுத்துவாயு
தந்தபாலனைத்தன்கையாற்றடவினன்றயாவின்மிக்கான். (ஈக)

நீடியமலரின்மேலோனெடுங்கையா † னீவலோடும்
வாடிமண்மடிந்த ‡ பைங்கூழ்மழைவீழத்தளிர்க்குமாபோல்,
$ வீடியமைந்தன்சீவன்பெற்றிடத்துயரின்வெந்து
கோடியநெஞ்சுதாதைகுளிர்ந்தனனுணர்வின்மிக்கான். (ஈஉ)

தேவர் மாருதிக்கனும் நாமமளித்து வாழ்த்துதல்.

திண்டிறன்மைந்தன்சீவன்பெற்றிடத்தேர்ந்தவாயு
பண்டுபோலுலகமெங்கும்பாய்ந்துதான்சரியப்பார்த்துப்
புண்டரீகத்தின்மேலோன்புரந்தாஞையாலேநீர்
அண்டர்களெவருநோக்கியவற்கிதமறையுற்றூர். (ஈஈ)

வே று.

சீர்பெற்றெளிர்பூணஞ்சனைதன்சிறுவன்றன்னேமுகநோக்கிக்
கூர்பற்றியவெங்குலிசத்தாற்கூறுபடுபுண்வடித்தீர்க
ஆர்பெற்றூர்நீபெற்றதனின் ¶ னறவற்றிடலாலறுமனெனும்
பேர்பெற்றுலகமுள்ளளவும்பெறுதிபெயராப்புகழென்றூன். (ஈச)

சூரியன் அனுமனுக்கு வரமளித்தல்.

பொல்லாவிருணீக்கடிந்தோட்டு o புவனதீபன்புகலவானென்
வில்லார்கரத்திற்சதகூற்றிலொருகூறனக்குமேவிடுக

* வாதராயன்-வாயுபகவான். † நீவல்-தடவுதல். ‡ பைங்கூழ்-பயிர்
$ வீடிய-இறந்த. ¶ அறு-குறைப்பு. o புவனதீபன்-சூரியன்.

எல்லாவிஞ்சைகளுந்தரிக்கவிசைத்தசத்திபுண்ட்ரக்
கல்லாய்கொண்ணீதருகின்றேனென்றுகவின்றுனலபிக்கான் (கூடு)

வருணனும் எமனும் வரமளித்தல்.

இரணபூமியிடைநேர்த்தாலென்பாசத்தா * லார்த்தக்கால்
மரணமில்லையுனக்கென்றுவருணராசன்வரங்கொடுப்பத்
தரணியேரைவிதிவழியேதண்டிப்போனென்றண்டத்தால்
மூரணின்மிகுமாருதியாவிமுடியாதொழியவரமளித்தான். (கூஎ)

காற்றின்சிறுவன்முகநோக்கிக்கருணையாலென்கதையானீ
† கூற்றின்சூழலுருவென்றருபோன்கூறக்கூற்றுதைத்த
ஏற்றின்பாகனென்கரமுவிலையினுலுமென்னுலும்
‡ ஆற்றன்மிகுமாருதியாவி. கலாதொழிகவெனவருள். (கூஏ)

அயனும் விசுவ கன்மனும் வரமளித்தல்.

தாதாவுரைக்குமென்பிரமதண்டாற்றுணுஞ்சாவின்றி
மேதாவியுமாயொருகாலும் § விளியாகாலுமுறுகவென
நீதாயிரவோறுக்குமிவன்றேவர்படையாற்செருக்களத்தில்
வாதாமகன்சாவொழிகவெனவானோர்தச்சன்வரங்கொடுத்தான். ()

வானோர்முதலாய்வந்திறைஞ்சமறையோர்முனிவரருளாளர்
ஆனேரெல்லாமநுமானுக்கழிவிலாதவரமளிப்ப
காலுவகையசராசரமுமுலகும்படைத்தான்முகத்தோன்
ஊனுருடலினின்றியற்குமொருவன்றனக்கிங்குரைசெய்தான். (கூக)

அனுமன் சேதுக்கால் முனிவரிடங்களிற்புதுநீர்த்து தும்புபுரிதல்

வன்னிசகாயனின்மைந்தன்வையத்தோர்க்கும்வானோர்க்கும்
இன்னல்செய்புமிராவண்ணன்றனிலங்கைநகரிலெரியூட்டி
மன்னனிராமன்மனமுவப்பவயவாளரக்கர்குலமறுத்துப்
பின்னையவன்றன்போருளாற்பிரமபதமும்பெறுகென்றான். (கூ0)

முனிவர் அனுமனே உன்மத்தனெனச் சபித்தல்.

என்றுமலரோன்முதலாயவிமையோர்கொடுத்தவரச்செருக்கால்
கன்றுதிதென்றிற்குணர்காண்மாமுனிவருறவிடத்துச்
சென்றதபிர்பானெய்குடித்துச் $ சிரைச் o சுருக்குச்சுருவமெலாம்
ஒன்றுவலியோன்கொண்டெழுதுமூழித்தியினுடன்றவர்கள். (கூச)

பொன்மைநிறத்தவயன்வரத்தாற்புவனமூன்றும்பொடிபடுத்தித்
தன்மைப்பிரமதண்டினுற்சாதிப்பரியோனவன்பொல்லாச்

---

* ஆர்த்தல்-கட்டுதல். † கூற்றின்சூழல்-எமலோகம் ‡ ஆற்றல்-வலிமை.
§ விளியா-இறவாத $ சிரை-மரவுரி. o சுருக்குச்சுருவம். மீமிசைச் சொல் அது நெய்த் தடுப்பு.

கண்மத்தினையெம்மிடைச்செய்யுங்காற்றின் றனையன்கருத்தழிவுற்
றுண்மத்தனலுய்த்தன்வலிதானுணராதொழிகவெனவுரைத்தார் ()

சாபமுணர்த்துகருத்தொழிந்துசாந்தலுயநுமான்வெங்
கோபமொழிந்துமாதவர்க்குக்கூசிக்குறிகொண்டொழுகுநான்
தீபமனையானுலகுக்குத்திறல்வாரணத்தோனரியிதயத்
தாபனிருத்தவிரசதனந்தனிப்போர்வீரன் றன்மைந்தார். (சஅ)

முனிவர் சாபத்தால் அனுமன் சுக்கிரீவனுட னடங்கியிருத்தல்.

துன்னர்காலனும்வாலிசுக்கிரீபன்றேன்றியபின்
மின்னர்மருங்குற்குற்றிருவென்னவிளங்கு * முருமையவட்காக
இன்னராகியிருவரும்போரெதிர்ப்பவிலையானினைத்தோடித்
தன்னற்செய்யுஞ்செயலற்றுத்தளர்ந்துமதங்கவனஞ்சார்ந்தான் ()

அனுமனேக்கலகளையு மேநறநாளி லுணர்ந்தனைனல்.

அத்தமுனிவன்சாபத்துக்கஞ்சிவாலியம்வனத்து
வந்துபுகுதாதொழிலால்வாழ்நாள்பெறுஞ்சுக்கிரீவனெடும்
சித்தைகலக்த † சகியாகச்சேர்ந்துகன்னையுணராதே
அத்தணுளர்சாபத்தாலநுமானடங்கியங்கிருந்தான். (சஇ)

வே று

அகத்தியன் அனுமனுக்கினே யெவருமின்றெனல்.

வேதமொருநாலுடன்விளங்கிய ‡ சடங்கமும்விரிந்தகலையும்
ஓ $ தநிலவீதியிகையேழுபிபூணருணனூரவிரைதேர்
மீதுசெலும்வெங்கதிரவன்றனெடயிந்திரவியாகரணமும்
ஓதியொருகாள்ளுணர்ந்ததனிம்வாருதியுயர்ந்தபுகழோய். (சக)

தண்ணளியினுன்மிகுதயாவுடைமையால்வருதருக்கறுதலால்
எண்ணுகருமங்களிலையாவுமிடையூறறவியற்றுமியல்பால்
நண்ணலரைவிண்ணவர்களாயினுநடுக்குறுமிடுக்குடைமையால்
மண்ணுலகில்விண்ணுலகின்மாருதியையொக்குமவர்யாருமிலையால். ()

அறந்தலையெடுத்தபுவி ¶ வானவர்களானவர்களாடினர்கடு
o மறந்தலையிறக்கியதுவாலிற்றலானவர்கள்வாமநயனம்
சிறந்ததிரடோன்புருவமார்பிடைதுடித்தனசிறந்தபுகழான்
நிறைந்தகுணமாருதிநினைத்திருவடித்தொழுதுநின்றபொழுதே. (சஅ)

தனக்குவமையற்றவனெவெற்றியிகுமாருதினைத்தடையிலாச்
சினத்தொடுமனத்திறலரக்கர்கன்செருப்புரிகளத்தமலரீ

---

* உருமை-சுக்ரீவன்மனைவி. † சகி-சினேகன். ‡ சடங்கம் ஆறங்கம். அது சிட்சை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோபிசிதம், சோதிடம். $ அநிலம்-ஆகாயம் ¶ வானவர்களானவர்கள்-தேவராளேர்கள். oமறம்-பாவம்

நினைத்தது முடித்தொருகணத்தினினினைத்தொழுதிற்பவனையான்
உனக்கினியுரைப்பதெதிலுத்தமவுனைப்பிரிவில்வித்தகனேயே, (சக)

வாடைதருசேய்பிறவியுஞ்செயல்களும்பெருவரங்களுமிரிச்
தோடவினைமாதவர்சபிப்பவிடைதன்னையுணராதவகையும்
நீதிதவமாமுனியுரைத்திடவியந்து * நிருதேசர்மடியக்
கோதிலிராகவன்மகிழ்ந்தவனுமாருதிகுணம்புகழ்தலும். (ஙo)

முனிவரிராமனை வாழ்த்தி வனம்புகுதல்,

தேதேதனமாகுவரெனத்தெளியமாமுனிவர்சொற்களைவகேட்
டோடுமதகண்டினமாதரசனுக்கிவையுரைப்பவுணர்வால்
நீடுவரவெங்கணியமங்களுளவாகினிநினைப்பிரிதலில்
கூடுதிலதெங்கண்மணமென்றலுமகண்டபதிகூறுமிவையே, (ஙக)

தன்னகர்வந்த சனகனை இராமன்தழுவி மகிழ்தல்,

உங்கணியமங்களிவைகுன்றுதலிலாதொழிகவுங்கள்பரமெங்களரசம்
இங்கிவைதிருந்திமிருந்தவமருந்தவவெனப்புகழ்தலும்
அங்கிவனையாருளொடாகிகண்மொழிந்தினிதிருந்தியெனவாழ்
துங்கமறைமாமுனிவராச்சிரமமுன்னிமெறிதுன்னுபொழுதின். (ஙஉ)

மூடிச்சனகர்கோனுலகைமூபெடையோடுவகையோடணுகிடத்
தடுப்பரியபேருவகையோடுமெழுந்தாசரதியைத்தழுவிமுன்
படைத்ததனமாபாணமாடைதிகழ்பாவையர்களாதிபலவும்
கொடுத்தபினிராவணகுலத்தியையறுத்தகதைகூறியிடலும். (ஙஊ)

ஆனைபரியாபரணமாடைதனமாதியுபகாரமொடுமா
சேனைமுடிமன்னவர்கள்சென்றடிபணிந்தயலிருந்தபொழுதில்
மானகுலபூரணாகவன்மகிழ்ந்தமுடிமன்னவர்களுக்
கானவுபசாரமொழிகூறியவரோடனவனாவியபினே. (ஙசு)

வே று.

இராமன் தன்னைக்காணவந்தா ரனைவருக்கும்
தானசன்மானங்க ளளித்தல்.

சனகவோணுறுந்தன்னகரத்திவாழ்
சனகநீங்கிடத்தாபமடைந்தவன்
சனகன்மாமகனோடுந்தகாதவஞ்
சனகவான்வந்தவர்சபைவிட்டபின், (ஙஎ)

தாரணித்தனையாருந்தரியலர்த்
தாரணிப்பெருந்தாபம்பெருந்தவத்

* நிருதேசர்-இராட்சத ஒரேட்டர்கள்,

தாரணிப்பரந்தீர்தெவன்றன்னகர்த்
தாரணிப்புயமன்னன்வருந்தவம். (நசு)

நூறுகோடிசுவணமுநுண்கலை
நூறுகோடியும்பூணுமுதவினன்
நூறுகோடியிரதநுதற்கரி
நூறுகோடியசாபநுண்ணூலர்க்கே (நஎ)

களமொழிந்திடச் * சாலகடங்கரைக்
களமொழிந்திடலங்கையிற்காதிலன்
களமொழிந்துசிக்கையின்வழங்கினன்
களமொழிந்தநியாக்கதிராரமும். (நஅ)

அங்கதன்றனளவறியாவகை
அங்கதந்திகழ்மொய்ம்பனருமறை
அங்கதன்னிவ்வகிலாண்டகாயகன்
அங்கதன்றனக்கேதானடியொடும். (நக)

பன்னகத்துப்பணித்தகப்பண்டைநூல்
பன்னகப்பகவன்படர்வேலையைப்
† பன்னகத்தணைசெய்பரனீந்தனன்
பன்னகப்படைத்தானைப்பதிகட்கே. (அ0)

அம்புயத்தயன்முதையணிதிகழ்
அம்புயத்தனரக்கன்படவடல்
அம்புயத்தொடையுய்த்தோனளித்தனன்
அம்புயத்தணைசெய்தோற்கருத்தனம். (அக)

மானிலங்கைமன்மேற்றளராகறி
மானிலங்கையிருப்புமன்னவென
மானிலங்கையில்வாளியிலட்டகோ
மானிலங்கைமன்வாழவழங்கினன். (அஉ)

அந்தவானரகாரியரக்கர்கோன்
அந்தவானரகேசரியாயினன்
அந்தவானரவாணரமைப்பினன்
அந்தவானரமங்கையன்னர்களால். (அங)

திங்கள்வெண்குடையோனரிச்சேனைக்குத்
திங்களோன்றெருளாள்போற்செலுத்தினன்
மங்கைபங்கன்வரையெடுத்தோன்சிர
மங்கைபங்கன்னறுசுவையுண்டியே. (அச)

* சாலகடங்கர்-அசுரர். † பன்னகத்து-பலமலைகளால்.

கங்கையேத்திவெண்காரமணிந்துநற்
கண்கைதான்கியவேனியன்கார்முகப்
பங்கனத்தப்பசுபதிதன்னெரு
பங்கன்செய்வினைபார்த்திதுசெய்தனன். (கடு)

வேறு.

வெங்கதிரோன்மைந்தனையவ்விளங்குபுகழ்க்காகுத்தன்வீரும்பிநோக்கி
அங்கதனின்னடைக்கலமென்றடல்வாலியந்தியத்திலறைத்தவார்த்தை
தங்கியவென்சித்தத்தைத்தான்விட்டுப்போகாதுதடந்தோள்வீர
இங்கிவனைக்குறிக்கொளெனவினிதுரைத்துப்பின்னுமிலையியம்புமீரான்

தன்னுடையவலியறியாத்தடவரைத்தோண்மாருதியைக்குறிகொள்வானே
மன்னுடையவமர்பொன்றவாளரக்கன்றன்னேடுமலந்தானில்
என்னுடையகாரணமாயின்னுயிரைவிட்டீங்கிவர்களெல்லாம்
உன்னுடையகாவலெனவுரைத்தவனைமெய்யிற்குத்தழுவிக்கொண்டான். ()

இரக்கமிலாவன்னெஞ்சத்திராவணன்முன்பிறந்தானென்றுபாரா
தரக்கர்குலப்பிறப்பறுத்துத்தனக்கடிமைப்பட்டானையண்ணலேக்கித்
தருக்கறுகின்முன்னேனைனந்தனதெனுமப்பகைகொள்ளேல்தருமசீல
நிரைக்கடல்சூழிலங்கைகாரிருந்தாசுசெய்தியெனச்செப்புங்காலை (கஅ)

முனைப்புரிந்தவாளரக்கன்முடித்தலைகளறுத்துருட்டிமுனிவர்வாழ்வும்
அனைத்துலகுங்காத்தளிக்குமகிலாண்டநாயகனின்னடியேன்றேய்ந்
தனைப்பிரிந்தமீனெனவந்தாயிழந்தகன்றெனவந்தரிப்பொன்றின்றி
உனைப்பிரிந்துவாழ்கிலேனுயிர்பிரிந்தவுடலென்னவுரவோயென்றான். ()

ஆதலானின்னுடையவடிப்பிரியாதிடவேண்டுமடியனேனென்
றோதுமாருதிக்குரைக்குமுத்தமனீயித்தலையிலிருக்கின்வெய்ய
சோதியான்மகனையசுக்கிரீவன்றனையிழக்குமதனற்றாயோய்
போதுநீயவன்றலைடுமென்றவனையுயிர்பொருந்திப்புல்லிக்கொண்டான்.

இவ்வண்ணமிதமுரைத்துவிடைகொடுப்பவிரவிசேய்முதலோரார்த்த
மைவ்வண்ணனடிவணங்கிவார்ந்தகண்ணீராருகிவாடுநெஞ்சம்
எவ்வண்ணமெம்பெருமானுரைத்ததெதக்கிதமல்லாலிதமாமோ
அவ்வண்ணஞ்செய்துமெனவணிபொழில்சூழ்கிட்கிந்தையடைந்தாரன்றே

வீடணன்வீடணேவோர்க்குத்தாள்சிறக்குத்தாளாணவெய்யோனேவக்
காடணைந்தகருங்களிற்றைக்கழலிணைத்தாமரைவணங்கிக்கனகமேருக்
கோடணைந்ததோளரக்கொண்டனிறத்தவனவனைப்புல்லிச்செம்பொன்
காடணைந்தகார்போற்றநல்லரசுசெயதியெனவிடைத்தானுதன். (எஉ)

கூக-வது அனுமப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் எஅக.

சீதைவனம்புகுபடலம்.

தீக்கறுகுணத்தோரேகச் * சேடநின்சிரத்தின்பாரம்
நீக்கியதெனத்தான்போற்றிநெடுங்கடலனிபாரம்
தாங்கியவீரனுச்சிச்சந்தியினியமந்தான்செய்
தாங்குயிர்த்தம்பிமாரோடமுதுசெய்திருந்தகாலை. (க)

புட்பகம் அசரீரியாக நின்றுதன் சரிதங்கூறி இராமனே விடைகேட்டல்.

கனமிடைவானத்திந்தக் † கட்டுரையெழுந்ததோன்றிப்
புனைமணிப்பூணினையான்புட்பகமெனக்குப்பண்டு
‡ தனபதியுரைத்தகேட்டிதசரதராமன்றன்னுல்
கனைகழலரக்கர்கோமான்காலன்வாய்ப்படுதறிண்ணம். (உ)

ஆயவன்பொன்றினுலாவதுசெய்தியந்தத்
தீயவன்பொன்றவேயென்சிந்தைதோய்திருமென்று
தூயவனெனக்குமுன்புசொன்னதேமுடிந்தபின்று
போய $ வன்றன்னைக்கண்டுவருகின்றேன்புவனநாத. (ங)

இராமன் புட்பகத்தைப் பூசித்துபோவென வதுபோதல்.

என்றதுகூறக்கேட்டவிராவதவன்வியத்துசால
நன்றெனவியத்துகந்தநறுமலர்கொடுபூசித்துப்
பொன்றிகழ்விமானந்தன்னைப்போவெனவிடுத்தலோடும்
சென்றதுதனக்குவேண்டுந்திசையின்மேற்சிந்தையென்ன. (ச)

புட்பகம் போகக்கண்டபரதன் ஆச்சரிய முற்றுரைத்தல்.

அத்தவற்புதத்தைக்கண்டபரதனுச்சரியமெய்திச்
சுந்தரவில்லிதன்னைத்தொழுதிவைசொல்லுந்தூயோய்
இத்தமாநிலத்தைக்காக்குமிறைவனீயிசைந்தபின்பு
வந்தவற்புதங்களெண்ணில்வரம்பிலையென்றுகூறி. (ஞ)

அத்திராதிகளாற்சாக்காடில்லைவாளரியால்யானைச்
சத்துருவில்லைவேண்டுகையாவொடுமானைச்சார்ந்து
மித்திரமாகுநீரானெருப்பினுல்லீவோரில்லை
புத்திரர்மரணங்காண்பாரில்லையிப்புவனத்தெல்லும். (ட)

நோயுறுவார்களில்லைநோயுறுமூத்தோருக்குக்
காயும்வெங்கூற்றமில்லைக்கணவனையிழப்போரில்லை
வாயுவுமுடலுக்கின்பமாகவத்தசையாகிற்கும்
ஆயிழையார்களெல்லாமாண்மகப்பெறுகின்றார்கள். (ண)

---

* சேட-அண்ணலவிளி. † கட்டுரை-பொருள் பொலிந்தவுரை.
‡ தனபதி-குபேரன். $ அவன்றன்னை-அக்குபேரனை

மண்ணுலகுள்ளமன்னர்மைந்தர்கண்மல்கைமார்கள்
எண்ணிடுமெண்ணமெல்லாமிராமனேயரசுசெய்திக்
கண்ணகன்ஞாலங்காப்பானென்றுகட்டுரைப்பரென்ன
அண்ணலுமதனைக்கேட்டாங்ககமிழ்ந்திருந்தானே. (அ)

இராமன் சந்தீவந்தனைக்காக நிலவிற்போதல்.

சரிந்தவெங்கதிரோன்வீழத்தராபதிசந்திசெய்யப்
புரிந்தசிந்தையனாய்ப்போகப்பூங்குழன்மடவார்தம்மைப்
பிரிந்தவர்க்காலமாகிப்பிரிவிலோர்க்கமிழ்தமாகி
விரிந்தவெண்ணிலவைவீசிவெண்மதிதோன்றிற்றன்றே. (ஆ)

வே று.

பிரிந்தகானேயரமாதரைக்கொல்வான்பேரவோர்வழியிலாவண்ணம்
விரிந்தவெண்ணிலவாம்வலியினல்வீசிவெண்கதிர்த்திங்களேயேவிப்
புரிந்துவெங்கொலைசெய்தென்றனையிட்டுப்பூங்கணைவேடன்வாயம்பு
தெரிந்தவனன்றிற்பெடையினையெட்டித்திசையொடுங்கூப்பிடச்செய்து.

அங்கணைகேழற்காலியிலாழியண்ணலுமவனியிற்பிறந்த
மங்கையுமாறிக்கண்வலைப்பட்டமெனக்களின்மாறினர்புகுந்து
கங்குலும்பகலும்பிரிவிலாதிக்காதல்வெள்ளத்திடையழுந்திப்
பங்கயில்போதருகாள்வந்துபுகுந்ததுபற்குனித்திங்கள். (இ)

வசந்தாரம்பம்.

கழிந்துலீழ்பழுத்தவிலையினவாகிக்காண்டொறுங்கவினுறத்தழைத்த
பழம்படாநீங்கிப்புதுப்படாம்போர்த்தபான்மைபோற்பாதலமெல்லாம்
பொழிந்தெனமலராற்பொன்னிறவாடைபோர்த்தனபோன்றனகோங்கும்
செழும்படாஞ்சிவந்தபோர்த்தனவொப்பத்திகழ்ந்தனசெம்மலர்ப்பலாசம்.

பொன்னரிமாலைதூக்கினகொன்றைபுன்னைகள்பொரிமலர்பூத்த
மன்னுதலாரைநெடும்பகற்பிரிந்தாடொறுநினைத்தாயகர்தாம்
மன்னவரோகூடினகலவியமிழ்தினையருந்துமாபோலப்
பன்மலர்தொறுமன்குறைத்துதேனினங்கள்பருகினபசறுந்தேறல். (ஈ)

இராமனுஞ் சனகியும் ளமரக்காவிலின்ப நுகருதல்.

அண்ணலுமிழ்திற்பிறந்தலாயிழையுமணிகொள்பூம்பொழிலிடையடைந்
தண்ணறும்புன்னைசண்பகஞ்செருந்திசாதிபூஞ்சண்பகம்தாழை [தார்
